வரு. 75 இல. 08 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරි

24 பக்கங்கள் 100/-

2023 பெப்ரவரி 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
February 19 Sunday, 2023






05
ஆணைக்குழு முடிவெடுத்தால் தேர்தலுக்கு நாம் தயார்!



12
பழ. நெடுமாறன் பிரபாகரனை உயிர்ப்பிக்க முனைவது ஏன்?



22
துருக்கி, சிரியா புவிநடுக்கம்; காரணம் என்ன?



இலங்கையில் ஒரு குட்டி நியூசிலாந்து
24

## ஆகஸ்ட் மாதம் மீண்டும் மின் கட்டணத்தில் திருத்தம்

### நிவாரணம் வழங்க அரசாங்கம் எதிர்பார்ப்பு



மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் மீண்டும் மின் கட்டணங்களைத் திருத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் கஞ்சன விஜேசேக்கரவிடம் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

புனிதத்தலங்கள் மற்றும் வழிபாட்டுத்தலங்களின் மின் கட்டணத்தை குறைக்கும் வகையில் சூரிய ஒளி மின் திட்டத்தை விரைவுபடுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மாற்று 06

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகரான

## D.R. விஜயவர்த்தனவின் 137ஆவது ஜனன தினம்

### புதனன்று மத வழிபாடுகளுக்கு ஏற்பாடு



லேக்ஹவுஸ் நிறுவன ஸ்தாபகர் அமரர் டி.ஆர். விஜயவர்த்தனவின்137 ஆவது ஜனன தினத்தையிட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை மத வழிபாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினம் நிறுவனத்தினுள் பிரித் பாராயண வைபவமும் மறுநாள் 23 ஆம் திகதி காலை பிக்குமாருக்கான தானம் வழங்கும் நிகழ்வும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## மஹா சிவராத்திரி தின ஒளியுடன் வளமான இலங்கை உருவாகட்டும்

### ஜனாதிபதி ரணில் சிவராத்திரி தின பிரார்த்தனை



மஹா சிவராத்திரி விரதத்தை பக்தியோடு அனுஷ்டிக்கும் அனைத்து இந்து மக்களின் வேண்டுதல்களும் நிறைவேற பிரார்த்திக்கிறேன்.

உலகெங்கிலுமுள்ள இந்துகள் மஹா சிவராத்திரி நன்நாளில் அனைத்து உயிர்களையும் துன்பத்திலிருந்து காப்பாற்றும் நோக்கத்துடன் எம் பெருமான் சிவபெருமானை வழிபடுகின்றனர்.

"இருள் நீங்கி ஒளி பரவட்டும்" என்ற பிரார்த்தனையுடன் விரதமிருந்து, கண்விழித்து இரவு முழுவதும் பிரார்த்தனை செய்கின்றனர்.

இது ஒருவருக்கொருவர் அமைதி, நல்லிணக்கம் மற்றும் சமத்துவத்தை வளர்க்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பரஸ்பர மரியாதை மற்றும் ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லாமல் ஒரு நாடாக நாம் முன்னேற முடியாது. எம் பெருமான் சிவபெருமானின் இந்த ஒளி வீசும் பிரகாசமான இரவில் நாம், நமது உறவுகளை 06



உலக சைவப் பேரவை இலங்கைக்கிளை ஏற்பாட்டில் உலக சைவ கொடி தினம் தலைவர் எஸ். தனபாலா தலைமையில் சம்மாங்கோடு மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. கொடியொன்றை பாபு சர்மா இராமச்சந்திர குருக்கள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவரது இல்லத்தில் வைத்து அணிவித்த போது எடுத்த படம்..

## காலநிலை நிதியுதவிக்கான 2023 பசுமை நிதிக் குழு


### ஜனாதிபதி ரணில் பணிப்பு

06

தேர்தலுக்கு நிதி வழங்குவதிலுள்ள தடை குறித்து திறைசேரி அறிவிப்பு

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து 23 ஆம் திகதிக்கு பின்பே முடிவு

### தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவிப்பு



**வாக்குச் சீட்டுகள் அச்சிட நிதியின்மையால் தபால்மூல வாக்களிப்பு மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது**

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான மேலதிக தீர்மானங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு பின்னர் மேற்கொள்ளப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு பணம் வழங்குவதில் உள்ள தடை தொடர்பில் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதன்படி, தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நிதி வழங்குவதிலுள்ள சிரமங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் நிதியை ஒதுக்க அரசாங்கம் எடுத்த நிர்வாக தீர்மானம் குறித்து திறைசேரி செயலாளர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தார்.

இதேவேளை, எதிர்வரும் 22, 23, 24 மற்றும் 28ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இணக்கம் 06

## நவம்பருக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல்

### TNA எம்.பி.ஸ்ரீதரன் ஆரூடம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முயற்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, கணேசபுரம் பகுதியில் நடைபெற்ற தேர்தல் விளக்க கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். 06

ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடு

## மயோன் முஸ்தபாவுக்கு ஆறு மாதம் கால சிறை

### ரூ.500 அபராதம், 07 வருடங்கள் குடியுரிமை இரத்து



முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவின் குடியுரிமை ஏழு ஆண்டுகளுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அவருக்கு ஆறு மாத கால சிறைத் தண்டனையும், 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபந்திகே 06

## பயிர்களை அழிக்கும் ஆறு விலங்குகளை அழிக்க அரசு அனுமதி



விவசாயப் பயிர்களை அழிக்கும் ஒரு வகை குரங்குகளை கொல்ல விவசாயிகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இதற்கான அனுமதியை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (16) அவர் வழங்கியுள்ளார். உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளுடனான சந்திப்பின் போது, குரங்குகள் அப்பகுதியில் 06

மின்சாரம், எரிபொருள், சுகாதாரம்

## அத்தியாவசிய சேவைகளாக 03 விடயங்கள் பிரகடனம்

### ஜனாதிபதி அதிவிசேட வர்த்தமானி வெளியீடு



மின்சாரம், எரிபொருள் மற்றும் சுகாதார சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார்.

1979 ஆம் ஆண்டின் எண். 61 இன் அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 02ஆவது 06

## எங்கள் கருத்து...

### தமிழக அரசியல்வாதிகளின் வேடிக்கையான பேச்சுகள்!

இந்திய மாநிலமான தமிழ்நாட்டின் அரசியலானது இலங்கையின் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் விவகாரத்துடன் தொடர்புடையதாகவே இருந்து வருகின்றது. 1983 ஆம் ஆண்டில் தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட இனவன்செயலின் பின்னரே இலங்கைத் தமிழர் விவகாரமானது தமிழ்நாட்டு அரசியலில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது.

இலங்கைத் தமிழர்கள் மீது தமிழக மக்கள் கொண்டுள்ள கரிசனைக்கு 'தொப்புள் கொடி' உறவு மாத்திரமே காரணமென்று சொல்வதற்கில்லை. 1983 இனவன்செயலின் பின்னர் உருவெடுத்த உள்நாட்டுப் போர் காரணமாக வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் வகைதொகையின்றி தமிழ்நாட்டுக்கு அகதிகளாகப் படையெடுக்கத் தொடங்கியதும் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழகம் சற்று அதிகமாகவே கவனம் செலுத்தத் தொடங்கியது.

இலங்கைத் தமிழ் மக்கள் மீது தமிழக மக்கள் இதயபூர்வமான இனப்பற்று கொண்டுள்ளனரென்பதை மறுப்பதற்கில்லை. இலங்கைத் தமிழ் அகதிகளை தமிழக மக்கள் அரவணைத்து அடைக்கலம் கொடுத்த வரலாற்றை ஒருபோதுமே மறந்து விடலாகாது. அவ்வாறான அக்கறை இன்றும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. 06

## வாக்குரிமையை மீறினால் சட்ட ரீதியில் நடவடிக்கை

### அரசுக்கு எதிர்க்கட்சி எச்சரிக்கை



தேர்தலென்பது மக்களின் அடிப்படை உரிமையாகும், அதனைத் திட்டமிட்டுக் காலம் தாழ்த்துவது சட்டவிரோத செயற்பாடாகுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

எனவே, மக்களின் வாக்குரிமையை மீறும் வகையில் அரசாங்கம் செயற்படுமாயின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் குறிப்பிட்டுள்ளார். 06

## தேர்தலை நடத்துவது அரசின் பெறுப்பு

### ரிஷாத் MP சுட்டிக்காட்டுகிறார்



உரிய நேரத்தில் தேர்தலை நடத்த வேண்டியது அரசின் பொறுப்பென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பி சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் தனித்தனியாகப் பிரிந்து செயற்படுவது போன்றே இப்போது எண்ணத் 06

இன்னொருவரின் உயிர்காத்த உன்னத உள்ளம்

## உயிரிழந்த மகனின் பெற்றோர் செய்த நெகிழ்ச்சியான செயல்

### சிறுநீரகத்தை தானமாக வழங்கினர்



*யாழ்.விசேட நிருபர்*

விபத்தில் உயிரிழந்த தனது மகனின் சிறுநீரகத்தை தானமாக வழங்கிய பெற்றோரை யாழ்.போதனா வைத்தியசாலை கௌரவித்துள்ளது.

திடீரென ஏற்படும் இறப்பின் பின்னர் சிறுநீரகம் போன்ற உறுப்புகளை தானம் செய்வதனால் அவதியுறும் இன்னொருவருக்கு உயிர் வாழ சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அந்த வகையில் மேற்படி சிறுநீரக தானத்தை பெற்றோரின் ஒப்புதலுடன் 06

## இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு மகத்தானது

### கேரளா, ஜாமிஆ நூரிய்யா அரபிய்யா பல்கலை விழாவில் அமைச்சர் அலி சப்ரி



*திருச்சி எம்.கே. ஷாகுல்*

இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையிலான உறவுகள் மகத்தானவை. அதேபோன்று கேரளாவுக்கும், இலங்கைக்குமுள்ள உறவும் வலிமையானதென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி ஷப்ரி தெரிவித்துள்ளார்.

கேரளாவின். மலப்புரம் மாவட்டம் பட்டிக்காடுவில் ஜாமிஆ நூரிய்யா அரபிய்யா பல்கலைக்கழகத்தின் வைர விழா 06

# அச்சக ஊழியர்கள் 24 மணித்தியாலம் பணியில் ஈடுபட இணங்கினால் மார்ச் 9 இல் தேர்தல் சாத்தியம்







உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் மக்கள் இம்முறை பெரும் எதிர்பார்ப்போடு இருந்தனர். எனினும் தேர்தல் செலவினங்களுக்கான நிதியை ஒதுக்குவதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலை காரணமாக மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது. இன்னும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு ஒருமாதத்துக்கும் குறைவான நாட்களே உள்ளன. எனினும் தேர்தல் களம் இன்று வரை சூடுபிடிக்கவில்லை. வேட்பாளர்கள் சோபையிழந்தவர்களாக தமது பிரசாரங்களை முழு ஈடுபாட்டுடன் முன்னெடுக்க முடியாதவர்களாக உள்ளதை காணமுடிகின்றது.

எதிர்க்கட்சிகளும் உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைப்பது ஜனநாயகத்துக்கு எதிரான செயல் என குற்றம்சாட்டிவருகின்றனர்.

வழமையாக தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிடும். எனினும் தற்போது பிரசார நடவடிக்கைகளில் மந்த நிலைமை காணப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகள் என்பது பொது மக்களின் விருப்பு வாக்குகளால் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்படுகின்றது. அவர்களில் ஒருவர் உள்ளூராட்சி சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருப்பார். இதற்கு அப்பால் உள்ளூராட்சி சபையில் செயற்குழுவொன்று இருக்கும்.

இலங்கையின் உள்ளூராட்சி சபை என்பது மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்வு செய்யும் ஆரம்பமட்ட ஆட்சி அமைப்பாகும். இது மிக நீண்ட வரலாற்றை கொண்டது. பண்டைய காலங்களில் காணப்பட்ட மாநகரசபை பட்டின சபை கிராமசபை போன்ற ஆட்சி முறைமைகளே தற்போதைய நடைமுறைகளுக்கு பொருந்தும் உள்ளூராட்சி சபைகளாக மாற்றமடைந்துள்ளன. பிறப்பு முதல் இறப்பு வரையான அனைத்து நடவடிக்கைகளிலும் உள்ளூராட்சி சபைகள் தொடர்புபட்டிருக்கும். வைத்திய நிலையம் தடுப்பூசி வழங்கல் முன்பள்ளி நிலையம், நூலகம், வாராந்தசந்தை, விளையாட்டு மைதானம், பொது மலசலக்கூடம், கிராம போக்குவரத்து, மயானம் மற்றும் இறுதிக்கிரியை நடத்தும் இடம் போன்ற சேவைகளை நிர்வகிப்பதும் இந்த உள்ளூராட்சி சபைகளே.

> வைத்திய நிலையம், தடுப்பூசி வழங்கல் முன்பள்ளி நிலையம், நூலகம், வாராந்தசந்தை, விளையாட்டு மைதானம், பொது மலசலக்கூடம், கிராம போக்குவரத்து, மயானம் மற்றும் இறுதிக்கிரியை நடத்தும் இடம் போன்ற சேவைகளை நிர்வகிப்பதும் இந்த உள்ளூராட்சி சபைகளே.

1987 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 13ஆவது சட்டத்திருத்தத்தின் படி இலங்கையில் 4 வகையான உள்ளூராட்சி சபைகள் நிறுவப்பட்டு இதன் செயற்பாடுகள் மாகாண சபையின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகளின் நிர்வாகமும் மேற்பார்வையும் மத்திய அரசிடமிருந்து மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் உள்ளூராட்சியுடன் தொடர்புடைய கட்டமைப்புகளையும் தேசிய கொள்கைகளையும் தயாரிக்கும் அதிகாரம் மத்திய அரசின் கீழ் காணப்படுகின்றது.

அதனால் தான் உள்ளூராட்சி தேர்தல் என்பது மிக முக்கியமானதொன்றாக பார்க்கப்படுவதுடன் அரசியல் கட்சிகளின் அதிகார பலத்தைப் பரீட்சிக்கும் முன்னோடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விளங்குகின்றது. இத்தேர்தலில் வெற்றிபெறும் கட்சிதான் அடுத்துவரும் தேசிய மட்டத் தேர்தலிலும் வெற்றிபெற வாய்ப்புள்ளதாக கணிக்கப்படும். இறுதியாக 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி அமோக வெற்றிபெற்றிருந்தது. அதன்பின்னர் நடைபெற்ற தேர்தல்களிலும் வெற்றி பெறுவதற்கு அது அடிப்படையாக அமைந்தது. சுமார் 341 உள்ளூராட்சி சபைகளும் நாடு முழுவதும் 8690 உள்ளூராட்சி உறுப்பினர்களும் உள்ளனர். உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் 4 வருடங்களாகும். 2017ஆம் ஆண்டு காலப்பகுதி வரை விகிதாசார தேர்தல் முறையின் கீழ் உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். 2017ஆம் ஆண்டு விகிதாரசார ரீதியிலும் வட்டார ரீதியிலுமாக உறுப்பினர்களை தேர்வு செய்யும் 'கலப்பு முறை' அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்காரணமாக உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு வாய்ப்பேற்பட்டது.

இறுதியாக 2018ஆம் ஆண்டு நடைபெற்ற 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் 8691 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

உள்ளூராட்சி சபைகளின் பதவிகாலம் நான்கு வருடங்களாகும். அதன்படி கடந்த வருடம் பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவற்றின் பதவிக்காலம் மேலதிகமாக உள்ளூராட்சி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஒரு வருடம் நீடிக்கப்பட்டது. இப் பின்னணியில் 2023 மார்ச் மாதத்துக்குள் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டிய கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கமைய உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டு வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

> உள்ளூராட்சி சபைகளின் பதவிகாலம் நான்கு வருடங்களாகும். அதன்படி கடந்த வருடம் பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவற்றின் பதவிக்காலம் – மேலதிகமாக உள்ளூராட்சி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஒரு வருடம் நீடிக்கப்பட்டது. இப் பின்னணியில் 2023 மார்ச் மாதத்துக்குள் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டிய கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது.

எனினும் இலங்கையில் நிலவும் மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கத்தினால் தேர்தலுக்கான நிதியை ஒதுக்குவதில் தொடர்ந்து இழுபறி நிலை காணப்படுகின்றது. இதனால் தேர்தலை நடாத்துவது என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

ஏனெனில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

இதேவேளை தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலப்பகுதியில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகவிருப்பது பெரும் பிரச்சினையாகவுள்ளது. அதனால் அதனை அரைவாசியாகக் குறைக்க நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பிலும் ஆராயப்பட்டது. புதிய முறைமையின் கீழ் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டால் இன்றைய சூழலில் அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதில் சிக்கல் ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது. தற்சமயம் இலங்கை முழுவதும் 8690 உள்ளூராட்சி உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுக்கு சம்பளமாக மாதாந்தம் 135 மில்லியன் ரூபாவும் வேறு கொடுப்பனவுகளுக்காக மாதாந்தம் 600 மில்லியன் ரூபாவுக்கும் மேல் செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. எனவே இச் செலவை முடியுமானளவு குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 'எல்லை நிர்ணய ஆணைக்குழு' ஒன்றினையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இதன் தலைவராக முன்னாள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணயத்தில் 15 மாவட்டங்களில் முழுமையாக பணிகள் நிறைவடைந்துள்ளன. 6 மாவட்டங்களின் வேலைகள் 50 வீதத்திற்கு மேல் நிறைவடைந்துள்ளன. ஏனைய மாவட்டங்களில் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து முன்னாள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிக்கையில்,

புதிய உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயம் காரணமாக 8800 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை 5100 - 5900 ஆக குறைக்க முடியும் என நம்புவதாக தெரிவித்துள்ளார். எனவே தேர்தல் முறைமை மாற்றத்துக்கு பின்னர் தேர்தலுக்கு செல்வது நல்லது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் அரச அச்சகத்தினால் உரிய நேரத்தில் வாக்குச்சீட்டுகள் வழங்கப்படாமையால் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்கவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் 22 முதல் 24ஆம் திகதி வரை தபால் மூல வாக்களிப்பு நடைபெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அரச அச்சக கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவிக்கையில் வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் செயற்பாடுகளை முன்னெடுத்தோம். எனினும் இதுவரை பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் எங்களுக்கு கிடைக்கவில்லை. சரியான நிலைமையை உறுதிபடுத்துவதற்கும் செயற்பாட்டை விரைவுப்படுத்துவதற்கும் பொலிஸ் பாதுகாப்பு அவசியம். தேர்தலுக்கான எமது பக்கத்திலுள்ள சகல செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளோம். பணிகளை ஆரம்பிக்கும் போது முற்பணமாக 50வீதம் கோரியிருந்தோம். அதாவது 400 மில்லியன் ரூபாவை நிர்ணயித்துள்ளோம். அதில் 200 மில்லியனை கோரினோம். எனினும் எமக்கு 100 மில்லியனே கிடைத்தது. திறைசேரியிடமிருந்து 40 மில்லியன் மாத்திரமே கிடைத்தது. தேர்தல் சீட்டுகளை அச்சிடும் பணிகள் மாத்திரமே எமது பக்கத்தில் எஞ்சியுள்ளன. பொலிஸ் பாதுகாப்பை பெற்றுக்கொடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கடிதம் மூலம் பொலிஸ் மாஅதிபருக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார். எனினும் இன்று வரை பொலிஸ் பாதுகாப்பு கிடைக்கவில்லை. எனவே இச்செயற்பாடுகளை விரைவுபடுத்தமுடியாது. இனி பொலிஸ் பாதுகாப்பு கிடைத்தாலும் மார்ச் 9 ஆம் திகதி தேர்தலை நடத்துவது கடினம். எமக்கு அச்சிடுவதற்கு 20 நாட்கள் தேவைப்படும். உத்தியோகத்தர்கள் 24மணித்தியாலம் பணியில் ஈடுபடுவதற்கு இணங்கும் பட்சத்தில் திட்டமிட்டவாறு மார்ச் 9 தேர்தலை நடாத்தமுடியும். அதற்கும் சுற்றுநிரூபம் உள்ளது என அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க உள்ளூராட்சித்தேர்தலுக்கு பணம் வழங்குவது கடினம் என நிதி அமைச்சின் செயலாளர் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியின் கீழ் உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு பணம் வழங்குவது கடினம்.

தொடர் 19ஆம் பக்கம்...

வசந்தா அருள்ரட்ணம்

# பேரம்பேசலால் பலப்படும் தனிநபர் சந்தை; சந்தர்ப்பம் வழங்கியது எது?



வாக்காளர்களிலும் பார்க்க சில வேட்பாளர்களுக்கே இந்த உள்ளூராட்சித் தேர்தல் வாய்ப்பாக அமையவுள்ளது. கள முனைகள் என்றுமில்லாத அளவு கனத்துள்ளதும் சிறிய கட்சிகளைப் பலப்படுத்துவதாக இத்தேர்தல் முறை இருப்பதாலும்தான் இந்த வாய்ப்புக்கள் வருகின்றன. பெரிய கட்சிகளின் இருப்புக்களை அடியோடு பிடுங்க முடியாவிட்டாலும் ஆட்டிப்பார்க்கும் தைரியத்தை இந்தக் கலப்பு முறைத் தேர்தல் சிறிய கட்சிகளுக்கு வழங்கியுள்ளது. இதனால்தான் வட்டாரம், விகிதாசாரம் கலந்த இந்தத் தேர்தலின் முடிவுகள், பெரிய கட்சிகள் சிலதைப் பணிய வைத்தும் இருக்கிறது.

2018 இல் அமைக்கப்பட்ட பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிகள், சிறிய கட்சிகளின் அல்லது சுயேச்சைக் குழுக்களின் தயவில் தங்கியிருக்க நேர்ந்ததும் இதனால்தான். எழுபது, எண்பது வீதமளவில் வாக்குகளைப் பெற்ற பெரிய கட்சிகள், சபைகள் சிலவற்றில் ஆட்சியமைக்க முடியாத தர்மசங்கடத்தையும் இது ஏற்படுத்தியது. இம்முறையில் (2018) நடந்த முதல் தேர்தலில் இப்பலவீனம் வெளிப்பட்டிருந்தது. இம்முறையும், இம்முறையில்தான் இந்தத் தேர்தல் நடைபெற்றாலும் இந்நிலைதான் ஏற்படும். எனவே, இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்த சிலருக்கு இத்தேர்தலே தேவை. இதற்காகத்தான் சில கட்சிகள் தேர்தலைக் கோருகின்றன.

பெரிய கட்சிகளின் பாரம்பரிய கோட்டைகள் ஓரிரு ஆசனங்களால் கவிழ்வது அல்லது அவற்றைக் கவிழ்ப்பது இவைகள்தான் இவர்களது குறிகள். இந்தக் குறிகள் பல கோடிகளைக் குறிவைத்துத்தான். நாட்டின் பொருளாதாரம் அடியோடு வீழ்ந்துள்ள நிலையில், பாரிய அரசியல் சூதாட்டத்துக்காக பணம் விரயமாவதை பொறுப்புள்ள பிரஜைகள் பொறுத்துக்கொள்ளப்போவதில்லை. இதனால், இம்மனநிலையிலுள்ளவர்கள் இந்தத் தேர்தலைப் பொருட்படுத்தவில்லை. இதைப் பொருட்படுத்துமளவுக்கு மக்களின் பொருளாதார நிலைமையும் இல்லை. இதனால்தான், அரசாங்கமும் இதில் அக்கறை செலுத்தவில்லையோ?

இத்தேர்தலில் உள்ள (விகிதாசாரம், 40 வட்டாரம் 60) பலவீனத்தை ஒழித்த பின்னர் தேர்தலுக்குச் செல்லலாமென்ற அரசாங்கத்தின் மனநிலையை எதிரணிகள் புரிந்துகொள்ள மறுக்கின்றன. காரணம், வெற்றிக் கனிகளைப் பறிக்கலாம் என்ற நம்பிக்கையே! ஆனால், அவ்வளவு எளிதாக வெற்றிக்கனியைப் பறிக்கும் வழிகள் இத்தேர்தலில் இல்லை.

பொறுப்புக் கூறும் ஒரு பொறிமுறைக்காகக் கொண்டுவரப்பட்ட இம்முறை, பலரையும் பொறுப்பின்றி நடக்கச் செய்துள்ளது. இலட்சத்துக்கும் கோடிகளுக்கும் கொள்கைகளை கொள்ளையடிக்க வைத்துள்ளது இப்புதிய முறை. மக்கள் ஆணையை அளவிடுவதற்கான அடிப்படை அளவுகோலாக உள்ளூராட்சித் தேர்தல் இருக்கலாம். ஆனால், இன்று இதன் நிலையோ அளவின்றி பேரம்பேசும் தனிநபர் சந்தைகளை வளர்த்துள்ளது. இதுதான் கவலை. இதனால், இத்தேர்தலை நடத்தாமல் விடுவதை ஜனநாயக விரோதமாக நோக்க முடியாதுமிருக்கிறது.

ஒரு வெள்ளோட்டமாக அறிமுகமான இத்தேர்தல் முறை எதிர்பார்த்த இலட்சியங்களை எட்டவில்லை. இதனால், ஒரு திருத்தத்துக்கு கால அவகாசம் கோரப்படுகிறது. இதையும் புரிந்துகொள்ளாமல்தான் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன. இதை அவதானித்தே தீர்ப்புக்களும் வந்துள்ளன. "தேர்தலை நடாத்துவதற்கான உரிமை, அதிகாரங்கள் தேர்தல் திணைக்களத்துக்கு உள்ளதால், புதிதாக உத்தரவிடும் தேவை நீதிமன்றத்துக்கு இல்லை" என்ற தீர்ப்பின் பிரகாரமே திணைக்களமும் செயற்பட்டுள்ளது.

இன்னுமொரு பக்கத்திலும் இதை நோக்கலாம். ஆணைக் குழுக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் நிறைவேற்றதிகாரத்துக்குள்ள கஞ்சத்தனங்களா இப்போது நிலவும் இழுபறிகள்? இந்தக் கருதுகோள்கள் பலப்படாத அளவுக்கு பக்குவப்படுத்தப்பட்டிருக்கிறதா இன்றைய நிர்வாகப் பனிப்போர்? இவைகளே மக்களைக் குழப்பியுள்ளன.

இந்த உள்ளூராட்சித் தேர்தலே இப்படித்தான். நடக்குமா? அல்லது நடக்காதா? என்ற ஏமாற்றங்கள் இன்று மட்டுமல்ல. 1987இல் எதிர்பார்த்தது 1994இல் நடந்தது.1999இல் கலைக்கப்பட்டது 2002இல் நடாத்தப்பட ஏற்பாடாகி பின்னர் 2006இல்தான் நடந்தது. 2011இல் நடாத்தப்பட்டு பின்னர் 2015இல் கலைந்தது. பின்னர் கடைசியாக 2018இலே நடாத்தப்பட்டது.

சுஐப் எம்.காசிம்...

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368

Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com

Chamara -077 727 0067




Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com











பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்கத்தினால் இணைய வழியே நடத்தப்பட்ட பண்ணிசை பரீட்சைகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இணையவழி பண்ணிசை ஆசிரியர் கலாவித்தகர் திருமதி. சுபாஷினி பிரணவன் ஏற்பாட்டில் சங்கத்தின் தலைவர் நிரஞ்சன் தலைமையில், கலாநிதி சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள் முன்னிலை வகிக்க நடைபெற்றது. விழாவில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொண்டார். கல்வியாளர்கள், மாணவர்கள், பெற்றோர் என பெரும் எண்ணிக்கையானோர் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

Funded by the European Union

OPEN CALL – TRAINING OF WELLNESS TOURISM TRAINERS

SLTDA and the project "Capacity development of the Wellness Tourism Industry in Sri Lanka" funded by the European Union are calling for applications from experienced practitioners and trainers to participate in the Training of Trainers Wellness Tourism programme

**Dates & Venue:** Colombo, 13-17 March and Galle, 20-24 March

**Target audience:** Trainers, managers or practitioners with at least five years of working experience in the wellness sector at a senior level

**Practical arrangements:** All meals and refreshments will be provided and public transport and accommodation expenses will be considered for those who need to travel distances to attend.

**Certification:** A digitally credentialled certificate (endorsed by the SLTDA and the European Union) will be issued to those who complete the course.

**Female applicants are strongly encouraged to apply. Applications without a CV will not be accepted, and the first 30 suitable applicants will be selected.**

**Application:** Scan the QR code or click the link to apply:
https://form.jotform.com/230137897101453

Further details including training schedule, application criteria, and course agenda will be provided.

# "காத்திருந்த கனவுகள்" கவிதை நூல் வெளியீட்டு விழா




சென்னை, ஜேப்பியார் பல்கலைக்கழக தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் அன்புசிவா எழுதிய 30வது நூலான "காத்திருந்த கனவுகள்" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா சென்னை வண்டலூர் மூதறிஞர் தேவ ஆசிர்வாதம் நூலகத்தில் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 05.30 க்கு நடைபெற்றது. விழாவிற்கு சங்கச் செயலாளரும் தமிழ் ஆர்வலருமான மருத்துவர் சு. மதிவாணன் தலைமை தாங்கினார். நூலை சென்னை எஸ்.ஐ.வி.இ.டி.பொருளியியல் துறைத் தலைவரும் பேராசிரியரும் தமிழ்நாடு அரசு உதவி பெறும் கல்லூரி பேராசிரியர் சங்கச் செயலாளருமான முனைவர் பாலசரவணன் வெளியிட்டார். விழாவில் சங்கத்தலைவர் செல்லத்துரை, திருசூலம் கண்ணாயிரம், கவிஞர் துரைசாமி, வேளச்சேரி சங்கத் தலைவர் கந்தசாமி, சங்கத் துணைத்தலைவர் செல்வராஜ் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர். சங்க மகளிர் அணித் தலைவி சரஸ்வதி செல்வராஜ் நன்றி கூறினார்.



# நிரஷ்ராயா கஜனின் பரதநாட்டிய அரங்கேற்றம்



அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி இயக்குநர் " காலசூரி " திவ்யா சுஜேனின் மாணவி நிரஷ்ராயா கஜனின் பரதநாட்டிய அரங்கேற்றம் 25.02.2023 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரனான டாக்டர் ராஜ்குமார் பாரதி இந்நிகழ்விற்கு இசை வழங்குவதோடு மட்டுமன்றி முதன்மை விருந்தினராகவும் வருகை தருகிறார். பேராசிரியர் சி. மௌனகுருவும், கெட்வே குழும நிறுவனங்களின் தலைவர் மருத்துவ கலாநிதி ஹர்ஷ அலஸும் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிக்க, கவிஞர் கலைச்செல்வி புலியூர் கேசிகனும், தெஹிவளை மற்றும் இரத்மலான கெட்வே கல்லூரிகளின் அதிபர் திருமதி பிரியந்தி செனவிரத்னேவும் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர். யோகக் கலை நிபுணர் திருமதி ஸ்ரீப்ரியா இந்திரமோகன், சென்னை சரசாலயா நடனப்பள்ளி நிர்வாக இயக்குநர் " நாட்டியச் செம்மல் " சண்முக சுந்தரம் ஆகியோருடன் இந்திய அணிசேர் கலைஞர்கள் இதில் பங்கேற்கின்றனர்.






# கடன் வட்டியைக் குறைப்பதற்கு கட்சிகள் தயாராக உள்ளனவா?

● சுபாஷிணி ஜயரத்ன
தமிழில் எம்.எஸ்.முஸப்பிர்

தற்போது நாட்டினுள் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியின் காரணமாக வர்த்தக வங்கிகளில் கடன் வட்டி விகிதங்கள் மிகவும் உயர்ந்துள்ளன இது தொடர்பில் பல்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் மேடைகளில் பல்வேறு வரைவிலக்கணங்கள் மற்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதையும் அடிக்கடி கேட்கவும் பார்க்கவும் கிடைக்கின்றது. இது தொடர்பில் அந்தந்த அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளைக் கேட்டறிந்து கொள்வதற்காக கீழ் வரும் கேள்விகளை நாம் கேட்டோம்.

01 பல வருடங்களாகவே தனி இலக்கத்தில் இருந்த வர்த்தக வங்கிகளின் கடன் வட்டி விகிதம் தற்போது 30 வீதம் என்றவாறு மிக அதிகளவில் அதிகரித்துள்ளது. இந்நிலையினை உங்களது கட்சி எவ்வாறு பார்க்கின்றது?

02 வங்கி வட்டி விகிதம் அதிகரித்துள்ளமை இன்று மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கடன் வட்டி விகிதத்தை உயர்த்துவது அல்லது குறைப்பதை யார் தீர்மானிப்பது? அது எவ்வாறு?

03 தற்போது அதிகாரத்திலிருப்பது உங்களது கட்சி என வைத்துக் கொண்டால் இவ்வாறு அதிகரித்துள்ள கடன் வட்டி விகிதத்தை குறைப்பதற்கு உங்களது கட்சி முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன?

04 வங்கி வட்டி விகிதத்தை அதிகரித்தல் அல்லது குறைப்பதற்கு தீர்மானிப்பது அரச நடவடிக்கையா? அல்லது மத்திய வங்கியின் செயற்பாடா?



## நாம் அதிகாரத்திற்கு வந்தால் நிச்சயமாக வட்டி விகிதத்தை மாற்றுவோம்! மத்திய வங்கிக்கு மாத்திரமல்ல அரசுக்கும் பொறுப்புள்ளது!

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான

**திஸ்ஸ அத்தநாயக்க**

01 நாட்டின் அபிவிருத்திக்கும் சமூக இருப்புக்கும் வங்கி வட்டி விகிதம் மிகவும் முக்கியமானது. இதை ஒற்றை இலக்கத்தில் பேணிக் கொள்வதன் ஊடாக முதலீடுகளுக்கு அதிக வாய்ப்புக்கள் கிடைப்பதுடன் வாழ்க்கைத் தரத்தைப் பேணிக் கொள்ளவும் முடியும். அபிவிருத்தி இலக்குகளை முன்னெடுத்துச் செல்லும் அனைத்து நாடுகளும் வங்கி வட்டியை ஒற்றை இலக்கத்திற்கு கொண்டு வர கடுமையான முயற்சிகளை மேற்கொள்கின்றன. தற்போது வங்கி வட்டி வீதம் 30% 35% வரை உயர்த்தப்பட்டிருப்பது மக்களுக்கு தாங்க முடியாத சுமையை ஏற்படுத்தி இருக்கின்றது. இதனால் ஏற்படும் முக்கிய பாதிப்பு நாட்டில் முதலீடுகள் குறைவதாகும். முதலீடுகள் குறைவதால் உற்பத்தி வேலைவாய்ப்புக்கள் மற்றும் வருமான வழிகள் குறைவடைவதுடன் அனைத்து துறைகளும் பாதிப்படைகின்றன. ஒரு நாட்டின் பொருளாதாரக் கொள்கை உருவாக்கப்பட வேண்டியது இதனை ஒற்றை இலக்கத்திற்குக் கொண்டு வரும் வகையிலாகும். இப்போது அனைத்துமே கட்டுப்பாட்டை மீறிப் போயுள்ளன.

02 இது நிதிச் சந்தையில் தேவை மற்றும் வழங்கல் ஆகிய இரண்டு அடிப்படைக் காரணிகளைக் கொண்டு மத்திய வங்கியால் தீர்மானிக்கப்படுகிறது. பண விநியோகத்திற்கும் தேவைக்கும் இடையில் சமநிலை இருக்க வேண்டும். எனினும் எம்மால் தாங்கிக் கொள்ள முடியாதவாறு முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் நிதிக் கடன்களைப் பெற்றுக் கொண்டதால் இறுதியில் இந்நிலை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டை மீறிச் செல்ல ஆரம்பிக்கும். ஒரு நாட்டின் நிதி நிலைமை மற்றும் வங்கி வட்டி விகிதம் என்பன அரசாங்கத்தின் சார்பாக மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றது.

03 இந்நிலையை சுற்றுநிருபங்கள் அல்லது வேறு வழிகளால் மாற்ற முடியாது. கடந்த காலங்களில் டொலரின் பெறமதியினைத் தக்கவைக்க மத்திய வங்கி செய்தவற்றை இதற்கும் செய்தால் இது வெடிக்கும் நிலை ஏற்படும். எனவே நிலையான பொருளாதார முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் மூலம் மாத்திரமே இந்நிலையினைக் கட்டுப்படுத்த முடியும். தற்போது 30 வீதம் வரையில் அதிகரித்துள்ள வங்கி வட்டி விகிதத்தை முறையாகக் குறைப்பதற்கு தேவை மற்றும் வழங்கலின் பக்கம் நோக்கி வெளிநாட்டு வருமான வழிகளின் பக்கம் அதிக கவனத்தைச் செலுத்தி உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக மேற்கொள்ள வேண்டும். உள்நாட்டு உற்பத்திகளை ஊக்கப்படுத்த வேண்டும். வருடத்திற்கு 12 பில்லியன் டொலர் என்ற ஏற்றுமதி வருமானத்தை மூன்று ஆண்டுகளில் 20 பில்லியன் டொலர்களாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

04 இது அரசு மற்றும் வங்கியோடு தொடர்புடைய ஒன்றாகும். மத்திய வங்கி உத்தியோகபூர்வ பிரதிநிதி என்பது உண்மைதான். ஆனால் அரசாங்கமே கொள்கை வகுப்பாளர். அதன்படி மத்திய வங்கி எடுக்கும் தீர்மானங்கள் எம்மைப் பாதிக்கின்றன. வட்டி விகிதத்தை தீர்மானிப்பவர்கள் நாங்கள் இல்லை என்று அரசாங்கத்தால் கூற முடியாது. இடது கை என்ன செய்கிறது என்பதை வலது கை அறிந்திருக்க வேண்டும்.



## பணவீக்கத்திற்கான மருந்து வட்டி விகிதத்தை அதிகரிப்பதா? அரசு தவறான சூத்திரத்தைப் பயன்படுத்துகின்றது!

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான

**வாசுதேவ நாணயக்கார**

01 அரசாங்கம் இவ்வாறு வங்கி வட்டியினை அதிகரித்திருப்பது மிகப் பெரும் குற்றமாகும். இன்று சிறிய மற்றும் நடுத்தர மக்களால் கடனைப் பெற்று வாழ்க்கையில் முன்னேற முடியாத நிலை தோன்றியிருக்கின்றது. வங்கி வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டதால் வியாபாரங்கள் அனைத்தும் இன்று வீழ்ச்சியடைந்துள்ளன. வங்கி வட்டி வீதங்கள் இந்தளவுக்கு உயர்த்தப்பட்டதற்கான காரணம் பண வீக்கம் அதிகரித்ததே என இவர்கள் கூறுகின்றார்கள். பணவீக்கத்திற்கு காரணம் புழக்கத்தில் இருக்கும் பணத்தின் அளவு அதிகரிப்பது மட்டுமல்ல. முறையற்ற இலாபம் மற்றும் அரசாங்க வரிகள் போன்ற இவை அனைத்தினாலேயே பொருட்களின் விலை அதிகரிக்கிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் நியாயமான விலையில் விநியோகிக்கப்பட்டால் இந்தளவுக்கு இலங்கையில் பணவீக்கம் ஏற்படாது. இக்காரணத்தினால் இன்று எவரும் முதலீடு செய்ய முன்வருகிறார்கள் இல்லை. பணவீக்கத்துக்கு மருந்து வழங்குவதாகக் கூறி வட்டி விகிதத்தை உயர்த்துவதால் முதலீட்டில் சரிவு ஏற்படுவது மாத்திரமே இடம்பெறும். முதலீடுகள் சரிவடைந்துள்ளதால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறைகிறது.

02 கடன் வட்டி வீதத்தைத் தீர்மானிப்பது மத்திய வங்கியாகும். கடன் வட்டி விகிதத்தை உயர்த்தும் போது அதனை அவர்கள் பல்வேறு வகைகளில் நியாயப்படுத்துகின்றார்கள். தற்போது நாட்டில் பணவீக்கம் அதிகமாகும். அதனால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு இருக்கும் வழி புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவினைக் குறைக்க வேண்டும் என நியாயப்படுத்தியே இவ்வாறு வட்டி விகிதம் உயர்த்தப்படுகின்றது. இதனால் அரசாங்கம் தவறான சூத்திரத்தைப் பின்பற்றி பயணிக்கின்றது என்பதே எனது நிலைப்பாடாகும். கடைசியில் இவை அனைத்தும் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

03 நாம் அதிகாரத்தில் இருந்தால் இவ்வாறு வட்டி விகிதத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்கப் போவதில்லை. எப்படியாவது வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். வட்டி விகிதங்களைக் குறைப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை அப்போது நாம் அரசாங்கம் என்ற வகையில் மத்திய வங்கிக்கு வழங்குவோம்.
எந்த அளவில் இந்த வட்டி விகிதத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் அந்த வட்டி விகிதம் எந்தளவுக்குச் செல்லும் என்ற விடயங்களை இப்போதைக்குக் கூற முடியாது. என்றாலும் கண்டிப்பாக வட்டி விகிதத்தைக் குறைப்போம்.

04 தற்போதைய அரசாங்கமே கடன் வட்டி வீதத்தை அதிகரிக்கும் பணியை மத்திய வங்கியிடம் ஒப்படைத்துள்ளது. இருப்பினும் வங்கி வட்டி விகிதத்தை குறைப்பதற்கு அரசினால் தலையிட முடியும். என்றாலும் தற்போது தற்போதைய அரசின் கீழ் அந்தச் செயற்பாடு இடம்பெறுவதில்லை. அரசாங்கம் மத்திய வங்கியின் நிதிச் சபைக்கு அரச கொள்கையினை விளக்க வேண்டும். அவ்வாறுதான் மத்திய வங்கி செயற்பட வேண்டும். இந்த இரண்டு தரப்பினருக்கும் இடையே எந்த முரண்பாடுகளும் இல்லை.



## அரசாங்கம் வங்கி வைப்பு பணத்தை செலவு செய்கின்றது! அரச வங்கிகள் அறவிட முடியாத கடன்களை அரசியல் கைக்கூலிகளுக்கே வழங்கியுள்ளன!

மக்கள் விடுதலை முன்னணி அரசியல் பீட உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான

**சுனில் ஹந்துந்னெத்தி**

01 வங்கிகள் இருப்பது வியாபாரிகளுக்கும் மக்களுக்கும் கடன்களை வழங்குவதற்கே அன்றி அரசாங்கத்திற்கு கடன் வழங்குவதற்கு அல்ல. அரசாங்கத்திற்கு கடன் வழங்குவதால் நாட்டுக்கு கிடைக்கும் பலன்கள் எதுவுமில்லை. இன்று வியாபாரங்களுக்கு வழங்குவதற்கு இருக்கும் பணம் சம்பளம் வழங்குவதற்காக அரசாங்கத்திற்கு வழங்கப்படுகின்றது. வங்கிகள் இருப்பது அரசாங்கத்திடம் பணம் இல்லாத போது சம்பளம் வழங்குவதற்கான பணத்தை வழங்குவதற்கு அல்ல. வங்கியில் இருக்கும் வைப்புத் தொகைகளை இந்த அரசாங்கம் இல்லாமல் செய்கின்றது. அப்போது வங்கி கட்டமைப்பு வீழ்ச்சியடைகின்றது. ஒரு வங்கியாவது வீழ்ச்சியடையுமானால் அது மிக மோசமான நிலையாகும். இன்று சில வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதை வெளிநாடுகள் நிறுத்தியிருக்கின்றன. இதனால் நிதிக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கே இருக்கின்றது.

02 செலாவணிக் கட்டுப்பாடு மற்றும் பணத்தின் மதிப்பினை மத்திய வங்கி நிலையானதாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அரசாங்கம் இந்த இரண்டு மாறிகள் பற்றி மட்டுமே சிந்தித்துள்ளது. இவற்றை மாத்திரம் சிந்தித்து வங்கி வட்டியினை அதிகரிப்பதால் சாதாரண மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத நிலையே ஏற்படும். ஒரு நாட்டில் நிலையான வட்டி விகிதம் இருக்குமாயின் வியாபாரிகள் வியாபாரங்களை ஆரம்பிப்பதும் வீடுகள் நிர்மாணிக்கப்படுவதும் கடன் பெறுவதும் அதைப் பற்றி சிந்தித்தேயாகும். 6 7 வீத வட்டிக்கு கடனைப் பெற்றால் அவர்களால் சம்பளத்திற்கு அமைய கடனைச் செலுத்த முடியும். எனினும் ஒரேயடியாக வங்கி வட்டியினை உயர்த்தி கடன் வழங்குவதை வரையறுத்து முன்னர் பெற்ற கடனுக்கும் வட்டியினைக் கூட்டியுள்ளார்கள். சாதாரண மக்கள் கடனைப் பெறும் தேவையின் காரணமாக நிலையான வட்டி விகிதங்கள் மற்றும் மாறக்கூடிய வட்டி விகிதங்களைப் பற்றி அந்தளவுக்குச் சிந்திப்பதில்லை.

03 பொருளாதாரத்திற்கு பணம் தேவை. அரசாங்கத்தின் செலவினங்களைக் கண்டிப்பாகக் குறைத்தே ஆக வேண்டும். ஊழலை நிறுத்த வேண்டும். உற்பத்தி செயல்முறையை அதிகரிக்க வேண்டும். இதற்காக பணத்தை அச்சடிக்க முடியாவிட்டால் செய்ய வேண்டியது அரசாங்க செலவினங்களை கட்டுப்படுத்துவதுதான். மக்களின் செலவுகள் தற்போது தானாகவே குறைந்துவிட்டது. அமைச்சர்களின் சிறப்புரிமைகள் உத்தியோகபூர்வ இல்லங்கள் கொடுப்பனவுகள் மேலதிக நேர கொடுப்பனவுகள் மற்றும் உயர் சம்பளம் என்பன மாற்றப்பட வேண்டும். எங்கள் அரசாங்கத்தின் கீழ் எம்மால் இதனைச் செய்ய முடியும். இன்று மக்களை விட அரசாங்கம் அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டும். இன்று அரச வியாபாரம் நட்டத்தை அடைவதற்கு எந்தக் காரணங்களும் இல்லை. அரசியல்வாதிகளாலேயே இவை நட்டப்படுத்தப்பட்டுள்ளன. எமது நாட்டில் திருட்டு இல்லாத அரசியல் தலையீடுகள் இல்லாத அரச நிறுவனங்களே இல்லை. எமது அரசாங்கத்தின் கீழ் இவை அனைத்தையும் நிறுத்துவோம்.

04 இது மத்திய வங்கியின் செயற்பாடேயன்றி அரசாங்கத்தின் செயற்பாடு அல்ல நிதிச் சந்தையை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாது. அதனைப் பலப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்



## தற்போது அனுபவித்துக் கொண்டிருப்பது வரிச் சலுகைகளை வழங்கி வருமான வரியை இல்லாமல் செய்ததன் பலனையேயாகும்! வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கு இன்னும் சில காலம் செல்லும்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்

**சாணக்கியன் ராசமாணிக்கம்.**

01 வங்கி வட்டி விகிதமானது நாட்டின் பொருளாதாரத்தைக் காட்டும் ஒரு சுட்டி மாத்திரமேயாகும். பணவீக்கம் அதிகரிக்கும் போது வங்கி வட்டியினை அதிகரிக்காவிட்டால் நாடு மோசமான நிலைக்குள் உள்ளாகும். இலங்கையில் வட்டி விகிதங்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் 1948ல் இருந்து முன்னெடுத்துச் செல்லப்பட்டு வரும் மோசமான பொருளாதார கொள்கைகளாகும். இந்த படு மோசமான நிலை 2018 ஒக்டோபர் 52நாள் ஆட்சியில் இடம்பெற்ற விடயங்களால்தான் 2019ல் இந்த நிலை மிகவும் மோசமடைந்தது. வரிச் சலுகைகள் வழங்கப்பட்டு வருமான வரிகளை இல்லாமலாக்கியதன் விளைவுகளையே நாம் இப்போது அனுபவித்து வருகின்றோம்.

02 இந்த வட்டி அதிகரிப்புக்கு மத்திய வங்கி அமைச்சு பொருளாதார நிபுணர்கள் மற்றும் ஐஎம்எப் ஆகியவற்றிலிருந்து வந்த சில பரிந்துரைகளே காரணமாகும். அந்த யோசனைகள் இலங்கையை நிலையற்ற தன்மைக்கு உள்ளாக்குவதற்கல்ல. இந்த நேரத்தில் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டி நேரிடும். எனினும் இலங்கை மக்கள் நாட்டிலிருந்த பணத்தை விட அதிகமாகச் செலவழித்தனர். ஒரு நாட்டை முன்னெடுத்துச் செல்வதவதற்கு வரிகள் அவசியமாகும். எனினும் மக்கள் வரி செலுத்தும் போது அரச செலவுகள் குறைவடைய வேண்டும். நாட்டு மக்கள் மீது வரி விதிக்கப்பட்டால் நாட்டின் தலைவர்கள் என்ற வகையில் ஆளும் கட்சியும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

03 நாட்டின் வட்டி விகிதங்களைக் குறைப்பதற்கு இன்னும் சில காலம் எடுக்கும். சாதாரணமாக வட்டி விகிதங்களைக் குறைப்பது கடன் எடுப்பதைப் குறிப்பதற்காகும். அப்போது இலங்கையில் பணச் சுழற்சியில் மாற்றங்கள் ஏற்படும். எனினும் அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் இருக்கும் ஒரே தீர்வு அந்நியச் செலாவணியை ஈட்டும் முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டுவருவதுதான். அணை ஒன்று உடைந்தால் அதனை பசையைக் கொண்டு ஒட்ட முடியாதே. இலங்கைக்கு ஐஎம்எப் மூலம் 2.9 பில்லியன் டொலர்கள் கிடைத்தால் அதன் பின்னர் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் கிடைக்கும். எனினும் அந்த நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும். தொடர்ந்தும் கடன் வாங்குவதை விட நாட்டின் முதலீடுகளை மேம்படுத்தவும் பணவீக்கத்தை குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நம் நாட்டில் இல்லாததை இறக்குமதி செய்வதற்கு டொலர்கள் தேவை. ஆனால் டொலரின் விலை 360 ரூபாயாக இருக்கும் வரைக்கும் விலைகளைக் குறைக்க முடியாது. அதற்கு ஒரே வழி வெளிநாட்டு முதலீட்டை கொண்டு வந்து ரூபாவின் பெறுமதியை பலப்படுத்துவதுதான். பில்லியன் கணக்கான முதலீடுகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டால் வட்டி வீதத்தையும் பணவீக்கத்தையும் குறைக்க முடியும். எனக்குள்ள பொருளாதார அறிவின் படி இந்த வட்டி விகிதத்தை குறைக்க வேறு வழிகளில்லை.

04 இலங்கையினுள் அரசு அதிகாரிகள் இதில் அதிகளவில் தலையிடுகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்கள் பணிகளைச் சுதந்திரமாகச் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். இந்த பிரச்சினைகளுக்கு கடைசியில் முகங்கொடுக்க வேண்டி ஏற்படுவது அரசு அதிகாரிகள் தான். அந்த வகையில் முடிவுகளை எடுப்பதற்கு மத்திய வங்கியின் ஆளுனர் மற்றும் பொருளாதார நிபுணர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.



# அரசியல் அரங்கம்

அர்ஜூன்



# ஆணைக்குழு முடிவு செய்யுமானால் தேர்தலை எதிர்கொள்ள நாம் தயார்!

## அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வாவுடன் சந்திப்பு

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ள தீர்மானம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாக இருக்கும் என துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். "கூச்சலிடும் எதிர்க்கட்சிகள் மாற்றுத் தீர்வுகளை முன்வைப்பதே பொருத்தமானது. இதனை விடுத்து அரசியல் நோக்கத்துக்காக வெறுமனே கூச்சலிட்டுப் பயனில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார். நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் ஜனாதிபதி அண்மையில் முன்வைத்த கொள்கைப் பிரகடனம் தொடர்பில் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**கே: ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையை எவ்வாறு நீங்கள் பார்க்கின்றீர்கள்?**

பதில்: பாரம்பரிய அரசியலில் இருந்து விலகி ஜனாதிபதி வெளியிட்ட தனித்துவமான அறிக்கையாக இது அமைந்துள்ளது. இது இலங்கை குறித்த புதிய பார்வையாகவும், ஜனாதிபதியால் ஸ்தாபிக்கப்பட்ட புதிய அரசியல் கலாசாரமாகவும் அமைகிறது. தனது தீர்மானங்களும் கொள்கைகளும் பிரபலமானவை அல்ல என்றும், பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கும், தற்போது நாம் எதிர்நோக்கும் அச்சுறுத்தலில் இருந்து நாட்டை மீட்பதற்கும் அத்தீர்மானங்கள் உதவும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களாக அவ்வாறான அரசியல்வாதிகளை நாம் காணவில்லை. மக்களை ஏமாற்றி எவ்வாறு ஆட்சிக்கு வரமுடியும் என நாட்டில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளும் தேர்தலை எதிர்நோக்கியுள்ளனர். நாம் இப்போது ஒரு பெரிய பிரச்சினையில் சிக்கியுள்ளதால், அரசியல் பிழைப்பு இருந்தும் அனைத்து அரசியல்வாதிகளும் உண்மையைப் பேசி சரியான கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரம் இதுவாகும்.

அனைத்து வரிகளையும் குறைத்து, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கப் போகின்றோம் என யாராவது கூறினால் அது பிரபலமான முடிவாக அமையாது. அவ்வாறு செய்யப்படுமாயின் அது பொருளாதாரத்தை மோசமான நிலைக்குத் தள்ளும். சலுகைகளை வழங்கி மக்கள் மத்தியில் பிரபலமாக இருப்பதை விரும்பாத அரசியல்வாதிகள் யார்தான் இருக்கின்றனர்? இருப்பினும், இந்த புகழ் நீண்ட காலம் நீடிக்காது. நடிப்பு என்று வரும்போது நீங்கள் தோல்வியடைந்து விட்டீர்கள் என்று மக்கள் சொல்வார்கள். எனவே, ஜனாதிபதி உண்மையைப் பேசியுள்ளார் மற்றும் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளை சரியாகப் பகுப்பாய்வு செய்து அதனை மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

**'நிதிவசதி இல்லாத இன்றைய சூழலில் தேர்தல் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன்**

**கே: பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகளான தேசிய மக்கள் சக்தி உள்ளிட்டவை ஜனாதிபதியின் இந்தக் கொள்கைப் பிரகடன உரையைப் புறக்கணித்திருந்தன. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: ஜனநாயக நடைமுறைகளையும் நெறிமுறைகளையும் ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். அப்படி இல்லையாயின் ஜனநாயகத்துடன் நீங்கள் உடன்படவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள். முன்வைக்கப்படும் கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்களுடன் உடன்பட முடியாவிட்டால், அவர்கள் அவற்றுக்கான மாற்றுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும். நாம் வரிவிதிக்கும் விதம் தவறு என்று சொன்னால் எப்படி வரி விதிப்பது, எவ்வாறு வரியைக் குறைப்பது, போதிய அளவு பணத்தைக் கொண்டு திறைசேரியை எவ்வாறு நிரப்புவது என்பன குறித்துக் கூற வேண்டும். அவர்கள் ஒரு சாத்தியமான மாற்றுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். கூச்சல் இடுவது மாத்திரமே அவர்களால் செய்யக்கூடிய ஒரேயொரு மாற்றுத் தெரிவு. நாம் பிரச்சினைகளை விவாதித்து அதன் பிறகு எதிர்நோக்கக் கூடிய தீர்வுகளைக் கொண்டு வருவதே ஜனநாயகத்தின் ஊடாக நாம் செய்யக் கூடிய விடயம். அரசின் கொள்கைகள் தவறாக இருந்தால் அந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டும் அல்லது அவற்றை அம்பலப்படுத்த வேண்டும்.

அதன்பிறகு, ஆட்சிக்கு வந்ததும் மாற்றுவழியை அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். அத்தகைய சாத்தியமான மாற்றுத்திட்டம் எதையும் அவர்கள் பரிந்துரைக்கவில்லை. 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மற்றும் ஏனைய கட்சிகள் தமது நிலைப்பாடுகளை அறிவிக்க வேண்டும். நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் பிற கொள்கைகளுக்கும் வருங்கால மாற்றுவழிகளை வழங்கத் தவறியதால், இந்த எதிர்க்கட்சி தோல்வியடைந்த எதிர்க்கட்சியாகும்.

> **புலிகளின் முன்னாள் போராளிகள் சிலர் சுமார் 30 வருடங்களாக சிறையில் உள்ளனர். இந்தப் பிரச்சினையை நாம் மிகவும் அனுதாபத்துடன் பார்க்க வேண்டும். அதற்கு ஒரு சாத்தியமான தீர்வை வழங்காவிட்டால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை கருத்தில் கொள்ள வேண்டும். இராணுவம் தமக்கு ஒரு குறிப்பிட்ட அளவு காணி மட்டுமே தேவை என்று தீர்மானித்தால், மீதியை விடுவிக்க முடியும் என்றால், அக்காணிகளை விடுவிப்பதில் என்ன பெரிய பிரச்சினை?**

**கே: 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் மகாசங்கத்தினர் மற்றும் சில அரசியல்வாதிகள் எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளனர். இது பற்றி உங்களின் நிலைப்பாடு என்ன?**

பதில்: நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு இடமளிக்க மாட்டோம் என்று ஜனாதிபதி உறுதிமொழி வழங்க வேண்டும். 13 ஆவது திருத்தம் ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ளது. அது அவசியமில்லை என்று கூறும் ஒரு பிரிவினர் இருந்தால், அவர்கள் ஒரு திருத்தத்தை முன்வைத்து, அரசியலமைப்பிலிருந்து 13 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும். எங்களுக்கு அரசியல் ஸ்திரத்தன்மையும் சர்வதேச அங்கீகாரமும் தேவை. எனவே, நாம் இதனைக் குறுகிய கண்ணோட்டத்தில் பார்க்க முடியாது. அதேசமயம், தீவிரவாத சக்திகளை அரசியலில் நுழைய அனுமதிக்கக் கூடாது. அதுவே ஜனநாயகத்தின் முடிவாக இருக்கும். நாங்கள் 30 வருடகால யுத்தத்தை அனுபவித்தோம், போதுமான அளவு பாதிக்கப்பட்டுள்ளோம். அதிர்ஷ்டவசமாக, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது. அதே நேரத்தில், நாம் ஒரு சாத்தியமான மாற்றீட்டையும் வழங்க வேண்டும். உதாரணமாக, இராணுவம் தமக்கு ஒரு குறிப்பிட்ட அளவு காணி மட்டுமே தேவை என்று தீர்மானித்தால், மீதியை விடுவிக்க முடியும் என்றால், இந்தக் காணிகளை விடுவிப்பதில் என்ன பெரிய பிரச்சினை?

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் சிலர் சுமார் 30 வருடங்களாக சிறையில் உள்ளனர். எனவே, இந்தப் பிரச்சினையை நாம் மிகவும் அனுதாபத்துடன் பார்க்க வேண்டும் மற்றும் அதற்கு ஒரு சாத்தியமான தீர்வை வழங்காவிட்டால் ஏற்படக் கூடிய பின்விளைவுகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

**'ஜனாதிபதி உண்மையைக் கூறியுள்ளார். நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையை சரியாகப் பகுப்பாய்வு செய்து அதனை மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார்**

**கே: இந்த நேரத்தில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவது குறித்து உங்கள் கருத்து என்ன? இது ஒத்திவைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறீர்களா?**

பதில்: வெளிப்படையாகச் சொல்வதானால், தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற சூழல் இல்லாததால், அது ஒத்திவைக்கப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஆனால், தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்த முடிவு செய்தால், அதைத் தடுக்காமல் எதிர்கொள்ள வேண்டும். பணத்தைக் கண்டுபிடித்து தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் விவகாரம். இத்தருணத்தில் அரசு நிதி வழங்க முடியாத நிலையில் உள்ளது என்பதை மிகத் தெளிவாகக் கூறியுள்ளோம். ஆணைக்குழு பணத்தைக் கண்டுபிடித்து தேர்தல் நடத்தினால், தேர்தலைச் சந்திப்போம். அரசியல்வாதிகளாகிய நாம் தேர்தலின் எந்தவொரு விளைவுகளையும் எதிர்கொள்ள முடியும். இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இது மக்களின் தீர்ப்பு. மக்கள் தீர்ப்பை தவறு என்று சொல்ல முடியாது. மக்கள் தீர்ப்பை ஏற்க வேண்டும்.

**எதிரணியினர் சாத்தியமான மாற்றுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். கூச்சலிடுவது மாத்திரமே அவர்களால் முடிந்த ஒரேயொரு மாற்றுத் தெரிவாக உள்ளது. அரசின் கொள்கைகள் தவறாக இருந்தால் அந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்**



**கே: தற்போது பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த 35 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகி சுதந்திர மக்கள் கூட்டணியை உருவாக்கி எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஹெலிகொப்டர் சின்னத்தில் போட்டியிட உள்ளனர். இது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வாக்குத் தளத்தை எவ்வாறு பாதிக்கும்?**

(18ஆம் பக்கம் பார்க்க)

---




# மருந்துப் பொருட்கள் உற்பத்தியில் உலகில் முன்னணி நாடாக இந்தியா

உலகில் அதிகளவு மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. ஆங்கில மருந்தை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தில் 100 இற்கு 20 சதவீதத்தை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. அதிகளவு தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் நாடு என்ற ரீதியிலும் இந்தியா சாதனை படைத்துள்ளது. அது நூற்றுக்கு 50% ஆகும்.

முழுமையான இயந்திரங்களுடன் கூடிய தொழிற்சாலைகளில் அவதானமாக உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகள் பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன. அந்நாடுகள் எதிர்பார்க்கும் உயர்ந்த தரத்தில் மருந்துகளை உற்பத்தி செய்ய இந்திய நிறுவனங்களால் முடிந்துள்ளது.

மருந்து உற்பத்தி மற்றும் மக்களால் தாங்கக்கூடிய விலைக்கு வழங்குவது என்பது இலகுவான காரியமல்ல. பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கைக்கு கொண்டு வரப்படும் சில மருந்து வகைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சில மருந்துகள் சந்தையில் இல்லை என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. நோயாளிகள் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளார்கள். அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் சில அத்தியாவசிய மருந்து வகைகளும் இல்லை. அவசரமான சத்திர சிகிச்சைகள் கூட ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தியா பாரியளவு மருந்து உற்பத்தி செய்யும் நாடு என்பதோடு, இலங்கைக்கு சலுகை அடிப்படையில் மருந்து வகைகளை விலைக்கு வாங்குவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடி வேளையில் சமூகம் முகம்கொடுக்கும் சிக்கல்களை கருத்தில் கொண்டு விரைவில் தீர்வுகளை வழங்க வேண்டும். நோயாளிகளுக்கு மருந்து கிடைக்காமை நல்ல நிலைமையல்ல. சட்டதிட்டங்கள் மற்றும் நிறுவன கட்டமைப்புகள் காணப்படுகின்ற போதிலும், வைத்தியசாலைகள் செயலிழப்பது மோசமான விடயமாகும். உயிரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை அவசியமாகும். பொறுப்பு வாய்ந்த பிரிவுகள் இணைய வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும். அரசாங்கம், டொக்டர்கள், சுகாதார தொழிற்சங்கங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் பொது இணக்கப்பாட்டுக்கு வருவது நல்லது. இந்திய மருந்துகளின் விலை குறைவு என்பதோடு, உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் சீனாவிலிருந்து பெருமளவு இறக்குமதி செய்யப்படுகின்றன. தொழிலாளர்களுக்கான செலவினம் குறைவு என்பதுடன், குறைந்த விலைக்கு மூலப்பொருட்களை பெற்றுக் கொள்ள முடிந்தமை இதற்குக் காரணமாகவுள்ளது.

குஜராத் மாநிலம் மருந்து உற்பத்தி மத்திய நிலையமாக உள்ளது. அதன் முக்கிய நகரமான வடோடரா அல்லது பரோடாவில் அமைந்துள்ள கைத்தொழில் நகரம் மருந்து உற்பத்திக்கு மிகவும் பிரசித்தமானது. குஜராத் இந்தியாவின் மொத்த மருந்து உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதி பங்களிப்பை வழங்குவதோடு, 4700 தொழிற்சாலைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குஜராத் முதலமைச்சராக 13 வருடங்கள் பணியாற்றியதுடன், அக்காலப் பகுதியில் புதிய முதலீட்டுக்காக கைத்தொழில் வலயம் ஒன்றையும் உருவாக்கினார். அங்கு கிடைத்த வரிச்சலுகைகள் காரணமாக அமைக்கப்பட்ட மருந்து உற்பத்தி நிறுவனங்கள் இன்று சர்வதேச தரத்திற்கு வந்துள்ளன.

சிகிச்சைக்குத் தேவையான மருந்து வகைகளை அதிகமாக உற்பத்தி செய்யும் இந்தியா, ஏழை நோயாளிகள் இலகுவாக விலைக்கு வாங்கக் கூடியது குறித்தும் கவனம் செலுத்தியுள்ளது. இதயநோய், நீரிழிவு ,புற்றுநோய், தைரொய்ட் மற்றும் பல நோய்களுக்கு அவசியமான 97 மருந்து வகைகள் விலைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டு விலைக்குக் குறைவாக மருந்தகங்களில் விற்பனை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. மக்களுக்கு வசதியாக கட்டணப் பட்டியலும் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

'ஜான் ஔசதி கேந்திரம்' என்பது இந்திய ஔடத வர்த்தகத்தில் இன்னொரு பிரிவாகும். அரசாங்கத்தின் கீழ் ஜான் ஔசதி மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் நிலையங்கள் அதிகளவு உத்தரப் பிரதேசத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. குறைந்த வருமானம் பெறும் மக்கள் அங்கு சென்று குறைந்த விலைக்கு மருந்தை பெற்றுக் கொள்ளலாம். இந்த மத்திய நிலையங்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இணையத்தில் செயலியொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மருந்துகளை விலைக்கு வாங்க வரும் நோயாளிகள் அந்த இடத்தில் காணப்படும் மருந்து வகைகள், அவற்றின் விலை என்பவற்றை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கு வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசின் செலவில் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் உள்ளன. சாதாரணமாக வருடத்திற்கு 40 பில்லியன் இந்திய ரூபா இலவச சிகிச்சைக்காக செலவிடப்படுகின்றது. வெளிநோயாளர் மற்றும் உள்ளக நோயாளிகளுக்கான சிகிச்சைகள் நடத்தப்படும் வைத்தியசாலைகள் காணப்படுவதோடு, அவற்றில் நோயாளிகளின் தேவைக்கான மருந்து இலவசமாக வழங்கப்படுகின்றது. அதைத் தவிர குடிமக்கள் சந்தையில் வைத்தியர்கள் பரிந்துரைக்கும் மருந்துகளை விலைக்கு வாங்கவும் முடியும். மேம்படுத்தப்பட்ட காப்புறுதி முறைகள் காணப்படுவதோடு, காப்புறுதி வசதியுடன் கூடிய நோயாளிகள் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் போது அவர்களுக்கான செலவை வழங்கும் காப்புறுதி நிறுவனங்களும் உள்ளன.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# காலநிலை நிதியுதவிக்கான 2023 பசுமை நிதிக் குழு

## ஜனாதிபதி ரணில் பணிப்பு

2023 ஆம் ஆண்டில் பசுமை நிதி திட்டங்களுக்கு நிதி திரட்ட, ஒரு வலுவான திட்ட வரைப்படத்தை வெளியிட தீர்மானிக்கப் பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்த்தன தலைமையில் பசுமை நிதிக் குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ருவன் விஜயவர்தன தலைமையில் (17) ஜனாதிபதி அலுவலகத்தில் இதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

காலநிலை மாற்றத்தில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவும் குறைந்த கார்பன் பொருளாதாரத்தை நோக்கி நகரவும் நிதி ஆதாரங்களை திரட்டுவதற்கு பசுமை நிதிக் குழு பணியாற்றவுள்ளது.

பசுமை நிதியத்தின் திட்ட வரைபடம், *Green Finance, Green Bonds, Climate Finance* போன்ற தற்போதைய செயல்முறைகள் அடங்கிய ஒரு தெளிவான நோக்கம், செயல்பாடு மற்றும் இலக்குகளுடன் ஒரே தளத்தில் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் இக் கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜயவர்த்தன, மேலதிக செயலாளர் வெர்னன் பெரேரா உள்ளிட்ட பலர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# சிவராத்திரி தினமன்று மாட்டு கன்று தலையை வீதியில் வீசிசென்ற விசமிகள்

**யாழ்.விசேட நிருபர்**

சிவராத்திரி தினமான நேற்றைய தினம் சனிக்கிழமை மாட்டு கன்று ஒன்றினை வெட்டி,அதன் தலையையும் இதர மாமிச கழிவுகளையும் வீதியில் வீசி சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் கோண்டாவில், முத்தட்டுமட வீதியில் நேற்றைய தினம் காலை மாட்டு கன்றின் தலையையும் அதனுடன் இதர மாமிச கழிவுகளும் வீசப்பட்டு காணப்பட்டமையை அடுத்து, அப்பகுதி மக்களால் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அதனை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் , நல்லூர் பிரதேச சபை கழிவகற்றும் வாகனத்தின் ஊடாக கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுத்தனர்.

இந்துக்களின் புனித விரதங்களில் ஒன்றான சிவராத்திரி விரத நாள் அன்று மாட்டு கன்றினை வெட்டி அதன் தலையை வீசி சென்று இருந்தமை அப்பகுதி மக்களிடம் கவலையை ஏற்படுத்தி இருந்தது.

விஷமிகளின் இந்த செயற்பாட்டிற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொலிசாரிடம் கோரியுள்ளனர்.

# துருக்கி-சிரியாவுக்கான நிவாரணப் பணிகளை முடிக்கிவிட்டுள்ள சவூதி அரேபியா

**மாவத்தகம தினகரன் நிருபர்**



துருக்கியையும் சிரியாவையும் பலமாகத் தாக்கிய அனர்த்தத்தில் அனைத்து உலக நாடுகளும் பங்கெடுத்து வரும் நிலையில்; குறிப்பாக சவூதி அரேபியா தனது நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளதாக; சவூதி அரேபிய ஆய்வுகளுக்கான ஆர்வலர் கலாநிதி அம்ஜத் ராசிக் தெரிவித்தார்.

சவூதி அரேபிய உத்தியோகபூர்வ தரவுகளை மேற்கோள்கட்டி அவர் மேலும் தெரிவிக்கையில்; அனர்த்தம் நிகழ்ந்த சில மணி நேரங்களிலேயே நிவாரணப்பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு மன்னர் சல்மான் மற்றும் இளவரசர் முஹம்மத் பின் சல்மான் இருவரதும் பணிப்புரைகள் சென்றடைந்தன. அதன் தொடராக வான்வழி நிவாரணத்துடன் உடனே களமிறங்கிய விஷேட சவூதி அனர்த்த மீட்புக்குழுக்களில்; அனர்த்த முகாமைத்துவ விஷேட நிபுணர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், நிவாரண முகாமைத்துவ அதிகாரிகள் என பலரும் உள்ளடங்கியிருந்தனர்.

அதேபோல் இவ்வான்வழி நிவாரணப் பணி மேலும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். மேலும் உதவிகள் தரை மார்க்கமாக பல கனரக கண்டைனர்களின் தொடரணியாக சென்று கொண்டிருக்கின்றது.

அதேவேளை பாதிக்கப்பட்டோருக்காக நன்கொடைகளை வழங்குமாறு நடத்தப்படும் பத்திரிகை மாநாடுகளில் அமைச்சர்களும் சவூதி அரேபிய உலமாக்களுக்கான உயர்சபை உறுப்பினர்களும் பங்கெடுக்கின்றனர். துருக்கி, சிறிய நாட்டு மக்களுக்காக சவுதியில் தேசிய ரீதியாக சேகரிக்கப் பட்ட நிதி (முதல் 24 மணி நேரத்திற்குள்) 178 மில்லியன் ரியால்களைத் தாண்டியது என *https://www.ksrelief.org/* எனும் உத்தியோகபூர்வ வெப்தளத்தினை மேற்கோள்கட்டி அவர் மேலும் தெரிவித்தார்.

# 700 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்தில் சிக்கிய ஆட்டோ

## இருவர் பலி, இருவர் படுகாயம்

தெனியாய, இறக்குவானை பிரதான வீதியின் ஜம்புகஸ்வெட்டிய பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். முச்சக்கரவண்டியொன்று சுமார் 700 அடி பள்ளத்தில் வீழ்ந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். விபத்தில் காயமடைந்த மேலும் இருவர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஹேயஸ் தோட்டத்தின் கீழ் பிரிவைச் சேர்ந்த கருப்பண்ணன் லோகநாதன் (வயது 62) ஆனக்கண்ணன் வள்ளியம்மாள் (வயது 67) இவர்கள் இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். முச்சக்கரவண்டி சாரதியின் கவனக்குறைவே விபத்துக்கு காரணமென பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ். முன்னாள் துணைவேந்தர் ரட்ணம் விக்னேஸ்வரன் காலமானார்

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தரும் கணிதத்துறை பேராசிரியருமான ரட்ணம் விக்னேஸ்வரன் மாரடைப்பு காரணமாக வெள்ளிக்கிழமை காலமானார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவராக இருந்து அதே பல்கலைக்கழகத்தின் துணேவேந்தர் ஆனார் எனும் வரலாற்றை முதலில் பதித்தவர் பேராசிரியர் விக்கினேஸ்வரன்.

கிழக்கு மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களில் கணிதத் துறை பேராசிரியராக பணியாற்றியவர்.

துணைவேந்தர் காலப்பகுதியில் மட்டுமல்ல தனது பல்கலைக்கழக தொழில் வாழ்வு காலங்களில் குறிப்பிடத்தக்க தமிழ்த் தேசிய காரியங்களை ஆற்றியவர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதியாகவும் பதவி வகித்தவர். கடும் உழைப்பு மற்றும் குடும்ப வறுமையைத் தாண்டி முன்னேற முடியும் என மெய்ப்பித்த பெருமனிதராவர்.

# புதிய மாணவர்களுக்கான அனுமதி

ஏறாவூர் மிச்நகர் RDS வீதியில் அமைந்துள்ள அந் நிழாமிய்யதுல் மஹ்பிய்யா அரபிக் கல்லூரிக்கு 2023 ஆம் ஆண்டிற்கான கற்கை நெறியைத் தொடர்வதற்கு பின்வரும் தகைமை உடைய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

புனித அல்குர்ஆனை சரளமாக ஓதக் கூடியவராக இருத்தல், சிறந்த நன்நடத்தை, நல்லொழுக்கம் உள்ளவராக இருத்தல்,கிதாப் பிரிவிற்கு தரம் 08 அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்புக்களில் கற்றவராக இருத்தல், ஹிப்ழ் பிரிவுக்கு 10 தொடக்கம் 12 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஹிப்ழ், ஷரீஆ பாடத் திட்டங்களுடன் அரபு, ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகள் கற்பிக்கப் படுவதுடன் தகவல் தொழில் நுட்பம் (IT) தலைமைத்துவப் பயிற்சி, அஹதிய்யா, தர்மச்சாரி. அல் ஆலிம், Mass Media,, நுண்ணறிவு, பொது அறிவு,க.பொ.த சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைக்கான கல்வித் திட்டங்களும், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினரால் (UGC) அங்கீகாரம் பெற்ற பட்டம் பெற வழிகாட்டல்களும் செய்யப்படுகின்றன.

எனவே தகமைகள் உள்ள மாணவர்கள் மார்ச் 05 ஆம் திகதிற்கு முன்னர் இணைந்து கொள்ளலாம்.

குர் ஆன் ஓதத் தெரியாத மாணவர்களுக்கு நவீன சூழலில் விசேட 03 மாதப் பாடத்திட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.பெற்றோரை இழந்த மாணவர்களுக்குப் புலமை பரிசில்களும் வழங்கப்படும்.

## மகா சிவராத்திரி தின ஒளியுடன்...

வலுப்படுத்த முடிவு செய்தால், நாடு எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் கடந்து, அமைதி, நல்லிணக்கம் மற்றும் செழிப்பு நிறைந்த நாட்டை நாம் நிச்சயமாக கட்டியெழுப்ப முடியும்.

மஹா சிவராத்திரியில் ஏற்றப்படும் தீப ஒளியால் அனைத்து துன்பங்களும் நீங்கி, வளமான இலங்கையின் கதவுகள் திறக்கப்பட வேண்டுமென்றும் நான் பிரார்த்திக்கிறேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மஹா சிவராத்திரி செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தலை நடத்துவது...

தோன்றுகின்றது.

மக்களின் வாக்குரிமையை அறிந்து ஜனநாயகத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

எனவே, அரசு தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து எதிர்வரும் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றே அரசிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கிறதென ரிஷாத் பதியுத்தீன் தெரிவித்துள்ளார்.

## ஆகஸ்ட் மாதம் மீண்டும்...

எரிசக்தி மூலங்களிலிருந்து மின் சாரத்தைப் பெறுவதற்காக பன்னிரண்டு மாத காலத்துக்குள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை நாற்பது பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்தொகையை செலுத்துவதற்காக அரச வங்கியொன்றில் ஐம்பது பில்லியன் ரூபாவை கடனாகப் பெறுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. பெப்ரவரி 15 முதல், மின்சாரக் கட்டணம் 66 சதவீதம் உயர்த்தப்பட்டது. மார்ச் மாதம் முதல் வாடிக்கையாளர்களிடமிருந்து புதிய மின் கட்டணம் வசூலிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மயோன் முஸ்தபாவுக்கு...

நேற்று முன்தினம் இந்த தண்டனையை விதித்து உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதியை தெரிவு செய்தல் தொடர்பிலான நிபந்தனைகளை மீறியதாக குற்றம் சுமத்தி அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

கடந்த 2010ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு, தேசிய சுதந்திர முன்னணியின் ஆதரவை திரட்டும் நோக்கில் கட்சியின் ஊடகப் பேச்சாளர் முஸம்மிலுக்கு 42 இலட்சம் ரூபா வழங்க முயற்சித்தமை உள்ளிட்ட பல்வேறு குறறச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதனைத் தொடர்ந்து மயோன் முஸ்தபாவுக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# எங்கள் கருத்து

## தமிழக அரசியல்வாதிகளின் வேடிக்கையான பேச்சுகள்!

இது ஒருபுறமிருந்தாலும், மறுபுறத்தில தமிழ் நாட்டு அரசியல்வாதிகளில் ஒருதரப்பினர் தங்களது அரசியல் இருப்புக்காக இலங்கைத் தமிழர் விவகாரத்தை வாய்ப்பாகப் பயன்படுத்துவது தொடர்ந்து கொண்டே வருகின்றது. இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் இந்திய மத்திய அரசு அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக தமிழக அரசியல்வாதிகள் கண்டனம் தெரிவித்து வருவது புதுமையான செய்தியல்ல.

தமிழகத்தில் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்துள்ள கட்சியை வசைபாடுவதற்கும், மத்திய அரசு மீது கண்டனம் செலுத்துவதற்கும் இலங்கைத் தமிழ் மக்கள் விவகாரத்தை ஒரு துரும்பாக எடுத்துக் கொள்வதற்கு தமிழக அரசியல்வாதிகள் ஒருபோதுமே தயங்கியதில்லை.

இலங்கையின் பேரினவாதத்தை வசைபாடுவதன் மூலம் அரசியல் நடத்தும் போக்கொன்று தமிழக அரசியல்வாதிகளிடம் தொடர்ந்து கொண்டு வருகின்றது

தமிழக அரசியல்வாதிகளின் இத்தகைய எதிர்ப்பு போக்கு காரணமாகவே இலங்கையின் பெரும்பான்மையின மக்கள் தமிழகம் மீது வெறுப்புக் கொள்ளும் சுபாவமும் உருவாகியது. அதேசமயம், தமிழக அரசியல்வாதிகளின் கண்டனங்களை தென்னிலங்கை அரசியல்வாதிகளோ அல்லது சிங்கள மக்களோ பொருட்படுத்தாத ஒரு போக்கும் இயல்பாகவே தொடருகின்றது. இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தை தமிழக அரசியல் தலைவர்கள் தங்களது அரசியல் நலனுக்காகவே பயன்படுத்துகின்றனரென்ற கருத்தானது தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்திருக்கின்றது.

இவ்வாறான நிலைமையில், தமிழ்நாட்டின் பழுத்த அரசியல்வாதியான பழ. நெடுமாறன், புலிகளின் தலைவர் குறித்து பரபரப்பான கருத்தொன்றை கடந்த வாரம் தெரிவித்திருந்தார். நெடுமாறனின் கருத்தும் அவரது அரசியலுக்கானது என்றே தென்னிலங்கையின் ஒட்டுமொத்த பெரும்பான்மை சமூகமும் கருதுவதை தவறென்று ஒதுக்க முடியாதிருக்கின்றது.

## அத்தியாவசிய சேவைகளாக...

பிரிவின்படி அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 17ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள இவ் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், சுகாதாரம், மின்சாரம், எரிபொருள், எரிபொருள் விநியோகம் என்பன அத்தியாவசிய சேவைகளாக்கப்பட்டுள்ளன.

மேலும் வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் நோயாளிகளின் பராமரிப்பு இல்லங்கள் மற்றும் சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## பயிர்களை அழிக்கும்...

உருளைக்கிழங்கு பயிரிட முடியாமல் பயிர்களை நாசம் செய்வது தொடர்பில் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர் மஹிந்த அமரவீர,

பயிர்களை அழிக்கும் ஆறு விலங்குகள், மயில்கள், குரங்குகள், மர அணில்கள் முள்ளம்பன்றிகள் மற்றும் காட்டுப்பன்றிகள் ஆகியவை பாதுகாக்கப்பட்ட இலங்கை விலங்குகள் பட்டியலிலிருந்து அண்மையில் நீக்கப்பட்டன.

எனவே, அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் பயன்படுத்த விவசாயிகளுக்கு சுதந்திரம் இருப்பதாக அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

அதீத ஆய்வுகள், வெளிநாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் உள்ளிட்டவற்றுக்குப் பிறகு, பிரச்சினையைத் தீர்க்க வேறு வழிகள் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

## இந்தியாவுக்கும் இலங்கைக்கும்...

நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இவ்வாறு தெரிவித்தார்.

தென்னிந்தியாவில் மிகப்பெரிய இஸ்லாமிய பல்கலைக்கழகமான கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டம் பட்டிக்காடுவில் அமைந்துள்ள ஜாமிஆ நூரிய்யா அரபிய்யா பல்கலைக்கழகத்தின் 5ஆவது ஆண்டுவிழாவும், 57ஆவது பட்டமளிப்பு விழாவும் பல்கலைக் கழக வளாகத்தில் கடந்த 08, 09, 10, 11, 12 ஆகிய தினங்களில் நடைபெற்றது.கடந்த 11 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் அலி சப்ரி தொடர்ந்தும் பேசும்போது,

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான உறவு மகத்தானது. அதுபோல இந்தியாவின் கேரளாவுக்கும், இலங்கைக்கும் உள்ள உறவும் வலிமையானது. இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு இந்தியாவில் இருந்து குறிப்பாக கேரளத்தில் இருந்து கடல் மார்க்கமாகப் பயணித்து வந்த உலமாக்கள் அங்குள்ள மக்களுக்கு சன்மார்க்கத்தைப் பயிற்றுவித்தது வரலாறு. அவர்கள் மூலம் இலங்கை வாழ் முஸ்லிம்கள் இஸ்லாமிய அடிப்படையையும், இஸ்லாமிய வாழ்வியல் தத்துவங்களையும், ஒழுக்க நெறிகளையும் நிறையவே கற்றிருக்கிறார்கள்.

இலங்கையிலும் முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருக்கின்றோம். ஆனால் முஸ்லிம் அல்லாத மக்களிடம் நமது இஸ்லாம் மார்க்கம் முறையாக, முழுமையாக எடுத்துரைக்கப்படவில்லையென்ற குறை இருக்கிறது. ஒருபுறம் நாம் இஸ்லாமிய மார்க்கத்தின் உண்மையான பாடங்களை மக்களுக்கு எடுத்துரைப்பதில்லை.

நமது கருத்தை ஒருவரிடம் திணிக்கும்போது தான் அங்கே வன்முறை துவங்குகிறது சகிப்புத் தன்மை அழிந்து போகிறது. நமக்கு இன்றைய காலத்தில் தேவை எல்லாம் சகிப்புத்தன்மையும், சாந்தமான மனதும்தான் என்றார்.

## உள்ளூராட்சித் தேர்தல் குறித்து...

தெரிவிக்கப்பட்ட திகதிகளில் தபால் மூல வாக்குகளை ஆணைக்குழுவுக்கு வழங்காத காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதேவேளை, திறைசேரிக்கு நிதி வழங்க முடியாவிட்டால் உள்ளூராட்சித் தேர்தலுக்கு தேவையான வாக்குச்சீட்டுகளை அச்சிட முடியாதென அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் தலைவர் கங்கானி லியனகே தெரிவித்தார்.

## நவம்பருக்கு முன்னர்...

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தேர்தல் நடக்குமா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியிலுள்ளது. தேர்தல் எப்போதும் நடக்கலாம். நிச்சயம் நடக்கும். தற்போது தபால் மூல வாக்களிப்பு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும் காலம் குறிப்பிடவில்லை.

தேர்தல் செலவுக்காக திரும்பச் செலுத்தாத தொகையை வழங்கும் நடைமுறை உள்ளது. அதனை திருப்பிச் செலுத்தத் வேண்டியதில்லை.

இவ்வாறான நிலையில் 500 மில்லியனை IMF கொடுக்கும். இது வழமை.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 341 வட்டாரத்துக்கும் 340 விதமான வாக்குச் சீட்டுக்கள் தயாரிக்க வேண்டும். அது ஒன்று தான் பெரிய வேலையாகும்.

இதேவேளை, 02 தேர்தலுக்கு அச்சடிக்கக் கூடிய பேப்பர் இருப்பதாகவும் அரச அச்சகம் கூறுகின்றது. அதற்கான கடன் விண்ணப்பத்தை எழுத்து மூலமாக கேட்கிறது.

எனவே இதில் பாரிய அரசியல் நிலவுகிறது. எதிர்வரும் நவம்பர் மாதத்தின் பின்பு ஜனாதிபதி தேர்தலை நடத்தக்கூடிய நிலை உள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நவம்பர் மாதத்துக்கு முதல் ஜனாதிபதி தேர்தலை நடத்த முயற்சிக்கிறாரென்றே தோன்றுகிறதென்றும் குறிப்பிட்டார்.




## வாக்குரிமையை மீறினால்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

சட்டம் மற்றும் அரசமைப்புக்கமைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக அரசாங்கம் சட்டவிரோதமாகச் செயற்படுமானால் நாம் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம்.

அரசாங்கத்துக்கு சட்டவிரோதமாகச் செயற்பட முடியாதல்லவா? தேர்தல் என்பது மக்களின் அடிப்படை உரிமையாகும். அவ்வாறிருக்கையில் அதனைத் திட்டமிட்டுக் காலம் தாழ்த்துவது சட்டவிரோத செயற்பாடாகும்.

அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நீதிமன்றத்தினுடையதாகும். அதற்கமைய நீதிமன்றம் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்குமென்று நம்புகின்றோம்.

பொருளாதாரத்தைச் சீரழித்ததன் பின்னர் துரித தீர்வைக் காண முடியாது. ஓரிரு வருடங்களில் இந்த நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டுவிட முடியுமென்று எண்ண வேண்டாம். அவ்வாறு துரித தீர்வு எதுவுமில்லை.

நாட்டில் தற்போது ரூபாவும் இல்லை, டொலரும் இல்லை. இன்னும் நீண்ட காலத்துக்கு எவ்வித பேதமுமின்றி அனைவரும் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டும்.

இலங்கை ஒரு பௌத்த நாடு. எனவே, புத்த சாசனத்தைப் பாதுகாப்பவர்களையே மக்கள் தெரிவு செய்வர். கடந்த காலங்களில் சுமார் 50 பௌத்த தேரர்களைக் கொலை செய்த ஜே.வி.பிக்கு மக்கள், ஆட்சி அதிகாரத்தை வழங்கப் போவதில்லையெனக் குறிப்பிட்டுள்ளார்.

## உயிரிழந்த மகனின்...

அவர்கள் விருப்பத்தின் பெயரில் இன்னொருவருக்கு வழங்கியமையால் சிறுநீரக செயலிழப்பினால் அவதியுற்ற ஒருவர் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையின் பின்னர் இன்று சுகமாக வாழ்கின்றார்.

தனது மகனின் சிறுநீரகத்தை தானமாக வழங்க சம்மதம் தெரிவித்த பெற்றோரை அண்மையில் வைத்தியசாலைக்கு அதிதிகளாக அழைத்து அவர்களினால் சிறுநீரக குருதி சுத்திகரிப்பு பிரிவில் விரிவாக்கம் செய்யப்பட்டு மேலும் 03 சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரப் பகுதி திறந்து வைக்கப் பட்டது.

மேற்படி மூன்று சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கியவர்களுக்கு வைத்தியசாலை சார்பில் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நன்றிகளை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வைத்திய புணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவ பீடாதிபதி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



# நாட்டு மக்கள் விரும்பாத தீர்மானங்களை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன்

## முன்னைய அரசே இன்றைய நிலைக்குக் காரணம் என்கிறார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தை திறந்து வைப்பதற்காக கடந்த சனிக்கிழமை அங்கு சென்ற ஜனாதிபதி ரணில் தலைமையிலான குழுவினருக்கு போகும் வழியில் அழகிய நெல் வயல் ஒன்றை பார்வையிடும் வாய்ப்பு கிடைத்தது. கலாசார நிலையத்தைத் திறந்து வைத்ததன் பின்னர், அங்கு இடம்பெற்ற கலாசார நிகழ்ச்சிகளை ஜனாதிபதி ரணிலுடன் ஜனாதிபதி செயலக பிரதானி சாகல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஆலோசகர் ருவன், உள்ளிட்டோரும் பார்வையிட்டனர்.

கலாசார நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனாதிபதி அதிதிகளை நோக்கித் திரும்பி, “இங்கே நாங்கள் இருப்பது சாமானிய பொது மக்களுக்கு தடையாக இருக்கிறது. பாதுகாப்பு அதிகாரிகளால் மக்களால் நிகழ்ச்சிகளை இலகுவாகப் பார்க்க முடியாது” எனக் கூறினார்.

அதன்பின் அவர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறிச் சென்றதால் பாதுகாப்பு அதிகாரிகளும் அங்கிருந்து அகன்றதையடுத்து மக்கள் மேடைக்கு அருகில் சென்று கலாசார நிகழ்ச்சிகளைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. மறுநாள் யாழிலிருந்து கொழும்புக்குப் புறப்படத் தயாரான ஜனாதிபதியிடம் அதிகாரி ஒருவர் வந்து, கிளிநொச்சியில் நன்கு செழிப்படைந்த நெல் வயல்கள் இருக்கும் செய்தியைக் கூறினார். அவ்வாறான நெல் வயல் இருக்கும் இடம் உள்ளதா எனத் தேடிப் பார்க்குமாறு ரணில் விடுத்த வேண்டுகோளின் பிரகாரமே அவர் அந்தச் செய்தியைக் கொண்டு வந்திருந்தார்.

இந்தச் செய்தியைக் கேட்ட, ஜனாதிபதியும் அவரது குழுவினரும் உடனடியாக அந்த இடத்திற்குச் செல்ல முடிவு செய்தனர். யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் வந்த முக்கிய பிரமுகர்களைப் பார்த்து மக்கள் மிகுந்த உற்சாகமடைந்தனர். குறுகிய நேரத்திற்குள் பிரமுகர்கள் அவ்விடத்திற்குச் சென்றதால் அங்கு பாதுகாப்பு தரப்பினர் அதிகம் இல்லாத காரணத்தினால் ஜனாதிபதி தனியே சென்று மக்களுடன் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது.

விவசாயிகளைச் சந்திக்கச் சென்ற ஜனாதிபதி ரணில், அவர்களிடம் விவசாயம் குறித்து கேட்டறிந்து கொண்டார். "சேர், எங்களுக்குத் தேவையான வசதிகளை செய்து தந்தால், நாட்டுக்கு நல்ல விளைச்சலை வழங்க முடியும்" என ஜனாதிபதியிடம் விவசாயிகள் தெரிவித்தனர். "நல்லது, நான் உரம் மருந்துகள் போன்ற தேவையான அனைத்தையும் தருகிறேன். நீங்கள் நாட்டுக்கு தேவையான அரிசியைத் தாருங்கள்" என்றார் ஜனாதிபதி.

அந்தப் பிரதேசத்தைப் பற்றி ஜனாதிபதி விபரிக்கும் போது விவசாயிகள் மிகவும் ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். தமது பிரதேசத்தைப் பற்றி தம்மை விட ஜனாதிபதிக்கு அதிகம் தெரிந்திருக்கின்றதே என ஜனாதிபதி அந்த இடத்திலிருந்து வெளியேறிச் சென்றதன் பின்னர் அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள்.

கொழும்பிலிருந்து வந்திருந்த குழுவினரிடம் அங்கிருந்த வயோதிப விவசாயி ஒருவர், “போருக்கு முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட கொப்பேகடுவ இங்கு வந்த போது நாங்கள் இரண்டு விடயங்களை அவரிடம் கேட்டோம். ஒன்று கல்வி, மற்றொன்று விவசாயம். இன்று, தற்போதைய ஜனாதிபதி எங்களிடம் வந்தே அதைக் கூறுகின்றார்" என்றார்.

உரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், ஒரு கிலோ நெல்லுக்கு நூறு ரூபாயை வழங்குவதற்கும் ஜனாதிபதி நாட்டுக்கு வாக்குறுதி அளித்தது அங்கிருந்தேயாகும். ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு திரும்பிய ஜனாதிபதி ரணில், திங்கட்கிழமை காலையிலேயே அமெரிக்க தூதரகத்திற்குச் சென்றார். அமெரிக்க தூதரகம் ஏற்பாடு செய்திருந்த இளைஞர்கள் ஒன்றுகூடலில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு சென்றார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகளின் 75 வருட நிறைவையொட்டி அமெரிக்கத் தூதரகம் தலைமைத்துவ மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி இளைஞர்கள் மத்தியில் உரையாற்றியதன் பின்னர், அனைவரும் தத்தமது பணிகளுக்காகச் செல்வதற்கு ஆயத்தமான போது, ஏதேனும் கேள்விகள் இருந்தால் தம்மிடம் கேட்குமாறு ஜனாதிபதி ரணில் இளைஞர்களைப் பார்த்து கேட்டார்.

பல இளைஞர் யுவதிகள் ஜனாதிபதியிடம் கேள்விகளைக் கேட்டதோடு, அவர் அவர்களது அனைத்து கேள்விகளுக்கும் சரியான பதில்களை வழங்கினார். அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் தேநீர் உபசரிப்பின் போதும் இளைஞர்களுக்கருகில் சென்ற ஜனாதிபதி அவர்களிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்டார். போராட்டம் (அரகலய) மற்றும் "சிஸ்டம் சேஞ்ச்" குறித்தும் அவர் இளைஞர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

அவர் திங்கட்கிழமை அலுவலகம் வந்தபோது பகல் நேரமாகிவிட்டது. அன்று அமைச்சரவைக் கூட்டமும் இடம்பெற்றதால் அன்றைய தினம் மிகவும் பணிமிகுந்த தினமாகியிருந்தது. மக்களுக்கு பல நிவாரணங்களை வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தையும் அவர் சமர்பித்திருந்தார். வறிய குடும்பங்களுக்கு தலா பத்து கிலோ வீதம் இரண்டு மாதங்களுக்கு 20 கிலோ அரிசியை வழங்கவும், மருந்துகளை கொள்வனவு செய்தல் மற்றும் ஊழியர்களின் பணிக்கொடைகளை வழங்குவதற்கு 19 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்குமாகவே அந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

செவ்வாய்க்கிழமை காலை பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி, மாலையில் மீண்டும் அலுவலகம் திரும்பினார். அன்றைய தினம் மாலை ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவ குழுவின் அதிகாரிகள் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதற்காக வந்தனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்தும் இதன் போது அங்கு கலந்துரையாடப்பட்டது.

உரையின் ஆரம்பத்திலேயே ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளுக்கும் தனக்கும் தொடர்பில்லை எனக் கூறினார். “தேர்தல் ஆணைக்குழு நிதி கேட்கிறது. மறுபுறம், பணம் இல்லையென்றால் வாக்களிக்கும் சீட்டுக்களை அச்சிட முடியாது என்று அச்சகத் திணைக்களம் கூறுகிறது" என பொதுச்செயலாளர் ரங்கே பண்டார பேச்சை தொடங்கி வைத்தார்.

"பிச்சைக்காரர்களும் வீதியிலிருந்து மக்களிடம் பணம் கேட்கின்றார்கள். இயன்றவர்கள் கொடுக்கிறார்கள். முடியாதவர்கள் விலகிச் செல்கிறார்கள்" என அனைவரையும் சிரிக்க வைத்துக் கூறினார்.

"எவ்வாறு இருந்தாலும் எமக்குத் தெரிந்த வகையில் திறைசேரியிடம் வழங்குவதற்கு பணம் இல்லை. ஆரம்பத்திலேயே ஜனாதிபதி கூறிய 8,000 உறுப்பினர்களை 50வீதமாகக் குறைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்திவிட்டு எதிர்க்கட்சிகள் தேர்தலுக்குச் சென்றிருக்கலாம்" என்றார் சாகல.

"அப்படி நடந்திருந்தால் ஆகஸ்ட் ஒக்டோபர் மாதங்களுக்கு இடையில் தேர்தலை மிகச் சிறப்பாக நடாத்தியிருக்க முடியும்" என்றவாறு பிரதித் தலைவர் ருவனும் இணைந்து கொண்டார்.

"எதிர்க்கட்சியின் இரண்டு குழுக்கள் தேர்தலுக்காக பிரிந்து சென்றது. இங்குள்ள பலரின் தேவை ஜனாதிபதி முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தை சீர்குலைத்து அவரை வீழ்த்துவதேயாகும்" என்றவாறு அகிலாவும் இணைந்தார்.

"இப்போதும் கூட நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து குழுக்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி உறுப்பினர் எண்ணிக்கையை குறைத்து தேர்தலுக்குச் செல்ல நான் தயார். இந்த செயற்பாட்டில் இணைந்து கொள்ளுமாறு நான் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்” என்றார் ஜனாதிபதி.

"எவ்வாறாயினும், எதிர்க்கட்சியினர் அதிகாரிகளை மிரட்டுகின்றனர். நிதி அமைச்சின் செயலாளர், அரச அச்சக கூட்டுத்தாபன தலைவர், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை அழைத்து ஜனாதிபதி செயலகத்திலிருந்து தேர்தலை சீர்குலைக்க சதி செய்வதாக அவர்கள் கூறுகின்றனர்" என ஷமல் செனரத் கூறிய போது, அதிகாரிகள் ஜனாதிபதியைச் சந்தித்து தமக்குள்ள பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்கு எவ்வித தடைகளும் இல்லை என தேசிய அமைப்பாளர் சாகல தெரிவித்தார்.

கட்சியின் செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்காகக் கட்சியின் செயற்குழு கட்சித் தலைவர் ஜனாதிபதி ரணில் தலைமையில் வெள்ளிக்கிழமை கூடுவதற்கு முடிவு செய்ததன் பின்னர் அவர்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.

விவசாய அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்த ஜனாதிபதி, எவரும் விடுபட்டு விடாத வகையில், குறைந்த வருமானம் பெறுவோருக்கு தேவையான நிவாரணங்களை வழங்குமாறும் ஆலோசனை வழங்கினார். ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர் பீட்டர் ரெம்ஸோர் புதன்கிழமை காலை ஜனாதிபதியைச் சந்தித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற இலங்கை தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் அரச கொள்கை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை ஸ்தாபிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் முக்கியமான விடயம் ஒன்றை கூறினார்.

அது அவருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கை பற்றிய விடயமாகும். ருஹுணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரை பதவி நீக்கம் செய்யுமாறு விரிவுரையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாகக் கூறிய அவர், தொழிற்சங்கங்கள் கூறுவதைப் போன்று அரசாங்கம் செயற்பட முடியாது எனவும் தெரிவித்தார். சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக தான் எதையும் செய்யமாட்டேன் என்றும் அந்த நட்புச் சந்திப்பில் ஜனாதிபதி கூறினார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக புதன்கிழமை மாலை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் மின்சார சபை அதிகாரிகள் வருகை தந்திருந்தனர். மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதியளித்துள்ளதால் மக்களுக்கு மின் துண்டிப்பை மேற்கொள்ளாது தொடர்ச்சியான மின் விநியோகத்தை வழங்குமாறு ஜனாதிபதி அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

அத்துடன், குறைந்த வருமானம் பெறுவோருக்கு சலுகைகளை வழங்குமாறும், மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் சூரிய மின்கலங்களை நிறுவுவதற்கு நிவாரணங்களை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் நிதி நிலைமை தொடர்பான மீளாய்வுக் கூட்டம் ஒவ்வொரு வியாழக்கிழமையும் நிதி அமைச்சகத்தில் இடம்பெறுகிறது. இதில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்து கொள்கிறார்.

அவர் ஜனாதிபதி செயலகத்திற்குப் பின்புறமாக நிதியமைச்சுக்கு நடந்து செல்வதை அந்நேரம் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக அங்கு வந்திருந்த அரசாங்கத் தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கண்டார். நிதி அமைச்சின் விறாந்தைக்கு அருகில் நின்று கொண்டிருந்த அவர் ஜனாதிபதி செயலாளரிடம், “இன்று ஏன் நடந்து செல்கிறீர்கள்? வாகனம் பழுதடைந்துவிட்டதா?” எனக் கேட்டார்.

"சிறிய தூரத்திற்கு வாகனம் எதற்கு? நான் பின்புறமாகச் செல்கிறேன். நடப்பது உடலுக்கு நல்லதுதானே" எனக் கூறியவாறு தகவல் திணைக்களப் பணிப்பாளருடன் நிதி அமைச்சினுள் நுழைந்தார்.

இவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகள், கடந்த கால அதிகாரிகளோடு ஒப்பிடும் போது தற்போதைய ஜனாதிபதியின் செயலாளர் எவ்வளவு எளிமையானவர் எனப் பேசிக் கொண்டனர்.

வியாழக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்த அமைச்சர்கள் சிலர் ஊடகங்களில் வெளியான அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் குழுவின் வருகை குறித்து பேசினர்.

"அமெரிக்க சி.ஐ.ஏ அமைப்பின் தலைவர் வந்திருப்பதாகவே கூறப்படுகிறது. அது உண்மையென்றால், அப்படிப்பட்ட ஒருவர் இலங்கைக்கு வந்திருப்பது இதுவே முதலாவது சந்தர்ப்பமாகும்" என அமைச்சர் பந்துல கூறிய போது, அதில் உண்மை இருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் இந்த அனைத்து கதைகளையும் சிரித்தவாறே கேட்டுக் கொண்டி ருந்தாலும், எதுவும் கூறவில்லை. பொருளாதாரம் மற்றும் மின் கட்டணம் குறித்து பேசப்பட்ட போது, “நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரக் கஷ்டங்கள் எனக்கு நன்கு விளங்குகின்றது. ஆனால் இந்தப் பிரச்சினைகளை ஏற்படுத்தியது நானல்ல, முன்னாள் ஜனாதிபதியே. எனவே நாட்டுக்காக மக்கள் விரும்பத்தகாத தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது" என்றார் ஜனாதிபதி.

**எம். எஸ். முஸப்பிர்...**

---






# தொடர்மாடி வீடு விற்பனையில் பெரும் பாதிப்பு

தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்ட அரசின் புதிய வரிக்கொள்கையில் பாரிய மாற்றங்களை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. முக்கியமாக நேரடி (Direct Tax) மற்றும் மறைமுக (Indirect Tax) வரிகளில் கூடிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வரி அதிகரிப்பின் தாக்கமானது எல்லா துறையினருக்கும் ஏற்பட்டாலும், குறிப்பாக தொடர்மாடிமனைகளை கட்டி விற்பனை செய்கின்ற துறையினருக்கு (Condominium House Developers) பாரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது. எந்த வகையில் இந்த வரி அதிகரிப்பானது தாக்கத்தை செலுத்த உள்ளது என்பதை நாம் நோக்குவோம்.

நேரடி வருமான வரி விகித அதிகரிப்பு – DIRECT INCOME TAX RATE INCREASED

ஏற்கனவே நடைமுறையில் இருந்த 14% மற்றும் 28% வருமான வரியானது தற்பொழுது 30% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

வரிச்சலுகைகள் மற்றும் வரி நிவாரணங்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. (REMOVAL OF TAX EXEMPTION & CONCESSIONS)

புதிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இந்த துறையில் உள்வாங்குவதற்குமாக ஏற்கனவே இருந்துவந்த பல வரிச்சலுகைகள் மற்றும் வரி நிவாரணங்கள் முழுமையாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

‘பெறுமதி சேர் வரி’ மாற்றங்கள் – VALUE ADDED TAX (VAT) Changes.

பெறுமதி சேர் வரி கட்டாயமாக பதிவு செய்யப்பட்டு செலுத்த வேண்டிய விற்பனைப் புரள்வில் (Turnover) ஏற்பட்டுள்ள மாற்றம்.

இதுவரையில் பெறுமதி சேர் வரி பதிவு செய்யப்படுவதற்கு Rs. 300 மில்லியனாக இருந்த உச்ச வரம்பானது தற்பொழுது Rs. 80 மில்லியன் ஆக குறைக்கப்பட்டுள்ளது.

Compulsory VAT Registration Threshold reduced from Rs.300 Mn to Rs.80 Mn.

இந்த மாற்றத்தினால் உள்நாட்டில் சிறியளவில் தொடர்மாடிமனைகளை கட்டி விற்பனை செய்கின்ற துறையினர் பலர் VAT நெட்டில் (NET) உள்வாங்கப்பட்டு VAT வரி செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெறுமதி சேர் வரி விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது – VAT Rate INCREASED

8% வீதமாக இருந்த பெறுமதி சேர் வரியானது பின்பு 12% அதிகரிக்கப்பட்டு, தற்பொழுது 15% ஆக மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

31 டிசம்பர் 2022 வரை VAT வரியிலிருந்து நிவாரணம் (Exemption) பெற்றுவந்த தொடர்மாடிமனைகளை கட்டி விற்பனை செய்கின்ற துறையினருக்கு 01 ஜனவரி 2023 முதல் இந்த வரி நிவாரணம் நீக்கப்பட்டு அவர்களும் 15% VAT வரியினை செலுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சமூக பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு 2.5 % SSCL Introduced

சமூக பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு என்கின்ற புதிய வரி 01 October 2022 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு புதிதாக அறிமுகப்படுத்திய SSCL வரியினாலும் தொடர்மாடிமனைகளின் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் நேரடியாக விலை அதிகரிப்பினை ஏற்படுத்துவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

பின்வரும் உதாரணம் மூலம் நாம் அவதானிக்க முடியும்,

> இவ்வாறு அன்றாட வாழ்வினையே கொண்டு நடத்த முடியாமல் திணறுகின்ற சந்தர்ப்பத்தில், (குறிப்பாக நடுத்தர மற்றும் அதற்கும் கீழ் உள்ள மக்கள்) நடைமுறையில் உள்ள நேரடி மற்றும் மறைமுக வரி அதிகரிப்பின் தாக்கமானது தமக்கென ஒரு வீட்டினை சொந்தமாக வாங்கக்கூடிய சந்தர்ப்பத்தினை அவர்களால் அடைய முடியாமல் செய்து விடுமோ, என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது.

மேற்கூறிய உதாரணத்தில், ஒரு தொடர்மாடி மனைக்கான விற்பனை விலையினில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட VAT மற்றும் SSCL வரிகளினால் பாரிய அதிகரிப்பினை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது இந்த புதிய வரிகளினால் ரூ.5,362,500/=, மக்கள் தலையில் சுமத்தப்பட உள்ளது.

அது மட்டுமல்லாது அரசின் புதிய வரிக் கொள்கைகளினால் தனி நபருக்கான நேரடி வருமான வரி அறவிடும் முறையிலும் பாரிய திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அந்த வகையில் இரண்டு பொறிமுறையினில் நேரடி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

ஒரு வருடத்திற்கான வரி நிவாரண அளவினை ரூபா.3,000,000/= இலிருந்து ரூபா.1,200,000/ ஆக குறைக்கப்பட்டுள்ளது. (Personal Reliefs reduced from Rs. 3Mn to Rs. 1.2Mn per annum)

6%, 12%, 18% ஆக இருந்த வரி விகிதங்கள் தற்பொழுது 6%, 12%, 18%, 24%, 30%, 36% என பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் முன்பு எப்போதும் காணாத வகையில் ஏற்பட்டுள்ள பணவீக்க அதிகரிப்பின் தாக்கத்தினால் (Hyperinflation), சாதாரண அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் பாரிய விலையேற்றத்தினையே மக்கள் தாங்கிக் கொள்ள முடியாது திணறுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு அன்றாட வாழ்வினையே கொண்டு நடத்த முடியாமல் திணறுகின்ற சந்தர்ப்பத்தில், (குறிப்பாக நடுத்தர மற்றும் அதற்கும் கீழ் உள்ள மக்கள்) நடைமுறையில் உள்ள நேரடி மற்றும் மறைமுக வரி அதிகரிப்பின் தாக்கமானது தமக்கென ஒரு வீட்டினை சொந்தமாக வாங்கக்கூடிய சந்தர்ப்பத்தினை அவர்களால் அடைய முடியாமல் செய்து விடுமோ, என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது.

“மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தாற் போல்”, தமது கையில் இருக்கும் பணம் மற்றும் வங்கிக் கடன் மூலமாக ஒரு சொந்த மனை வாங்கலாம் என்ற யோசனையில் இருப்பவர்களுக்கு கூட, தற்பொழுது வங்கிகளினால் அறவிடுகின்ற கடனுக்கான வட்டி விகிதங்கள் பயத்தை ஏற்படுத்துகின்றது. வீடு வாங்குவதற்காக வழங்கப்படுகின்ற வங்கி கடனுக்கான வட்டி விகிதம் 8%, தொடக்கம் 14% ஆக இருந்தவை, தற்பொழுது 28% வரை அதிகரித்து சென்றுள்ளது மிகவும் துரதிர்ஷ்டமாகும்.

மத்திய வங்கியின் தரவுகளின்படி இலங்கை பணவீக்கம் 70.6% (அக்டோபர்), 65% (நவம்பர்), தற்பொழுது 59.2% (டிசம்பர்) விகிதமாக காணப்படுகின்றது. எவ்வாறாயினும் சாதாரண நடைமுறையில் மக்கள் கொள்வனவு செய்கின்ற ஒவ்வொரு அத்தியாவசிய பொருட்களின் மற்றும் சேவைகளின் விலையேற்றமானது குறைந்தது மூன்று மடங்கு அதிகரித்து காணப்படுகின்றது. அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்தவே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்கள், இனி இதர செலவுகளையும் மற்றும் முதலீட்டு திட்டங்களையும் நிச்சயமாக செய்ய முடியாத ஒரு சந்தர்ப்பத்தை சந்தித்த வண்ணம் இருக்கின்றனர்.

மேற்கூறிய காரணங்களுடன் பின்வரும் பாதக தாக்கங்களையும் “தொடர்மாடிமனைகளை கட்டி விற்பனை செய்கின்ற துறையினர்” நிச்சயமாக சந்திக்க உள்ளனர்.

இறக்குமதிக் கட்டுப்பாடு – தடை (IMPORT Banned Restrictions)

நாடு தற்பொழுது பாரிய பொருளாதார பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதால், அரசாங்கம் கட்டுமானத்துறை சார்ந்த மற்றும் அதற்குத் தேவையான பெருமளவான பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அத்துடன் பல ஆடம்பர இறக்குமதிகளை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளது. இதன் காரணமாக தொடர்மாடி மனைகளை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத நிலைமையை தற்பொழுது காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி Adverse Rupee Depreciation, பாரிய வேலையில்லா பிரச்சினை தலைதூக்கியுள்ளமை Unemployment Problem, பெருமளவான மக்கள் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நாட்டை விட்டு வெளியேறுகின்ற ஒரு நிலைப்பாடு Migration. நாட்டின் தற்போதைய வறுமை நிலைமை காரணமாக தொடர்மாடிமனைகளை கொள்வனவு செய்வதற்காக முற்பணம் செலுத்தியவர்கள் மிகுதி பணத்தினை கொடுக்க முடியாத நிர்ப்பந்தத்தினால், தமது மனைக்கான கொள்வனவினை இடைநிறுத்தி, முற்பணத்தை மீளப் பெற ஆரம்பித்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதிகரித்து வரும் வாழ்க்கை செலவினை சமாளிக்க முடியாமல் பலர், பிரதான நகரான கொழும்பு மற்றும் அதனை சூழ்ந்த நகரங்களில் இருந்து தமது சொந்த ஊருக்கு மீளத் திரும்பி செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் தொடர்மாடி மனைக்கான கேள்வி (Demand) பாரியளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இந்த ஒட்டுமொத்த பாதகமான சூழ்நிலையால், “தொடர்மாடி மனைகளை கட்டி விற்பனை செய்கின்ற துறையினர்” மிகவும் பாரதூரமான முறையில் நெருக்கடியை சந்திக்க உள்ளனர் என்பது கசப்பான உண்மையாகும்.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி & முகாமைத்துவ ஆலோசகர்

# முரண்பாடுகளுக்கு மத்தியில் உயர்ந்துள்ள மின்கட்டணம்!



**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மீண்டும் ஒருமுறை மின்சாரப் பாவனைக்கான கட்டணத்தில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த 15ஆம் திகதி முதல் மின்சாரக் கட்டணம் 66 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.**

மின்சக்தி அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய இந்தக் கட்டண அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது. கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்ட 75 வீத மின்கட்டண அதிகரிப்பைத் தொடர்ந்தே தற்பொழுது இந்தக் கட்டண அதிகரிப்பு நடைமுறைக்கு வந்துள்ளது.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருப்பதால் மின்சாரத் துண்டிப்பு இன்றி தொடர்ச்சியான விநியோகத்தை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். இது நடைமுறைப்படுத்தப்படும் என மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர அறிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்பு விவகாரம் நீண்ட இழுபறியில் காணப்பட்டது. கடந்த சில வாரங்களுக்கு முன்னரே மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கான அனுமதியை அமைச்சரவை அதிகரித்த போதிலும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இதற்கான அனுமதியை வழங்கவில்லை. குறிப்பாகப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னாயக்க மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு இடமளிக்காமல் தடுத்து வந்தார்.

இவ்வாறான பின்னணியில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர்கள் பதவி விலகியிருந்தனர். இருந்த போதும் அதிகரித்துள்ள விலைவாசி அதிகரிப்பு மற்றும் மின்சார உற்பத்திக்கான செலவினங்கள் அதிகரித்திருப்பதால் அதனை ஈடு செய்வதற்கு மின்சாரக் கட்டணத்தில் மறுசீரமைப்பு அவசியம் என அரசாங்கம் தொடர்ச்சியாகக் கோரி வந்தது.

இருந்தபோதும் தமக்குக் காணப்படும் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் இதற்கு அனுமதியை வழங்கவில்லை. இவ்வாறான நிலையில் கடந்த வாரம் பாராளுமன்றத்தின் தேசியப் பேரவை இலங்கை மின்சாரசபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளை அழைத்து இவ்விடயத்தில் கலந்துரையாடித் தீர்மானம் ஒன்றை எடுக்குமாறு வலியுறுத்தியது.

இதற்கு அமைய இரு தரப்புக்கும் இடையில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போதும், உறுதியான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்தக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போது, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் நாட்டில் இருக்கவில்லை.



## மின்சாரத்துறை சம்பந்தமாக மக்கள் மத்தியில் நிலவுகின்ற சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்படுவது அவசியம்!



இருந்தபோதும் இருதப்பினருக்கும் இடையில் நடந்த கலந்துரையாடல்களை அடுத்து அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இணக்கம் எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கு அமைய கடந்த 15ஆம் திகதி முதல் மின்சாரக் கட்டண அதிகரிப்பு நடைமுறைக்கு வருவதாக அமைச்சர் கஞ்சன விஜயசேகர அறிவித்திருந்தார். நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கம் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் ஒத்துழைப்பு வழங்குவது அவசியம் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாறாக இரு தரப்புக்கும் இடையில் இறுபறிநிலை தொடர்ந்தால் மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் அதிகமாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், மின்சார உற்பத்தி தொடர்பில் பொதுவான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு, புதுப்பிக்கத்தக்க சக்தி பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் மின்சார உற்பத்தியென்பது அரசாங்கத் துறையின் ஏகபோக உரிமையாகக் காணப்படுவதால், மின்சார சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய ஒரு சில சந்தர்ப்பங்களில் அதிக செலவு ஏற்படுகிறது.

குறிப்பாக மின்சார உற்பத்தியில் தட்டுப்பாடு ஏற்படுகின்ற போது, கேள்விப் பத்திரங்கள் எதுவும் கோரப்படாது அவசர மின்சாரக் கொள்வனவுக்கான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. இதனால் தனியார் துறையிடமிருந்து அதிக விலையில் மின்சாரம் கொள்வனவு செய்யப்படுகிறது. இவ்வாறான தீர்மானங்கள் மின்சார சபையில் உள்ள பொறியியலாளர்களாலேயே எடுக்கப்படுகிறது. இத்தீர்மானங்களின் பின்னணியில் தனிப்பட்ட இலாபங்கள் இருப்பதாகவும் குற்றச்சாட்டு கூறப்படுகிறது.

அதாவது மின்சாரம் கொள்வனவு செய்யப்படும் தனியார் உற்பத்தி நிலையங்களுடன் குறித்த பொறியியலாளர்களுக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. கடந்த காலத்தில் மின்சார சபை நஷ்டத்தில் இயங்கும் நிலைக்குச் செல்ல இதுபோன்ற காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன.

விசேடமாக இதுபோன்ற அவசர மின்சாரக் கொள்வனவுக்குச் செல்லக் கூடிய சந்தர்ப்பங்களைக் குறைக்கும் எந்த மாற்று மின்சார உற்பத்தி முறைக்கும் மின்சார சபையிடமிருந்து ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. சூரியமின்படலத்தைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டம் கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

### சூரியசக்தி மின்சாரம், காற்றாலை மின்சாரம் போன்றவற்றில் கடந்தகால அரசுகள் அக்கறை செலுத்தாததால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சுமை!

குறிப்பாகக் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அப்போதைய மின்சாரத்துறை அமைச்சினால் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இருந்தபோதும் இதனை நடைமுறைப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டாத மின்சாரசபை, உரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமலும், தனியாரினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டாமலும் இருந்தது.

இதுபோன்ற விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் நியாயமான கொள்கைத் தீர்மானங்களை எடுக்க வேண்டும். அதேபோன்று, தனியார் துறையினரின் முதலீட்டுடன் காற்றாலை மின்சாரம் மற்றும் சூரியப்படல மின்சார உற்பத்தி நிலையங்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், இவற்றுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனை விடுத்து, பொதுமக்களை மேலும் மேலும் சுமைக்குள் தள்ளும் வகையிலான கட்டண அதிகரிப்புக்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதுதான் பொதுவான அபிப்பிராயமாக உள்ளது.

அதேநேரத்தில், மின்சாரத்துறை உள்ளிட்ட துறைகளில் பலர் தரகுப் பணத்தைப் பெற்றுக்கொள்வதாகப் பரவலான குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. எனவே, இவ்விடயத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்வதற்கும், இதனை மக்கள் அறிந்து கொள்ளக் கூடியவகையில் கொள்கைத் தயாரிப்புக்களும் மேற்கொள்ளப்படவேண்டும். தெளிவான கொள்கை தயாரிக்கப்படும் பட்சத்தில் அரசாங்கத்துக்கும், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தாது.

**பி.ஹர்ஷன்...**

---



# சர்வதேச பொருளாதார முன்னேற்றத்தில் இந்தியா கொண்டுள்ள பெரும் வகிபாகம்

**இந்தோனேசியாவில் கடந்த வருடம் டிசம்பர் முதலாம் திகதியன்று ஜி–20 தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுக் கொண்டது. உலக வல்லரசு நாடுகளை உள்ளடக்கியிருக்கும் ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றிருக்கிறது. அப்பொறுப்பை பிரதமர் நரேந்திர மோடி ஏற்றிருந்தார். பொருளாதார மந்தநிலை, உணவுப் பற்றாக்குறை, எரிபொருள்களின் விலை உயர்வு, புவிசார் அரசியல் பதற்றம் ஆகிய நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்தியாவுக்கு தற்போது பெரும் பொறுப்பொன்று வந்துள்ளது.**

1999ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதுதான் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், கனடா, சவூதி அரேபியா, இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட 20 நாடுகள் அடங்கிய ஜி20 கூட்டமைப்பு. ஒவ்வொரு ஆண்டும் கூட்டமைப்பில் உறுப்பினராக இருக்கும் ஒரு நாடு தலைமை தாங்கி இந்தக் கூட்டமைப்பின் உச்சிமாநாட்டை வழிநடத்தும். அந்தவகையில், 2022 ஆம் ஆண்டின் 17 ஆவது உச்சிமாநாட்டை இந்தோனேசியா தலைமையேற்று நடத்தியது.

மாநாட்டின் நிறைவு நாளன்று இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ, அடுத்த ஓராண்டுக்கான ஜி20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியப் பிரதமர் மோடியிடம் ஒப்படைத்திருந்தார்.

இந்தியா தனது தலைமை இலக்காக நிர்ணயித்திருக்கும் நிலையான வளர்ச்சி, பெண்களுக்கு அதிகாரம், டிஜிட்டல் உட்கட்டமைப்பு, தொழில்நுட்ப மேம்பாடு, காலநிலை கட்டுப்பாடு, சர்வதேச உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு, உறுப்பு நாடுகளிடையேயான பிரச்சினைகளைக் களைவது போன்ற நடவடிக்கைகளில் திறம்படச் செயலாற்ற வேண்டிய சவாலில் இருக்கிறது. புவிசார் பிரச்சினைகளைப் பொறுத்தவரை, உக்ரைன்_ ரஷ்யா போர் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் கூட்டமைப்பின் அங்கமான ரஷ்யாவுக்குப் போரைத் தவிர்ப்பதற்கான உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டிய தேவையும் கடமையும் இந்தியாவுக்கு இருக்கின்றன.

இவை தவிர, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு தலையாய பிரச்சினையாக தற்போதிருக்கும் பொருளாதார வீழ்ச்சியைச் சமாளிக்க ஒருங்கிணைந்த பொருளாதார ஒப்பந்தங்களை ஏற்படுத்த இந்தியா தலைமையிலான ஜி20 கூட்டமைப்பு வழிவகை செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அனைத்துக்கும் மேலாக, அனைத்து நாடுகளுக்கும் சவாலாக இருக்கும் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த, கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வல்லரசு நாடுகள், வளர்ந்த நாடுகளுக்குத் தகுந்த வழிமுறைகளையும் இந்தியா வழங்க வேண்டிய பொறுப்பில் இருக்கிறது.

G 20 மாநாடு இவ்வருடம் இந்தியாவில் நடைபெறவுள்ளது. இந்தியாவின் ஜி20 தலைமைத்துவம் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் ஒன்றே என்னும் உணர்வை மேம்படுத்த பாடுபடும். எனவே இந்தியாவின் கருப்பொருள் 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்பதாகும்.

இன்று உலகில் உள்ள அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கான போதுமான உற்பத்தியை மேற்கொள்ள இந்தியாவிடம் வழிமுறைகள் உள்ளன. இன்று இந்தியா மிகவும் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக உள்ளது. மக்களை மையமாகக் கொண்ட இந்திய ஆட்சிமுறை, திறன்மிக்க இளைஞர்களின் படைப்பாற்றல் தன்மையை ஊக்குவிக்கும் அதேவேளையில் மிகவும் விளிம்பு நிலையில் உள்ள மக்களையும் கவனத்தில் கொள்கிறது.

ஜி20 அமைப்பின் தலைவர் என்ற வகையில், வளர்ந்து வரும் நாடுகளின் நலன்களை பாதுகாக்கும் பிரதிநிதியாக செயற்படும் வாய்ப்பை இந்தியா பெற்றுள்ளது. நாடுகளின் கூட்டணியை உருவாக்குவதில் செழுமையான வரலாறும், உலகிலேயே இளைஞர்களை அதிகம் கொண்ட நாடாகவும் திகழும் இந்தியா, உலகின் சிறந்த நடைமுறைகளை கடைப்பிடித்து உடனடித் தீர்வு காண வேண்டிய விஷயங்களுக்கு முன்னுரிமை அளிக்க உறுதி பூண்டுள்ளது. டெல்லியில் இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெறும் இறுதி உச்சிமாநாட்டில் இதுவரை இல்லாத வகையில் 43 தலைவர்கள் கலந்து கொள்வார்கள்.



**G-20 தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளதால் உலகில் இந்தியாவின் செல்வாக்கு மேலும் உயரும்**




ஜி20 நாடுகள் அமைப்புக்குத் தலைமை வகிக்கும் இந்தியா மனிதகுலம் சார்ந்த தொழில்நுட்ப அணுகுமுறையை முன்மாதிரியாகக் கொண்டுள்ளது. கல்வி முதல் விவசாயம் வரை பல்வேறு துறைகளில் பொது டிஜிட்டல் கூட்டமைப்பு, அனைவருக்குமான நிதி வழங்கல், தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சி ஆகியவற்றுக்கு இந்தியா முன்னுரிமை அளித்து வருகிறது. மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு அதிகாரம் அளித்தலை முன்னுரிமையாகக் கொண்டு அரசு பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

சர்வதேச பொருளாதாரம் தற்போது மந்தநிலையை சந்தித்து வரும் வேளையில், மோசமான உணவுப் பாதுகாப்பு மற்றும் சீர்குலைந்த விநியோக சங்கிலிகளுடன் நாடுகள் தொடர்ந்து போராடி வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் ஒருங்கிணைந்த, நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நாடாக உருவெடுக்கும் வாய்ப்பு இந்தியா வசம் உள்ளது.

ஜி20 இற்கான தலைமைப் பொறுப்பை இந்தியா பெற்ற தருணத்திலிருந்து கடந்த ஒரு மாத காலமாக பரவலாகப் பேசப்பட்டும், விவாதிக்கப்பட்டும், புகழப்பட்டும் வருகிறது. இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்பதால் இந்தியாவுக்கு கிடைக்கவிருக்கும் நன்மைகள் பற்றியும் தகவல்கள் வெளிவருகின்றன. சார்க் அமைப்பு தற்போது வலுவிழந்து போயிருப்பதால் அதனைப் பலப்படுத்துவதில் இந்தியா பாடுபடுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**எஸ்.சாரங்கன்...**

# ஆயிரம் கோடி ரூபாவை தேர்தலுக்காக திரட்டுவதற்கு வழியெதுவும் கிடையாது!

**ஒருபுறம் உயர்நீதிமன்றத் தீர்ப்பு; மறுபுறம் திறைசேரியின் கைவிரிப்பு; நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையில் உள்ளூராட்சித் தேர்தலைப் பற்றிச் சிந்திப்பது எவ்வாறு?**



வார இறுதி
## அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

**அரசு மீது கண்டனம் தெரிவிப்பதால் பயனில்லை; பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு எதிரணியினர் தீர்வை முன்வைக்காதது ஏன்?**

**உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மார்ச் 09ஆம் திகதி நடைபெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டு அதற்கமைய அரசியல் கட்சிகள் பலவும் தேர்தல் பிரசாரங்களை முடுக்கி விட்டிருந்தன. இந்த நிலையில் தேர்தலை நடத்துவதற்குப் போதியளவு நிதி இல்லையென திறைசேரி கூறியிருப்பதால், தேர்தலை உரிய திகதியில் நடத்துவதில் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது.**

ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று பெப்ரவரி 22, 23, 24 மற்றும் 28ஆம் திகதிகளில் தபால் மூல வாக்குப் பதிவுகள் இடம்பெற மாட்டாது என்று தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். இதன் அடிப்படையில் பார்க்கும் போது மார்ச் 9ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுமா என்ற பாரிய கேள்வி பொதுமக்கள் மத்தியில் மாத்திரமன்றி அரசியல் கட்சிகள் மத்தியிலும் நிலவி வருகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகள் மத்தியில் மாற்றுக் கருத்துக்கள் நிலவி வந்த சூழ்நிலையில், மார்ச் 09ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு முன்னர் அறிவித்திருந்தது.

இருந்தபோதும் தேர்தலை நடத்துவதற்கு உரிய பணம் இல்லையென அரசாங்கத் தரப்பில் தொடர்ச்சியாகக் கூறப்பட்டு வந்தது. இத்தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபாவை(ஆயிரம் கோடி ரூபா) ஒதுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் திறைசேரியிடம் கோரிக்கை விடுத்திருந்தார். நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் பாரியதொகையை ஒதுக்குவதில் சிக்கல் இருப்பதாகவும், அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற வேண்டிய தேவை இருப்பதாகவும் திறைசேரி தரப்பில் கூறப்பட்டு வந்தது.




இவ்வாறான நிலையில், தேர்தல் தொடர்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ஒருசாரார் வழக்குத் தாக்கல் செய்திருந்ததுடன், தற்போதைய சூழலில் தேர்தல் நடத்தப்படக் கூடாது என ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்குகளை விசாரித்த உச்சநீதிமன்றம், தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற மனுமீதான தீர்ப்பை கடந்த வாரம் அறிவித்திருந்தது. அதாவது தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே திட்டமிட்டது போன்று தேர்தலை நடத்த முடியும் என்று அத்தீர்ப்பில் கூறப்பட்டிருந்தது.

மறுபக்கத்தில் தேர்தல் நடத்தப்படக் கூடாது எனத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான அடுத்த விசாரணையை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்திருந்தது.

இதற்கமைய தேர்தல்கள் நடத்தப்படுமா இல்லையா என்பதில் அரசியல் கட்சிகள் மத்தியில் நிலவி வந்த சந்தேகம் ஓரளவுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகள் பிரசாரங்களை படிப்படியாக முடுக்கிவிடத் தொடங்கின.

இவ்வாறான பின்னணியில் தபால்மூல வாக்களிப்புக்குத் தேவையான வாக்குச்சீட்டுக்களை அச்சடிப்பதற்கு உரிய பணம் வழங்கப்பட வேண்டும், இல்லையேல் அச்சிடும் பணிகளை முன்னெடுக்க முடியாது என அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் தலைவர் கங்கானி லியனகே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்தார்.

ஒரு தொகுதி வாக்குச் சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டிருந்த நிலையில், அப்பணி இடையில் நிறுத்தப்பட்டது. தபால்மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் பணிகள் கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தேர்தல்கள் ஆணைக்குழு கலந்துரையாடல் நடத்தியிருந்தது.

தேர்தலை நடத்தத் தாம் தயாராக இருக்கின்ற போதும், திறைசேரியிடமிருந்தும், அச்சுத் திணைக்களத்திடமிருந்தும் உரிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லையென ஆணைக்குழு அரசியல் கட்சிகளிடம் தெரிவித்தது.

இதற்கு முன்னதாக, கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களுக்கு நிதிப் பயன்பாடு குறித்த அறிவுறுத்தல் ஒன்றை வழங்கியிருந்தார். அதாவது அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துமாறும், அதனை மீறி செலவு செய்யப்படும் நிதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகளே ஈடுசெய்ய வேண்டும் என்றும் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டிருந்தது.




இந்த நிலையில், தேர்தல் குறித்த செயற்பாடுகள் அத்தியாவசியம் என்ற அடிப்படையின் கீழ் வராது என விவாதமும் முன்வைக்கப்படுகிறது.

இதுபோன்ற பின்னணியில் அரசாங்க அச்சகத் திணைக்களம் தபால்மூல வாக்குச் சீட்டு அச்சுப் பணிகளை இடைநிறுத்தியதால் தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் மேலும் வலுவடைந்தது.

இதன் தொடர்ச்சியாக கடந்த வெள்ளிக்கிழமை திறைசேரியின் அதிகாரிகளுக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது. நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் தேர்தலுக்கு நிதி ஒதுக்குவதில் சிரமங்கள் இருப்பதாக திறைசேரியின் செயலாளர் செனவிரத்ன, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சி ஹேவாவுக்கு அறிவித்திருந்தார்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு தபால்மூல வாக்குப் பதிவுகள் ஏற்கனவே திட்டமிடப்பட்ட திகதிகளில் நடத்தப்படாது என்றும், புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

அதேநேரம், தேர்தலை அரசாங்கம் வேண்டுமென்றே திட்டமிட்டுத் தடுத்து வருவதாகவும், இது மக்களுக்குக் காணப்படும் ஜனநாயக உரிமையை மீறும் செயல் என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.





**மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ள இன்றைய காலப்பகுதியில், உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென எதிரணியினர் களத்தில் இறங்கியிருப்பதன் உள்நோக்கம் என்ன?**

தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கு அமைய செயற்பட வேண்டிய அரசாங்க அதிகாரிகள் அதனை மீறிச் செயற்படுவதாகவும், அவ்வாறான நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் சில எதிர்க்கட்சிகள் பயமுறுத்தியுள்ளன.

(19ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை விவசாயத்தை ஆவணப்படுத்திய டி. ஆர். விஜயவர்தன



டி. ஆர். விஜயவர்தன இந்நாட்டில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நபராக இருப்பதற்கு காரணம், தனி நபர்களின் திறமைகளை இனங்காணக்கூடிய அசாத்திய திறமை அவரிடம் இருந்ததனாலாகும். இற்றைக்கு ஒன்பது தசாப்தங்களுக்கு முன்பே டி. ஆர். விஜயவர்தன இந்நாட்டு விவசாயத்தின் பெறுமதியை விளங்கிக் கொண்டிருந்தார். விவசாயத்தைக் பற்றி எழுதுவதற்கு டி. ஆர். விஜயவர்தன தெரிவு செய்தது வில்மட் ஏ. பெரேராவேயாகும். இந்தக் கட்டுரைகள் முதன் முதலில் ஆங்கிலத்தில் Daily News பத்திரிகையில் பிரசுரமானது. எனினும் பின்னர் அவை சிங்களத்தில் மில்மட்டினால் மொழிபெயர்க்கப்பட்டு எழுதப்பட்டது. அதன்பின்னர் இவை டி. ஆர். விஜயவர்த்தனவினால் புத்தகமாக அச்சிட்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தப் புத்தகம் லேக் ஹவுஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. இந்தப் புத்தகம் அன்றைய காலகட்டத்தில் இருந்த லெட்டர் பிரஸ் முறையில் எழுத்து கோர்க்கப்பட்டு அச்சிடப்பட்டிருந்தது.புத்தகத்திற்கான எழுத்து கோர்க்கப்பட்டதன் பின்னர் வில்மட், டி. ஆர். விஜயவர்தனாவைச் சந்திப்பதற்காக அவரது பங்களாவிற்குச் சென்றார். புத்தகத்திற்கான முன்னுரை எழுதுவதற்கு ஒருவரை தேடிக் கொள்ளும் தேவையின் காரணமாகவே அவர் அங்கு சென்றார்.

முன்னுரை எழுதுவதற்குத் தகுதியான நபர்கள் சிலரின் பெயர்கள் கூறப்பட்டாலும் அவர்கள் ஒருவரையும் விஜயவர்தனவின் மனதுக்கு பிடிக்கவில்லை. கடைசியில் இருவரும் சேர்ந்து புத்தகத்திற்கு முன்னுரை எழுதுவதற்குத் தகுதியானவர் டி. எஸ். சேனாநாயக்க தான் என்பதைத் தீர்மானித்தார்கள்.

வில்மட் ஏ. பெரேராவைப் பற்றியும் இவ்விடத்தில் சிறு குறிப்பை எழுத வேண்டும். ஹொரணை ஸ்ரீபாலியை தனது சொந்த நிதியிலிருந்து கட்டியெழுப்பியது வில்மட்டாகும். வில்மட்டின் தந்தையினது பட்டப் பெயர் 'றப்பர் ரஜ்ஜுருவோ' என்பதாகும். இந்த நாட்டை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டே முன்னேற்ற முடியும் என்று வில்மட் எப்போதும் நம்பியிருந்தார். தேசிய அரச சபை எனக் கூறப்படும் இன்றைய பாராளுமன்றத்தின் மத்துகம பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வில்மட், சில காலம் வெள்ளைக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்த லங்காதீப டைம்ஸ் கம்பனியின் தலைவராகவும் செயற்பட்டார். விஜயவர்தன தனது நடவடிக்கைகளுக்காக வில்மட்டை தெரிவு செய்வதற்கு இவை அனைத்தும் காரணமாக அமைந்தன.

இந்தப் புத்தகத்திற்கு முன்னுரையை பெற்றுக் கொள்வதற்காக விஜயவர்தன மற்றும் வில்மட் ஆகிய இருவரும் போத்தலே வளவ்வவிற்கு சென்றதாக வில்மட் பெரேராவின் வாழ்க்கை குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. டி. எஸ். சேனாநாயக்க புத்தகத்திற்கு முன்னுரை எழுதியிருப்பார் என்று உங்களால் நம்ப முடியுமா? நீங்கள் நம்பினாலும் இல்லாவிட்டாலும் அவர் புத்தகத்திற்கு முன்னுரை எழுதியுள்ளார். எனினும் அவர் இந்நாட்டின் முதலாவது பிரதமராக அல்ல. அதற்கும் முன் 1933.02.18ம் திகதியாகும்.

இலங்கையின் கிராமப்புற வாழ்க்கை பற்றிய டி.ஆர். விஜயவர்தனவின் கருத்தின் பிரகாரம் வில்மட் பெரேராவினால் "டெய்லி நிவுஸ்" பத்திரிகையில் எழுதிய கட்டுரையினை நான் விருப்பத்துடன் வாசித்தேன். இதனைப் புத்தகமாக வெளியிடும் எண்ணத்தைப் பற்றியும் கேள்விப்பட்டேன். எமது பகுதிகளைப் பற்றிய மிகச் சிறந்த விளக்கத்தை பொதுமக்களுக்குக் கொண்டு செல்லும் இந்தக் கட்டுரை, கிராமப்புற வாழ்க்கையைப் பாதுகாக்கும் தற்போதைய முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளை எடுத்துரைக்கிறது. நன்கு சிந்தித்து, கவனமாகத் தொகுக்கப்பட்ட இந்தக் கட்டுரைகளில், கிராமப்புற வாழ்வின் இருண்ட பகுதிகளுக்கு வெளிச்சத்தைப் பரப்பியுள்ளன. இந்தப் புத்தகத்திற்காக விஜயவர்தன மற்றும் வில்மட் பெரேரா ஆகியோரைப் பாராட்டுகிறேன்.

கையொப்பமிட்டது, டீ. எஸ். சேனநாயக்கா.

விவசாய மற்றும் காணி அமைச்சர்.

இன்றைக்கு 90 வருடங்களுக்கு முன்னர் அச்சிடப்பட்ட இந்த புத்தகத்தின் ஆசிரியர் ஹொரணை ஸ்ரீபாலியின் ஸ்தாபகர் வில்மட் பெரேராவாகும். அவர் புத்தகத்தின் அறிமுகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புத்தகத்தின் மூலம் நான் கூறவிரும்புவது, இலங்கை விவசாயி எதிர்கொள்ளும் பல்வேறு குழப்பமான சில பிரச்சினைகள் பற்றியாகும். முதலில், டி.ஆர். விஜயவர்தனவின் அழைப்பின் பேரில் "டெய்லி நிவுஸ்" பத்திரிகையைத் தொடர்ந்து "தினமின" நாளிதழில் வெளியான கட்டுரைகளின் தொகுபாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நான் லேக்ஹவுஸ் உரிமையாளர் டி. ஆர். விஜயவர்தனவுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு குறிப்பிடப்படுவது கடைசிப் பண்புகளைக் காட்டிலும் உடனடியாக கடக்க வேண்டிய தடைகளைப் பற்றியதாகும். மேலதிக ஆய்வுகள் மற்றும் இலங்கையின் கிராமங்கள் தொடர்பில் மிக முழுமையான ஆராய்ச்சிகளுக்காக உற்சாகமடைவதற்குத் தேவையான ஏதேனும் விடயங்கள் இந்த நூலைப் படிப்பதன் ஊடாகத் கிடைக்குமானால் எனது சிறு முயற்சி வீண் போனதாகக் கருத மாட்டேன்.

பொருளடக்கம் இல்லாமை இந்நூலின் சிறப்பம்சமாகும். டெய்லி நிவுஸ் பத்திரிகையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளை சிங்கள மொழியில் வெளியிட்டதற்காக வில்மட் ஏ. பெரேராவுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாக இந்நூல் குறித்து முன்னுரை எழுதிய கோதாகொட உபசேன தேரர் குறிப்பிட்டுள்ளார். இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிய டி. ஆர் விஜயவர்த்தனவுக்கும் அத்தேரர் விசேட நன்றிகளைத் தெரிவித்துள்ளார். இந்நூல் 46 பக்கங்களைக் கொண்ட சிறியதொரு நூலாகும்.அதன் தொடக்கத்தில், தீகனிகாய அக்கஞ்ச சூத்திரத்தில், உலகம் உருவான போது முதல் முறையாக மக்களுக்கு உணவு எப்படி வந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராமப் பாதுகாப்புப் பிரச்சினைகள் என்ற இந்த சிங்கள நூல் 1933ல் வெளியிடப்பட்டாலும், இந்தக் கட்டுரைகள் லேக்ஹவுஸ் நிறுவனர் டி.ஆர். விஜயவர்தனவின் வேண்டுகோளின் 1930ம் ஆண்டு காலப்பகுதியில் டெய்லி நிவுஸ் பத்திரிகையில் எழுதப்பட்டது. இந்த நூலில் கூட்டுறவு முறைமைகள் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. லேக்ஹவுஸின் ஆரம்பத்தில் பணியாளர்கள் தங்கள் அனைத்து தேவைகளையும் உள்ளாலேயே செய்து கொள்ள முடிந்தது என்ற குறிப்பும் உள்ளது. இந்நூலில் உள்ள குறிப்புகள் அரச துறை தொடர்பான சிறந்த வரைவிளக்கனமாகக் கொள்ளலாம். அரச சேவை என்பது இந்நூலில் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் பாதுகாப்பின் கீழ் உள்ள ஆலோசகர்களின் மேற்பார்வையில் பல பரிசோதனைத் தளங்கள் உள்ளன. எனினும் இந்த ஆலோசகர்கள் நீண்ட அறிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் படிவங்களை நிரப்புவதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை, எமது தேசிய திறைசேரியின் தற்போதைய நிலையான அதிக செலவுகளுக்கு காரணமாக இருப்பதோடு, கிராம மக்களின் நம்பிக்கையையும் பெறத் தவறியுள்ளார்கள். டி. ஆர். விஜயவர்தன டென்மார்க் விவசாயத்தைப் பற்றி விசேட கவனத்தைச் செலுத்தி இருப்பதாக வில்மட் திருத்தப்பட்ட பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலில் விவசாயத்திற்கு முன்மாதிரிமிக்க நாடாக எடுக்கப்பட்டிருப்பது டென்மார்காகும். அத்துடன் அந்த நூலில் 96 ஆண்டுகளுக்கு முன்னர் 1927ல் சேர் ஹெர்குலிஸ் கிளிகார்ட் பேராதனையில் நிகழ்த்திய உரை தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தில் ஒரு அத்தியாயம் முழுக்க முழுக்க ஒதுக்கப்பட்டிருப்பது 'விவசாயிகள் சோம்பேறிகள் அல்ல' என்ற தலைப்பிலாகும்.

அந்த காலப்பகுதியில் இலங்கை பல்கலைக்கழகம் எங்கு நிறுவப்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் விஜயவர்தனவின் குரல் வலுவானதாக இருந்தது. பல்கலைக்கழகம் என்பது எவ்வாறான நிறுவனமாக அமைய வேண்டும் என்பதை தான் பிரித்தானியாவில் பெற்ற அனுபவத்தோடு ஒப்பிட்டு இந்நாட்டு பல்கலைக்கழகம் அழகிய, அமைதியான சூழலில் அமைக்கப்பட வேண்டுமே தவிர குழப்பகரமான சூழலில் அமையக்கூடாது என்பதை அவர் வலியுறுத்தினார். பேராதெனிய போன்ற அழகிய அமைதியான சூழல் தொடர்பில் அவரிடத்தில் அதிக ஆர்வம் ஏற்பட்டது. அதற்காக அவர் Daily News பத்திரிகையிலும் முக்கியமான குறிப்பை எழுதியிருந்தார். தனது நிலைப்பாட்டை மாற்றாமல் மிகச் சரியான முடிவைக் கடைப்பிடித்து அவர் நடத்திய போராட்டம் இறுதியில் பலனைத் தந்தது. விஜயவர்தனவின் நல்ல போராட்டத்தின் சரியான பலனைக் காணும் பாக்கியம் அவருக்கு கிடைக்காவிட்டாலும், மாணவர் விடுதிக்கு அவரின் பெயரைச் சூட்டியமை, தேசத்தின் பெருமைக்குரிய செயல் எனலாம். 1927ல் பேராதெனியவில் நடைபெற்ற விவசாய மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய 'சேர் ஹக் கிளிஃபோர்ட்' ன் உரையைத் தொடர்ந்து "பேராதனைச் சிந்தனை" பற்றி விஜயவர்தன குறிப்பிட்டார்.

இலங்கையின் அதிகரித்துவரும் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில், உணவுப் பொருட்களின் உள்ளூர் உற்பத்தி வளர்ச்சி நிலையில் இல்லை, என டி.ஆர். விஜயவர்தன 90 ஆண்டுகளுக்கு முன்னர் குறித்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் புத்தகத்தின் ஆசிரியர் குரோபோர்டிகினின் கருத்து பின்வருமாறு அமைந்துள்ளது.

அரிசி உற்பத்தி விகிதத்துடன் ஒப்பிடும்போது எமது சனத்தொகை அதிகரிப்பு விகிதம் மிகவும் திருப்திகரமாக இல்லை. இதனால் ஏற்படக் கூடிய விளைவு என்னவென்றால், வாழ்க்கை இன்னும் நெருக்கடிமிக்கதாக மாறுகிறது. என்பதேயாகும்.

1930ம் ஆண்டில் உலகில் ஒரு ஏக்கரில் விளைந்த விளைச்சலின் அடிப்படையில் உலக விவசாயம் பற்றிய புள்ளிவிபரங்களும் இந்த புத்தகத்தில் உள்ளது. இதுவும் டி.ஆர். விஜயவர்தனவின் அறிவுறுத்தலின் பேரில் Daily News நாளிதழில் வெளியாகியுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது ஒரு ஏக்கருக்கு இறாத்தலிலாகும். இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்த புள்ளிவிபரங்களில் காட்டப்பட்டிருப்பது இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சுமார் 50,000 தொன் அரிசியை அண்மித்தளவு இரு மடங்கு தொன் அரிசி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது என்றாகும்.


முக்கிய நெல் வளரும் நாடுகளில் அந்த நேரத்தில் ஒரு ஏக்கருக்கு விளைச்சலை பின்வரும் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

**ஸ்பெயின் ஒரு ஏக்கருக்கு 5800 இறாத்தல்.**
**இத்தாலி ஒரு ஏக்கருக்கு 4062 இறாத்தல்.**
**மிஸ்ர் ஒரு ஏக்கருக்கு 2847 இறாத்தல்.**
**ஜப்பான் ஒரு ஏக்கருக்கு 2875 இறாத்தல்.**
**சிம்ம ஒரு ஏக்கருக்கு 1680 இறாத்தல்.**
**இந்தியா ஒரு ஏக்கருக்கு 1281 இறாத்தல்.**
**இலங்கை ஒரு ஏக்கருக்கு 676 இறாத்தல்.**

இந்நூலில் இலங்கையில் பால் தேவையைப் பெறுவதற்காக பசுக்களை வளர்த்து தன்னிறைவு அடையும் முறை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதேபோன்று சீனி உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்வது குறித்தும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் விவசாயத்தை மேம்படுத்தும்போது நெல் சந்தைப்படுத்தல் தொடர்பாகவும் ஒரு அத்தியாயம் ஒதுக்கப்பட்டுள்ளது. இறுதியாக இந்நாட்டில் கிராமத்தை முன்னேற்றி நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எமது ஆட்சியாளர்கள் முதலில் வாசிக்க வேண்டிய நூல்களில் ஒன்று கிராமப் பாதுகாப்புப் பிரச்சனை எனும் நூலைக் குறிப்பிடலாம்.

**வஜிர லியனகே**
தமிழில் எம்.எஸ். முஸப்பிர்

# வரட்சியிலும் அழகிய காட்சிகளை கொடுக்கும் மலையகம்





ஹற்றன் விசேட நிருபர்

இலங்கையின் மலைப்பாங்கான பகுதிகள் மிகவும் ரம்மியமான இடங்களாகும்.உல்லாச பயணிகளை கவர்ந்திழுக்கும் காட்சிகள் அநேகமுள்ளன.எந்த காலநிலையிலும் மக்களை கவரக் கூடிய நிறைய இடங்கள் உள்ளன. அதேபோல நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையினை தொடர்ந்து மலையகப் பகுதியிலும் கடும் வரட்சி நிலவி வருகிறது இதனால் நீர் தேக்கங்களின் நீர் மட்டம் கணிசமான அளவு குறைவடைந்து வருகிறது.

மஸ்கெலியா பகுதியில் நிலவி வரும் வரட்சியான காலநிலையினை தொடர்ந்து தேசிய நீர் மின் உற்பத்திக்கும் பெரும் பங்காற்றிவரும் மவுசாகலை நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருகின்றது.

நீர் மட்டம் தாழ்ந்ததன் காரணமாக மஸ்கெலியா நீர்த்தேக்கத்தில் மூழ்கிக்கிடந்த ஆலயங்கள் பழைய நகரம் வீதிகள் ஆகியன தோற்றம் பெற்று வருகின்றன.









# வாரபலன்

19-02-2023 - 25-02-2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

நீங்கள் கொஞ்சம் சுதாரித்துவிட்டு எந்த காரியத்தை செய்தாலும் அது வெற்றி அடையும். இந்த வாரம் உங்கள் மனது கவரக்கூடிய ஒரு சம்பவம் நிகழும். தொழில் வியாபாரத் தடைகள் நீங்கும். போட்டிகள் குறையும். பழைய பாக்கிகளை நீங்கள் வேகமாக வசூல் செய்துவிடுவீர்கள். சனி, தொழில் வெற்றிகளை உருவாக்கிக் கொடுக்கும். ராசிக்குரிய செவ்வாய் இரண்டிலிருந்து அஷ்டமத்தைப் பார்க்கிறார். பேச்சு ஸ்தானத்திலிருந்து கஷ்டஸ்தானத்தைப் பார்ப்பதால் உங்கள் பேச்சு உங்களுக்குஎதிராகப் போய்விடும்.

## ரிஷபம்

பொருளாதார நிலை மேம்படும். ராசியில் உள்ள செவ்வாய் சில இடர்பாடுகளைக் கொடுத்தாலும்கூட நீங்கள் கவனமாக இருந்தால் உங்களுக்கு வெற்றியே கிடைக்கும். ஆடை அணிகலன்கள், மற்றும் வீட்டுக்கு வேண்டிய பொருட்களை வாங்குவீர்கள். நண்பர்களுக்கோ உறவினர்களுக்கோ உதவி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். உற்சாகமாக எதையாவது கற்றுக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் நிறைவேறும். விரயாதிபதி செவ்வாய் உங்கள் தலைப்பாகத்தில் உட்கார்ந்திருந்து கூட்டாளி ஸ்தானத்தை பார்வையிடுகின்றார். நாம் மிகவும் சாதாரணமாக சொன்ன ஒரு விஷயம் வேறு விதமாக அர்த்தம் கொள்ளப்பட்டு நமக்கு எதிராகத் திரும்பும்.

## மிதுனம்

எதைத் தொட்டாலும் ஒரு பின்னடைவு இருப்பதாக நீங்கள் கருதிக் கொண்டிருக்கிறீர்கள். உண்மை அது அல்ல. கிரக தோஷத்தால் விளைவதைவிட உங்கள் கவனக்குறைவால்தான் சில நேரங்களில் அப்படி ஏற்படுகிறது. உண்மையில் இப்பொழுது உங்களுக்கு சாதகமான நிலையில் சில கிரகங்கள் மாறி வருவதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். வெகு காலமாக வாங்க வேண்டும் என்று நினைத்த பொருளை வாங்கிவிடுவீர்கள். நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். பயணங்களின் மூலம் ஆதாயம் உண்டு. 9ல் சுக்கிரன் இருப்பதால், கணவன் மனைவி உறவுகள் நன்றாகவே இருக்கும். ராசிநாதன் அஷ்டமத்தில் இருக்கிறார். ஏராளமான மனக்கவலைகளை கொடுப்பார். கொஞ்சம் கவனமாக இல்லாவிட்டால் நம் கஷ்டத்துக்கு நாமே காரணமாகிவிடுவோம். யோசித்துச் செய்யுங்கள்.

## கடகம்

எட்டாம் இடத்து சுக்கிரன் சில எதிர்பாராத நன்மைகளைச் செய்வார். உங்களுடைய முயற்சிகளுக்கான பலன் கிடைக்கும். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்பு உண்டு. நீங்கள் நேரடியாக முடிக்க வேண்டிய வேலைகள் மறைமுகமாக முடியும். உங்கள் மனதில் இருந்த தயக்கமும் மயக்கமும் நீங்கும். மற்றவர்களுடைய கருத்துக்களை நீங்கள் அனுசரித்து, சற்று சமயோசிதமாக நடந்து கொண்டால், வெற்றிதான். அது குடும்பமாக இருந்தாலும் சரி, வேலையாக இருந்தாலும் சரி. சூரிய பகவான் 13ஆம் திகதி முதல் அஷ்டமத்தில் பிரவேசிக்கிறார். அலைச்சல்களை குறைத்துக் கொள்ளவும். உஷ்ண நோய்களிலிருந்து காத்துக் கொள்ளவும். உடலுக்கு சற்று ஓய்வு தரவும். பிரயாணங்களின் போது எச்சரிக்கை அவசியம்.

## சிம்மம்

உங்கள் திறமை பளிச்சிடும். ஆனால் அது சற்று தாமதமாக உங்களுக்குக் கிடைக்கும். கூடுதல் கவனம் இருந்தால் சிக்கல் இல்லாமல் உங்கள் காரியத்தை ஜெயித்துவிடலாம். மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்லும் நீங்கள், உங்கள் விஷயத்தில் கோட்டைவிட்டு விடாமல் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். 6ல் புதன் இருப்பதால் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் பத்திரிகை துறை நண்பர்களுக்கு சில நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். இந்த வாரம் தேவையில்லாத அலைச்சல்கள் அலைகழிக்கும். நம்பி தேடிச் சென்றவர்கள் வீட்டில் இருக்க மாட்டார்கள். ஆகையினால் எதையும் ஒரு முறைக்கு இரண்டு முறை நன்கு விசாரித்துவிட்டு எந்த வேலையையும் செய்யவும்.

## கன்னி

உங்கள் பேச்சுக்கு ஒரு நல்ல மதிப்பு உள்ள வாரம் இது. ஆகையினால் உங்களுடைய பேச்சுக்களை நீங்கள் சமயோசிதமாகவும், உங்களுக்குச் சாதகமாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 9ல் செவ்வாய் இருப்பதால் சகோதரர்கள் மற்றும் சகோதரரை போன்ற நண்பர்களுடைய உதவி கிடைக்கும். தாய் வழி சொந்தங்கள் கைகொடுக்கும். திருத்தல யாத்திரை செய்யக்கூடிய யோகமும் உண்டு. கலைத்துறையினர்களுக்கு வெளியூர் பயணங்கள் அல்லது வெளிநாட்டு பயணங்கள் குறித்த ஒப்பந்தங்கள் ஏற்படலாம். சற்று திட்டமிட்டு கூடுதலாக உழைத்தால் வெற்றி உங்கள் பக்கம். பித்தம் மற்றும் உஷ்ண நோய்களிலிருந்து சற்று காத்துக் கொள்ளவும். இதுவரை உள்ளுக்குள் இருந்த சில வியாதிகள், ''நானும் இருக்கிறேன்'' என்று தலைதூக்கும். உடனடியாக அதனை கவனித்து சரி செய்து கொள்வது நல்லது.

## துலாம்

இதுவரை உங்கள் மனதை அரித்துக் கொண்டிருந்த கவலை நீங்கிவிடும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். சிறிய இட மாற்றங்கள் ஏற்பட்டாலும், அது உங்களுக்கு நன்மையே. எடுத்த காரியத்தை நன்கு முடித்துவிடுவீர்கள். வணிகத்தில் புதிய ஆர்டர்கள் கிடைக்கும். பணவரவு திருப்தியாகவே இருக்கும். கணவன் மனைவி கருத்து வேற்றுமைகள் நீங்கி ஒத்துழைப்பு கிடைக்கும். சிறிய தடைகள் இருந்தாலும் கலைஞர்களுக்கு ஆதாயம் உண்டு. பேச்சிலும் செயலிலும் சற்று வளைந்து நடந்து கொண்டால் வெற்றி உங்கள் வசம். எப்பொழுதுமே நீங்கள் ஒன்றை நினைத்துக் கொண்டிருப்பீர்கள். அது அப்படியே திசை திரும்பி வேறு விதமாக நடக்கும். அப்படியும் நடப்பதற்கான ஒரு சாத்திய கூறு இருப்பதை முன்கூட்டியே நீங்கள் தீர்மானித்துக் கொண்டு மாற்று வழியைக் கண்டுபிடித்துக் கொள்ளுங்கள். எதிர்பாராத ஏமாற்றங்களை எதிர்பார்த்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

## விருச்சிகம்

இரண்டு வாரங்களாக சற்று தாமதமான பணிகள், விறுவிறு என்று நிறைவேறிவிடும். எந்தக் காரியத்தைச் செய்தாலும் உங்களுக்கு அதில் ஒரு மன திருப்தியும் சந்தோஷமும் இருக்கும். ஆத்மார்த்தமான சில காரியங்களைச் செய்யக்கூடிய வாய்ப்புண்டு. பிள்ளைகளுக்காக அதிகம் கஷ்டப்படுகிறீர்கள். ஆனால் மிக விரைவில் வீட்டில் சுப காரியங்கள் நடைபெறும். ஐந்தில் உள்ள குரு உங்கள் லாபஸ்தானத்தைப் பார்ப்பதால் தொழில், உத்தியோகம், வருமானம் முதலியவற்றைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். பழைய பகைகள் நட்பாக மாறும் வாரம் இது. அப்படி ஒரு வாய்ப்பு இருந்தால் அதை புதுப்பித்துக் கொள்ளுங்கள். வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் தொடர்ந்து உங்கள் இலக்கை நோக்கி நகருங்கள். அர்த்தாஷ்டம சனி தன்னுடைய வேலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டதை அனுபவத்தில் உணர்வீர்கள். உடல் நிலையில் மிகுந்த கவனம் தேவை. ரத்த அழுத்தம், சர்க்கரை வியாதிகளை அவ்வப்பொழுது சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

## தனுசு

கைநழுவிப் போவதாக சில விஷயங்கள் தெரிந்தாலும்கூட உண்மையில் கைநழுவிப் போய்விடவில்லை. ஆனால், நீங்கள் மனம் தளர்ந்து விடக்கூடாது. சில நேரம் தேவையில்லாத சில காரியங்களை செய்து நேரத்தை வீணடிப்பீர்கள். அதேநேரத்தில் உங்களுடைய கருத்துக்களை விட்டுக் கொடுக்க வேண்டாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் நல்ல அனுசரணை என்பது உங்கள் செயல் வேகத்தை அதிகரிக்கும். சுக்கிரன் உங்கள் பொருளாதார முன்னேற்றத்தை நல்ல வகையாகவே அமைத்துக் கொடுப்பார். எனவே கவலையை விடுங்கள். பொறுப்பையும் வேலைகளையும் அள்ளிக் கொடுப்பார்கள். ஆனால் அதற்கான ஆதாயத்தை இப்போதைக்கு நீங்கள் எதிர்பார்க்க முடியாது. உங்களின் கீழ் பணிபுரிபவர்கள் சற்று அலட்சியமாகவே விசுவாசக் குறைவோடு நடந்து கொள்வார்கள். எச்சரிக்கையோடு அவர்களை கையாளவும்.

## மகரம்

ஏன் இத்தனை தாமதம் ஆகிறது? நம்முடைய எண்ணங்கள் எப்பொழுது நிறைவேறும்? என்று சதா நினைத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு, அதற்கான ஒரு பிரகாசமான வாய்ப்பினை கிரக நிலைகள் ஏற்படுத்திக் கொடுப்பதை, இந்த வாரம் முதலே நீங்கள் உணரலாம். உங்கள் கற்பனையான எண்ணங்களை விட்டு வெளியே வாருங்கள். தொழில் வியாபாரங்கள் எல்லாம் நல்ல விதமாகவே நடந்து கொண்டிருக்கும். பணத்திலும் எந்த குறைபாடும் இல்லை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் நல்ல முன்னேற்றத்தை காண்பார்கள். வேலை தேடுபவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும். இந்த சாதகங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள். ''வாழ்வே மாயம்'' என்று தத்துவம் பேச வைக்கும் வாரம். ஆனால், உண்மையில் உங்களுக்கு எதிர்கால வாழ்வு சிறப்பாகவே இருக்கிறது. ராசி சனி இன்னும் கொஞ்ச தூரம் நகரட்டும். அதுவரை காத்திருங்கள்.

## கும்பம்

2ல் குரு. அவரே தனாதிபதி. குடும்ப அதிபதி. பொருள் காரகன். அவர் ஆட்சி பலத்தோடு இருப்பது பொருளாதாரச் சிக்கல்களைத் தவிர்க்கும் நல்ல அமைப்பு. அதே நேரத்தில் நீங்கள் பொருளாதாரத்தை அலட்சியமாக கையாளக் கூடாது என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள். தேவையற்ற கடன்களை வாங்கக் கூடாது. புதிய நண்பர்கள் புதிய நிகழ்ச்சிகள் புதிய அனுபவங்கள் உள்ள வாரம் இது. புதிய தொழில்களைத் தொடங்குகின்ற சிந்தனையும் பிறக்கும். கலைத்துறையினர்களுக்கு நல்ல வாய்ப்புகளும் வருமானமும் அதிகரிக்கும். நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும் உங்கள் உடல் நிலையிலும் கவனத்தில் கொள்ளுங்கள். ராசியில் சூரியன் வந்து அமரப் போகிறார், நீங்கள் உங்கள் உடல் நிலையைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## மீனம்

ராசி குரு தடுமாற்றத்தைத் தந்தாலும், நீங்கள் கவனத்தோடு வைக்கும் காலடிகள் அந்தத் தடுமாற்றத்தை நீக்கிவிடும். அவரே அதற்கான ஒரு வாய்ப்பினையும் தன்னுடைய பார்வை பலத்தால் தருவார். கணவன் மனைவி உறவுகள் சிறப்பாக இருக்கும். குடும்பத்தோடு பேசி, சில நல்ல முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். சில எதிர்பாராத பாராட்டும் கௌரவமும் கிடைக்கும் வாரம் இந்த வாரம். அதனை மனதிருப்தியோடு ஏற்றுக் கொள்ளுங்கள். 12ல் சுக்கிரன் இருந்தாலும் அது சுகம்தான். ராசி யாதிபதி குரு அவ்வப்பொழுது சில தொந்தரவுகளை தந்து கொண்டுதான் இருப்பார். பொருட்களை ஏதாவது ஒரு இடத்தில் வைத்துவிட்டு வேறு இடத்தில் தேடுதல் போன்ற விஷயங்களில் கவனம் அவசியம்.



திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்

கே. பத்மானந்தன்



34

# திருவள்ளுவத்தில் ஊழியரைக்கட்டுப்படுத்தல் (Staff Controlling)


ஊழியர்கள் மிகவும் ஊக்கமடையும்போது தம்முடைய உயர்ந்த பட்ச பங்களிப்பை அல்லது உழைப்பை நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்காக வழங்குவார்கள் என்பது மறுக்கப்படமுடியாத உண்மையாகும் . எனவே ஊழியர்களைப்பற்றி ஆராய்ந்து அவர்களின் பிரச்சினைகள், திறமைகள், பலம், பலவீனம், எண்ணங்கள், சிந்தனைகள் என்பன பற்றித் தெளிந்து முடிவுகளை எடுப்பதானது முகாமைத்துவத்தின் மிக முக்கியமான ஒரு செயற்பாடாகும். இதனால் ஊழியர்களின் உட்சபச்சப் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். இக்கருத்துக்களை கீழ்வரும் ஈரடி சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.

"தேறான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்".(குறள் 510)

ஒருவனை ஆராயாமல் தெரிவு செய்து ஏற்றுக் கொள்வதும் அவ்வாறு ஆராய்ந்து தெளிவடைந்து தெரிவு செய்து ஏற்றுக் கொண்ட பின்பு அவனைச் சந்தேகப்படுவதும் தீராத துன்பத்தைத் தரும் என்கிறார் திருவள்ளுவர். எனவே முகாமைத்துவம் தமது ஊழியர்கள் தொடர்பாக மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். உண்மையில் ஆராயாமல் தேர்ந்தெடுக்கப்பட்டவன் திறமைக் குறையுடையவனாயிருந்தால் அவனால் கொடுக்கப்பட்ட பணியைச் சிறப்பாகச் செய்ய இயலாது. செய்யும் வேலைகளில் தவறுகள் பிழைகள் பல ஏற்பட்டு தீர்க்க முடியாத சிக்கல்களை அவன் நிறுவனத்திற்கு உருவாக்கிவிடுவான். இவ்வாறு ஏற்படும் தவறுகளைச் சீர் செய்வதற்கு சில வேளைகளில் நீண்ட காலம் தேவைப்படக் கூடும். இதனால் அவனுக்கும் நிறுவனத்திற்கும் பல பிரச்சினைகள் ஏற்படும்.

அதேபோன்று தேர்ந்தெடுத்தவனை நம்பியபின்பு சந்தேகம் கொள்ளக்கூடாது. ஒரு பொறுப்பினைக் கொடுத்த பின்பு செயலில் அமர்த்தியபின்பு அவனிடம் ஒரு குறையும் இல்லாதபோதும் சந்தேகம் கொண்டால் அவன் அதனை அறிந்து கொண்டால், இந்த வேலை நமக்கு நிலையானதும் காப்பானதும் அல்ல என்று எண்ணி பணியாற்றுவதில் தேவையான அக்கறை காட்ட மாட்டான். ஒருவனைத் தேர்ந்து எடுத்த பின்பு அவனிடம் நம்பிக்கை கொள்ளாவிட்டால் அவன் அதனை உணர்ந்து கொண்டால் அது அவனது மனோபலத்தையும் தன்னம்பிக்கையையும் குலைத்துவிடும். அதனால் அவனிடம் வேலை செய்யத் தேவையான அறிவுத் திறன் ஆற்றல் இருந்தாலும் தொழிலில் அவனது ஈடுபாடு குறையும். இதன் காரணமாக நிறுவனத்தின் போட்டியாளர்கள் அவனைப் பிரித்துத் தம்பக்கம் இணைக்க முயற்சி செய்வார்கள், என்பதனால் பணிகளில் தொய்வு ஏற்பட்டு நிறுவனத்திற்கு பாதிப்பு ஏற்படும். எனவே முகாமைத்துவம் ஒருவனுடைய பலம் பலவீனங்களைப் பற்றி அறிந்து கொள்ளாமல் அவ்வாறு அறிந்து கொண்ட பலம் பலவீனங்களுக்கேற்றவாறு தம்மைத் தயார் படுத்திக் கொள்ளாமல் முடி வெடுக்கக் கூடாது என்பதனைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

முடிவெடுத்தல் என்பது ஒரு பிரச்சினைக்குரிய காரணிகளை இனங்கண்டு அப்பிரச்சினையை அல்லது அப்பிரச்சினைக்குரிய காரணிகளைத் தீர்க்க முயற்சிப்பதாகும். ஒரு முகாமையாளர் என்பவர் ஊழியர்கள் தொடர்பாக நேரத்திற்கும் இடத்திற்கும் தேவைக்குமேற்ற வகையில் உடனடியாக முடிவெடுக்கக் கூடியவராக இருக்க வேண்டும். முகாமையாளரின் இம் முடிவெடுக்கும் ஆற்றலானது ஊழியரைக் கட்டுப்படுத்துவதில் மிக முக்கியமானது. முகாமையாளர் ஊழியர்கள் தொடர்பான ஒரு செயலைச் செய்வது தொடர்பாக முடிவெடுக்கு முன் அச் செயல் பற்றித் தீர ஆராய வேண்டும். அப்போது தான் அவர் ஊழியர்களைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் அவர்களுக்கு வழிகாட்டும் விடயத்தில் ஒரு வெற்றிகரமான முகாமையாளராக இருக்க முடியும்.



ஒரு முகாமையாளர் ஊழியரைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் அல்லது அவர்களுக்கு கட்டளைகளை பிறப்பிக்கும் போது செய்யக் கூடிய அல்லது இயலுமான சாத்தியமான விடயங்களை மட்டுமே செய்ய வேண்டுமே தவிர, செய்ய முடியாத அல்லது நடைமுறைச் சாத்தியம் இல்லாத விடயங்களை செய்ய முயற்சிப்பதைத் தவிர்க்க வேண்டும். அதேவேளை ஊழியர்கள் தொடர்பில் செய்யக் கூடிய விடயங்களைச் செய்யாது விடுவதும் செய்ய முடியாத விடயங்களை அல்லது செய்யத் தேவையில்லாத விடயங்களைச் செய்வதையும் தவிர்க்க வேண்டும். இதனைக் கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்".(குறள் 466)

ஒருவன் செய்யத்தகாத செயல்களைச் செய்வதனால் கெடுவான் அல்லது கேடு ஏற்படும். அதேபோல் செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதனாலும் கெடுவான் அல்லது கேடு ஏற்படும் என்கிறார் திருவள்ளுவர். எனவே முகாமையாளர்கள் முடிந்தவற்றை மட்டுமே செய்ய முயல வேண்டும் அல்லது செய்து முடிக்க வேண்டும். ஊழியர்கள் தொடர்பான ஒரு செயலைத் தொடங்கமுன் அதற்காகத் திட்டமிடும்போது செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை எவை என்று அறிந்து மேற்கொள்ளப்போகும் செயலுக்கு எந்தவிதமான கேடும் ஏற்படாதவாறு திட்டமிட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். இங்கு திருவள்ளுவர் செய்யாமை என்று சொல்வது ஒரு செயலைச் செய்யாமலேயே இருப்பது மட்டும் அல்ல செய்யத்தக்கவற்றைச் செய்யாமல் இருப்பதுமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று நிறுவனம் ஒன்றின் முகாமையாளர் ஒருவர் தனது நிறுவனத்தில் மேற்கொள்ளவிருக்கும் ஊழியர்கள் தொடர்பான செயல்திட்டம் ஒன்றில் செய்யவேண்டிய பயன் தரும் அல்லது நன்மை தரும் செயல்களைச் செய்யாமையால் விடுவதானால் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்பினையே திருவள்ளுவர் இங்கு கேடு என்று சொல்கிறார். அதேபோன்று அந்தத் திட்டத்திற்குத் தேவையான போதிய தரவுகள் திரட்டாமல் இருப்பது, கிடைத்த தகவல்களை ஆராய்ந்து பார்க்காமல் இருப்பது, திட்டம் தொடர்பாக விழிப்புணர்வும் அர்ப்பணிப்பும் இல்லாமல் ஏனோதானோ என்று இருப்பது, திட்டத்தின் சாதக பாதகங்கள் பற்றி துறை சார் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறத் தவறுவது போன்றவையும் செய்யாமையில் அடங்கும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

ஒருவர் தான் செய்யும் செயலில் அல்லது எடுக்கும் முடிவில் உறுதியாக இருப்பது என்பது அவருடைய ஆளுமையின் வெளிப்பாடாகும். எனவே ஊழியர்கள் விடயத்தில் ஒரு செயலினைச் செய்வதற்கு முடிவெடுத்த பின்பு பின்வாங்குவதென்பது நல்ல முகாமைத்துவத்திற்கு பொருத்தமற்றது மட்டும் அல்ல புத்திசாலித்தனம் அற்ற செயலுமாகும். அத்தகைய நிலைமை நிறுவனத்தில் ஊழியர்களிடம் ஒரு மெச்சத்தக்க சூழ்நிலையை உருவாக்காது. இக் கருத்துகளை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகிறார்.

"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது".(குறள் 671)


முகாமையாளர் ஒருவர் ஒரு செயலைச் செய்யத் தேவையான துணிவைப் பெறுவதே அவர் பெற்றுக் கொள்ளும் ஆலோசனையின் முடிவாக இருக்க வேண்டும். அவ்வாறு பெற்ற அத்துணிவைச் செயலாக்கக் காலம் தாழ்த்தினால் அது தீமையாகும். எனவே முகாமையாளர் ஊழியர்கள் தொடர்பில் சரியான முடிவை எடுக்கவும் அதனை செயல்படுத்தவும் தயங்கக்கூடாது என்று திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார் .

ஊழியர்கள் தொடர்பாக முகாமையாளர் ஒரு திட்டத்தைத் தொடங்க விரும்பினால் அதனைத் தொடங்குவதற்கு முன்பு தொடர்புடைய அனைவருடனும் அது பற்றி நல்ல தெளிவு ஏற்படும்வரை நன்கு கலந்து ஆலோசித்து உறுதியான முடிவு எடுக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். அம்முடிவு திட்டம் தொடங்குவதாகவும் இருக்கலாம் அல்லது கைவிடுவதாகவும் இருக்கலாம்.

எது எப்படியிருந்தாலும் அந்த முடிவைச் செயல்படுத்துவதில் காலம் தாழ்த்தினால் எதிர் பாராத விளைவுகள் உண்டாகி நிறுவனத்திற்குத் தீமைகளை விளைவிக்கும் என்பதை முகாமையாளர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்யாமல் காலம் தாழ்த்தினால் அச்செயலைச் செய்வதற்குரிய காலம் மாறுபட்டு சூழலும் மாறுபட்டு தேவையற்ற பிரச்சினைகள் நிறுவனத்தில் ஏற்படலாம்.

(தொடரும்)

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் முதுபெரும் ஈழத்துப் பாடகர் வீ.முத்தழகு!



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 21 ஆம் திகதி (21.02.2023) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் நம் நாட்டின் புகழ் பெற்ற, தேசிய பாடகர் கலாபூஷணம் முத்தழகு சூரியகுமார் சிறப்பதிதியாக கலந்து, முஸ்லிம் சேவையின் "இசைப்பாரம்பரியம்" நினைவுகளை மிகச் சுவையாக நேயர்களோடு பகிர்ந்து கொள்கிறார்.

தமிழ் மொழியில் மட்டுமல்லாது சிங்களம், இந்தி போன்ற மொழிகளிலும் பெருமளவில் பாடல்கள் பாடி நம் நாட்டின் அனைத்து சமூகத்தவர் மத்தியிலும், தனக்கென தனியான அடையாளத்தை தேடிக்கொண்ட இவர், உலக புகழ்பெற்ற சர்வதேச பாடகராகவும் திகழ்கிறார்.

சிறந்த பாடகருக்கான ஜனாதிபதி விருது பெற்ற இவர் சிங்கள மொழியிலும் சிறப்பாக பாடி வருவதுடன், இலங்கையின் தமிழ் திரைப்படங்களில் அதிகமான பின்னணி பாடல்களையும் பாடியுள்ளார். இன்றைய இளையோரும் இவரது திரைப்பட பாடல்களை முணுமுணுக்குமளவுக்கு இவர் பாடிய திரைப்படப் பாடல்கள் பெரும் பிரபலத்தை இவருக்கு தேடிக் கொடுத்தன.

கலாபூஷணம் முத்தழகு சூரியகுமார், இலங்கை வானொலி முஸ்லிம் சேவையோடு ஆரம்ப காலமுதல் இன்றுவரை நல்லுறவை பேணிவரும், நம் நாட்டின் தேசிய இசைக்கலைஞர்களில் ஒருவராவார்.

முஸ்லிம் நிகழ்ச்சிகளில் முதலாவதாக இஸ்லாமிய கீதம் பாடிய வாழைத்தோட்டம் எம்.ஏ.ஹஸன் அலியார் தொட்டு, இஸ்லாமிய பாடல்கள் பாடிய, முஸ்லிம், முஸ்லிமல்லாத கலைஞர்கள் பலரோடு, இசைத் துறை சார்ந்தோர் பலரையும் இந்நிகழ்ச்சிக்கூடாக நினைவூட்டி மகிழ்கிறார்.

முஸ்லிம் சேவையின் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில் இவர் பரிமாறிக்கொள்ளும் "இஸ்லாமிய கீதம்" பற்றிய பாரம்பரிய தகவல்கள் நம் கலைஞர்களை நேயர்களை மகிழ்ச்சியிலாழ்த்தும்.

இந்நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்து வழங்க, முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

# பழ. நெடுமாறன் பிரபாகரனை உயிர்ப்பிக்க முனைவது ஏன்?



**வன்னியில் நிகழ்ந்த இறுதி யுத்தத்தின் பின்னர் 2009 மே 18ஆம் திகதி இலங்கை அரசு விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணச் செய்தியை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அவரது சடலத்தை விநாயகமூர்த்தி முரளீதரன் அடையாளம் காட்டவும் செய்தார். தொலைக்காட்சிகள் அவரது உடலைக் காட்டின. ஒரு வாரம் கழித்து குமரன் பத்மநாதன் அல்லது கே.பி., பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டதாக அறிவித்தார்.**

ஆயுதச் சமரில் ஈடுபட்டிருந்த அந்த விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்து செயல்படுவதாகத் தெரியவில்லை. ஆயுதச் சமர் செய்த அந்த இயக்கம் இப்போது செயற்பாட்டில் இல்லை. அதற்கான வாய்ப்பு இலங்கையிலும் இல்லை, தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் காணப்படுவதாக இல்லை. அமெரிக்கா மீதான 9/11 தாக்குதலின் பின்னர் தீவிரவாதத்துக்கு துணைபோகும் நாடுகள் மிகக் குறைவு இந்தியாவில் காணப்பட்ட அந்த வாய்ப்பு, 1991 மே 21ம் திகதி சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புத்தூரில் முன்னாள் பாரதப் பிரதமர் படுகொலை செய்யப்பட்டதுடன் மறைந்து போனது.

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், அல்கைதா தலைவர் ஒசாமா பின்லேடன், அதன் பின்னர் தலைமை வகித்த அய்மான் அல் ஜவாஹிரி ஆகிய இருவரையும் தேடிச் சென்று கொன்றொழித்தது. ஐ.எஸ்.தலைவர் அபுபக்கர் அல்பக்தாதி டொனால்ட் ட்ரம்ப் காலத்தில் கொல்லப்பட்டார். பின்னர் தலைமை பதவியேற்ற ஹாஜி அப்துல்லாவும் ஜோ பைடன் காலத்தில், 2019இல் கொல்லப்பட்டார். தற்போது பயங்கரவாதத்தை எதிர்த்து போராடும் திட்டங்களில் அமெரிக்காவுடன் இணைந்து செயல்படுவதில் இந்தியா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

உலக அளவில் பயங்கரவாத நடவடிக்கைகளும் குறைந்துள்ளதாகவே தெரிகிறது. ஆயுதம் ஏந்தி நாட்டை, நாட்டின் ஒரு பகுதியை கைப்பற்றுவதற்கான வாய்ப்புகள் உலக அளவில் வெகுவாகக் குறைந்து விட்டன.

இத்தகைய பின்னணியில், பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவும் அவர் தன் குடும்பத்தாருடன் தொடர்பில் உள்ளதாகவும் தெரிவித்திருக்கும் தமிழக முன்னாள் காஸ்கிரஸ் பிரமுகரும், தமிழகத்தின் சிரேஷ்ட அரசியல்வாதியும், எஞ்சியிருக்கும் காமராஜின் சீடர்களில் ஒருவருமான பழ. நெடுமாறன், குடும்பத்தாரின் அனுமதியுடன் தான் இந்தத் தகவலை வெளியிடுவதாக கடந்த திங்கட்கிழமை ஒரு குண்டைத் தூக்கிப் போட்டியிருக்கிறார். இதை குண்டு என்று சொல்வதை விட புஸ்வாணம் என்பதுதான் சரியாக இருக்கும். ஏனெனில் பழ. நெடுமாறன் பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதை என்றைக்குமே ஒப்புக் கொண்டவர் அல்ல. 2018ம் ஆண்டில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலும் நெடுமாறன், பிரபாகரன் உயிருடன்தான் உள்ளார். சந்தர்ப்பம் வரும் போது வெளிப்படுவார் என்றுதான் குறிப்பிட்டிருந்தார்.

பிரபாகரன் மறைந்த தகவல் வெளியாகி உறுதிப்படுத்தப்பட்டு விட்ட பின்னரும் கூட, தமிழக ஊடகங்களும் பல அரசியல் பிரமுகர்களும் அவரது மரணத்தை ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. ஏனெனில் அப்படி ஒப்புக் கொள்வது தமது சந்தை வணிகத்துக்கும் அரசியல் வணிகத்துக்கும் ஊறு விளைவிப்பதாகவே அமையும் என்பதால்தான், அவர் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்புகளைத் தேடித்தேடி அல்லது உருவாக்கி ஊடகங்கள் வாயிலாகக் கசிய விட்டன. ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்ததன் பலன்களை தமிழகத்தில் வாழும் வணிகர்களே அனுபவிக்கிறார்கள். ஈழப்போராட்டம் தொடர்பான நூல்கள், திரைப்படங்கள் அங்குதான் எழுதப்படுகின்றன; வெளியிடப்படுகின்றன. புலம்பெயர்ந்த தமிழர்களின் திருமணங்களை நடத்தி வைப்பதற்கான திருமண ஏற்பாட்டு மையங்கள் சென்னையில் பரபரப்பாக இயங்கி வருகின்றன. சாத்தியப்படாதிருந்த பொன்னியின் செல்வன் வெள்ளித்திரையில் சாத்தியப்பட முடிந்தது சுபாஷ்கரன் என்ற இலங்கைத் தமிழரால் தான் என்பது வெளிப்படையானது. எனவே, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் அனைத்துமே இலங்கைக்கு வெளியே பணம், செல்வாக்கு, ஜெயிக்கும் வழிகளாகவே உள்ளன.

பழ. நெடுமாறன், பிரபாகரன் இறக்கவில்லை என்று கூறியது. தஞ்சாவூரில் அமைந்திருக்கும் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில்,

பிரபாகரன் திரும்பி வருவார். அவர் வரும் போது உலகத் தமிழர்கள் அவருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கும் பழ.நெடுமாறன், அழுத்தம் தந்திருப்பது, இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னத்துக்கு. இலங்கையில் ஆழமாகக் காலூன்ற சீனா மேற்கொண்டுவரும் பிரயத்தனங்கள் மற்றும் தமிழகத்துக்கு சமீபமாக யாழ்ப்பாண பகுதிகளில் தடம் பதிக்க சீனா முயன்று வருவது போன்ற விடயங்களுக்குத்தான். பிரபாகரனை வீழ்த்துவதில் முன்நின்ற சீனாவின் கூட்டாளிகளை பௌத்த சிங்கள மக்களே அகற்றிவிட்ட ஒரு சூழலில் இந்தியாவுக்கு பிரபாகரனின் பிரசன்னம் எவ்வளவு தூரம் அவசியம் என்பதை பழ.நெடுமாறன் இந்திய அரசுக்கு உணர்த்த விரும்பும் ஒரு உத்தியாகவும் இதைக் கருத முடியும்.

பிரபாகரன் உயிருடன் தான் உள்ளார் என்ற செய்தியை வைகோ நம்பவில்லை. கலைஞர் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் வைகோ திடீரெனக் காணாமல் போனார். தேடிப்பார்த்தபோது எவரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் படகேறி இலங்கை சென்று பிரபாகரனுடன் சில தினங்களை செலவிட்டு திரும்பிய கதை அதன் பின்னரேயே தெரிய வந்தது. இதனால் கலைஞருக்கும் வைகோவுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. பின்னர் இருவரும் பிரிவதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றானது.

இத்தனைய பிரபாகரன் பற்றுக் கொண்ட வைகோ, அவர் உயிருடன்தான் இருக்கிறார் என்ற தகவலை நம்பவில்லை, பிரபாகரனுக்கு சமீபமானவர்கள் இன்றைக்கும் தன்னுடன் தொடர்பில் இருப்பதாகத் தெரிந்திருக்கும் அவர், உயிருடன் இருக்கும் செய்தியை அவர்கள் உறுதிப்படுத்தவில்லை என்கிறார்.

பிரபாகரன் மீதான பற்றை அரசியலாகவும் கொண்டிருக்கும் சீமான், பழ. நெடுமாறனின் கூற்றை நிராகரித்து விட்டார். இதற்காக அவர் தெரிவித்திருக்கும் நியாயங்கள் ஏற்கத்தக்கவை. 'அண்ணன்' உயிருடன் இருந்திருந்தால் 14 ஆண்டுகளாக அவர் வெறுமனே இருந்திருக்க மாட்டார். அவர் ஓடி ஒளிபவரும் அல்ல. வெளிப்பட்டு இருப்பார் என்பது சீமானின் கருத்து. இவரும் படகேறிவந்து பிரபாகரனை சந்தித்து சென்றவர்தான். இவ்வாறு இரண்டு பிரபாகர அனுதாபிகளும் நெடுமாறனின் கூற்றை நிராகரித்துவிட்டனர். சரத் பொன்சேகாவே, தன் போராட்டத்தில் தன் குடும்பத்தையே களப்பலியாக்கியவர் என்று கூறியிருக்கிறார்.

இன்னுமொரு உதாரணமும் எடுத்துக் கொள்ளலாம்.

ஒரு சிரிக்கச் சிரிக்க பேசும் ஒருவர் ஓரிடத்தில் இருந்தால் அவரைச் சுற்றி நான்குபேர் இருப்பார்கள். அந்த இடம் கலகலப்பாக இருக்கும். கொஞ்சம் இனிப்பு சிதறிக் கிடந்தால் அங்கே எறும்புகள் மொய்த்துக் கிடக்கும். விண்வெளி ஆய்விலும் கூட, இது இந்த இடத்தில் இருக்கிறது என்பதை அவ்விடத்தில் நிகழ்பவற்றை வைத்தே அனுமானிக்கும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. பிரபாகரன் விஷயமும் அப்படித்தான். அவர் உயிருடன் ஏதாவது ஒரு நாட்டில் இருப்பாரானால் சர்வதேச ரீதியான புலிகளின் இயக்க செயற்பாடுகளில் ஒரு வித்தியாசம் காணப்பட்டிருக்கும். நிதிசேகரிப்பு, ஆயுத கொள்வனவு போன்றன. அவரை மறைத்து வைத்திருக்கும் நாடும் சும்மா இருக்காது. அந் நாட்டின் செயற்பாடுகளில் வித்தியாசம் உணரப்பட்டிருக்கும். அவ்வாறு எந்த அடையாளத்தையும் உலக மட்டத்தில் உணரமுடியவில்லை.

இலங்கை அரசை எடுத்துக் கொண்டால், யுத்தம் முடிவடைந்ததும் பல கட்டுப்பாடுகளை அது நீக்கி விட்டது. பரிசோதனைகள், தேடுதல்கள் எதுவும் இல்லை. வி.ஐ.பிகளின் உச்சமட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்பட்டு விட்டன. வடக்கு கிழக்கில் எங்கு வேண்டுமானாலும் மக்கள் சென்று வரலாம். பிடித்து வைக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படுகின்றன. இலங்கை தமிழ்க் கட்சிப் பிரமுகர்களும் அவர் உயிருடன் இருப்பதற்கான எந்தவொரு சமிக்ஞையையும் வெளிப்படுத்தவில்லை.

இத்தகைய ஒரு தெளிவான சூழலில், அவர் உயிருடன் தான் இருக்கிறார்; வெளிப்படும் தருணம் வந்து விட்டது என்று நெடுமாறன் சொல்வதற்கான காரணம் என்ன?

தற்போது ஜி 20 தலைமையை இந்தியா ஏற்றுள்ளது. வருட இறுதியில் அதன் உச்சி மாநாடு டில்லியில் நடைபெறவுள்ளது. இவ்வருடத்துக்கான ஷங்காய் கோர்பரேஷன் தலைமைத்துவத்தையும் இந்தியாவே ஏற்றுள்ளது. ரஷ்யா, சீனா உட்பட எட்டு நாடுகளின் அமைப்பு இது. இதன் உச்சி மாநாடும் டில்லியில் நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது. அடுத்த வருடத்தில் நடைபெறவிருக்கும் இந்திய பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசார வேலைகளும் வருட இறுதியில் ஆரம்பமாகிவிடும். எனவே இந்த ஆண்டு மோடி அரசு பரபரப்பாக இயங்க வேண்டியிருக்கும்.

இந்தியாவின் பெரும் பிரச்சினை சீனா. அதன் கடல் வழி பட்டுப் பாதை (One belt and Road), சீனாவில் ஆரம்பித்து ஆபிரிக்கா, தென்னமெரிக்கா வரை நீண்டு செல்கிறது. அது, உலக வல்லரசாவதற்கான ஒரு படிமுறையாகவே பார்க்கப்படுவதால், இந்தோ, பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை ஒடுக்கும் வகையில் அமெரிக்கா தலைமையில், அவுஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா, பிரிட்டன் அங்கம் வகிக்கும் 'குவாட்' அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இதே சமயம், மோடி அரசு அமெரிக்காவுடன் மிக நெருக்கமாக செயல்பட ஆரம்பித்துள்ளது. பெப்ரவரி ஆரம்பத்தில் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடுகளின் பிரகாரம் நவீன பீரங்கிகள், கவச வாகனங்கள், ஜெட் என்ஜின், உயர் ரக தோட்டாக்கள் என உயர் தொழில்நுட்பம் சார்ந்த ஆயுதங்கள், தளபாடங்களை இந்தியாவிலேயே கூட்டாகத் தயாரிக்கவும், நாசா இஸ்ரோவுடன் கூட்டாக செயல்படவும், இந்திய வீரரை விண்வெளிக்கு அனுப்பவும் இந்தளவுக்கு இந்தியாவுடன் நெருக்கம் காட்டியதில்லை. இந்தியாவின் ஊடாக இந்தோ பசுபிக்கில் சீனாவின் கண்களில் விரல்விட்டு ஆட்டும் ஒரு அமெரிக்க முயற்சியே இது என்பது அரசியல் அவதானிகளின் பார்வையாக உள்ளது. சீனாவுக்கு எதிரான அமெரிக்க நகர்வுகளுக்கு ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா என பிராந்திய நாடுகள் ஆதரவாக உள்ளன. இவையும் இந்தியாவை முன்நிறுத்தியே காய்களை நகர்த்த விரும்புகின்றன.

இந்தியாவில் இன்னமும் விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்கிறது. வைகோ, நீதிமன்றமும் சென்று பார்த்தார், பலிக்கவில்லை. அதை மத்திய அரசே முடிவு செய்ய வேண்டும். ஆனால் புலிகள் சக்திவாய்ந்தவர்களாக இருந்த போது தமது சீன எதிர்ப்பை எவ்வளவு தூரம் வெளிப்படுத்தினார்கள் என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாக விளங்கும். அதேசமயம், ராஜீவ் காந்தியின் மீது கை வைத்ததன் மூலம், புலிகள் தமது இந்திய வெறுப்பை வெளிப்படுத்தியமை கண்கூடு.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளராகவே தன்னை சித்தரிக்கும் பழ. நெடுமாறனின் வேலுப்பிள்ளை பிரபாகரனை உயிர்த்தெழச் செய்யும் முயற்சி, புலிகள் மீதான தடையை மீளாய்வு செய்யும்படி இந்திய அரசுக்கு விடுக்கப்படும் வேண்டுகோளாகவே பார்க்கப்பட வேண்டியிருக்கிறது.

அருள் சத்தியநாதன்...

# ரஷ்ய–உக்ரைன் போரும் இந்தோ–பசுபிக் பிராந்தியமும்

அமெரிக்க வியூகத்துக்குள்



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**உக்ரைன்–ரஷ்ய போர் உலகளாவிய அரசியலை மாற்றிவருகிறதென்பதை அவதானிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இரு நாட்டுக்குமான போர் தொடங்கியதிலிருந்து ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்கா மற்றும் நேட்டோ சக்திகளும் தமது வெளியுறவில் அதிக மாற்றங்களை மேற்கொண்டு வருகின்றன. அமெரிக்கா தனது வெளியுறவில் அதிக மாற்றத்தை மேற்கொண்டு வருவதாக ஏற்கனவே இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நோக்கிய நகர்வுகளில் உக்ரைனை ஊக்குவிக்கும் நடவடிக்கையில் ஐரோப்பிய யூனியனும் அமெரிக்காவும் முனைப்புச் செலுத்தி வருகின்றன. அண்மையில் உக்ரைன் ஜனாதிபதியின் ஐரோப்பிய யூனியனுக்கான பயணமும் உரையாடலும் அத்தகைய தேவையை மேலும் அதிகரித்துள்ளது. இக்கட்டுரையும் உக்ரைன்–ரஷ்ய போர் ஏற்படுத்திவரும் பிந்திய நகர்வுகளைத் தேடுவதாகவும் அது உலகளாவிய தளத்தில் ஏற்படுத்திவரும் மாற்றங்களையும் நோக்கியதாகவும் அமையவுள்ளது.**

முதலாவது, ரஷ்ய-உக்ரைன் இடையிலான போரை நிறுத்த இந்தியப் பிரதமர் எந்த முயற்சி எடுத்தாலும் அதை அமெரிக்கா வரவேற்கும் என வெள்ளைமாளிகை அறிவித்துள்ளது. ஷங்காய் மாநாட்டிலும் ஜி-20 சந்திப்பிலும் இந்தியப் பிரதமர் உரையாற்றும் போது ரஷ்ய உக்ரைன் போரை நிறுத்துவதற்கான கருத்தினை முன்வைத்து வருகிறார். ஷங்காய் மகாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்த போது இன்றைய யுகம் போருக்கானதல்ல. அமைதிக்கான பாதையில் எப்படி செல்லலாம் என்பதற்கான வாய்ப்புகள் தற்போது உள்ளது என குறிப்பிட்டிருந்தார். இதனை உலக நாடுகளின் தலைவர்கள் வரவேற்றிருந்தனர். இந் நிலையில் அமெரிக்க தேசியப் பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி ரஷ்யா-உக்ரைன் போருக்கு ஜனாதிபதி புடின்தான் காரணம் எனவும் அவரால் தற்போது கூட போரை நிறுத்த முடியும் எனவும்' ஆனால் அவர் தொடர்ந்து உக்ரைனை ஏவுகணைகள் கொண்டு அழித்து வருகிறார். இரு நாட்டுக்கும் இடையிலான விரோதம் முடிவுக்கு வர வேண்டும். பேச்சு நடத்த உக்ரைன் ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டும். இந்தப் போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார். ஆனால் போரை நிறுத்த ரஷ்ய ஜனாதிபதி விரும்பாததனால் அமெரிக்கா உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை வழங்க வேண்டியுள்ளது. இந்தியப் பிரதமர், புடினை சமாதானம் செய்ய முடியும். இது குறித்து இந்தியப் பிரதமரை மீண்டும் புடினுடன் பேசும்படி அமெரிக்கா வேண்டுகிறது. உக்ரைன் போரை நிறுத்த இந்தியப் பிரதமர் மோடி எந்த முயற்சி எடுத்தாலும் அதை அமெரிக்கா வரவேற்கும் என்றார்.



உக்ரைனில் நடப்புவாரத்தில் ரஷ்ய இராணுவம் பாரியளவான உயிரிழப்பை எதிர் கொள்வதாக உக்ரைன் பாதுகாப்பு சபையின் அறிக்கை வெளியிட்டுள்ளது. போரில் நாள் ஒன்றுக்கு 824 ரஷ்ய இராணுவத்தினர் கொல்லப்படுவதாக தமக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. உக்ரையின் தரப்பு வீரர்கள் ரஷ்யாவின் தாக்குதலை வலுவாக எதிர்கொண்டு முறியடித்து வருவதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய ரஷ்ய இராணுவ இழப்பீட்டுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வழங்கிய ஆயுததளபாடங்களே காரணம் என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் வழங்கிய ஆயுததளபாடங்கள் அனேகமானவை உக்ரைனை வந்தடைந்த நிலையில் ரஷ்ய இராணும் பாரிய இழப்பீடுகளை சந்தித்துள்ளதாகவே உணரப்படுகிறது. ஆனாலும் உக்ரைனது அறிக்கையை மட்டும் கொண்டு அத்தகைய முடிவினை மேற்கொள்ள முடியாது என்பதுடன் அத்தகைய செய்திகளையே மேற்கு ஊடகங்கள் முதன்மைப்படுத்தி வருகின்றன. அதே நேரம் அமெரிக்காவின் உக்ரைனுக்கான ஆயுததளபாடங்களை வழங்குவதற்கான நியாயமானது வேடிக்கையாகவே தெரிகிறது. போரை நிறுத்துவதற்கான உத்திகளைப் பற்றி உரையாடும் வெள்ளைமாளிகை உக்ரைனுக்கான ஆயுததளபாடங்களை விநியோகிப்பதில் அதிக கவனம் கொண்டுள்ளது. வெள்ளைமாளிகை அமைதி பற்றி உரையாடுவது உலகத்தை ஏமாற்றுவதற்கான உத்தியாகவே தெரிகிறது. இரு நாட்டுக்குமான போர் பெரியளவான வாய்ப்புக்களையும் ரஷ்யாவின் இராணுவ வளர்ச்சியையும் கீழைத்தேச நாடுகளது எழுச்சியையும் அமெரிக்கா தடுத்துள்ளதாகவே தெரிகிறது. ரஷ்யா-சீனா-இந்தியா எனும் அணியினது எழுச்சியை வெற்றி கொள்வதில் ரஷ்யா-உக்ரைன் போர் அமெரிக்காவுக்கும் மேற்குலகத்திற்கும் வாய்ப்பானதாகவே அமைந்துள்ளது. அதனையே அமெரிக்கா தொடர முனைவதுடன் தனது வெளியுறவில் பாரிய மாற்றங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. அதன் வெளியுறவில் இந்தோ பசுபிக் பிராந்தியம் முக்கியமானதாக மாறியுள்ளது.

இரண்டாவது, அத்தகைய நட்புறவுக்குள்ளேயே இந்திய-அமெரிக்க உறவு வடிவமைக்கப்படுகிறது. அமெரிக்க-இந்திய உறவை ரஷ்ய-இந்திய உறவை தகர்ப்பதற்கான உத்தியாகவும் இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா தனது நிலையை பலப்படுத்துவதற்கும் திட்டமிடுவதாகவே தெரிகிறது. குறிப்பாக இந்தியாவுடனான உறவு மேலும் வலுப்பெற அமெரிக்கா விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். அமெரிக்க போயிங் விமான நிறுவனத்திடமிருந்து ஏர் இந்தியா விமான நிறுவனம் 290 வகை விமானங்கள் 200 ஐ கொள்வனவு செய்வதற்கான உடன்பாட்டில் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் தொலைபேசியில் உரையாடும் போது அத்தகைய கருத்தினை அமெரிக்க ஜனாதிபதி வெளிப்படுத்தியிருந்தார். இரு நாடுகளுக்கும் வியூக முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்ப உறவை பலப்படுத்துவதென இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். இது இரு நாட்டுக்குமான நெருக்கம் என்பதைக் காட்டிலும் ரஷ்ய இந்திய நெருக்கத்தை கையாளும் இரண்டாவது நகர்வாகும். ஆரம்பத்தில் வெளியுறவு மட்டத்திலும்' மற்றும் அமெரிக்க இரண்டாம் நிலைத் தலைவர்களால் கையாளப்பட்டதுமான நிலையைக் கடந்து அரச மட்டத்திலான கையாளுகையாகவும் தொழில்நுட்ப உறவை கொண்ட பொருளாதார ஒத்துழைப்புக்கான நகர்வாகவும் தெரிகிறது. இந்தியா எப்போதும் நடுநிலை என்ற கொள்கைக்குள் அகப்பட்டுள்ளதனால் அதனை எப்போது வேண்டுமானாலும் எப்படியும் கையாள முடியும் என்பதை உலக நாடுகள் விளங்கிக் கொண்டுள்ளன. அத்தகைய நடவடிக்கையையே தற்போது அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது. முன்னாள் இந்தியப் பிரதமரையும் அமெரிக்கா ஆரம்பத்தில் அரவணைக்க முயன்று தோற்றுப் போக மறுவளமான உத்திகளை திட்டமிட்டு நகர்த்தி அதில் வெற்றி கொண்டது. அதனையே ரஷ்ய-இந்திய உறவிலும் அமெரிக்கா செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. அதானியை வீழ்த்திவிட்டு டாடாவை வளர்க்க முயல்வது போல் நகரத் தொடங்குகிறது. ஆனால் எதனையும் வளரவிடாது தடுப்பதுடன் இந்திய-ரஷ்ய நெருக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான நகர்வாகவும் அவற்றை அமெரிக்க மேற்கொண்டுவருகிறது. இதில் இன்னொரு நடவடிக்கையையும் அமெரிக்கா ஆரம்பித்துள்ளது. எப்போதும் இந்தியாவை அமெரிக்கா கையாள இலங்கைத் தீவையும் அதன்' அரசியலையும் பயன்படுத்திக் கொள்ளும் மரபைக் காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக இலங்கைத்தீவை தனித்துவமான அரசியலுக்குள் அமெரிக்கா நிலைப்படுத்த ஆரம்பித்துள்ளது. அதாவது அமெரிக்க பாதுகாப்புத் துணைச் செயலாளர் தலைமையில் பாதுகாப்புத் தொடர்பில் பேச்சுக்களை நடத்தும் நோக்குடன் 20 பேர் கொண்ட அமெரிக்க தூதுக்குழு ஒன்று 14.02.2023 அன்று இலங்கைக்கு வருகை தந்துள்ளது. இந்தக் குழுவில் இந்தோ-பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் ஜெடியா றோயாவும் கலந்து கொண்டுள்ளார். இது தொடர்பில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் பண்டார தென்னக்கோன் திருகோணமலையில் அமெரிக்க இராணுவத்தளம் பற்றி உரையாடுவதற்காக அமெரிக்க தூதுக்குழு வருகை தரவில்லை எனவும் அத்தகைய ஊகங்கள் நிலவுவதாகவும் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி இரு நாட்டுக்குமான பாதுகாப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது இந்தோ-பசுபிக் பாதுகாப்பு மற்றும் பிராந்திய உறுதிப்பாடு அத்துடன் ரஷ்ய-உக்ரைன் போரின் தாக்கம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்துள்ளார். 150 இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அமெரிக்க பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியதுடன் இரு கப்பல்களை இலங்கை கடற்படைக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கையில் மூலோபாய நலன்களை கொண்டிருக்கின்றன. அவற்றின் பூகோள-அரசியல் போட்டியாளரான சீனாவின் செல்வாக்கு மற்றும் அனைத்து உலக வல்லரசுகளினது கவனத்தை ஈர்க்கும் வகையில் இலங்கை இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் மூலோபாய ரீதியில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது எனவும் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

எனவே ரஷ்ய-உக்ரைன் போர் உலகளாவிய தளத்தில் பாரிய மாற்றங்களை நோக்கி நகர்கிறது. அமெரிக்காவின் வெளியுறவு இந்து சமுத்திரத்தை நோக்கி அதீதமாக கட்டமைக்கப்படுகிறது. அதன் விளைவுகளால் இந்திய-அமெரிக்க உறவு மட்டுமல்ல இலங்கை-இந்திய உறவும் வடிவமைக்கப்படப் போகிறது. இது ரஷ்யாவை மட்டுமல்ல சீனாவையும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்போகிறது. ரஷ்யா உக்ரைனுடன் போர் எனும் முடிச்சினால் கட்டப்பட்ட நிலையில் சீனாவுக்கு தாய்வானுடன் போர்ச் சூழலை ஏற்படுத்த அமெரிக்க முனைகிறது. சீனாவுக்கு தாய்வான் முதன்மையானது என்பதில் அமெரிக்காவுக்கு எந்த குழப்பமும் கிடையாது. ஆனால் தாய்வானுடன் ஒரு போரைத் தொடங்கினால் சீனா இலகுவில் வெல்லும் என்பதைக் கடந்து ஆபத்தான விளைவை சீனா சந்திக்க வழி ஏற்படும் என அமெரிக்கா கருதுகிறது. இதனால் இலங்கைத் தீவை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் எனவும் அதனால் இந்து சமுத்திரத்திலிருந்து சீனாவை நெருக்கடிக்குள்ளாக்கலாம் எனவும் அமெரிக்காவின் திட்டமிடல் உள்ளது.

இலங்கைத் தீவு இழக்கப்படுமாயின் சீனாவின் உலகளாவிய ஆதிக்கம் பாதிப்புக்குள்ளாகும் என்பதை அமெரிக்கா உணர்ந்துள்ளது. இதற்கான நகர்வாகவே தற்போதைய சம்பவங்கள் தெரிகின்றன.




# சேமிப்பு இல்லாதபோது முன்னேற்றமும் அபிவிருத்தியும் இல்லை



உழைப்பு எப்போதும் உயர்வானது. உழைக்கத் தவறும் மனிதன் வாழ்க்கையில் வெற்றி பெற்றாலும் அதை அவரால் தக்க வைத்துக் கொள்ள முடிவதில்லை. எனவேதான் அனைவரும் ஏதோ ஒருவகையில் உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

உழைக்கும் காலத்திலும் சரி அதன் பின்னும் சரி, நாம் எவ்வளவு உழைக்கிறோமோ, அதில் ஒரு பகுதியை சேமித்தாக வேண்டும். சேமிப்பு இல்லாத போது முன்னேற்றமும் அபிவிருத்தியும் இல்லை.

அபிவிருத்தி அபிவிருத்தி என நாம் பேசும் போது அதை ஏதோ அரசாங்கமோபெரும்கம்பனிகளோ அடையும் வளர்ச்சிக்கு நிகராக ஒப்பிட்டுப் பார்த்து, அது நம்மைப் போன்றவர்களுக்கல்ல என்ற முடிவைப் பலர் எடுத்து வருகின்றனர். அபிவிருத்தி என்றால் என்ன?

சாதாரணமான ஒரு பீடாக்கடை வைத்திருந்தவன், ஒரு சோடாக் கடை வைக்கிறார் என்றால், அது அவருக்கு அபிவிருத்திதான். தினமும் நடந்தே திரிந்த ஒருவர் ஒரு மிதிவண்டி வாங்கி ஓடுகிறார் என்றால், அவரைப் பொறுத்த வரையில் அதுவும் அபிவிருத்திதான். எப்பவும் உலகம் ஒரே திசையில் பயணித்தாலும் அதுவும் மாற்றங்களை சந்தித்தே வருகிறது.

இயற்கை எமக்கு நல்ல வளங்களை அள்ளித் தருகிறது. நாங்களும் அந்த இயற்கையை நல்லபடி கவனித்து காப்பாற்றி வந்தால் அது எம்மை திறமையான மனிதர்களாக மாற்றும். ஆனால் கடந்த காலத்தில் நாம் செய்த இயற்கை அழிவுகளை கணக்கிட்டுச் சொல்ல முடியாது.

மழை பெய்கிறது. நீர் மிகையாகிவிட்டால் வழிந்தோடுகிறது. எப்படி வெள்ளம் வந்தால் அது பள்ளத்தில் வழிந்தோடும். நீரோட நீரோட அதுவே தடமாகி அது ஆறாக மாறும். இந்த ஆற்றுத் தடங்களில் பாறைகள் இடைக்கிடை நிறைந்து கிடக்கும். அது கடவுள் அமைத்து வைத்தபாதை. இந்த ஆற்றில் தண்ணீர் ஓட ஓட வண்டல் அரிந்து அரிந்து, மணல் ஒதுங்கும்.. இந்த மணல் என்னென்ன வேலைகளுக்கு தேவைப்படுகிறது என்று அனைவருக்கும் தெரியும். இப்போது அதுவல்ல பிரச்சினை. ஆறுகளை இயற்கை உருவாக்கியது போய் இப்போது மனிதர்களே தமது தேவைகருதி தாமாக உருவாக்கத் தொடங்கிவிட்டார்கள், விளைவு இந்த ஆறுகளின் திசை மாறிய பயணம். அநேகமாக நீர் தேங்கக்கூடிய பதிவான இடங்களில் இவை தேக்கப்பட்டு சேமிக்கப்பட்டு, குளங்களாகி அந்த நீரை வேளாண்மை செய்யும் பொருட்டு பயன்படுத்திய மக்களை வெள்ளத்தை ஆளுபவர் என்ற பொருள் பட வெள்ளாளர் என்றழைத்தோம். அது இப்போது விளை பயிரையே அறியாதவர்களுக்கும் சாதிப் பெயராக நிலைத்து நிற்கிறது. ஆறுகளை அழித்து நீரைத்திருப்பி குளங்களுக்கு செல்ல வேண்டிய நீரை குடியிருப்புகளுக்குள் செலுத்தும் செயலை யாரும் கண்டிப்பதாக தெரியவில்லை. போகட்டும்

கொழும்பு முதல் மட்டக்களப்பு, கொழும்பு முதல் யாழ்ப்பாணம் செல்லும் பெருவாரியான பாதைகள் அடர் வனங்களூடாகவே அமைந்திருந்ததை சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பயணம் செய்த அனைவரும் அறிவோம். இன்று அந்தப்பயணப்பாதையில் எந்தனை வீதம் காடாக இருக்கிறது. காட்டை உருவாக்குவதற்கு சற்றும் முயலாத மனிதர்கள் காடுகளை அழிப்பதற்கு கச்சைகட்டி முன்னிறங்குகிறார்கள்.

முற்காலத்தில் ஒரு குடும்பம் தமக்கான சிறு வீட்டை அமைத்துக் கொள்ள குறைந்த பட்சம் நூறு மரங்களையாவது அழித்தாக வேண்டும். அவன் வேலை செய்யும் ஆயுதங்களுக்கு பிடிகள், கலப்பை போன்ற கருவிகள் வேலி என இன்னோரன்ன தேவைகளுக்கும் மரங்களே அழிக்கப்பட்டன. ஆனால் காடுகள் அப்படியே இருந்தன என்பதுதான் ஆச்சரியம். எப்படி என்று நான் என் தந்தையிடம் கேட்டால் அவர் சொல்வார். நாம் மரங்களை வெட்டும்போதே அவற்றை சேமிக்கிறோம் பாதுகாப்பாகவே வெட்டுவோம். நாம் எல்லாத் தேவைகளுக்கும் மரத்தை வேருடன் சாய்ப்பதில்லை. பெரும்பாலும் கிளைகளை அகற்றி எடுக்கிறோம். எனவே ஒரு கிளை அறுபடும் வெட்டு முகத்தில் பல கிளைகள் தழைக்கும். ஆரோக்கியமான இரண்டோ மூன்றோ வளர்ந்து வரும். அது மீண்டும் துளிர்க்கும்.

உதாரணமாக வேலியில் கிளிசிடியா, கிழுவை, முருக்கு போன்றவைகளை நடுவோம். வருடத்துக்கு ஒருமுறை நேரிய (கதியால்) தடிகளை வெட்டி வேறு வேலிகளுக்கோ, தேவைகளுக்கோ எடுப்போம். கொஞ்ச நாட்களுக்குள் அடி மரம் புதிய தளைகளை தளிர்த்து அடுத்த வருடமும் தேவையான தடிகளை உருவாக்கி விடும். எமது வேலியில் சில வேம்புகள், ஒரு நாவல், பூவரசு ஆகியவை நிற்கின்றன. அவற்றில் வருடம் ஒருமுறை கிளைகளை கழித்துவிட பயிர் செய்யும் நிலத்துக்கு ஒளியும் காற்றும் வீட்டுக்கு தேவையான விறகும் வேலிகளை இறுக்கமாக அடைக்க கதியால்களும் கிடைக்கின்றன. அவ்வளவுதான் இன்று பெரும்பாலான வளவுகளில் பசுமரத்துக்குப்பதில் மதில்கள் நிற்கின்றன. மதிலுக்குப் பதிலாக கிழுவை மரங்களை நெருக்கமாக நட்டு அவை பெருத்தபின் அதனூடாக ஒரு கோழிகூட நுழைய முடியாமல் பராமரித்த யாழ்ப்பாண மக்கள் இப்போது எங்கே?

சுவாசிக்க காற்றுக்காக திறந்த வெளிகளை நோக்கி நடக்கிறார்கள்; அங்கும் பொலித்தீன் பிளாஸ்டிக் போத்தல்களை வீசிவிட்டு வருகிறார்கள். அதுவே பெருமளவு குப்பையாக தேங்கி சுற்றாடலை மாசு படுத்துகிறது.

மனிதனின் உழைப்பு இப்போது வலுவிழந்து வருகிறது. காரணம் அவனது வேலைகளை ஒரு முதலாளியின் யந்திரங்கள் செய்து விடுகின்றன. அதாவது பெரும் முதலீடுகளை கொண்டவர்கள் பல தொழிலாளர்களின் உழைப்பை இலகுவாக சுரண்டி வருகின்றனர் எனவும் கொள்ளலாம். இந்த அதிகப்படி வேலை நிறைந்த உற்பத்தி எல்லாம் சும்மா. ஒரு போக அறுவடை கடந்த வருடம் முழுதும் பயிர் விதைக்குமளவுக்கு எமது நீர்ப்பாசனம் அவ்வளவு தரமானமானதாக இல்லை. என்னவோ சொல்வார்களே 'அரிவாளும் ஆட குடுவையும் ஆடும் ஆரிவாளும் நிக்க குடுவையும் நிற்கும்' என்று. அதன் கருத்து அறுவடை செய்யும் வரை அடுப்பில் பானையும் ஆடும். அரிவாளும் நிற்க, அறுவடையும் நிற்க குடுவையும் அடுப்பேறாது. அதே போலதான் இந்த பெரும் யந்திரங்களுக்கெல்லாம் குறித்த சில மாதங்களே வேலை அதன்பின் போய் கொட்டகைகளில் படுத்துவிடும். ஆயினும் அந்த மாதங்களுக்குள் ஒருவருட உழைப்பை பெற்றுவிடுவர்.

எனவே மனிதர்கள் பலமற்றவர்களாகி விடுகிறார்கள். தனது உடல் வலுவை ஆரோக்கியத்தை பேண உடற்பயிற்சி நிலையங்களை நாடுகிறான். மனிதன் தன் அபிவிருத்தி என்பதை, கட்டடங்கள் கட்டுவதும், யந்திரங்களை வாங்குவதும் தான் என வரையறுத்து வைத்திருப்பதாக தெரிகிறது. காரணம் நிலம் களவு போய்க் கொண்டிருக்கிறது. மணலாக, மண்ணாக அகழ்ந்து எடுப்பதை விட, கேணிகள், குளங்களை மண் கொட்டி நிரப்பி, அதன் மீது வீடமைப்பது மிகவும் அதிகரித்து வருகிறது. வன்னிப்பகுதியில் ஆக்கிரமிக்கப்படாத குளங்கள், சுடுகாடுகள் எதுவும் இருக்கிறதா பாருங்கள்.

பல குளங்கள் முற்றாகவே காணாமல் போய்விட்டன. இதே இடங்களில் ஆக்கிரமிப்பாளர்கள் நீரை குளங்களுக்கு செல்ல விடாமல் குடிமனைகளுக்குள் திருப்பி விடுவதையும், அவற்றை தட்டிக் கேட்காமல் அந்த குடும்பங்களுக்கு வருடந்தோறும் வெள்ள நிவாரணமும் வழங்கி கவுரவிப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

இவர்களது வீடும் வாழ்வும் அது எத்தனை மாடிக்கட்டடமாக இருந்தாலும் அது அபிவிருத்திக்குள் அடங்குமா? அவர்களது இந்த கட்டடச் சேமிப்பும் அவர்களது ஒட்டு மொத்த கிராமத்திற்கும், ஏன் அவர்களுடைய சந்ததிக்கும் உதவுமா?










லயன்ஸ் கிளப் ஒப் கொழும்பு கோல்ட் சிட்டி தலைவர் ஏ. மனோகரனின் ஏற்பாட்டில் அண்மையில் கந்தானை மாவட்ட வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்களுக்கான காத்திருப்பு மண்டபத்தையும் எட்டு லட்சம் ரூபாய் செலவில் கட்டடப்பட்ட ஓய்வு நிலையத்தையும் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கும் நிகழ்விலும் மற்றும் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் தங்கள் பாதணிகளை வைப்பதற்கான ராக்கைகள் வழங்கும் நிகழ்விலும் பிரதம அதிதியாக District Governor. டாக்டர் அனோமா விஜேசிங்க PDG லக்ஸ்மன் விஜேசிங்க. ரஜிதா ரோட்ரிகோ மோலி சஜு, Regional chairperson துலிதா பத்மராஜ் மற்றும் கழக உறுப்பினர்கள். செயலாளர் லயன் லோகவர்த்தனன் பொருளாளர். லயன், எம்.தேவராசன், திட்டமிடல் தலைவர் லயன், பொன்.பத்மநாதன், லயன். சிவகுமார். லயன் ஜெயகுமார். லயன்,முத்துலிங்கம், லயன், குருதேவன், லயன். கார்த்திகேசு, லயன். D. J சிவகுமார், லயன் இராஜேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# சென்னையில் துணை உயர்ஸ்தானிகராலய சுதந்திர தின விழா









சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயம் இலங்கையின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்ட வரவேற்பு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தது. 2023 பெப்ரவரி 10 அன்று ஹோட்டல் ஐடிசி கிராண்ட் சோலாவில் உள்ள ராஜேந்திரா மண்டபத்தில் இது இடம்பெற்றது. இந்நிகழ்வில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் எம். அலி சப்ரி பிரதம அதிதியாகவும் சிறப்பு விருந்தினராக மயிலாடுதுறை தொகுதி தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமாரும் கலந்து கொண்டனர். பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி.வெங்கடேஸ்வரனும் உடனிருக்கிறார்.

# இரசாயனமற்ற மரக்கறி விற்பனை செயற்றிட்டம் ஆரம்பம்





லோரன்ஸ் செல்வநாயகம்

உலக வங்கியின் நிதியுதவியுடன் விவசாய அமைச்சின் கீழ் செயற்படும் காலநிலை சீரமைவு நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் மூலம் விவசாயிகள் தமது இரசாயனமற்ற உரம் மூலமான உற்பத்தியை விற்பனை செய்து மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளும் மரக்கறி விற்பனைக் கூடங்களை நடத்துவதற்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

காலநிலை சீரமைவு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் மூலம் நியமிக்கப்பட்டுள்ள சங்கங்களின் உறுப்பினர்கள் இந்த மரக்கறி விற்பனை கூடங்களுக்கு மரக்கறிகளை விநியோகிப்பர்.

விவசாயிகளுக்கு இந்த விற்பனைக் கூடத்தை முன்னெடுத்துச்செல்வதற்காக டிஜிட்டல் தராசு, பிளாஸ்டிக் கூடைகள் மற்றும் மேசைகள், உபகரணங்கள் உட்பட 19 .5 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் காலநிலை சீரமைவு விவசாயத் திட்டத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இரசாயன உரம், கிருமி நாசினிகள் உபயோகிக்காமல் சேதனப் பசளை உபயோகிக்கப்பட்டு இந்த மரக்கறி உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

தற்போது 6 மாவட்டங்களில் 58000 வீட்டுத் தோட்டங்கள் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் அறுவடைகள் இந்த மரக்கறி விற்பனைக் கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

அந்த வகையில் குருநாகல் மாவட்டத்தில் அம்பன்பொல விவசாய சேவை மத்திய நிலைய பிரதேசத்தில் முதல் தடவையாக இந்த மரக்கறி விற்பனைக் கூடங்கள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அம்பன்பொல பிரதேச செயலாளர் எச். எம். சி.ஜே. ஹேரத் இந்த விற்பனைக்கூடங்களை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இப்னு அஸூமத்தின் நூல் வெளியீட்டு விழா



இப்னு அஸூமத்தின் 'நீ கூறுகிறாய் இறந்துவிட்டாயாம் நீ' வெளியீட்டு விழா இன்று 19.02.2023 ஞாயிறு மாலை 4.00 மணிக்கு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் (இந்திய கலாசார நிலையம்) நடைபெறும். இவ்விழா ஞானம் ஆசிரியர் சாகித்திய ரத்னா டாக்டர் தி. ஞானசேகரன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராகக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் பங்கேற்பார். நூலின் முதற்பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்வார். வரவேற்புரையை அம்பிகை டிவகலாலா போமன் நிகழ்த்துவார். நூலின் வெளியிட்டு உரையை மேமன்கவி மேற்கொள்வார். சிறப்புரைகளை குருகொட சிறிவிமல தேரர், கபில எம். கமகே ஆகியோர் மேற்கொள்வார்கள். நன்றியுரையை இப்னு அஸூமத் நிகழ்த்த, நிகழ்வினை கலையழகி வரதராணி தொகுத்தளிப்பார்.

# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com

## நாடு செழிக்கட்டும்



உசனார் எம்.பஷீர், ஏறாவூர்.

விடியலில் விலாசமிட
விண்ணப்பம் செய்கிறோம் இறைவா
கடினங்கள் யாவும் களைந்திங்கு வாழ்வு
காத்திரமாய் அமைந்திடணும் நிறைவா

இருளாகிப்போன தேசமும் உன்
அருளால் வெளிச்சமாகணும் இறைவா
பொருளாதார வளர்ச்சியிலே எம்நாடு
பொங்கியெழனும் விரைவா

இனங்களுக்குள் ஒற்றுமை
இரட்டிப்பாகணும் இறைவா
மனங்களுக்குள் மகிழ்ச்சி வெள்ளம்
மடைதிறந்தே ஓடணும் விரைவா

இலங்கையர் நாமென்று
இறுமாப்பு கொள்ளணும் இறைவா
கலங்கிய தேசம் காசினியில்
கலங்கரைவிளக்காய் மாறணும் விரைவா

முழுநாடுகளுக்கும் முன்னுதாரணமாய்
முகவரி அமைக்கணும் இறைவா
முழுமூச்சாய் நாமதற்கு முயற்சி செய்வோம் விரைவா

நம்நாடு செழித்திட
நல்லாட்சி மலரணும் இறைவா
எம்நாடு முன்னேறிட
எல்லோரும் கைகோர்ப்போம் விரைவா

## தாய்மொழி நீயானாய் தமிழே

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

செந்தமிழ் மொழியே சிறப்பான வழியே
பைந்தமிழ் இனிமையே பழகிடல் தெளிவே

தித்திக்கும் தேனே திகட்டாத அமுதே
தொன்மைத் தவிலே தோதான அகலே

இகத்தின் முழுமையே
இலக்கியத்தின் வளமே
இலங்கிடும் கலையே
எண்ணிலாத் திறமே

கலையின் பொக்கிஷமே
காவியத்தின் இருப்பிடமே
காலத்தால் அழியா மொழியின்
திரட்டே

வற்றா நதியே
வான்புகழ் அலையே
கற்றிடக் கனிபோல்
சுவையூறும் இன்பமே

பதினாறு பண்புகள்
பொருந்திட்ட மொழியே
பொருள் இலக்கணம்
பொழியும் மழையே

யான் செய்த நறுந்தவமே
என் தாய்மொழி நீயானாய் தமிழே

யாழினுமினிதாய்
இசைத்திடத்தோதாய்
யாவரும் போற்றிடப் பாரினில்
விளைந்தாய்

நின் எழுச்சி கண்டு வியந்தோம்
நீடூழி வாழவே வாழ்த்திட வந்தோம்

## புன்னகை

வி. வடிவழகையன், காரைநகர்

காத்துக் கிடப்பவர் மட்டும்
விளங்கிக் கொள்ளும்
கணநேரச் சொர்க்கம்

நினைவுகளில் நிழலாடும்
ஐந்து சென்டிமீட்டர்
அவஸ்தை

தசைகள் உருவாக்கும்
சக்திமிக்க
காந்தப்புலம்

முப்புரங்களைக்கூட
முழுதாகத் தீய்த்த
விசித்திர ஆயுதம்

வட்ட நிலாவை
குட்டைநிலாவாகத் தேய்த்த
கொல்லப் பட்டறை

மனங்கள் காணாமல்போகும்
விசித்திரமான
பெர்முடா முக்கோணி

இதயங்களை
இடம் மாற்றித்தைக்கும்
நவீன அறுவைச்சிகிச்சை

கண்கள் பருக
மனசு நிறையும்
அபூர்வ தாகம்

செயற்
கைக்கோளாலும்
சொல்லிவிடமுடியாத
வதனப் புயல்

வனவாசம் அனுப்பி
வதைத்து புடம்போடும்
வசீகர சாபம்

சாம்ராஜ்யங்களைக்கூட
சரணடைய வைத்த
மூன்றங்குல போர்வாள்

பால்வீதியிலும்
பிரகாசமான
சிறுபொறி

பட்டதாரியை
பைத்தியக்காரனாக்கும்
போதை

பாமரனையும்
கவிஞனாக்கும்
பல்கலைக்கழகம்

மனவழி கிளர்ந்து
மெய்வழி பிறக்கும்
மெய்ப்பாடுகளில் ஒன்றென்பது
பாரிய பொய்



## உன் நினைவுகளால்...

அருளானந்தம் ஞா.பிரகாஷ் கந்தப்பளை

உன் அன்பு நிறைந்த
அழகான பார்வையால் என்
மனம் முழுவதும்
மகிழ்ந்ததடி
என் காதலால் ....

காற்றோடு பேசும்
மரத்தின் கிளையை
போல் உன் நினைவுகள்
உண்ணவும்
விடாமல் உறங்கவும்
விடாமல் கொள்ளாமல்
கொள்ளுதடி இந்த
பொல்லாத காதலால்....

ஆகையால் என்னை
தொடரும் என் நிழலாய்
உன்னையும் தொடருவேன்
என் காதல் இறுதி
வரை உன் நினைவுகளால்....

## காதலெனும் ஓடம்

ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்

எண்ணம் எனும்
கடலில் ஓடும்
வண்ணக் கனவுகளின்
காதலெனும் ஓடம்

கற்பனை செதுக்கிய
அழகிய ஓவியம்
பற்பல நிகழ்வுகளில்
புன்னகைத்திடும் காவியம்

தனிமையில் சிரித்திட
துடுப்பாய் வருவாள்
இனிமையில் நிறைந்தே
மகிழ்வைத் தருவாள்

துன்ப அலைகளை
வென்றிட கைகோர்ப்பாள்
அன்பைப் பகிர்ந்தே
கரையும் சேர்ப்பாள்

கலங்கரை விளக்கு
இங்கே காதலே
துலங்கிடும் மனதில்
மறைந்திடும் சாதலே

மௌனம் பேசிடும்
வார்த்தை உண்மையாகும்
மரணத்தை வென்றே
காதல் மேன்மையாகும்



## மங்கை

அரைமதி போன்ற நுதலும்
அரிவாள் போன்ற விழியும்
வான்மதி போன்ற வதனமும்
வெண்வளை போன்ற வளையும்
வஞ்சிக் கொடி போன்ற இடையும்
வண்ணமயில் போன்ற நடையுமுடைய
வாழும் தெய்வமே மங்கை
அவளே வாழும் தெய்வமாய்
மகவீனும் மாதராய்
இல்காக்கும் இல்லத்தரசியாய்
காதல் கொள்ளும் கன்னிகையால்
சிரித்து விளையாடும் சிறமியுமாவாள்

என். உமாதேவி
மட்டக்களப்பு



## ஓரப்பார்வை

என்.கே. வேணி,
பலாங்கொடை

கடலில் விழுந்த
மழைத்துளியாய்
உன்னுள் நான்
காதலில் கலந்து
விட்டேன் ஒரு
முறையேனும் ஈரப்பார்வை
இல்லாவிட்டாலும்
ஓரப் பார்வையாவது
பார்த்துவிடு நான் உயிர் வாழ்வதற்கு...

## இந்து சமுத்திரத்தின் முத்து

குருமண்வெளி ரவி

இந்து சமுத்திரத்தின் முத்து
இன்று கண்ணீர் வடிக்கிறது
நெருக்கடியில் நின்று நீங்க
நீண்டநாள் தேவையில்லை
ஒற்றுமையாய் உழைத்தால்
ஓர் நொடியில் மாற்றிடலாம்
சாதிமதம் வேண்டாம்
இனவாதம் பேசவேண்டாம்
எல்லோரும் ஒன்றுபட்டு
எம் துயரத்தை துடைத்திடுவோம்
இலங்கைத் திருநாட்டை
இந்து சமுத்திரத்தின்
முத்தென்றே காட்டியுள்ளோம்

## முதுமைக் காதல்

பொத்துவில் அஜ்மல்கான்

அவளும் நானும்
எழுதும் ஆனந்த
குறிப்பின் மறுபக்கம்
இது

மறத்துப் போன
உடலுக்கு வெறுத்துப்
போகாத இதயமுண்டு
நம் காதலால்
இன்று

மாய்ந்து போகாத
புன்னகையோடு மறைந்திருக்க
நினைக்கவில்லை நானும்
எனதன்பும்

உன் முகம்
பார்த்து என்
யுகம் மறந்து
போன
நொடிகளை
நினைத்துப் பார்த்தால்
முதுமையிலிருந்து
இளமையானவனாகிறேன்
இன்று

இரகசியமில்லாத
வாழ்க்கையென்பதனால்
தானோ நம்மோடு
இரக்கம் வாழ்ந்து
கொண்டிருக்கிறது இன்று
வரை

ஆனந்தம் உள்ள
வாழ்க்கையில் ஆறடியில்
புதைய முன்பு
இணை பிரியாத
ஜோடி என்று
கூறிப் பிரிய
வேண்டும் நமக்கு
கல்லறை ஒன்றுதான்
என்று

## ஒரு கடிதம் எழுதினேன்

குப்பிளான் குமரன்

எனது நீண்ட நாள்
கனவுகளை
வெளிப்படுத்தி நான்
ஒரு கடிதம் எழுதினேன்
எனது இயலாமைகளும்
அதனுள் அடங்கி என்னை
ஆறுதல் படுத்த வேண்டியே
அதனை எழுதினேன்
அதன் உள்ளடக்கம் யாவும்
இப்போது உங்கள் முன்னால்
உலகம் முழுவதும்
பரந்து வாழும் மனிதர்கள்
எல்லோரும் மனிதர்
என்ற வகையில்

ஒரே இனமாக எங்கும்
அங்கீகரிக்கப்பட வேண்டும்
உலகம் முழுவதற்கும்
ஒரே அரசாங்கம்
மக்களின் பிரதிநிதித்துவம்
மூலமாக ஏற்படுத்தப்பட்டு
நாடுகளிற்கு இடையிலான
எல்லைகள் யாவும்
நீக்கப்பட வேண்டும்
வரிகள் நீக்கப்பட்டு
நன்கொடைகள் மூலம்
அரச இயந்திரமும்
அரச சொத்துக்களும்

பராமரிக்கப்பட வேண்டும்
இல்லாதவர் எங்கும் இல்லை
என்று யாவரும் உணரும் நிலை
உலகில் உருவாக்க வேண்டும்

கல்வி மூலம் பிறப்பிலிருந்தே
எல்லோரும் எல்லோருக்கும்
உதவ வேண்டிய கட்டாய
நிலையினை உறுதிப்படுத்தி
அமைதியும் சுபீட்சமும்
ஏற்பட வழிசமைப்போம்

## கரையொதுங்கிய திமிங்கிலங்கள்

காத்தான்குடி எம்.ஐ.அப்துல் நஸார்

தன்பாட்டில் பயணித்து படகுடனே மோதுண்டு
தரைதட்டி நிலந்தொட்ட திமிங்கிலங்கள் பதினான்கு
துன்பத்தைக் கண்டவுடன் அக்கணமே முன்வந்தோர்
துளியளவும் குறைவின்றி நெஞ்சத்தால் உயர்ந்தோர்

மீண்டும் வழியனுப்பி மகிழ்ந்தன உள்ளம்
மீளாத் துயிலில் மூழ்கின மூன்றும்
சண்டாளர் சிலரின் சிறுமைச் செயலினை
சரியாகக் காட்டின பெற்றோரின் வளர்ப்பினை

கரையொதுங்கியதை குற்றமாக்கித் தண்டனை
கருணையில்லா மனிதர்கள் செய்திட்ட நிந்தனை
நுரைபொங்கும் கடலருகில் மரித்தே போனது
நேரான பண்பின் ஜீ வகாருண்யமானது

இறுமாப்பின் உச்சத்தில் நீண்டன கைகள்
இறக்கும் வரை இருந்தன சித்திரவதைகள்
பொறுமையின் எல்லையில் பிரிந்தன உயிர்கள்
பொன்னான தலைமுறையில் வரட்டும் மாற்றங்கள்

புகைப்படத்திற்கு இடமா இல்லை உலகில்
புரிதலின்றி அமர்ந்தே எடுத்தார்கள் உடலில்
நகைப்புக்கு இடமாய் அவர்கள் நடத்தை
நல்லதை அழித்தது அந்த இடத்தை

உயிர்கள் எல்லாம் சமமமே என்று
உயர்த்திச் சொல்லும் சமயங்களே சான்று
பயிரும் உயிரே என மதிக்கும் பாங்கும்
படர வேண்டும் மனதில் என்றும்

# Galaxy S23 மற்றும் S23 Ultra ஐ அறிமுகப்படுத்துகிறது Samsung Sri Lanka




Samsung Galaxy S23 Ultra இல் அதிநவீன camera வோடு அடுத்த நிலைக்கே எம்மை எடுத்துச் செல்லும் செயற்திறன் மிக்க gaming, அதோடு கூட ecoconscious வடிவமைப்பும் ஒன்று சேர்ந்து Samsung இன் மிகவும் புதுமையான Galaxy S இன் மற்றுமோர் தொடரானது தற்போது கிடைக்கப்பெறுகிறது.

Samsung Electronics Sri Lanka ஆனது Galaxy S23 Ultra மற்றும் Galaxy S23 ஐ பெப்ரவரி 15 ஆம் திகதி Marriott Colombo இன் Courtyard இல் நடைபெற்ற ஓர் நிகழ்வில் பெருமையுடன் வெளியிட்டது. Samsung Galaxy யின் ultimate premium phone அனுபவத்தின் புதியதோர் சகாப்தத்தை இது குறிக்கிறது. Samsung Galaxy இன் epic camera ஆனது அதன் பாவனையாளர்களுக்கு அவர்களின் படைப்பாற்றலை ஆராய அதாவது மாற்றங்களுக்கு இட்டுச் செல்லும் AI உடனான உண்மையான cinematic Nightography video க்களைப் படம் பிடிப்பது போன்ற இன்னும் அதிக வாய்ப்புகளை அளிக்கிறது. Galaxyக்கான Snapdragon 8 Gen Mobile Platform ஆனது அற்புதமான AI ஊடாக futureready mobile gaming அம்சம் தொடக்கம் உலகின் அதிவேக mobile graphics மூலம் சக்திவாய்ந்த game play என மிகச் சிறப்பான அனுபவங்களை உங்களுக்கென அள்ளி வழங்கப் போகிறது. Galaxy S23 Ultra உடன் கிடைக்கும் உட்பொருத்தப்பட்ட S Pen பற்றி அதன் பல நீண்ட காலப் பாவனையாளர்களுக்கு நன்கு தெரியும், அது மட்டும் அல்லாது Samsung Galaxy இன் அதிக வாய்ப்புகளை வழங்கும் love offers, மற்றும் notetaking அம்சம், அதோடு பொழுதுபோக்கு என பலவற்றையும் அது அள்ளி வழங்குகிறது.

# மந்தபோஷணைக்கு எதிராக போராடுவதற்காக குழந்தை நல மருத்துவர் கல்வியகத்துடன் ஹேமாஸ் கைகோர்ப்பு




ஹேமாஸ் குழுமத்தின் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் (பிரைவட்) லிமிடெட் மற்றும் மொரிசன்ஸ் லிமிடெட் ஆகியன இலங்கை குழந்தைநல வைத்தியக் கல்லூரியுடன் கைகோர்த்து, Feed a Child சமூக நலன்புரித்திட்டத்தினூடாக மந்தபோஷாக்கு நிலையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது. இளம் பிள்ளைகள் எதிர்நோக்கியுள்ள உணவு பணவீக்கம் அதிகரித்துச் செல்வதால் மோசமான உணவு பழக்க முறைகள் இடம்பெறும் நிலையில், அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனுராதபுர மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளின் 150 குடும்பங்களுக்கு ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை உலர் உணவுப் பொதிகளை ஆறு மாத காலப்பகுதிக்கு விநியோகிப்பதற்கு ஹேமாஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது. ஹேமாஸ் குழுமம், குடும்ப சுகாதார பணியகம் மற்றும் இதர கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்புகளும் இந்தத் திட்டத்துடன் இணைந்து கொள்ளும். பல இலங்கை குடும்பங்கள் தினசரி வாழ்வாதாரத்தை பெற்றுக் கொள்ள போராடிவரும் நிலையில், இலங்கையின் இளம் பிள்ளைகளின் மீது ஹேமாஸ் கவனம் செலுத்த ஆரம்பித்திருந்தது.

இந்த உலர் உணவுப் பொதிகள் விநியோகத்துக்கு மேலதிகமாக, இந்தக் குடும்பங்களுக்கு முறையான போஷாக்குக் கல்வியை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதனூடாக, வளரும் பிள்ளைகள் மத்தியில் போஷாக்கின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறான செயற்பாடுகளுக்கு ஒரு உதாரணமாக, தமது தினசரி உணவு தயாரிப்பின் போது செலவுச் சிக்கனமான போஷாக்கு உணவு வகைகளை தயாரித்துக் கொள்வது பற்றிய அறிமுகங்கள் அடங்கியிருந்தன. இந்தத் திட்டத்தின் முன்னேற்றத்தை இலங்கை குழந்தைநல வைத்திய கல்வியகம் மேற்பார்வை செய்து, நேர்த்தியான தாக்கங்கள் ஏற்படுத்தப்படுவதை உறுதி செய்யும்.




# செயற்கைக் கால்களை வழங்கி 200 பேரின் வாழ்வை ஒளிரச் செய்தது சன் மேட்ச்

அனைவரதும் இல்லங்களிலும் நிலைகொண்டுள்ள வர்த்தக நாமமான குண்டசாலையில் அமைந்துள்ள சன் மேட்ச் நிறுவனம் சமீபத்தில் மற்றொரு தொகுதி மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை கால்களை வழங்கியதன் மூலம் மீண்டும் அவர்களுக்கு நடக்கக்கூடிய திறனை அளித்தது. அவ்வாறு 200 பேரின் வாழ்க்கையை அது ஒளிரச் செய்துள்ளது. 2023ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வு பாதுகாப்பான மெழுகாலான தீக்குச்சிகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதில் முக்கிய பங்காற்றிய சன் மேட்ச் நிறுவனத்தின் ஸ்தாபகரும் மறைந்த தலைவருமான டி.ஆர்.ஆர்.ராஜனின் 20 வது ஆண்டு நினைவு தினத்துடன் இணைந்ததாகும்.

செயற்கைக் கால் பொருத்தப்பட்ட ஜோன் இந்த நிகழ்வில் கருத்துக் கூறுகையில். "எல்லோரும் பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திரத்தை கொண்டாடுகின்றனர். ஆனால் ஒரு பார்வையற்ற மனிதனால் பார்க்க முடிவதும் நடக்க முடியாத மனிதனால் நடக்க முடிவதும் தான். உண்மையான சுதந்திரம். என்னைப் போன்றவர்கள் மீண்டும் நடக்க முடியும் என்பது சுதந்திரத்தின் மிக அடிப்படையான கொண்டாட்டம் என்பது யாருக்கும் தெரியாது" என்று கூறினார்.

கண்டி மாவட்டத்தில் குண்டசாலையை தளமாகக் கொண்ட இந்த நிறுவனம் கண்டியில் உள்ள ஊனமுற்றோருக்கான மையத்துடன். இணைந்து ஊனமுற்றவர்கள் மீண்டும் நடக்க உதவும் "மீண்டும் நடப்போம்" என்ற அற்புதமான நன்கொடையை நடவடிக்கையை மேற்கொள்கின்றது. அதிகம் மதிக்கப்படும் நன்கொடையாளரான மறைந்த டி.ஆர்.ஆர். ராஜன் ஊனமுற்றோர் மையத்தின் தலைவராகவும் விளங்கியவர். இலங்கையில் அவரது மற்றும் அவரது குழுவின் நம்பகத்தன்மை காரணமாக USAID மற்றும் NORAD போன்ற உலகளாவிய புகழ்பெற்ற முகவர் நிலையங்கள் இத்திட்டத்தில் பங்கு பெற்றுள்ளன. 'மீண்டும் நடப்போம்' உலகளாவிய மனிதாபிமான அமைப்புகளால் மட்டுமல்லாது இலங்கை அரசாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரியாக விளங்கும்; நிறுவுனரின் புதல்வி கௌரி ராஜன் தெரிவித்தார்.

# விசேட கௌரவிப்பு விருதை வெற்றியீட்டிய பவர்




நிலைபேறான டிஜிட்டல் மாற்றியமைப்பை நோக்கிய பயணத்தில் ஈட்டியிருந்த தொடர்ச்சியான சாதனைகளை கௌரவிக்கும் வகையில், நாட்டின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட கூட்டாண்மை நிறுவனங்களில் ஒன்றாகத் திகழும் ஏ பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த Dare to Dream விருதுகள் 2023 இல், நிதிசார் மாற்றியமைப்புக்காக விசேட கௌரவிப்பு விருது வழங்கப்பட்டிருந்தது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வுக்கு SAP, ஜோன் கீல்ஸ் IT மற்றும் EY ஆகியன வலுவூட்டியிருந்ததன.

பவர் நிறுவனத்தினுள் பல்வேறு SAP தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகளை பின்பற்றியிருந்ததனூடாக, பதிவு செய்திருந்த புத்தாக்கம், துரித மாற்றம் மற்றும் வெற்றிகரமான செயற்பாடுகள் போன்றவற்றை கௌரவிக்கும் வகையில் SAP இன் விசேட கௌரவிப்புத் திட்டத்தின் அங்கமாக இந்த விருது அமைந்திருந்தது.

2021 ஆம் ஆண்டில், cloud deployment இல் SAP S/4 HANA 2020 க்கு பாரிய மாற்றத்தை பவர் ஏற்படுத்தியிருந்ததுடன், SAP Analytics Cloud Live reporting ஐயும் பின்பற்ற ஆரம்பித்திருந்தது. அக்கால கட்டத்தில் இலங்கையில் இந்த நவீன தொழில்நுட்ப கட்டமைப்பை பயன்படுத்த ஆரம்பித்த முதலாவது நிறுவனமாகவும் பவர் திகழ்ந்தது. இந்த கட்டமைப்பு மாற்றத்தில், cloud migration, technical migration with integration platform conversion, S/4 HANA migration with business process reengineering, adaptation of SAP Mobility Platform மற்றும் SAP Analytic Cloud பிரயோகம் போன்றன அடங்கியிருந்தன.

# ஆண்டின் சிறந்த புத்தாக்கத்துக்கான தங்கவிருதை வென்ற Helixionn Innovations



Helixionn Innovations நிறுவனம் உற்பத்தி செய்துள்ள கித்துல் பாணி உற்பத்தியை இலகுபடுத்தும் பகுதியளவு தானியங்கி இயந்திரத்திற்கு, சஹசக் நிமவும் புத்தாக்க போட்டியின் வணிகப் பிரிவில் ஆண்டின் சிறந்த புத்தாக்கத்துக்கான தங்க விருது கிடைத்துள்ளது.

இலங்கை புதிய கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு (SLIC) வருடாந்தம் மேற்படி புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கப் போட்டியை ஏற்பாடு செய்கிறது. உள்நாட்டு உற்பத்தியான மேற்படி தானியங்கி இயந்திரமானது, தற்பொழுது அதிக நேரம் எடுக்கும் கித்துல் பாணி உற்பத்திச் செயற்பாட்டை இலகுபடுத்துகிறது.

இந்த இயந்திரத்தை பாவித்து மத்திய மற்றும் பாரியளவிலான கித்துல் பாணி உற்பத்தியாளர்களுக்கு தமது உற்பத்திகளின் தரத்தையும் வினைத்திறனையும் மேம்படுத்தி கொள்ள முடியும்.

கித்துல் பாணி எம் எல்லோருக்கும் ரொம்ப பிடிக்கும். ஆனால், உயர் தரத்திலான கித்துல் பாணியை பாரியளவில் உற்பத்தி செய்வதென்பது கடினமானதொரு செயலாகும். நாம் அறிமுகப்படுத்தியுள்ள இந்த இயந்திரம் கித்துல் பாணி உற்பத்தியை இலகுபடுத்துகிறது. எமது உற்பத்தி ISO 22000 தர நியமங்களுக்குட்பட்டுள்ளதோடு, அதன் மூலம் இந்த இயந்திரத்தினால் உற்பத்தி செய்யப்படும் உணவுகள் மனிதப் பாவனைக்கு பாதுகாப்பானது என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது LP எரிவாயு மூலம் இயங்குவதோடு, வீடுகளிலும் இதனை பயன்படுத்த முடியும். இந்த இயந்திரம் ஆறு மணித்தியாலங்களுக்கு குறைவான காலப்பகுதியில் 200 லீற்றர் புதிய கித்துல் சாறு அல்லது பூந்தேனை கித்துல் பாணியாக்கிவிடும். சில மாற்றங்களை செய்து இந்த இயந்திரத்தை பனங்கருப்பட்டி, பனஞ்சாறு, தேங்காய் கருப்பட்டி, மற்றும் தேங்காய் பாணி உற்பத்திகளுக்கும் பயன்படுத்த முடியும் என Helixionn Innovations இணைப் பணிப்பாளர் திசல் கமகே தெரிவித்தார்.

இந்த வெற்றிக்கு ஒத்துழைத்த தமது பணியாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதாக Helixionn Innovations இணைப் பணிப்பாளர் தம்கின் வீரசிங்க தெரிவித்தார்.

# செயற்கை நுண்ணறிவு (AI) முறையால் உருவாக்கப்பட்ட காட்சிகளை ஏலத்தில் வழங்குகிறது NDB



தேசிய அபிவிருத்தி வங்கியானது (NDB) அதன் கார்ப்பரேட் நிலைத்தன்மை முயற்சியின் ஒரு பகுதியாக இரண்டு கிராமப்புற பள்ளிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், செயற்கை நுண்ணறிவு முறையால் உருவாக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டு காலண்டரில் இடம் பெற்றுள்ள படங்களின் ஆன்லைன் ஏலத்தை நடத்த இருக்கிறது. இந்த ஏலத்தின் நடவடிக்கைகள் மாத்தளையில் உள்ள வெஹேர்கலயா கனிஷ்ட வித்தியாலயம் (CP/Wil/ Vehergalaya Kanishta Vidyalaya) மற்றும் யாழ்ப்பாணம் புனித ஜோசப் வித்தியாலயம் J/St Joseph's Vidyalayam, ஆகிய தெரிவு செய்யப்பட்ட இரண்டு வசதி குறைந்த பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் தேசிய அபிவிருத்தி வங்கி (NDB), வரவிருக்கும் ஆண்டிற்கான புதிய கருத்துக்கள் மற்றும் தனித்துவமான யோசனைகளை உள்ளடக்கிய காலண்டரை உருவாக்குகிறது. எனவே, இந்த ஆண்டு தேசிய அபிவிருத்தி வங்கி (NDB) அதன் கருத்தை கடைப்பிடிக்க ஒரு பெரிய அடியை முன்னோக்கி எடுத்து வைத்துள்ளது. வங்கியின் " எதிர்கால வங்கியில் முன்னோடி" என்னும் தொனிப்பொருளுக்கு அமைய அதன் மிகவும் புதுமையான காலண்டர் யோசனையில் காட்சிகளை உருவாக்க செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி இருக்கிறது.

" எதிர்கால வங்கியில் முன்னோடி" என்ற கருத்தை உயிர்ப்பிக்கும் வகையில், தேசிய அபிவிருத்தி வங்கி (NDB) தனது இளைய வாடிக்கையாளர்களிடம், "இன்னும் 100 ஆண்டுகளுக்குப் பிறகு எதிர்காலம் எப்படி இருக்கும் ?" என்று கற்பனை செய்து வீடியோ பதிவுகளை அனுப்பும் படி கேட்டதன் காரணமாக, குழந்தைகள் தங்கள் பங்களிப்பை குறுகிய வீடியோக்கள் மூலம் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் அனுப்பிய வீடியோக்களை மதிப்பாய்வு செய்ததில், நாட்காட்டியில் இடம்பெற சிறந்த 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் கற்பனைகளின் காட்சி வளர்ச்சி காலண்டர்களுக்கு செயற்கை தளம் (AI) ஊடாக நடந்தது.

# SLT மொபிடல் வாடிக்கையாளர்களுக்கென தனித்துவமான காப்பீடு

செலிங்கோ ஜெனரல் காப்புறுதி மற்றும் SLT மொபிடெல் இணைந்து SLT மொபிடல் வாடிக்கையாளர்களுக்கென தனித்துவமான காப்புறுதி நன்மைகள் அடங்கிய திட்டம் குறித்தான அறிவிப்பை அண்மையில் வெளியிட்டன. குறித்த 'செலிங்கோ – SLT மொபிடெல் அனன்தய' என்ற புதிய காப்புறுதி திட்டத்தின் கீழ் SLT மொபிடல் வாடிக்கையாளர்களுக்கு தீவிர நோய்களுக்கான 500,000 ரூபா வரையான காப்புறுதி உரிமம் கிடைக்கப்பெறும். அத்துடன் விபத்தினால் ஏற்படும் மரணம் மற்றும் வாழ்நாள் அங்கவீனத்திற்கென 1,000,000 ரூபா வரையான காப்புறுதி கிடைக்கப்பெறும்.

SLT நிலையான இணைப்பு பாவனையாளர்கள் மற்றும் மொபிடல் பாவனையாளர்களுக்கு இந்தநன்மைகள் கிடைக்கப்பெறுவதுடன் அவர்களது மாதாந்த கட்டணப்பட்டியல் பெறுமதியின் ஐந்து மடங்குக்கு இணைவான வருடாந்த காப்பீட்டை பெறுவார்கள். உதாரணமாக, SLTவாடிக்கையாளர் ஒருவர் 2023 ஜனவரில் மாதாந்த கட்டணமாக 5,000ரூபாவை செலுத்துவாராயின், அவர் 25,000 ரூபா பெறுமதியான காப்பீட்டிற்கு உரித்துப்பெறுவார். பெப்ரவரி மாதத்தில் 6,000 ரூபாவை செலுத்துவாராயின் அவர் 30,000 ரூபா பெறுமதியான காப்பீட்டிற்கு உரித்துப்பெறுவார். பெப்ரவரி மாத இறுதியில் அவரின் கட்டணம் மொத்தமாக 55,000 ரூபாவாக அதிகரிப்பின் அதேபோன்று கட்டணம் செலுத்துப்படும் முறைக்கமைய இந்த காப்பீட்டின் பெறுமதியும் அதிகரிக்கும். ஒவ்வொரு கட்டணப்பட்டியலை செலுத்தும் போதும் காப்பீடு வழங்கப்படுவதுடன் ஒரு வருடத்திற்கான காப்புறுதி கொள்கை பின்பற்றப்படுவதுடன் அதன் பெறுமதி ஒரு மில்லியனை எட்டும் வரை காப்பீடு நீடிக்கும்.

# மஞ்சரி சிறுகதை

# படிப்பினை

இராமகிருஷ்ணமிசன் வித்தியாலயத்தில் ஐந்தாம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் உமேஸ் அன்று காலை வகுப்பில் நெறி பிறழ்வாக நடந்து கொண்டதாக வகுப்பாசிரியை ரேணுகா ரீச்சர் அழுத படி அதிபரிடம் முறையிட்டார். "என்ன நடந்தது ரீச்சர்"? ஆசிரியையின் பதற்றநிலையைப் பார்த்த அதிபரும் சற்று கலவரத்துத்துடன் விசாரித்தார். ஆசிரியை அழுது கொண்டு வருவதென்றால் அது என்னவாக இருக்கும். அதிபருக்கும் எதுவும் புரியவில்லை. இ.கி.மி வித்தியாலயம் தரம் 9 வரை வகுப்புக்களைக் கொண்ட கனிஷ்ட வித்தியாலயம். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறு பேறுகளில் அந்தக் கல்வி வலயத்தில் முன்னணி வகிக்கும் பாடசாலைகளில் இதுவும் ஒன்று. அப்பாடசாலையில் பணி புரியும் அதிபர் திருமதி கண்மணியும் கண்டிப்பானவர். அதிபர் தன் நிர்வாகத் திறமையால் பாடசாலையை சிறப்பாக வழிநடத்தி வருவதால் பாடசாலை சமூகத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தார்.

அன்று வகுப்பில் தனக்குப் பக்கத்தில் இருந்த நந்துவை பலமாக நோண்டி விட்டான் உமேஷ். படிப்பில் பெரிதாக கவனம் செலுத்த மாட்டான். ஆனால் கெட்டிக்காரன். பதினொரு வயது பூர்த்தியடையவில்லை அவனுக்கு. ரீச்சர் சொல்வதை எழுத சங்கடப்பட்டவனாக உமேஷ் பக்கத்தில் எழுதிக் கொண்டிருந்த இருந்த நந்துவைப் பார்த்து "டேய்.. நந்து" "என்னடா சொல்லு" "நந்து நான் பேனா கொண்டு வரலடா உன்னிடம் இருக்காடா". "என்னிடம் ஒன்றுதான் இருக்கு வேற எதுவும் இல்ல". "உன்னுடைய Box ல் இருப்பதை நான் பாத்தன்". "போடா நீ எப்பவும் இப்படித்தான்.. நான் தர மாட்டன்" என்ற நந்துவின் விலாவில் பலமாக கிள்ளி விட்டான் உமேஷ். வலி பொறுக்க முடியாத நந்து சத்தமிட்டு அழுதவாறு எழுந்தான். அமைதியாக இருந்த வகுப்பறையின் அமைதி காணமல் போனது. ரேணுகா ரீச்சருக்கு என்ன நடந்தது என்று ஒன்றுமே புரியவில்லை. நந்து ஏங்கி ஏங்கி அழுதான். வகுப்பில் அமைதி குலைந்து போனதால் சங்கடத்திற்குள்ளான ரீச்சர் கோபமாக நந்துவைப் பார்த்து "ஏன்டா நீ அழுகிறாய்..என்னதான் நடந்தது சொல்லுடா" ரீச்சருக்கு உமேஷை சுட்டிக் காட்டினான் நந்து. "உமேஷ் எழுந்து நில்". உமேஷை எழுப்பி விட்டாள் ரேணுகா ரீச்சர், அதே கோபத்துடன். இடமாற்றம் பெற்று வந்த ரேணுகா ரீச்சருக்கு தரம் ஐந்து வகுப்பு வழங்கப்பட்டு ஒருமாதம் கடந்து விட்டது. முன்னம் இவ் வகுப்புக்கு கற்பித்த ஆசிரியை இடமாற்றம் பெற்று சென்ற பின் பதிலாக வந்த ஆசிரியைதான் ரேணுகா.

மாணவர்களுக்கு அருமையாக கற்றுக் கொடுக்கும் ரேணுகா கண்டிப்பும் உள்ளவர். புலமைப்பரிசிலுக்கு மாணவர்களை தயார்ப் படுத்துவதில் கைதேர்ந்தவர் என ஆசிரியை ரேணுகாவுக்கு ஒரு கணிப்பும் இருந்தது. அன்று காலை உமேஷ் நடந்து கொண்ட விதம் ரீச்சருக்கு இன்னமும் ஜீரணிக்க முடியவில்லை. வகுப்பில் குழப்பத்துக்கு காரணமான உமேஷ், நந்து இருவரையும் முன்னால் அழைத்து பக்கத்தில் வைத்துக் கொண்டு விசாரித்த ரீச்சருக்கு நந்து அழுதமைக்கான காரணம் உமேஷ் தான் எனத் தெரிந்தது. "என்னடா உமேஷ்.. நந்துவை நீ கிள்ளியது உண்மை தானே. ஏன் அப்படி செய்தாய்" கோபமாக பார்த்தாள்.

"இல்லை.. ரீச்சர் நந்து பொய் சொல்கிறான். நான் ஒண்ணும் செய்யல்ல". "இல்லை ரீச்சர் உமேஷ் தான் என்னை..நோண்டினான். இதோ பாருங்க ரீச்சர்". நந்து தான் அணிந்திருந்த சேட்டை சற்று விலத்தி காட்டினான். உண்மையில் நந்துவின் விலாவில் சிவந்து கண்டித்து போய் இருந்தது. உமேஷ் நந்துவை நோகடித்தது ஒரு புறமிருக்க, தொடர்ந்து பொய் சொல்லிக் கொண்டிருப்பது இன்னும் ரீச்சருக்கு கோபத்தை உண்டு பண்ணியது. "உமேஷ் நீ நந்துவுக்கு செய்தது பிழைதானே".. "இல்லை ரீச்சர் நான் எதுவும் செய்யல்ல". உமேஷ் பொய் சொல்லுவதில் இன்னும் உறுதியாக இருந்தான். "உமேஷ் திரும்ப திரும்ப நீ பொய் பேசவேண்டாம். பொய் பேசினால் ரீச்சருக்குப் பிடிக்காது தெரியுமா. இனி உனக்கு அடித்தால் தான் உண்மை வரும். உமேஷ் உண்மையை சொல்லு". மேசையில் இருந்த தடியை கையில் எடுத்து உமேஷை நோக்கி ரீச்சர் ஓங்கினாள் அடிப்பதற்கு. தனக்கு இனி அடி விழும் என்பதை உணர்ந்த உமேஷ்.. பரிதவிப்பில் அடியில் இருந்து தப்பிக்க அழுதபடியே ரீச்சரின் சாறியை பிடித்தபடி சுற்றிச் சுற்றி வந்தான். தடியால் ஒரு அடி கூட உமேஷ் உடம்பில் பட அவன் விடவேயில்லை.

அடி தன் மேல் விழாது விலத்திக் கொண்டு பலமாக பிடித்த ரீச்சரின் சாரியை உமேஷ் விடாதிருக்கவே சாரியும் அதன் பாட்டுக்கு சற்று உருவப்படுவதை உணர்ந்த ரீச்சர் அதிலிருந்து விடுபட உமேஷை தண்டிக்க முனைவதை உடனே நிறுத்தினாள். உமேஷைத் தண்டிக்க முடியாது நிலை குலைந்து நின்ற ரீச்சர் நிலையைக் கண்ட மாணவர்கள் சிரித்தனர். ரீச்சருக்கு வெட்கம், அவமானம் ஒரு பக்கம் கூடவே அழுகையும் அவளைத் தொற்றிக் கொள்ள கதிரையில் அமர்ந்த ரீச்சர் சாரியை ஒழுங்கு படுத்தி தன்னை சுதாகரித்துக் கொண்டு அதிபரிடம் முறையிட சென்றவள் நடந்ததை சொல்லியவாறு அதிபர் முன் அழுதபடி நின்றாள்.

"ரீச்சர் நீங்க என்ன சொல்றீங்க.. உமேஷால் அவமானம் ஏற்பட்டதா என்னால் நம்ப முடியல்ல. சின்ன பையன் அப்படி எதுவும் இருக்காது". "இல்லை மிஸ்... உமேஷ் என்னுடைய சாரியை பிடித்த பிடி விடவேயில்லை இழுத்து விட்டான். நெறி பிறழ்வான நடத்தைபோல் தெரியவில்லையா மிஸ். என்னால அவனைத் தண்டிக்க முடியல்ல..பொய்யும் சொல்கிறான் வகுப்பில் மற்றைய பிள்ளைகள் முன் அவமானமாக போய் விட்டது மிஸ்".

"சரி ரீச்சர் அதனை நான் இப்போ விசாரிக்கிறன். சின்னப் பிள்ளைகள் அவர்கள். நீங்க பெரிசு படுத்த வேணாம்.. உமேஷின் பெற்றோரை நான் அழைக்கிறன். அவர்களிடமும் விசாரித்து ஏதாவது செய்ய முயற்சி செய்கிறன். இப்போ நீங்க வகுப்புக்கு போங்க ரீச்சர்". "இல்லை மிஸ் நான் வகுப்புக்கு போகல்ல.. எனக்கு மனநிலை நன்றாகவே இல்லை. நாளைக்கு வகுப்புக்கு போறன். Sorry. மிஸ்". சொல்லியவாறு ஓய்வு அறையை நோக்கி போய்க் கொண்டிருந்தாள் ரேணுகா.

"உமேஷிடம் எப்படிக் கேட்டாலும் உண்மையைப் பேச மாட்டான்" என்பது ரேணுகா ரீச்சர் சொல்லியதிலிருந்து ஊகித்துக் கொண்டார் அதிபர் கண்மணி. "இப்போ புதிய ஒரு பிரச்சினை உருவாகி விட்டது. ரீச்சரின் சாரியை உமேஷ் உருவியதாக சொல்கிறார். அவன் வேண்டுமென்று செய்ததாக ரீச்சரும் நினைக்கிறாள். சின்னப் பையன் ரீச்சரை அவமானப்படுத்த முனைந்திருக்கமாட்டான். இது தற்செயலாக நடந்த விபத்தாக இருக்க வேணும்". அதிபருக்கு பல சிந்தனைகள் வந்து போயின.

"எப்படியும் உமேஷின் நடத்தையை அறிந்து அவனை நல்வழிப்படுத்த வேண்டியது நமது தலையாய பொறுப்பல்லவா. ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது என நம் முன்னோர் சும்மாவா சொன்னார்கள்". சிந்தனையில் இருந்து விடுபட்டு உடனடியாக உமேஷின் தாயை அழைத்து வர ஏற்பாடு செய்துவிட்டு ஆரம்பப்பிரிவு தலைவரையும் கூடவே ரேணுகா ரீச்சரையும் அலுவலகத்திற்கு வரவழைத்தார் அதிபர்.

ஓய்வறையில் இருந்த ரேணுகா ரீச்சருக்கு வகுப்பறையில் நடந்த சம்பவத்தை ஜீரணிக்க முடியாமல் இருந்தது. "உமேஷ் தன்னுடைய சாரியைப் பிடித்தவன் விடாமல் பலமாக சுழன்று வந்தமை.. சாரி உருவப்பட காரணமாக இருக்குமோ. அவனுக்கு தண்டனை வழங்க எத்தனிக்காமல் விட்டிருக்கலாம். ஆனாலும் அவன் பொய்க்கு மேல் பொய் சொல்வது பிழைதானே. மாணவர்களை இந்த வயதில் திருத்துவதும் நமது கடமை தானே" என மனதிற்கு சமாதானம் சொல்லிக் கொண்டாள். "சாரியை இழுத்து விட்டால் ரீச்சர் தண்டிக்க மாட்டார் என நினைத்து அப்படிச் செய்தானோ இருக்கலாம்". தனிமையில் இருந்த ரீச்சருக்கு பல்வாறான சிந்தனைகள் வந்து வந்து போயின. அப்போது ஓய்வு அறைக்கு வந்த கங்கா ரீச்சர்..என்ன ரேணுகா நீர் வகுப்புக்கு போகவில்லையா. உன் முகமும் கவலையோடு இருப்பதை காட்டுதே. அதிபர் ஏதாவது பேசினாரா.. கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள் கங்கா ரீச்சர். ரேணுகா அன்று காலையில் நடந்த சம்பவத்தை கங்காவிடம் ஒன்றும் விடாமல் சொல்லி முடித்தாள்.

ஆச்சரியத்தில் உறைந்து போன கங்கா ரீச்சர். "இவனுகளுக்கு கொழுப்பு கூடிப் போச்சு. சும்மாவா அவனை விட்ட நீ. நன்றாக வெளுத்து இருக்க வேணும் கொழுப்பு போயிருக்கும்". "பிள்ளைகளின் முன் எனக்கும் அவமானமாகப் போச்சு கங்கா". "பிள்ளைகளை சரியாக பெற்றார் வளர்க்காது விட்டால் இந்த மாதிரியான வேலைகளைத்தான் செய்வார்கள் ரேணுகா". அப்போது ரேணுகா ரீச்சருக்கு அதிபரிடம் இருந்து அழைப்பு வந்தது.

உமேஷ் சாதாரண குடும்பத்தில் இரு சகோதரிகளுடன் பிறந்தவன். கடைக்குட்டி. செல்லமாக வளர்ந்தவன். கணவனின் கூலித் தொழிலில் கிடைக்கும் உழைப்பினைக் கொண்டு அவன் தாய் தங்கம் சிக்கனமாக குடும்பத்தை நடத்தி பிள்ளைகள் மூவரையும் படிக்க வைத்தாள். உமேஷ் எப்பவும் குழப்படிதான். வீட்டில் சின்னவன் என்பதால் அதட்டியோ, அடித்தோ அவனை வளர்த்ததில்லை. எப்போதும் தாயின் மடியிலேயே கிடப்பான். அவர்களுக்கும் அவன் மேல் பாசம் அதிகம்.

பாடசாலையில் இருந்து அழைப்பு வந்ததும் தாய் தங்கம் பதறியடித்துக் கொண்டு பாடசாலைக்கு விரைந்தாள். உமேஷின் சகோதரிகள் இருவரும் அதே பாடசாலையில் கல்வி கற்றாலும் மகனை மட்டுமே நினைத்துக் கொண்டு.. "உமேஷ் என்ன குழப்படி செய்தானோ" என சிந்தித்தபடி அதிபர் அலுவலகத்தை அடைந்தாள் தாய் தங்கம். அலுவலகத்தில் ரேணுகா ரீச்சர், ஆரம்பப்பிரிவு தலைவர் உமா ஆகியோர் அன்று நடந்த சம்பவம் பற்றி அதிபருடன் விவாதித்துக் கொண்டு இருந்தனர். "வாங்க அம்மா உங்களுடன் கொஞ்சம் கதைக்க வேணும் அதுதான் பார்த்துக் கொண்டு இருந்தோம்". உமேஷின் தாயின் முகத்தில் கவலை பிரதிபலிக்கின்றது. "மிஸ்.. என்ர பிள்ளைகள் மூவரும் இங்குதான் படிக்கின்றனர். அவர்களுக்கு ஏதாவது பிரச்சினையோ தெரியல்ல. சொல்லுங்க ". "முதலில் நீங்க கதிரையில் உட்காருங்க அம்மா.

உங்க மகன் உமேஷ் பற்றி உங்களிடம் கதைக்க வேணும்..". "வகுப்பில் உமேஷ் எப்போதும் குழப்படி. அவன் பொய்யும் பேசுகிறான். வயதுக்கு தகுந்த நடத்தையும் இல்லை. வீட்டில் நல்ல பழக்க வழக்கங்களை சொல்லிக் கொடுப்பதில்லையா". ரேணுகா அடுக்கடுக்காய் உமேஷ் மேல் குற்றம் சுமத்தி நிறுத்தினார். உமேஷின் தாய் எதுவும் புரியாமல் "என்ன ரீச்சர்.. நீங்க சொல்வது எதுவும் எனக்கு புரியல்ல. உமேஷ் ஏதோ தப்பு செய்திருக்கிறான் என்பது மட்டும் எனக்குப் புரியுது. கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்க ரீச்சர். எங்கள் செல்லக் குழந்தை அவன். ஏதாவது தப்பு செய்தால் மன்னித்துக் கொள்ளுங்க.. அவனுக்கு அடிக்க வேணாம் தாங்கமாட்டான். தப்பு எதுவும் செய்ய மாட்டான்.

உமேஷை கொஞ்சம் அழையுங்க மிஸ்". "சரியம்மா.. அவனையும் இங்கு அழைப்போம். நீங்க சொல்லுங்க". "மிஸ் உமேஷ் சின்னதாய் குழப்படி பண்ணுவான். அன்பு காட்டினால் அதுவும் செய்ய மாட்டான். அன்பாக கேட்டால் எதையும் மறைக்கவும் மாட்டான் பயம் காட்டினால் துடித்து போய் விடுவான். நாங்கள் ஒருபோதும் அவனுக்கு அடித்து வளர்த்ததில்லை. அடிக்க கையை ஓங்கினாலே.. துடித்துப் போய் என் கால்களை கட்டிப் பிடித்துக் கொள்வான். அடி வாங்க அவ்வளவு பயம் ரீச்சர்.. அவனுக்கு. அப்போது உமேஷ் அலுவலகத்துக்கு குற்றவாளி போல் அழைத்து வரப்பட்டான். அங்கு தாயைக் கண்டதும் அந்தச் சூழ்நிலையை மறந்து "அம்மா" என அழைத்தவாறு ஓடோடி வந்து தாயை கட்டிப்பிடித்துக் கொண்டான் உமேஷ். பாசத்துக்கு ஏங்கும் பிஞ்சு குழந்தை அல்லவா. 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதானே'. வாரி அணைத்துக் கொண்டாள் தாய். "இப்போ நீங்களே கேளுங்கள் அம்மா. காலையில் வகுப்பில் நடந்ததை". "உமேஷ்.. என பாசத்துடன் அழைத்த தாய் அவன் தலையை வாஞ்சையோடு வருடிக்கொடுத்து நீ ஏன் மகன் பொய் சொன்னாய்.. எப்பவும் நீ பொய் சொல்ல மாட்டாயே". "ரீச்சர் என்னிடம் கோபமாக அதட்டி கேட்க.. நான் பயத்தில் பொய் சொன்னன் அம்மா". "என்னடா செல்லம் நடந்தது". "அம்மா நான் காலையில school வரும் போது பேனாவை எடுத்து வரலம்மா.. ஏனம்மா நீயும்.. எடுத்து தரல்ல. நான் ரீச்சர் சொன்னத எழுத முடியாமல் தான் நந்துவிடம் கேட்டன். அவனிடம் இரண்டு பேனா இருந்தது. அதைக் பார்த்து தான் நான் கேட்டன். அவன் தரலம்மா..அதனால நான் கிள்ளிப் போட்டன்".

அதிபர் மிஸ் மன்னிச்சு கொள்ளுங்க உமேஸ் தப்பு பண்ணியதுக்கு நானும் காரணமாகப் போனன். அதுதான் மிஸ் இப்படி ஆகிப்போச்சு'.' அம்மா நீங்க என்ன சொல்ல வாறிங்க..'. 'மிஸ் கொரோனா வந்த புறகு என் வீட்டுக்காரரும் கூலி வேலைக்கு போறதில்ல. எங்கேயும் எவரும் அவர வேலைக்கு கூப்பிடறதில்ல.. எப்பவாச்சும் கிழமையில ஒரு நாள் தான் வேல கிடைச்சால் அதவைச்சு சமாளிக்கிறன்.. இப்ப ஊர் கடையில எந்த சாமானும் வாங்க முடியாம இருக்கு நெருப்பெட்டியே ஐம்பது ரூபா விக்கிறாங்கள்.. பேனா வாங்க நூறு ரூபாவேணும். அதனால மூணு பிள்ளைகளும் நாங்களும் சோத்துக்கே கஷ்டப்படுறம். அதுதான் மிஸ் உமேசுக்கு எழுத பேனா வாங்கிக் கொடுக்க முடியல்ல. அதுதான் மிஸ் உமேஷ் வகுப்பில் குழப்படி செய்திருக்கான்'. 'அம்மா உங்க பரிதவிப்பு புரியுது'. 'மிஸ் நான் செய்த தவறுக்கு உமேசுக்கு தண்டனை கொடுக்க வேணாம். நாளைக்கு எப்படியும் பேனா வாங்கிக் கொடுப்பன் அவர் வலை வாடிக்கு.. கரைவலை இழுக்க போயிருக்காரு.. கிடைக்கும் கூலியில் பேனா வாங்கிடுவன்.' 'நாட்டின் நிலமை இப்போ வர வர மோசமாகி வருகிது.. அன்றாட உணவுக்கு இந்த ஏழைகள் இப்படி கஷ்டப்படும் நிலையில் எப்படி கற்றல் உபகரணங்கள அவர்களால் வாங்க முடியும் பாவம் அவர்கள்'. மனதிற்குள் எண்ணி வருந்தினார் அதிபர் கண்மணி. 'பாடசாலைக்கு இப்போ நாளாந்த வரவும் குறைந்து போகுது.. பிள்ளைகள ஸ்கூலுக்கு ஒழுங்காக அனுப்ப முடியாத நிலை இடை விலகல் அபாயமும் உள்ளது'. நிலைமையை உணர்ந்த அதிபர்..' சரியம்மா.. அதை நான் விசாரிக்கிறன் '.

"உமேஷ் நீ கிள்ளியது பிழைதானே. நந்து வலியால் அழுதுள்ளான். அதற்கு உனக்கு அடிதான் தரவேணும்". தாய் கையை ஓங்கினாள். அடிக்கு பயந்த உமேஷ் தாயின் கால்களை கெட்டியாக சாரியோடு சேர்த்து பிடித்தபடி அடியில் இருந்து தப்பிக்க சுழன்று வந்தான். தாய் தங்கத்தின் சாரி கூட அவிழும் நிலை.. காலையில் வகுப்பறையில் ரேணுகா ரீச்சருக்கு நடந்த அதே காட்சி அங்கு அரங்கேறியது. மலைத்துப்போய் அக் காட்சியை பார்த்த அனைவருக்கும் உமேஷ் மேல் இரக்கந்தான் வந்தது. ஆனால் ரேணுகா ரீச்சருக்கு பிரம்படி விழுந்தது போல் உள்ளதில் சுள் என வலித்தது. ஆராய்ந்து பார்க்காமல் அவசரப்பட்டுவிட்டேன் என கண் கலங்கினார்.


"ரீச்சர் என் பிள்ளையை மன்னித்துக் கொள்ளுங்க. அவன் பிழை செய்தால் அன்பாக கேட்டால் சொல்லி விடுவான். அதட்டினால் பயந்து எதனையும் சொல்ல மாட்டான். பிள்ளைகள் குழப்படிதான் செய்வார்கள். அவன் வீட்டில் குழப்படி செய்து விட்டால் நான் தண்டிக்க முனையும் போது தப்பிக்க எனது சாரியிலேயே தொங்கிப்பழகிப் போனான். சில வேளையில் எனது சாரியும் அவிழ்ந்து போகும் ரீச்சர். உமேஷின் நடத்தையை வயதுக்கு மீறிய செயல்.. அவன் பழக்கம் நல்லதாகவே இல்லை என்று சொன்னீர்கள் ரீச்சர் வேறு என்ன செய்தான் என சொல்லுங்க நான் அவனுக்கு நல்லதாய் புத்திமதி சொல்லுறன் ரீச்சர்". "வேறு எதுவும் இல்ல.. அம்மா. வகுப்பில் நடந்த குழப்படியை சொல்லத்தான் உங்களை நாம் அழைத்தோம் சரியம்மா இனி நீங்க வீட்டுக்கு போங்க". "உமேஷ் நீயும் வகுப்புக்கு போ.. நீ நல்லபிள்ளை.. நன்றாகப் படி. ரீச்சர் உடனே வகுப்புக்கு வருவா". எனக் கூறி இருவரையும் அனுப்பி வைத்தார் அதிபர் கண்மணி.

உமா..ரேணுகா.. இருவரையும் நோக்கிய அதிபர். "அந்த அம்மா எமக்கு பெரும் படிப்பினையை சொல்லி தந்தது போல் இருக்கு.. பார்த்தீர்களா. பொய் பேசாத குழந்தைகளை நமது கண்டிப்பும் அவர்களை பொய் பேசத் தூண்டி விடும் போல் உள்ளது. கண்டிப்பும் தேவைதான் அதை விட அன்பு.. காருண்யம்.. அவர்களிடம் காட்ட வேணும் குழந்தைகள் அவர்கள். பொய் பேசும் சமூகம் நம்மால் உருவாகக் கூடாது என நான் நினைக்கிறன். வகுப்பில் பாடம் தொடங்க முதல் அவர்கள் தேவையை கேளுங்கள்.. அறிய முயலுங்கள். அவர்களுக்கு நாமும் உதவி செய்ய வேண்டும். மாணவர்களினது சின்ன.. சின்ன தேவைகளை என்னிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள். தாயிடம் உமேஷ் வைத்திருந்த பாசத்தின் விளைவுதான் இன்று ரேணுகா ரீச்சருக்கு கிடைத்த அனுபவம். இவை எல்லாம் நம் எல்லோருக்கும் ஒரு படிப்பினைதான்". "நான்தான் அவசரப்பட்டு விட்டன். இனி ஒருபோதும் இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்வன் மிஸ் "என சொல்லியவாறு தெளிந்தமனதுடன் வகுப்பறையை நோக்கிப் போகிறார் ரேணுகா ரீச்சர்.



வெல்லாவெளி
**விவேகானந்தம்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
### இல: 58



திரு/திருமதி.செல்வி .................................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .................................................
.................................................
.................................................

திகதி ..................... கையொப்பம் .....................

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 58
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 58

**இடமிருந்து வலம்**

1. இதனால் அந்நியசெலாவணி கிடைக்கின்றது.
5. தந்தை
7. வருத்தும் துன்பம்
8. பொதுநல செலவுக்காக அரசு வசூலிக்கும் கட்டணம் (திரும்பியுள்ளது)
9. நான்கில் ஒரு பகுதி (திரும்பியுள்ளது)
11. பிரயாணம் செய்பவர்
12. அம்பை எய்வதற்கு இது தேவை (குழம்பியுள்ளது)
14. நஞ்சு
15. சிலப்பதிகாரம் கதையின் நாயகன்
18, இதன் பால் கறிக்கு சுவையூட்டும் (குழம்பியுள்ளது)
21. கமுகம் மரத்திலிருந்து கிடைப்பது திரும்பியுள்ளது.
23. சிறப்பு அல்லது கீர்த்தி
24. தண்டனை பெற்று சிறையில் இருப்பவர்.
25. கடல்வாழ் உயிரினம்
26. மங்கல நாண்

**மேலிருந்து கீழ்**

1. ஒன்றைச் செய்யும் படியான கட்டளை
2. ஒன்றாக இல்லாமல் தனித்து அறியப்படுவது (தலைகீழ்)
3. சமயம்
4. ஒருவகை தானியம்
5. விருப்பத்துடன் குடிய அன்பு
6. பெண்கள் அணியும் சேலையின் ஒரு பகுதி
10. பாதுகாப்பு (குழம்பியுள்ளது)
11. ஒன்றுக்கு மேற்பட்டவை
13. மிருகத்தை இப்படியும் குறிப்பிடுவர்
15. வேண்டுகோள்
16. இனிப்பானது (தலைகீழ்)
17. நிலா
19. மன்மதன்
20. கனிவதற்கு முன்பான நிலை ( தலைகீழ்)
22. அரைப்பகுதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 57

### விடைகள்

**இடமிருந்துவலம்**

| | |
|---|---|
| 1. சமயோசிதம் | 17. கலகம் |
| 7. கங்காரு | 18. நிதானம் |
| 8. நாணல் | 19. மானம் |
| 10. வாகை | 20. பகல் |
| 11. கஷ்டம் | 22. சித்திரம் |
| 13. அடிமட்டம் | 23. பனி |
| 15. வதம் | |

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 1. சகவாசம் | 12. கமலம் |
| 2. மங்கை | 13. அவதானம் |
| 3. யோகா | 14. பம்பரம் |
| 4. சிருஷ்டி | 16. நித்தம் |
| 5, கட்டணம் | 19. மாசி |
| 6. நூல் | 21 கனி |
| 9. நாடகம் | |

### பரிசு பெறுவோர் விபரம்

| முதல் பரிசு (ரூ 500/) | இரண்டாம் பரிசு (ரூ 350/) | மூன்றாம் பரிசு (ரூ 150/) |
|---|---|---|
| எம்.ஏ.எம் அதீப்<br>இல, 41/15 டி , வித்தியாலய வீதி,<br>பதுளை | கே. புண்ணியநேசன்<br>151, சாரதா வீதி<br>காராதீவு 05 | பர்ஹாத் ரியாஸ்<br>இல 122, மீகஹமுல்லை<br>அளுத்கம, பண்டாரகம |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 57

### பாராட்டு பெறுவோர்

**1. ஆர் ஞானச்சந்திரன்**
மட்டக்களப்பு
**2. சாஹிரா பானு லியாவுத்தீன்,**
புத்தளம்
**3. பிரணுகா பிரசாந்த்**
மட்டக்களப்பு
**4. மல்லிகாதேவி பத்மநாதன்**
பசறை
**5. எஸ் கனகரத்தினம்**
திருகோணமலை
**6. எம்.சி.எப். சீமா**
உக்குவளை
**7. ரதி சிவசீலன்**
நீர்வேலி
**8. டி. தக்கியா நூரி**
அக்கறைப்பற்று
**9. எஸ், செல்வராஜா**
பதுளை
**10. எஸ் தவநாயகி**
மட்டக்களப்பு

# தமிழக தகவல்கள் சின்னச் சின்னதாய்...



தமிழ்மணி மானா மக்கீன்

## அநியாயமாக அழிந்த அண்ணா சாலை சாந்தி...

முன்னொரு காலத்தில் 'மதராஸாப் பட்டினம்' 'சென்னைப் பட்டினம்' என்றெல்லாம் அழைக்கப் பெற்ற தமிழ்நாட்டின் தலைநகர் 'சென்னை மாநகரின் பிரதான வீதி (சாலை)க்கு 'மௌண்ட் ரோடு' என்ற பெயரை வைத்தான். ஆங்கிலேயன். அதை ஒதுக்கி விட்டு இன்று 'அண்ணா சாலை' பேரறிஞர் அண்ணாதுரையார் பெயர் துலங்க பல கி.மீ. தூரம் பயணிக்கிற பாதையில் சென்னை செல்வோர் ஒரு தடவையேனும் போயே போய் திருவார்கள்.

நம் தலைநகர் கொழும்பு காலி முகத்திடலிலிருந்து ஆரம்பிக்கிற காலி வீதி கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிஸை, ரத்மலானை என பரந்து பாய்ந்து செல்வது போல இந்த அண்ணா சாலை அவரது உருவச்சிலை நிறுவப்பட்டிருக்கிற முச்சந்தி இடத்திலிருந்து ஆரம்பித்து சாந்தி, வெலிங்டன் படமாளிகைகள் பளிச்சிட்ட இடங்களைத் தாண்டி தேவி பாரடைஸ் மூன்று அடுக்கு திரையரங்குகளைக் கடந்து பயணத்தைத் தொடர்கிறது.

இதே பார்வையில் நவீன கால மெட்ரோ அதிவேக் மின் தொடரிகளும் சுரங்கப் பாதையில் இடதிலும் வலதிலும் மீனம்பாக்கம் விமான தளம் வரை சொகுசுப் பயணத்தை வழங்குகின்றன.

பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாதையை அகலப்படுத்த பழம் பெரும் வெலிங்டன் தியேட்டரை தரை, மட்டமாக்கினார்கள். யா8ரும் பொருட்படுத்த வில்லை.

ஆனால், மூன்று நான்கு... ஆண்டுகளுக்கு முன் 'சாந்தி'க்கும் அதே கதி ஏற்பட்ட பொழுது அனைவருக்கும் அதிர்ச்சியும் ஆறாத்துயரமும் உண்டானது.

முக்கிய காரணம், ஒப்பாரும், மிக்காரும் இல்லா நடிகர் திலகம், கலைக் குரிசில் செவாலியர் சிவாஜி கணேசன், ஆசை ஆசையாக அருமை மகள் சாந்தியின் பெயரில் நிர்மாணித்த நவீன திரையரங்கம் இருந்த இடம் தெரியாமல் இடித்தழிக்கப்பட்டது.

வெலிங்கடன் திரையரங்கு போல் பாதை அருகிலே அகலப்பாதை அமைக்க இடைஞ்சலாக இருக்கவில்லை.

நன்றாகவே கார் தரிப்பிடத்திற்கெல்லாம் இடம் ஒதுக்கி உள்வாங்கியே இருந்தது. அன்றைய ஆட்சியினர் கூட கைவைக்கவில்லை.

நடிகர் திலகத்தின் திரையரங்குக்கு மரியாதையே செலுத்தினார்கள்.

அழிப்பைச் செய்ததெல்லாம் அன்னார் தம் மகன்மார்கள் (பெயர்கள் உங்களுக்குத் தெரிந்த தே!)

சாந்தி சகோதரியின் சம்மதம் இல்லாமலேயே தகர்த்துவிட்டு வணிக வளாகம் (ஷொப்பிங் காம்ப்லிகஸ்) அமைத்து வாடகைப் பணமாக லட்சக்கணக்கில் மாதா மாதம் வாரிக் கொட்டிக் கொள்ளும் சங்கதி ஒரு தொடர்கதை!

இதில் எந்தப் பங்கும் சாந்திக்கும் வழங்கப்படுவதில்லை என்றும் வழக்கு வழக்கு நடக்கிறதென்றும்

"குட்டித் திரையரங்கு ஒன்று சாந்தி பெயரிலேயே இதே இடத்தில் தந்தை நினைவில் கட்டப்படும்" என ரசிகர்களுக்கு வழங்கிய வாக்குறுதி காற்றிலே பறந்து விட்டதென்றும்.

அருகிலேயே ஆயிரம் விளக்குப் பகுதியிலே தங்கியிருந்த என் செவிகளில் ஒரு கோஷ்டி போட்டது.

ஊர்ஜிதப்படுத்தப் பொழுதின்றி ஊர் திரும்புகிற இக்கட்டு எனக்கு!

### இங்கே பார்க்கிற நிழற்படம் நெஞ்சை கொள்ளை கொள்ளும்





நடிகர் திலம், மக்கள் சாந்தியையும் மாப்பிள்ளை நாராயண சாமியையும் மணக் கோலத்தில் காணும் காட்சி அதே மணமக்கள் முதுமைக் கோலத்தில் இப்பொழுது! நிழற்பட உதவி சுகுமார்

ஷண் கொட்டகல நன்றி

### சிறுமி பாலியல் வன்கொடுமையில் தாத்தா - சித்தப்பாக்-கள் சகோதரர்கள்!

2022 டிசம்பர் 22ல் மூத்த தினமலர் நாளேடு போட்டிருந்த ஒரு செய்தியை ஆதாரமாகக் கொண்டு வழங்குகின்றேன்.

ஆறேழு ஆண்டுகளுக்கு முன் 2016 2017களில் அந்த மைலாப்பூர் சிறுமிக்கு 13 வயது 8 ஆம் வகுப்பு மாணவி. அவளுக்கு நடந்தவை அசிங்கத்திலும் அசிங்கம்.

82 வயது தாத்தா முதற் கொண்டு சித்தப்பா மூவர் சகோதரர்கள் இருவர் பாலியல் வன் கொடுமைக்கு ஆளாக்கினர்.

பெற்றோர் பிரிந்து சென்றதால் பாதுகாப்பு இன்றி, தாத்தா பாட்டி பராமரிப்பில் வளர்ந்தவளுக்கு நடந்த பெரும் அநியாயக் கொடுமை இது.

கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் வழக்கு விசாரணை இழுத்தடிக்கப் பட்டு இப்பொழுது தீர்ப்பு.

நீதிபதி ராஜலட்சுமி அளித்த தீர்ப்பில் "அனைவருக்கும் எதிரான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கிடமின்றி நிருப்பிக்கப்பட்டுள்ளதால் சிறுமியின் தாத்தா, சித்தப்பாக்களுக்கு ஆயுள் முழுக்கச் சிறைத்தண்டனையும் மொத்தம் 01.05 லட்ச ரூபாய்கள் அபராதமும் விதிக்கிறேன்" எனக் குறித்துள்ளார்.

மேலும், சிறுமியின் ஒரு சகோதரனுக்கு 10 ஆண்டுகள் சிறை, 5000 ரூபா அபராதம், மற்றவனுக்கு 5ஆண்டு சிறை, 5000 ரூபாய் அபராதம்.

அத்தோடு தமிழ் நாடு அரசும் 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கக் கட்டளை.

தீர்ப்பு வழங்கப்பட்ட கடந்தாண்டு டிசம்பரில் அந்த 13 வயதுச் சிறுமி ........ நுழிந்து திக்குத்திசை தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கிற ஓர் அபலை!

அலைகடலுக்கு இப்பால் இருக்கும் எம்மால் செய்யக் கூடியது ஏதாவது உண்டா? சிந்திப்போம்.

அதே சமயம், இந்த இலங்கையையும் உற்று நோக்கினால் இப்படியான பாலியல் வன்கொடிமைகளுககு சளைத்ததன்று. அநியாயங்களும் அசிங்கங்களும் நடந்த வண்ணமே!

இந்த எழுத்துக்களை எழுதி முடிக்கும் தறுவாயில் சுடச்சுட கிடைத்த செய்தி ஒன்று.

★ தோசத்தை நீக்குவதாகத் தெரிவித்து பெற்றோர்களின் மூடநம்பிக்கையை வைத்து ஏமாற்றி பூசாரி 12 வயதுப் பூப்பெய்தாத சிறுமியுடன் துஷ்பிரயோகம்.

நடந்த இடம் காலி ஒபாத்த பிரதேசம்.

நம் நாட்டைப் பொறுத்தவரையில் மூட நம்பிக்கைகளும் காம மூர்க்கர்களுக்கு துணை நிற்பது நிதர்சனமாகிறது.

### டேனியல் செல்வராஜ்

இங்கே யாரும் அறியாத் இலக்கியப் பெயர்

கவலைகளை அள்ளிக் கொட்டிய தகவல்கள் இரண்டுக்குப் பிறகு ஓர் இலக்கிய இன்பம்.

டேனியல் செல்வராஜ்

சட்டென்று கொழும்புவாழ் கலைஞர்களுக்கு ஒருவர் நினைவு ஏற்படும்.

டேனியல் செல்வராஜ் என்றும், செல்வராஜ் டேனியல் என்றும் கலைத்துறை சார்ந்தோரால் அழைக்கப்பட்டு பிரபல்யம் பெற்றிருந்த அவர் சில ஆண்டுகளுக்கு என் இறைவன் அழைப்பை ஏற்றுப் பிரிந்தார்.

அமரர் செல்வராஜ் டேனியல் சிறந்த கலை ஓவியராக மிளிர்ந்து இசை, நாடகத்துறை சம்பந்தப்பட்ட பதாகைகள், சுவரொட்டிகள் (போஸ்டர்கள்) அரங்க நிர்மாணங்கள் ஆகியவற்றில் ....... திகழ்ந்தவர்.

அ த் தை ய வ ர் பெயரில் தமிழகத்திலும் ஒருவர் இருந்துள்ளார் என்ற சங்கதி ஆச்சரியத்தை அளித்தது.



ஆனால் அவர், கலைத்துறை சாராத இலக்கிய ஆளுமைக்காரர். திருநெல்வேலி மாவட்டம் தென்கலம் கிராமத்து மண். டேனியல் ஞானம்மாள் பெற்றெடுத்த பிள்ளை. (1938 ஜன 14) உயர் படிப்பின் பின் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கறிஞர்.

அன்றையப் பெரும் இலக்கிய ஜாம்பவான்களான.

தி.க. சிவசங்கரன், தொ.மு. சி. ரகுநாதன், நா.வான மாமலை போன்றோருடன் பழகியதால், பொதுவுடைமை சிந்தனையுடன், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கப்படுட்டார். 'ஜனசக்தி' 'தாமரை' உள்ளிட்ட இதழ்களில் பணியாற்றியதுடன், சிறுகதைகளும் எழுதினார்.

200க்கும் மேற்பட்ட சிறுகதைகள், 10க்கும் மேற்பட்ட நாவல்கள், ஆறு புதினங்கள் உள்ளிட்டவற்றை எழுதியுள்ளார். அவற்றில், 'மலரும் சருகும்', 'முத்திரை', 'மரக்கால்', 'தேநீர்' உள்ளிட்ட படைப்புகள் சிறப்பானவை.

திண்டுக்கல் பகுதியில், தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் அவலங்களையும், போராட்டங்களையும் பற்றி, இவர் எழுதிய 'தோல்' நாவலுக்கு, 2012ம் ஆண்டுக்கான, 'சாகித்ய அகாடமி' விருது கிடைத்தது. தொழிலாளர்களை பற்றி எழுதி, அவர்களுக்காக வாதாடிய செல்வராஜ் 2019ல் தன் 81வது வயதில் மறைந்தார்.

ஒடுக்கப்பட்டோரின் எழுத்தாளர்களில் டேனியல் செல்வராஜும் மிக முக்கியமானவர் நம்ம கே.டானியல் போன்று அவர் படைப்புகளைத் தேடிப்பிடித்துப் படிப்போம்.

---




# காதல் அரும்புவதற்கு வயது எல்லை இல்லை காதலிப்பவர்களும் மூப்பு இளமை என்று பார்ப்பதில்லை

அன்றைய தினம்,

தான் செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் விரைவாகவே செய்து முடித்தான் ஜீவிகன்.

முடித்து விட்டு,

முகம், கை, கால்களைக் கழுவிக் கொண்டு,

விரைந்து வந்து,

அங்கே சுவற்றில் மாட்டப்பட்டிருந்த பாதி உடைந்து போன கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டு, சீப்பை எடுத்து தலையை சீவிக் கொண்டான்.

அதே நேரம்,

"என்ன ஜீவா... தினமும் இந்த நேரத்துக்கு எங்கப்பா போற...?" கேட்ட படியே வந்தார்

கராஜ் முதலாளி

'இல்ல அங்கிள் ஒரு பிரண்ட் வருவான்... அவனோடு சேர்ந்து கொம்பியூட்டர் கேம் விளையாடுவோம்!"

பச்சைப் பொய்யை பதறாமல் சொன்னான்.

"பிரண்டா... பிரண்டியா?" தலையை ஒரு பக்கம் சாய்த்தபடியே கேட்டார் முதலாளி. அவர் இப்படிக் கேட்டது கொஞ்சம் தடுமாறிப் போனான்.

விசயம் இவருக்கும் தெரிந்திருக்குமோ என்று கூட அவனுக்கு எண்ணத் தோன்றியது.

பிறகு,

இல்ல அங்கிள் பிரெண்டு தான்!" என்று சொல்லி சமாளித்தான்.

"என்னமோ அப்பா எதிலாவது போய் மாட்டிக் கொள்ளாமல் இருந்தால் சரி!" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார் அவர்.

தப்பிப் பிழைத்தோமடா சாமி என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டு,

மவுண்ட் மேரியை நோக்கி நடந்தான்.

கையில் கட்டியிருந்த அந்த பழைய 'டப்பா' கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி நாலரையாகியிருந்தது.

'வெண்பா வருகின்ற நேரம் சரி" என்று எண்ணிய படியே,

மெல்ல நிமிர்ந்து,

அவள் வருகின்ற பாதையைப் பார்த்தான்.

ம்...!

உள்ளத்திலே பல புதிய கனவுகளை நிறைத்துக் கொண்டு வந்திருந்த ஜீவிகளுக்கு,

அங்கே கண்டகாட்சி, மகிழ்ச்சியைத் தந்தது.

ஆமாம்,

மூன்று பேரும் அன்ன நடை நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

தூரத்தில் வரும் போதே வெண்பா அவனைப் பார்த்து விட்டாள்.

அவனைப் பார்த்ததும் அவள் உள்ளத்திலும்,

ஒரு வித இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது.

அவனது தோற்றம்,

அவளது ஆழ்மனதில்,

பசுமையான எண்ணங்களைப் படர விட்டது.

அவனைக் காணாதவளைப் போல் தலையைக் குனிந்த படியே மெல்ல நடந்து வந்தாள் வெண்பா.

கீதாவும் அவளைப் பார்த்துவிட்டாள்.

"ம்... அங்க பாறேன் வெண்பா... உன்னோட கரல் கரண்டி மீண்டும் வந்து நிக்கிறான் பாறேன்!" என்று சொல்லியபடியே வெண்பாவின் கையைக்கிள்ளி விட்டாள்.

"ஆமாடீ அவன் இவள் மீது தான் கண்வைத்து வருகிறான்!" என்றாள் ரமா...

ஐயோ பைத்தியம் விளையாடாமல் நாங்கள் எங்கள் வழியில் போவோமடி!" என்றால் வெண்பா.

"நாங்க ஒரு வேலை செய்வோமா வெண்பா?"

"என்ன வேலை!"

"அவள் மறுபடியும் உன்னை விழுங்குவதைப் போல் பார்க்கும் போது நீ அவனைப் பார்த்து கொஞ்சம் சிரி.

"ஐயையோ என்னால் முடியாது" பதற்றத்துடன் சொன்னாள் வெண்பா.

"முடியாதுன்னு சொல்லாத வெண்பா. இந்த மாதிரி ஆட்களை கொஞ்சம் குளிப்பாட்டி தான் எடுக்கணும்!"

"ஐயோ... ரமா... நீங்க என்ன வேணும்ன்னாலும் பண்ணிக் கோங்கோ ஆனா என்ன அதில் சம்பந்தப்படுத்தாதீங்க...!"

"நீ... இதில் சம்பந்தப்பட வேண்டாம்... ஆனால் அவளைப் பார்த்து கொஞ்சம் சிரித்துவை அது போதும்!"

"ஊகும்... என்னால் முடியாது.

மூவரும் பாதையைக் கடந்து பஸ்தரிப்பு நிலையத்திற்கு சென்ற போது,

பாதையின் இந்தப் பக்கம் நின்றிருந்த ஜீக்கனின் பார்வை,

வெண்பாவின் மீதே பதிந்திருந்தது.

இரண்டு மூன்று தடவைகள் ஓரக்கண்களால் ஜீவகனைப் பார்த்த வெண்பா

பிறகு, வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

"ரமா நீ சொன்னதைப் போல் அவனுக்கு கொடுப்போம் நல்லதொரு கயிறு!"

"ஆமாண்டி... ஏன் டீ வெண்பா எங்களுக்கு ஒரு சப்போட் தரமாட்டியா?"

"ஓ... ஓ... இப்போதுதான் எனக்கு ஒரு உண்மை புரியுது!"

"என்ன உண்மை?"

"இவளுடைய போய் பிரண்டு மீது இவளுக்கு அனுதாபம் பிறந்து விட்டது. போலும்!"

"போங்கடீ லூசுங்களா... அப்படி எதுவும் இல்லை...!" பரபரப்புடன் சொன்னாள் வெண்பா.

"வெண்பா, கீதா, ரமா மூவருமே தன்னைப்பார்த்து குசு குசுவென்று ஏதோ பேசிக் கொள்வதை.

ஜீவகனும் அவதானித்தான்.

ஆனாலும்,

வெண்பா அதில் கலந்து கொள்ளாமல் தள்ளி நிற்பதையும் அடிக்கடி ஓரக் கண்களால் தன்னைப் பார்ப்பதையும் ஜீவகன் கவனிக்கத்தவறவில்லை.

அதே நேரம்,

பம்பலப்பிட்டியவுக்குச் செல்லும் பஸ்வந்து,

பஸ்தரிப்பு நிலையத்தில் நின்றது.

விரைந்து ஓடிச் சென்றவெண்பா அந்த பஸ்சில் ஏறும்போது,

பின்னால் ஓடிச் சென்ற ரமாவும் கீதாவும் பஸ்சில் ஏறினார்கள்.

பஸ்சில் ஏறும்போது,

ஜீவகனின் பக்கம் திரும்பிய கீதா வலதுகையை உயர்த்திக்காட்டினான்.

பரபரப்பை தந்த ஜீவகன் அந்தக் காட்சியையே பார்த்துக் கொண்டிருந்த போது,

புகையைக் கக்கிக் கொண்டு பஸ் கிளம்பிச் சென்றது.

வழமை போல் வீட்டுக்கு வந்த ஜீவகன், பார்வதி ஊற்றிக் கொடுத்த தேநீரைக் குடித்துவிட்டு.

கட்டிலில் சாய்ந்து, மாலையில் நடைபெற்ற சம்பவங்களை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

முதலில் இருந்து கடைசி வரைக்கும், கடைசியில் இருந்து ஆரம்பம் வரையிலும் எத்தனைத் தடவைகள் நினைத்துப்பார்த்தான் என்பது ஜீவாவுக்கே நினைவில்லை.

"ஜீவா!"

திடீரென்று தீபிகாவின் மென்மையான குரல் கேட்டு,

திடுக்குற்று எழுந்த அவன், கட்டிலில் அமர்ந்து கொண்டான்.

"நீங்க... எந்த உலகத்துல ஜீவா இருக்குறீங்க... எத்தன தடவை நான் உங்களைய கூப்பிட்டேன் தெரியுமா?"

"எனக்கு கேட்கல்ல...!"

"எப்படி கேட்டிருக்கும். நீங்க இந்த உலகத்துல இருந்தா தானே கேக்குறதுக்கு மெல்லச் சிரித்துக் கொண்டான் ஜீவகன்.

"என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்குது... காலையில பேசுறதுக்கு. அந்த தரித்திரம் புடிப்பானால் அது முடியாமல் போனது. இப்போது பேச வந்தா நீங்க பயங்கரமான யோசனையில் இருந்தீங்க... எதைப் பத்தி ஜீவா... அப்படி யோசிச்சிட்டிருந்தீங்க?"

எதைப்பத்தியும் இல்ல1"

"எதைப்பத்தி எண்டு எனக்குத் தெரியும்?"

தெரியுமா? யாரைப்பற்றி?" வியப்புடன் கேட்டான் ஜீவகன்.

(இனியவன் வருவான்)



# விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

## பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் (OCB)

### இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
### கல்வி அமைச்சு

**திகதி** : 2023 பெப்ரவரி 19

**கடன்/மானிய இல. மற்றும் தலைப்பு** : **JFPR 9193**
தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி மற்றும் பயிற்சியில் தனியார் துறை மற்றும் பெண்களின் அதிகாரமளித்தலில் புத்தாக்க அணுகுமுறைகளை வெளிப்படுத்தல்

**ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** : **MSDVT/6/3/1/53-2022**
மூன்று (3) வருட பராமரிப்பு அடங்கலான சீரமைக்கப்பட்ட வகுப்பறை தீர்விற்கான வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆகியவற்றை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல்.

**விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி** : 2023 மார்ச் 07ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் பி.ப. 2 மணிக்கு

சண்டே ஒப்சேவரில் 2023 பெப்ரவரி 05 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைத்தல் தொடர்பானது.

**4ஆம் பந்தியின்** கீழான ஒப்பந்தரீதியிலான அனுபவமானது பின்வருமாறு வாசிக்கப்படல் வேண்டும்.

- வழங்கல் அட்டவணையின் 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு வழங்கலின் நோக்கத்திற்கு நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மையுடன் ஒவ்வொன்றிற்கும் 170 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான ஆகக் குறைந்தது ஒரு (01) ஒப்பந்தத்தை கடந்த ஐந்து (05) வருடங்களில் பிரதான வழங்குனராக சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**7ஆம் பந்தியானது** பின்வருமாறு வாசிக்கப்படல் வேண்டும்.

உங்கள் விலைமனுவை பின்வருமாறு அனுப்பவும்

- தலைவர், செயற்றிட்ட பெறுகைக் குழு, திறன்கள் துறை அபிவிருத்தி பிரிவு, கல்வி அமைச்சு, ''நிப்புநாத பியச'', 354/2, எல்விட்டில மாவத்தை, கொழும்பு-05
- இறுதித் திகதியான 2023 மார்ச் 07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக.
- விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறான விலைமனுப்பிணையுடன். விலைமனுப்பிணையின் தொகையானது 5,250,000 இலங்கை ரூபாவாகும்.

பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைத்தலின் ஏனைய பிரிவுகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**திறன் துறை அபிவிருத்திப் பிரிவு,**
**கல்வி அமைச்சு,**
19.02.2023

---

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

## துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்.

**வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான**

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பத்திரிகை விளம்பரமானது 2023 பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி (Sunday observer) சன்டே ஒப்சேர்வர் பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது. மேலதிக விபரங்களை பல்கலைக்கழக இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

www.uovt.ac.lk

தவிசாளர்,
கட்டுப்பாட்டு சபை,
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், இல.100, கந்தவல,
இரத்மலானை.
தொலைப்பேசி : 011 2630706

---

## சாரதி தேவை

கொழும்பு பாதைகள் பற்றி நல்ல அனுபவமுடைய, வெள்ளவத்தை வீட்டில் தங்கி வேலை செய்யக் கூடிய, ஒடோ (Auto) கார், ஜீப் ஓட்டத்தெரிந்த தமிழ் சாரதிகள் (Tamil Drivers) தேவை. வயதெல்லை 45க்கு கீழ் இலவச தங்குமிடவசதி வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட தகுதிகள் மாத்திரம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு வரவும்.

**இல. 18, வெளிஅமுன வீதி,**
**ஹேகித்த, வத்தளை.**
**தொ.பே. இல. 077-8575600**

---

## ஆணைக்குழு முடிவு செய்யுமானால்... (05ஆம் பக்கத் தொடர்)

பதில்: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பொறுத்தவரையில் அது பலவீனமடைந்துள்ளது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒரு சிலர் கட்சியை விட்டு விலகியிருந்தாலும், அதன் வாக்குத்தளத்தைப் பாதிக்காதவர்கள் என்று அவர்களைக் கூறலாம். இது எதிர்காலத் தேர்தலில் சோதிக்கப்பட வேண்டும். 35 எம்.பி.க்கள் குழுவுடன் சென்ற வாக்காளர்களின் பகுதியும், எஸ்.எல்.பி.பி கட்சியில் எஞ்சியிருக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கையும் இன்னும் சோதிக்கப்படவில்லை. தற்போது நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட ஏராளமான சுயேச்சைக் குழுக்கள் உருவாகியுள்ளன. இந்தக் குழுக்கள் எத்தனை வாக்குகளைப் பெறக் கூடியன என்பதை மதிப்பிட வேண்டும். அதோடு, வாக்காளர்களின் எண்ணிக்கை என்ன என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மக்கள் தேர்தலை ஏற்றுக் கொள்கிறார்களா அல்லது அவர்களில் ஒரு தொகையினர் தேர்தலை நிராகரிக்கிறார்களா? எதிர்க்கட்சிகள் கூறுவது போல், மக்கள் தேர்தலுக்காக கூச்சலிடுகிறார்கள் என்றால், 90 முதல் 95 சதவீதம் வரை வாக்குப்பதிவு இருக்க வேண்டும். அதை தேர்தல் நடத்தும்போது சோதிக்கலாம். மக்கள் இப்போது தேர்தலை விரும்பவில்லை என்பது எங்களின் கருத்து. ஒரு சில எதிர்க்கட்சிகள் முழக்கமாக தேர்தலை நடத்த வேண்டும் என்று கோருகின்றன. ஆனால் அவர்களே தேர்தலை விரும்பவில்லை. இது ஒரு அரசியல் முழக்கம் மட்டுமே. தேர்தல் மிகவும் சாதகமான சூழலில் நடைபெறுவதை உறுதி செய்வதுடன், சரியான முடிவை எடுப்பதற்கு மக்களின் மனதையும் உறுதிப்படுத்த வேண்டும். நாட்டில் உள்ள கருத்தும் அதுவே, எனது பார்வையும் அதுவே என்று நினைக்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இல்லாமல் ஐக்கிய மக்கள் சக்தியால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியுமா? ஜே.வி.பி ஒருபோதும் ஆட்சிக்கு வராது. அவர்கள் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இல்லாமல் நாட்டை நடத்த முடியுமா? சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தில் நுழையும் போது, அது வங்கி அமைப்பில் பிணைக்கப்பட்டுள்ளது. நீங்கள் அந்த நிபந்தனைகளை மீறினால் எல்.சி திறக்க முடியாது. சிலருக்கு சர்வதேச உணர்வுகள் புரியவில்லை. வெளிநாட்டு அமைப்புகளை நாம் ஈர்க்க வேண்டும் என்றால், அவர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் நமக்கு பணம் கொடுக்கும் போது, நாடு பாதுகாப்பாக உள்ளது என்றும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான திட்டம் உள்ளது என்றும் சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு உரிமம் வழங்கும். அப்போது முதலீட்டாளர்கள் வருவார்கள். ஜப்பான், இந்தியா, சீனா மற்றும் பாரிஸ் கிளப் எங்களுக்கு உதவும். அதனால் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ன நிபந்தனைகள் இருந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும் என்றும், எங்களுக்கு வேறு வழியில்லை என்றும் கூறுகிறார். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து அனுமதி பெறாமல் கடன் மறுசீரமைப்பு இருக்க முடியாது.

---

கமிகர்ம நவீகரண வியாபෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**

**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் -**
**கமத்தொழில் அமைச்சு - IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

**Construction of 400 $m^2$ GI producing poly-tunnels, 4 Nos. at Seed Farm Seethaeliya. Contract No.: LK-MOA-PMU-260259-CW-RFB**

2023 சனவரி 22 ஆம் திகதியன்றும் 2023 சனவரி 23 ஆம் திகதியன்று தினமின மற்றும் தினகரன் புதினப்பத்திரிகைகளில் கீழே குறிப்பிட்டுள்ள அதிகாரம் பெற்றவர்களினால் பிரசுரிக்கப்பட்ட மேலேயுள்ள பெறுகை தொடர்பானது.

தொழில்சார் மாற்றங்களை கருத்திற் கொண்டு, பெறுகை அறிவித்தலானது பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது.

1. மேலேயுள்ள விலைமனுவின் மூடும் திகதி மற்றும் நேரமானது 2023 மார்ச் 07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகும்.
2. கேள்வி ஆவணங்களை வழங்கும் காலப்பகுதியானது 2023 மார்ச் 7 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு நீடிக்கப்பட்டுள்ளதுடன் விலைமனு திறத்தலானது 2023 மார்ச் 7 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்களை மூடிய பின்னர் விரைவாகவே நடைபெறும்.
3. விலைமனுவின் செல்லுபடியாகும் காலம் மற்றும் விலைமனு பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது மாற்றப்பட மாட்டாது.
4. முன்னைய விளம்பரத்தின் ஏனைய தகவல்கள் மாற்றப்பட மாட்டாதென்பதுடன் அவைகளில் எந்தவொரு மாற்றமும் இல்லை. மேலதிக தெளிவுறுத்தல்கள் தேவைப்படின், விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட II இன் பெறுகை விஷேடத்துனர் அல்லது சிரேஷ்ட பொறியியலாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். அவர்களின் தொடர்பு இலக்கங்கள் பின்வருமாறு: 0714961603 மற்றும் 0714881265.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை,**
**பத்தரமுல்ல.**
**திகதி: 19.02.2023**

---

**இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்**

கொழும்புக்கு வெளியே உள்ள கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவுவதற்காக, கொழும்பில் உள்ள முக்கிய கல்லூரிகளுடன் இணைந்ததாக வெளி மாவட்டங்களில் பல்வேறு கிளைக் கல்லூரிகளை நிறுவுவதில் முக்கிய பங்காற்றியுள்ளார். கம்பஹா புனித பீட்டர் கல்லூரி, உடுகம்பொல புனித பீட்டர் கல்லூரி, பயாகலை ஹோலி கிராஸ் கல்லூரி, வத்தளை புனித ஜோசப் கல்லூரி, கடோல்கெலை புனித ஜோசப் கல்லூரி, போபிட்டிய லயோலா கல்லூரி, வெலிவேரிய கிறிஸ்து மன்னர் கல்லூரி என்பன இவரது முயற்சியின் விளைவாக நிறுவப்பட்டவைகளில் சிலவாகும்.

இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா, ஹொங்காங், சீன மக்கள் குடியரசு, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், மலேசியா, ஓமன், குவைத், கத்தார், ஜப்பான், இந்தோனேசியா, கென்யா மற்றும் தென்னாப்பிரிக்கா, இத்தாலி, ஐக்கிய இராஜ்யம், பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, அயர்லாந்து, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், ரஷ்யா, அமெரிக்கா, கனடா, மெக்சிகோ உட்பட முப்பதுக்கும் மேற்பட்ட உலக நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ், பலதரப்பட்ட சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றியுள்ளார்.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, 1995ல் பேராயரின் பொதுக் கல்வி சமய மற்றும் கலாசாரக் கல்வித் துறையில் சிறந்த, விலைமதிப்பற்ற சேவையைப் பாராட்டும் வகையில் விசேட விருது வழங்கி கௌரவித்தது. மேலும், செபாஸ்டியனைட் சிறப்பு விருது, இலங்கை ஐக்கிய நாடுகளின் நட்பு அமைப்பு (SUNFO) அமைப்பின் "நல்லெண்ண தூதுவர்" விருது உட்பட பல்வேறு விருதுகளால் இவர் கௌரவிக்கப் பட்டுள்ளார்.

ஒரு மதகுருவாக இருந்தபோதிலும், மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கும், வாழ்க்கைத்தரத்தை மேன்படுத்துவதற்கும் தனது சேவைகள் மூலமும், எழுத்துக்கள் மூலமும் அளப்பரிய பணிகள் செய்த, மனித நேயர், கலாநிதி ஒஸ்வல்ட் கோமிஸ் பேராயரின் மறைவு இலகுவில் ஈடு செய்ய இயலாத இழப்பாகும்.

## நலமே வாழ்வோம்

**மீண்டும் எச்சரிக்கும் டெங்கு**



உயிராபத்தை ஏற்படுத்தும் பயங்கர நோய் டெங்கு. இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வரலாற்றில் முன்னர் காணாத அளவில் உயர்வை பதிவு செய்துள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த 10 மாதங்களில் மாத்திரம் 20,334 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், டெங்கு நோயினால் 145 நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, ஜனவரி மாதத்தின் இரண்டாவது வாரத்தில் 2,030 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. குறித்த காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில் அதன் எண்ணிக்கை 452 ஆகும். கம்பஹா மாவட்டத்தில் 417, புத்தளம் மாவட்டத்தில் 257, களுத்துறை மாவட்டத்தில் 123, அம்பாறை மாவட்டத்தில் 107 மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 103 என நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்நாட்களில் பதிவாகும் காய்ச்சலின் அறிகுறிகளும் டெங்குவின் அறிகுறிகளும் பெரும்பாலும் ஒத்திருப்பதால், நோயின் நிலையைத் தீர்மானிக்காமல் உட்கொள்ளும் மருந்துகளால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகத் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட சுமார் நாற்பது சிறுவர்கள் தற்போது கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயின் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக பிள்ளைகளை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும், தாமதமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால் ஆபத்தான பிரச்சினைகளை சந்திக்க நேரிடும் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், குழந்தைகளை குறைந்த பட்சம் மருத்துவமனைகளின் வெளிநோயாளர் பிரிவுகளுக்காவது அழைத்துச் சென்று மருத்துவ ஆலோசனைகளைப் பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இவற்றைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் தமதும், தமது குடும்பத்தவர்களினதும், சுற்றும் சூழ இருப்பவர்களதும் ஆரோக்கியத்தில் கவனமெடுத்து முன்னெச்சரிக்கையுடன் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்.

## தகவல் களஞ்சியம்




**இலங்கையில் அதிக வருமானம் தரும் யூ டியூப் (YouTube)**

இலங்கையில் அதிக வருமானம் ஈட்டும் யூ டியூப் (YouTube) செனலாக "அப்பே அம்மா" (Ape Amma) என்ற யூ டியூப் செனல் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. புதிய கணக்கெடுப்பின்படி, இந்த செனல் விளம்பர AdSense வருவாய் மூலம் மட்டும் இதுவரை 9,62386 அமெரிக்க டொலர்களை வருமானமாக உழைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவு தொடர்பான உள்ளடக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் "அப்பே அம்மா" செனல், ஆசியாவில் உள்ள சிறந்த யூடியூப் செனல்களில் ஒன்றாக இடம் பிடித்துள்ளது..

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

# துருக்கி, சிரியா பகுதிகளை உலுக்கிய புவிநடுக்கம் காரணம் என்ன?

பேராசிரியர்
வை. நந்தகுமார்,
BSc Eng, MSc. GIS&RS, MSc. Disast. Mang வளவாளர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் வலயக்கல்வி பணிமனை கம்பளை.






### 1 புவிநடுக்கம்

புவியின் கற்கோளத்தின் உட்பாகத்தில் இடம் பெறும் அமுக்கம் காரணமாக ஏற்படும் அகவிசைகளின் தொழிற்பாட்டினால் புவியோட்டின் தகடுகள் /பாறைகள் முறிவடைந்து விலகும் போது அல்லது மடிப்புக்குட்படும் போது ஏற்படும் அதிர்வுகள் அல்லது நடுக்கமே புவி நடுக்கம் எனப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் புவியில் ஒரு இலட்சம் புவிநடுக்கங்கள் ஏற்படுகின்றன. இவை அனைத்தும் மக்களால் உணரப்படுவனவல்ல. எல்லாப் புவிநடுக்கங்களும் அழிவுகளை ஏற்படுத்துவனவல்ல. மிக விசையோடு தொழிற்படும் புவி நடுக்கங்களே பேரழிவுகளை ஏற்படுத்துகின்றன. ஒரு குளத்தில் ஒரு கல்லை எறியும் போது, அது வீழ்ந்த நீரின் இடத்திலிருந்து ஒருவித அலைகள் வட்ட வடிவமாகப் பல திசைகளையும் நோக்கி பரவுவதைப் போன்று, புவியின் உட்பாகத்தில் ஏற்படும்; சடுதியான அதிர்வும் அதன் மையப் பகுதியிலிருந்து அலை வடிவில் பரவிச் செல்கின்றது. புவி நடுக்கத்தின் மையப்பகுதி குவியம் என்றழைக்கப்படும். இப்புவிநடுக்க மையப்பகுதியிலிருந்தும் விலகிச் செல்லச் செல்ல விசைகளின் தாக்கமும் குறைந்து செல்வதால் புவிநடுக்கத்தினாலான விளைவுகளும் மையப் பகுதியிலிருந்து விலகிச் செல்லச் செல்ல குறைந்து காணப்படுகின்றது.

### 2 புவிநடுக்க அலைகளும் அவற்றின் தொழிற்பாடுகளும்

புவிநடுக்க செயற்பாடுகள் பற்றி விரிவாக அறிவதற்கு புவிநடுக்க அலைகள் பற்றிய விளக்கம் பெரிதும் இன்றியமையாதது. புவிநடுக்கம் அல்லது புவி அசைவு உருவாகும் இடம் தோற்றுவாய் அல்லது "குவிவு மையம்" என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. புவிநடுக்கம் தோன்றுமிடத்திற்கு மேலுள்ள புவியோட்டின் மையம், மேன்மையம் எனப்படும். இக் குவிவுமையத்திலிருந்தும் புவிநடுக்க அலைகள் உருவாகின்றன. அதாவது பாறைகள் விசையினால் தாக்கப்படும் போது, பாறைகள் விரிவடைகின்றன. பாறைகளில் தாக்கும் விசையிலும் பார்க்க, பாறைகள் விரிவடையும் வீதம் குறைவாகக் காணப்படுகின்றது. பாறைகளில் தாக்கும் விசை கூடுதலாக உள்ள போது, பாறைகளில் அதன் விகாரசக்தி சேமிக்கப்படுகிறது. இச்சக்தியானது பாறைகளில் தொடர்ச்சியாகச் சேமிக்கப்படும் போது ஒரு குறிப்பிட்ட நிலையின் பின்னர் பாறைகளில் மேலும் சக்தியைச் சேமிக்க முடியாத நிலை ஏற்படும். இந்நிலையில், புவியின் உட்பாகத்தின் சக்தி சடுதியாக வெளியேற்றப்படலாம். இவ்வாறு வெளியிடப்படும் சக்தியின் செயற்பாடே, புவிநடுக்க அலைகளாகப் புவியினுள் செயற்படுகின்றன. இவ்வலைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

***1. முதலலைகள் அல்லது தள்ளுகின்ற அலைகள், P அலைகள்,***

***2. துணையலைகள் அல்லது அதிர்வு அலைகள், S அலைகள்,***

**3. நெடுங்கோட்டலைகள் அல்லது மேற்பரப்பு அலைகள், - L அலைகள்,**

***2.1 முதலலைகள் ( P அலைகள்)***

P அலைகள் நெடுங்கோட்டு அமுக்க அலைகளாகவும், மிகுந்த வேகம் கொண்டனவாகவும் உள்ளன. இவற்றின் வேகம் 8 கிலோமீற்றர் ஆகும். இவை திண்ம, திரவ வாயுப் பொருட்கள் அனைத்தையும் தங்குதடையின்றி ஊடுருவிச் செல்கின்றன. இவை வேகமாக நேராகப் பயணம் செய்வதனால் நெட்டலைகள் அல்லது நீள் அலைகள் எனப்படுகின்றன. P அலைகள் புவியின் எப்பாகத்தினூடாகவும் பயணம் செய்யவல்லன.

புவியின் உட்பகுதியின் அடர்த்தி பற்றி அறிவதற்கும் இவை உதவுகின்றன. முதலலையின் தொழிற்பாட்டின் போது, துணிக்கைகள் அலை செல்லும் திசையில் முன்னும் பின்னும் நகர்கின்றன. இங்கு துணிக்கைகளின் சக்தியானது, ஒரு துணிக்கையில் இருந்து மறு துணிக்கைக்கு எடுத்துச்செல்லப்படுகின்றது.

இதனால் துணிக்கைகள் முன்னும் பின்னும் அதிர்கின்றன. இவற்றின் அதிர்வானது ஒரே திசையிலேயே அமைகின்றது. முதலலைகளின் வேகம் பொருட்களின் அடர்த்தியிலும் அவற்றின் நசுங்கக் கூடிய தன்மையிலும் தங்கியுள்ளது.


***2 துணையலைகள் (S அலைகள்)***

S அலைகள் அதிர்வு அலைகளாகும். ஒப்பீட்டளவில் P அலைகளிலும் பார்க்க வேகம் குறைந்தவை. எனினும், S அலைகளே பூமியின் மேற்பரப்பில் அதிகளவிலான சேதங்களையும், அழிவுகளையும் ஏற்படுத்துகின்றன. இவற்றின் வேகம் 4.5 கிலோமீற்றர் ஆகும். இவை செல்லும் போது இவற்றின் பாதையில் இருக்கும் ஒவ்வொரு துகளும் அலைபாயும் திசைக்கு செங்குத்தாக உயர்ந்தும் தாழ்ந்தும் அதிர்வுக்குள்ளாகின்றன. இதனால் இவை அதிர்வு அலைகளாகும். இங்கு துணிக்கைகளின் சக்தியானது ஒரு துணிக்கையிலிருந்து மற்றைய துணிக்கைக்கு மாற்றப்படுகின்றது. இவ்வலைகளின் வேகம் பொருட்களின் அடர்த்தி மற்றும் அவற்றின் விறைப்பில் தங்கியுள்ளது. திண்மப் பொருட்களை மட்டுமே ஊடுருவிச் செல்லக்கூடியன. புவியின் உட்பாகத்தில் 2900 கிலோமீற்றர் வரை பயணம் செய்து பின்னர் முறிவடைகின்றன.

***3 நெட்டலைகள் (L அலைகள்)***

புவியின் அதிமேற்பரப்பில் ஏற்படுகின்ற நெட்டலைகளே நெடுங்கோட்டலைகளாகும். இவை புவிமேற்பரப்பில் அல்லது புவியினுள் காணப்படும் எல்லைகளுக்கிடையில் பிரயாணம் செய்யக் கூடிய ஆற்றலைக் கொண்டனவாகும். இவை புவியோட்டுப் பகுதியின் 50 முதல் 65 கி.மீ வரையான தூரத்தில் பிரயாணம் செய்கின்றன.

புவியின் உள்ளமைப்புடன், அதாவது புவியோடு, இடையோடு, கோளவகம் என்ற அம்சங்களுடன் புவிநடுக்க அலைகளைத் தொடர்புபடுத்திய புல்லன் என்பவரது கருத்துப்படி, புவியின் மேற்பகுதியில் இருந்து அகட்டுப்பகுதி (கோளவகம்) வரையான பகுதிகள் A,B,C,D,E,F,G என ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.




***படம் 2 மேற்பரப்பு (L) அலை***

இவற்றில் A பிரிவினை கண்ட சமுத்திர கோடாக எடுத்து விளக்கினார். இங்கு அலைகளின் வேகமானது, அதிகரிப்புடன் புறப்படுகின்றது. B,C,D பிரிவுகள் இடையோட்டுப் பகுதியான மென்மூடியைக் குறிக்கின்றன. இங்கு 'S' அலையானது இடைமாறு வலயத்தை அண்மித்ததும், அதன் வேகத்தில் சடுதியாக வீழ்ச்சியடைகின்றது. 'P' அலையானது புவிமேற்பரப்பிலிருந்து சடுதியான வேகத்துடன் சென்று இடையோட்டிற்கும், வெளிக்கோளவகத்திற்கும், இடையிலான இடைமாறு வலயத்தில் சடுதியாக வீழ்ச்சிக்குட்படுகின்றது. பின்னர், வெளிக்கோளவகப் பகுதியில் மீண்டும் வேகம் அதிகரித்து, கு என்னும் இடைமாறு வலயத்தில், வேகம் மீண்டும் வீழ்ச்சியுற்றுக் காணப்படுகின்றது.

P S அலைகள் இரண்டினதும் வேகம், புவியின் இடையோட்டின் இடைமாறு வலயத்தில் வீழ்ச்சியடைவதற்கு, அப்பகுதியில் காணப்படும் கனிப்பொருட் சேர்க்கைகளின் மூலகங்களே காரணமாகவுள்ளன. புவியின் அடர்த்தியானது, மேற்பகுதியில் இருந்து கீழ் நோக்கிச் செல்லச்செல்ல அதிகரித்துச் செல்கின்றது. அடர்த்தி கூடும்போது இடைமாறு வலயங்கள் தவிர்ந்த பகுதிகளில், 'P' அலையின் வேகமும் அதிகரித்துச் செல்கின்றது. 'P' அலையானது புவியின் உட்பகுதி முழுவதையும் ஊடறுத்துச் செல்கின்றது. 'S' அலை மென்மூடி வரையிலேயே செல்கின்றது. அகட்டுப் பகுதியில் 'S' அலைகள் பதிவுசெய்யப்படுவதில்லை. எனவே அகட்டுப்பகுதி திரவத்தன்மையைக் (பாகுநிலையைக்) கொண்டதாக இருக்க வேண்டும் என்ற முடிவு பெறப்படுகின்றது.

***3.1 நிழல் வலயம் அல்லது ஒதுக்கு வலயம்***

புவிநடுக்கத்தின் போது தோற்றுவிக்கப்படும் 'S' அலைகளின் பிரயாணத்தை அடிப்படையாகக் கொண்டு புவியின் உட்பாகத்தின் ஒரு பகுதி 'நிழல் வலயம்' என இனம் காணப்படுகிறது. 'S' அலையானது அகட்டுப்பகுதியை ஊடறுக்க முடியாததன் காரணத்தால், 'S' அலை, மீண்டும் புவியின் மேற்பகுதியை நோக்கிச் சென்று பிரதிபலிப்பதாகக் காணப்படுகின்றது. இவ்வாறு 'S' அலையானது நேரடியாகப் பிரயாணம் செய்ய முடியாத பகுதி நிழல் வலயம் அல்லது ஒதுக்கு வலயம் என அழைக்கப்படுகின்றது. அதிக தாக்கமுள்ள ஒவ்வொரு புவிநடுக்கத்தின் போதும், ஒரு 'நிழல் வலயம்' ("ஒதுக்கு வலயம" Shadow Zone) உண்டாகிறது. ஒரு வளையத்தைப் போன்ற இவ் வலயத்தில் புவிநடுக்க அலைகள் முறிவடைந்து, உள்நோக்கித் திரும்புகின்றன. இதன் விளைவாக 'P' அலைகளின் வேகம், மூடியிலிருந்து உள்ளீட்டுப் பகுதியை அடையும் வரை குறைந்து செல்கிறது. ஆனால் 'S' அலைகள் மூடியிலிருந்து உள்ளீட்டுப்பகுதிக்குச் செல்வதில்லை. இதிலிருந்து மூடியையும், உள்ளீட்டையும் பிரிக்கும் எல்லை, திண்மத்தையும், திரவத்தையும் பிரிக்கும் எல்லையைப் போன்றிருக்கலாம். எனவே மூடியை அடுத்திருக்கும் உள்ளீடு, திரவத்தன்மை உடையதாயிருக்கின்றது எனக் கொள்ளப்படுகின்றது. ஆனால், உள்ளீட்டின் உட்பகுதியில் 'P' அலையின் வேகம் சடுதியாக அதிகரிப்பதாக அறியப்பட்டிருக்கிறது. எனவே உள்ளீடு, திரவநிலையிலுள்ள ஒரு புறஉள்ளீட்டையும், பாரமான அகஉள்ளீட்டையும் உடையது எனவும் கொள்ளப்படுகிறது. இதனை கூட்டன்பேர்க் (Gutenberg)) என்பவர் இனம் கண்டமையினால், உள்ளீட்டின், இவ் இரு வேறுபட்ட வலயங்களைப் பிரிக்கும் எல்லை, "கூட்டன்பேர்க் எல்லை" என அவரது பெயரால் அழைக்கப்படுகிறது. இதேபோல், புவியோட்டின் கீழ்ப்பகுதியிலும் ஒரு எல்லை இருப்பதாக அறியப்பட்டிருக்கின்றது. அவ்வெல்லையில், புவிநடுக்க எல்லைகளின் வேகம், சடுதியாக மாறுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்டுபிடித்த மொஹோறொவிக் (Mohorovicic) என்பவரின் பெயரால் அது ('Moho') மோஹோவின் தொடர்ச்சியறும் எல்லை என வழங்கப்படுகிறது. இதற்குக் கீழுள்ள பாகம் மூடியென்றும், மேலுள்ள பாகம் புவியோடு என்றும் அழைக்கப்படுகிறது.

***படம் 3 நிழல் வலயம்***

புவிநடுக்க அலைகளை அடிப்படையாகக் கொண்டு 1960 ம் ஆண்டு ஒட்மான் (பிரித்) என்பவர், புவியின் அகட்டுப்பகுதியை வெளியகடு, உள்ளகடு எனப்பிரித்தார். அவற்றின் அடர்த்தியின் அடிப்படையில் தமது பாகுபாட்டை மேற்கொண்டார். 1917 இல் கூட்டன்பேர்க் என்பவர், புவியின் ஆரை 6240 கி.மீ ஆக இருக்கின்றபோது அகட்டின் விட்டமானது 3616 கி.மீ ஆகக் காணப்படுகிறது எனவும் கூறினார். கடந்த பல வருடகால ஆராய்ச்சிகளின் விளைவாக புவிநடுக்கவியலாளர்கள் அலைகளின் வேகத்தை பல்வேறு படைகளிலும் கணித்துள்ளனர். 1930 ஆம் ஆண்டில் பெலறஸ் என்பவர் புவிநடுக்க அலைகளின் வேக அட்டவணையை வெளியிட்டார். இவ்வட்டவணையை மேலும் திருத்திய முறையில் புல்லன் என்பவர் வெளியிட்டுள்ளார். P,S,L அலைகளின் வேகமானது, புவியின் உட்பாகப்படைகளின் இரசாயனத் தன்மைகளைப் பொறுத்து, வேறுபட்டு அமையப்பெறுகின்றன என விளக்கப்பட்டுள்ளது. இவற்றை அட்டவணை 1 இல் நோக்கலாம். **(தொடரும்)**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 51

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | 05 |
| 06 | | 07 | | | 08 |
| 09 | 10 | 11 | | 12 | |
| 13 | | 14 | 15 | 16 | 17 |
| | 18 | | | | 19 |
| 20 | 21 | 22 | 23 | | 24 |

பெயர் ..........................................................

வகுப்பு ..........................................................

தொலைபேசி இல ..........................................................

பாடசாலை பெயர் ..........................................................

வதிவிட முகவரி ..........................................................

..........................................................

.............................. ..........................................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) புத்தகத்தையும், தையல் வேலையில் பயன்படுத்தப்படுகின்ற இழையையும் குறிக்கும் இருவேறு அர்த்தம் தரும் சொல்.

(3) சுதந்திரம் இல்லாமல், அடக்குமுறையின் கீழ் உள்ள ஒருவரைக் குறிக்கும் சொல்.

(9) இலங்கைக்கே தனித்துவமான வாசனைத் திரவியங்களில் ஒன்று இது. உணவுக்கு சுவையும் வாசனையும் சேர்ப்பது.

(14) உடலுக்கு இதமான, மெதுவாக வீசுகின்ற காற்று. (தலைகீழான சொல்)

(20) உணவுக்கு சுவையும், மணமும் சேர்க்கும் இயற்கையான வாசனைத் திரவியம். சில பற்பசைகளில் இந்த வாசனைத் திரவியம் சேர்க்கப்பட்டுள்ளது.

**மேலிருந்து கீழ்**

(1) நாம் எமது அறிவைப் பெருக்க வேண்டுமானால் நூல்களைத் தேடி வாசிக்கும் பழக்கத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அனைத்து நூல்களையும் பணம் கொடுத்து வாங்கி வாசிக்க இயலாது. நூல்களை வாசிக்க வேண்டுமானால் நாம் நாட வேண்டிய இடம் இது.

(5) உடலின் மீது பெரிய உறுதியான ஓடு, ஆபத்து வரும் போது அங்கங்களை ஓட்டுக்குள் இழுத்துக் கொள்ளும், மிகவும் மெதுவான நகர்வு... இவ்வாறான இயல்புகள் கொண்ட உயிரினம் இது. (தலைகீழான சொல்)

(7) இரவில் உணவு தேடும் பாலூட்டி உயிரினம். இரவானதும் பறந்து திரிந்து, மரங்களில் கனிகளைத் தேடி உண்ணும். பறக்கும் உயிரினமென்றாலும் இது பறவையல்ல.

(12) கடலில் மாத்திரமன்றி, நன்னீரிலும் வாழ்கின்ற உயிரினம். நீரில் வாழ்வதற்கு சிறப்பான இசைவாக்கங்கள் கொண்ட உயிரினம். மனிதன் தனது உணவுக்குப் பயன்படுத்தும் உயிரினம்.

(17) இலங்கையின் ஏற்றுமதிப் பயிர்களில் இதுவும் ஒன்றாகும். கிளைகள் விடாமல், உயரமாக வளர்கின்ற ஒருவித்திலைத் தாவரம்.

(18) நீரின் மேற்பரப்பில் நீந்தவும், பறக்கவும் இசைவாக்கம் கொண்ட பறவை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 50

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. மொட்டு 04. நாம் 07. காவலன்
12. கோள் 14. பாலை 18. கல்லூரி 22. கள்ளி

**மேலிருந்து கீழ்**

01. மொழி 03. காடு 04. கோலம் 05. நான்
08. வள்ளல் 11. பாவி 14. கவலை 18. களி
21. மாரி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 49

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.ஏ.எப். அஸ்மா,**
தரம் 08B, க/பதியுதீன் மகளிர் வித்தியாலயம்,
இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

2. **தி. சயந்தவி,**
தரம் 05, மட்/ வின்சன் ம.உ.பாடசாலை,
இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

3. **தி. மனுஜன்**
தரம் 06, கமு/விபுலானந்தா மத்திய கல்லூரி,
திருமால் முக வீதி, காரைதீவு 07.

4. **எஸ்.எப். சிம்லா**
தரம் 04, ப/கெ, முஸ்லிம் மகா வித்தியாலயம்,
இல. 326/1, பலகொல்ல, கெள்கல்ல.

5. **ஏ.என். உல்பா மர்யம்,**
தரம் 04, மாறை/வெலிகம மு. ஆரம்பப் பாடசாலை,
இல. 35/1, சமகி மாவத்தை, வெலிகம.

6. **தமீம் எஸ். அப்துல்லா**
தரம் 11, அக்/ அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,
அக்கரைப்பற்று 04.

7. **எம்.எம்.எம். அஜ்மல்,**
தரம் 06, மா/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37 கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

8. **எம்.எச்.எம். சைட்,**
தரம் 03B, அல்ஹிலால் மத்திய கல்லூரி,
இல. 44/1, ஜும்மா மஸ்ஜித் வீதி, நீர்கொழும்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 51
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**பழைமை: பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை**

**தெளிவுரை :**
பழகியவர் உரிமைப்பற்றிச் செய்யும் செயலைத் தாம் செய்தது போலவேக் கருதி உடன்படாவிட்டால் அவரோடு தாம் பழகிய நட்பு என்ன பயன் தரும்.

# மதிப்பு

ஓர் ஊரிலே சோழன் எனும் ஓவியர் வசித்து வந்தார். அவருக்கு உதவியாளனாக கபிலன் எனும் சிறுவனும் இருந்தான். கபிலனுக்கு பெற்றோரும் உறவினர்களும் இல்லை. அவனொரு அநாதைச் சிறுவன். அதே ஊரிலே கர்ணன் எனும் ஓவியரும் வசித்து வந்தார். சோழனது ஓவியங்கள் கற்பனையிலான புனை ஓவியங்களாக காணப்பட்டமையால் அவரது ஊரிலேயே பிரசித்தி பெற்று காணப்பட்டன. இதனால் அதிக பணம் சம்பாதித்தார். இதனாலேயே சோழனுக்கு தலைக்கணமும் கர்வமும் இருந்தது. கர்ணன் ஓர் ஓவியர் என்றாலும் கூட அவரது ஓவியங்கள் பெரிதும் சிறப்பாக காணப்படவில்லை. பணம் பெரிதும் சம்பாதிக்கா விட்டாலும் கர்ணன் மிகவும் நற்குணம் உடையவர்.

சோழனிடம் உதவியாளனாக இருந்த கமலனுக்கு ஓவியங்கள் வரைவதில் ஆர்வம் இருந்தது. தனது முதலாளியான சோழன் இல்லாத சமயங்களில் அவரது ஓவிய தூரிகைகளை எடுத்து பார்த்து மகிழ்வான். அவன் ஓவியம் வரையும் போதும் இவனும் ஓவியம் வரைவதற்கு தனக்கு ஒரு சந்தர்ப்பம் தருமாறு கேட்பான். ஆனால் சோழனோ "ஓவியம் யாராலும் இலகுவில் வரைய முடியாது. அதற்கு ஓர் திறமை வேண்டும்" என்று அதட்டிக் கொள்வார். இவ்வாறே பல ஆண்டுகள் உருண்டோடின. சிறுவனாக இருந்த கமலன் இளைஞனாகி விட்டான். சோழனுக்கோ வயதாகி விட்டது. முன்பைப் போன்று கற்பனை நிறைந்த ஓவியங்களை சிறப்பாக அவரால் வரைய முடியவில்லை. இதனால் ஓவியங்களின் மூலம் அதிக பணம் கிடைப்பதில்லை. இப்பொழுதும் கமலன் தன் ஆர்வத்திற்கு தடைபோடாமல் சோழனிடம் வரைவதற்கு வாய்ப்புக் கேட்டுக் கொண்டிருந்தான்.

சோழனுக்கு ஓவியங்களின் மூலம் வருமானம் பெரிதும் கிடைக்காதபடியால் வறுமை அவனை சூழ்ந்தது. ஆதலால் கபிலனை தொடர்ந்து தன்னுடனேயே வைத்திருக்க முடியாது. அவனை விற்று விடலாம் என எண்ணி சந்தைக்கு புறப்பட்டார். சோழனை அவதானித்த கர்ணன் கபிலனை விலைக்கு வாங்கிக் கொண்டார். நாட்களும் கழிந்தன. கர்ணனும் ஓர் ஓவியர் என்பதால் ஒரு நாள் கர்ணன் ஓவியம் வரையும் போது கபிலன் தனக்கு வரைய ஓர் சந்தர்ப்பம் தரும்படி கேட்டான். கர்ணன் கபிலனுக்கு ஓர் சந்தர்ப்பத்தை வழங்கினார். அச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஓர் ஓவியத்தை வரைந்து கர்ணனிடம் கொடுத்தான். அவ் ஓவியத்தை பார்த்த கர்ணன் மிகவும் ஆச்சரியமடைந்தார். ஏனெனில், அவ் ஓவியம் தத்ரூபமாக இருந்தது.

அவ் ஓவியத்தை கர்ணன் சந்தைக்கு கொண்டு சென்று செல்வந்தர் ஒருவரிடம் விற்று அதிக பணம் ஈட்டினார். பின் தொடர்ந்து கபிலன் தன் திறமையை பயன்படுத்தி பல ஓவியங்கள் வரைந்து அதிக பணத்தை கர்ணனுக்கு ஈட்டிக் கொடுத்தான். இச் செய்தி சோழனின் காதை எட்டியது. சோழன் அன்று அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருந்தால் தானும் இன்று அதிக பணம் சம்பாதித்து இருக்கலாம் என எண்ணி மனம் நொந்து கொண்டான். கபிலனது ஓவியங்கள் தத்ரூபமாகவும் கற்பனைத் திறனுடனும் இருந்தமையால் அனைத்து மக்களையும் கவர்ந்தது. இதனால் கபிலன் அவ்வூரில் மட்டுமன்றி வெளியூரிலும் பிரசித்தி பெற்று விட்டான்.

கபிலன் எனும் கல் சோழனிடம் கூழாங்கல்லாகவும் கர்ணனிடம் வைரக் கல்லாகவும் இருந்தது.

**கு. தேனு**
திருகோணமலை, ஆனந்தபுரி

## 'டெங்கு' ஆட்கொல்லி நோய்

### நுளம்பு பேசுகிறார்...

நீங்கள் ஆரோக்கியமாக வாழ விரும்புகிறீர்களா?

★ மனிதன் ஒற்றுமையைப் பேணி தமது சூழலை சுத்தமாக வைக்க முனையாதவரை எங்கள் இனத்தை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது.

★ உங்கள் வீட்டையும் வீட்டுச் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக பேணுவதால் டெங்கு நுளம்பு பரவுவதை தடுத்து, டெங்கு நோயின் கோரப்பிடியிலிருந்து தப்பித்து ஆரோக்கியமான வாழ்வை பெற்றுக் கொள்ளுங்கள்.

★ நுளம்பின் பெருக்கம் உங்கள் கைகளில். களம் அமைப்பீர் அவற்றின் அழிவுக்கு. குளம் குட்டைகளில் நீர் தேங்காது காத்து வழமான வாழ்வுக்கு வகை தேடுவீர்.

★ வீடு, பாடசாலை, வீதி, கடைத்தெரு சூழலிலுள்ள சிரட்டை, மட்டை, பூச்சாடி, இளநீர் கோம்பை, யோகட் கோப்பை போன்ற நீர் தேங்கும் பொருட்களை எரித்தோ புதைத்தோ அழித்து விடுங்கள்.

**எம்.ஏ. ஆயிசா,**
தரம் 06, துந்துவை அஹதியா பாடசாலை

## தொலைபேசி கோபுரத்தின் கதிர்வீச்சு பாதிப்புகள்

★ பறவைகளால் தூரமாக பறக்க முடியாது.

★ பறவைகளின் திசை அறியும் திறன் குறையும்.

★ பறவை முட்டைகள் கதிர்வீச்சு பாதிப்பால் உயிர் பெறாது.

★ கதிர்வீச்சால் தேனீக்களின் கூட்டத்தில் சிதைவு ஏற்பட்டு, கூடுகளை உருவாக்க முடியாது.

★ மனிதர்கள், விலங்குகளுக்குப் புற்றுநோய், இனப்பெருக்க கோளாறுகள் ஏற்படும்.





## விண்கற்கள் எதனால் ஆனவை?

விண்கல் குறித்த தகவல்களை ஜப்பான் விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். அதில், பல புதிய தகவல்களை கண்டறிந்துள்ளனர்.

சூரிய குடும்பம் விண்கற்களால் நிறைந்துள்ளது. இவை பல்வேறு அளவுகளில் பாறைகளாக உள்ளன. அவை பிரதிபலிக்கும் ஒளியின் நிறமாலையை ஆய்வு செய்வதன் மூலம், மூன்று பிரிவாக பிரிக்கப்படுகின்றன. அவை, 'சி' வகை (அதிக கார்பன் உள்ளவை), 'எம்' வகை (உலோகங்கள் உள்ளவை) மற்றும் 'எஸ்' வகை (அதிக சிலிக்கன் கொண்டது). சூரியனை சுற்றி வரும் பெரும்பாலான விண்கற்கள் அடர்நிறம் கொண்ட 'சி' வகைகள். இதில், ஆவியாகும் சேர்மங்கள் நிறைந்துள்ளன. இவை பூமியின் வளிமண்டலத்தில் நுழையும் போதே உடைந்து போகின்றன. விண்கற்களில் 75% 'சி' வகைகளாக இருந்தாலும் அவற்றின் மிச்சங்கள் பெரிய அளவில் நமக்கு கிடைப்பதில்லை. இவை பூமியில் உயிர்களை உருவாக்குவதற்கு ஆதாரமாக இருந்திருக்கக் கூடும் என்று விஞ்ஞானிகள் கூறி உள்ளனர்.

## வாரம் ஒரு பெரியார்

## நவீன தமிழ் இலக்கியத் திறனாய்வாளர் பேராசிரியர் க.கைலாசபதி



பேராசிரியர் க.கைலாசபதியின் தமிழ்ப்பணிகள் நிகரற்றன. கால வெள்ளத்தைக் கடந்து நிற்கும் தன்மை வாய்ந்தன. நவீன தமிழிலக்கியத் திறனாய்வாளராகத் தமிழ் கூறும் நல்லுலகினால் பெரிதும் மதிக்கப் பெற்றவர்.

இவர் தலைசிறந்த சிந்தனையாளர், பத்திரிகை ஆசிரியர். பல்கலைக்கழக விரிவுரையாளர், ஒப்பியல் ஆய்வாளர், திறனாய்வாளர், நவீன தமிழிலக்கிய வழிகாட்டி எனப் பன்முகத் தன்மை வாய்ந்தவர்.

1933ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாளில் கோலாலம்பூரில் கனக சபாபதி தில்லை நாயகி தம்பதியினரின் மகனாகப் பிறந்த கைலாசபதி தமது ஆரம்பக் கல்வியைக் கோலாலம்பூரில் கற்றார்.

பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கொழும்பு றோயல் கல்லூரியில் உயர்நிலைக் கல்வியையும் பெற்றார். 1957இல் முதல் பிரிவிலே சித்திபெற்றுக் கலை மாணிப்பட்டம் பெற்றார்.

பின்னர் 1957ஆம் ஆண்டில் 'தினகரன்' பத்திரிகையின் துணை ஆசிரியரானார். பத்திரிகைப்பணியில் மிக ஆர்வம் கொண்ட இவர் 1958இல் தினகரனின் பிரதம ஆசிரியரானார். கைலாசபதியின் பத்திரிகைப் பணி என்றும் நினைவு கூரத்தக்கது. 'தினகரன்" பத்திரிகை மூலம் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்குப் பேருக்க மளித்தார். ஈழத்து மண்வாசனை தவழும் படைப்புக்களுக்கு முக்கியத்துவமளித்தார். பத்திரிகைப் பணி அவரை ஒரு சிறந்த ஒப்பியல் ஆய்வாளனாக, திறனாய்வாளனாக உருவாவதற்குப் பெரிதும் உதவியது. 1957முதல் 1961 வரை "தினகரனில் பணியாற்றிய கைலாசபதி புதிய எழுத்தாளர்கள் பலருக்கு ஊக்கமளித்தார். கவிதை, சிறுகதை, நாவல் போன்றவற்றிற்கு முக்கியமளித்துப் பிரசுரிக்கச் செய்தார்.

இலக்கியப் படைப்புக்களை விமர்சிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தார்.

'தினகரன்' பத்திரிகையிலிருந்து விலகியதும் 1961இல் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் துணை விரிவுரையாளராகப் பணிபுரியத் தொடங்கினார். 1963 இல் உயர்கல்விக்கான விடுப்புப் பெற்று பர்மிங்காம் சென்று கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்டார். அங்கு பேரறிஞர் ஜோர்ஜ தொம்சன் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் தமிழ் வீரயுகக் கவிதை (Tamil Heroic Poetry) என்னும் ஆய்வினை மேற்கொண்டு கலாநிதிப்பட்டத்தைப் பெற்றதோடு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் தமது ஆய்வேட்டினை நூல் வடிவம் பெறவும் செய்தார்.

1966இல் கலாநிதிப்பட்டம் பெற்றபின் இலங்கை திரும்பிய கைலாசபதி மீண்டும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் 1969இல் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் பெற்றார்.

பேராசிரியர் கைலாசபதியின் தமிழ்ப்பணிகள் மிக விரிந்தன. அவரது படைப்புக்களே அதற்குச் சான்றாக விளங்குகின்றன. பேராசிரியரின் எழுத்துக்கள் தமிழில் இதுவரை 17நூல்களாக வெளிவந்துள்ளன. அவற்றை விட ஆங்கிலத்தில் ஆறு நூல்கள் வெளியாகியுள்ளன. அவரது ஆய்வுக் கட்டுரைகள், வானொலி உரைகள், கட்டுரைகள் எனத் தமிழிலும் ஆங்கிலத்திலும் இருநூறுக்கு மேல் உள்ளன. இவற்றைவிட அணிந்துரைகள், அறிமுக உரைகள், மதிப்புரைகள், முன்னுரைகள், வாழ்த்துரைகள் என நூல்களுக்கு இவர் எழுதி வழங்கியமை ஏராளம் எனலாம்.

காலத்தால் அழியாத படைப்புக்களைத் தந்த இப் பேராசிரியரை மாணவர் உலகு என்றும் மறக்காது. ஈழத்து நவீன இலக்கியச் செல்நெறியை அனைத்துலகும் கவனத்திற் கொள்ளும் வகையில் செயலாற்றியவர் பேராசிரியர் கைலாசபதி என்றால் அது மிகையல்ல.

## இவ்வார மழலை




Ashelly Shebina
சத்தியசீலன்/எனஸ்டா
கொழும்பு 13






**எம்.என். பாத்திமா**
தரம் 02, துந்துவ அஹதியா பாடசாலை.



**சாரா நஸ்ரி**
தரம் 06, துந்துவ அஹதியா பாடசாலை.



**மொஹமட் நஜாத் நிஸாம்**
தரம் 01, துந்துவ அஹதியா பாடசாலை.

# விளையாட்டு



# திருப்பத்தில் மகளிர் கிரிக்கெட்

இலங்கை மகளிர் கிரிக்கெட்டையும் ஆடவர் கிரிக்கெட்டையும் சரிசமமாகப் பார்க்க முடியாது. ஆடவர் கிரிக்கெட்டுக்கு இருக்கும் அனுசரணை, ரசிகர் கூட்டம் மகளிர் கிரிக்கெட்டுக்கு இல்லை. இதனால் ஆண் கிரிக்கெட் வீரர்கள் சம்பாதிக்கும் பணத்தை வீராங்கனைகள் ஈட்டுவதென்பது இப்போதைக்கு சாத்தியமில்லை.

என்றாலும் வீராங்கனைகளுக்கான போட்டிக் கட்டணத்தை இலங்கை கிரிக்கெட் சபை கணிசமாக அதிகரித்திருப்பது எதிர்காலத்திற்கு உகந்தது. அதாவது ஒருநாள் மற்றும் டி20 போட்டி ஒன்றில் ஆடினால் வீராங்கனை ஒருவருக்கு இதுவரை வழங்கிய 250 அமெரிக்க டொலர் கட்டணம் தற்போது 750 டொலர்களாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று குழாத்தில் இருக்கும் மேலதிக வீராங்கனைகளுக்கு போட்டிக் கட்டணத்தில் 25 வீதம் வழக்கப்படும். இரு தரப்பு அல்லது சர்வதேச தொடர் ஒன்றில் வெற்றி பெறும் ஒவ்வொரு போட்டிக்காகவும் ஒவ்வொரு வீராங்கனைக்கும் தலா 250 டொலர் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

ஆனால் அண்மைய ஒப்பந்தத்தின்படி இலங்கை கிரிக்கெட் வீரர் ஒருவர் ஒரு டி20 போட்டியில் பங்கேற்பதற்கு 3,000 டொலர்களும் ஒருநாள் போட்டி ஒன்றில் பங்கேற்பதற்கு 4,000 டொலர்களும் வழங்கப்படுகிறது.

எனவே, ஆண், பெண் சமத்துவம் என்பது அருகிலும் வைக்கமுடியாது என்றாலும் கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் இதனை நல்ல முன்னேற்றமான நகர்வாகப் பார்க்க முடிகிறது.

அதுவும் தற்போது தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் மகளிர் டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி சோபித்துவரும் சூழலில் இந்த சம்பள அதிகரிப்பு இடம்பெற்றிருக்கிறது. இந்தத் தொடரில் இலங்கை தனது முதல் இரு போட்டிகளிலும் போட்டியை நடத்தும் தென்னாபிரிக்கா மற்றும் பங்களாதேஷை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை தக்கவைத்திருக்கிறது.

மகளிர் கிரிக்கெட் வரலாறு கடந்த காலங்களில் ஒரு மந்தமான போக்கை காட்டினாலும் அண்மைக் காலத்தில் சற்று முன்னேற்றம் கண்டு வருவது தெரிகிறது. குறிப்பாக இந்தியாவில் ஐ.பி.எல் தொடருக்கு நிகராக ஆரம்பித்திருக்கும் மகளிர் பிரீமியர் லீக் தொடர் என்பது ஒரு பெரும் திருப்பம்.

கடந்த பெப்ரவரி 13ஆம் திகதி இடம்பெற்ற வீராங்கனைகளை வாங்கும் ஏலத்தில் முதலாவதாக வந்த இந்திய ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா அதிகபட்ச தொகையாக 413,000 டொலருக்கு ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியால் வாங்கப்பட்டார். இது ஆடவர் கிரிக்கெட்டில் இருக்கும் சில முன்னணி வீரர்கள் ஈட்டுவதை விடவும் அதிக தொகையாக இருந்தது.

வரும் மார்ச் 4 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை ஐந்து அணிகளுடன் நடைபெறப்போகும் மகளிர் பிரீமியர் லீக் மகளிர் கிரிக்கெட்டுக்கு புதிய வாயிலை திறக்கும் என்று எதிர்பார்க்கலாம்.


இந்திய கிரிக்கெட் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு இடையிலான ஒப்பந்தத் தொகையில் சரிசமமில்லாதபோதும் போட்டிக் கட்டணத்தில் இரு பாலாருக்கும் ஒரே அளவு வழங்க கடந்த ஆண்டு ஒக்டோபரில் முடிவெடுக்கப்பட்டது.

ஆனால் இவை எல்லாவற்றுக்கும் மேலாக கடந்த ஜூலையிலேயே ஆடவர் கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கும் அதே ஊதியத்தை வீராங்கனைகளுக்கும் வழங்க நியூசிலாந்து கிரிக்கெட் சபை தீர்மானித்தது.

மகளிர் கிரிக்கெட்டுக்கு மூன்று நூற்றாண்டுக்கு மேல் வரலாறு இருந்தாலும், சமூகத்தின் போக்கே விளையாட்டிலும் பிரதிபலிக்கிறது. எனவே ஊதியங்கள், வசதிகள் அதிகரிக்கும்போது தான் மகளிர் கிரிக்கெட்டின் தரமும் அதிகரிக்கும்.

## குறிப்புகள்

### தந்தையைப் போல் மகன்





மேற்கிந்திய தீவுகள் அணியின் புதிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டெகனாரின் சந்தர்போல் புலவாயோவில் நடைபெற்ற சிம்பாப்வேக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காது 207 ஓட்டங்களை பெற்றார். இது அவரது மூன்றாவது டெஸ்ட் போட்டியாக இருந்தது.

ஆனால் அவரைப் பார்த்து ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனென்றால் அவர் மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் சிவ்னாரின் சந்தர்போலின் மகன். தந்தை சந்தர்போலும் 2005 இல் கிளாஸ்கோவில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காது 203 ஓட்டங்களை பெற்றதோடு, தொடர்ந்து 2012–13 இல் மின்பூரில் நடந்த பங்களாதேஷுக்கு எதிரான போட்டியிலும் அதே ஓட்டங்களை பெற்றார்.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இவ்வாறு இரட்டைச் சதம் அடித்த மற்றைய ஒரே தந்தை, மகன்களாக பாகிஸ்தானின் ஹனீப் மொஹமட் மற்றும் சொஹைப் மொஹமட் உள்ளனர்.

தந்தை ஹனீப் மொஹமட் 1957–58 இல் பிரிஜ்டவுனில் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியில் 337 ஓட்டங்களையும் 1964–65 இல் லாஹூரில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காது 203 ஓட்டங்களையும் பெற்றார். மகன் சொஹைப் மொஹமட்டும் தந்தையைப் போன்றே இரண்டு முறை இரட்டை சதங்கள் பெற்றார். 1989–90 இல் லஹூரில் இந்தியாவுக்கு எதிராகவும், 1990–91 இல் கராச்சியில் நியூசிலாந்துக்கு எதிராகவும் ஆட்டமிழக்காது தலா 203 ஓட்டங்களை பெற்றார்.


என்றாலும் டெஸ்ட் வரலாற்றில் பத்து தந்தை மகன்கள் சதம் பெற்றுள்ளனர். இதில் இந்தியாவின் அமர்நாத்கள் மற்றும் அவுஸ்திரேலியாவின் மார்ஷ்கள் தனது தந்தையை பின்பற்றி இரு புதல்வர்கள் டெஸ்ட் சதம் பெற்றிருக்கிறார்கள்.

### கிழித்த கோட்டை தாண்டாத லியோன்

அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் நெதன் அண்மையில் விசித்திரமான சாதனை ஒன்றை படைத்திருக்கிறார். அது உலகில் அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய முத்தையா முரளிதரனாலும் அடைய முடியாத ஒன்று.

இந்தியாவுக்கு எதிராக கடந்த பெப்ரவரி 11 ஆம் திகதி முடிவுற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் அவர் மொத்தமாக 49 ஓவர்கள் பந்துவீசினார். அதாவது 294 பந்துகளை வீசினார்.

இதன்மூலம் டெஸ்ட் வரலாற்றில் எந்த ஒரு நோபோலும் வீசாமல் 30,000 பந்துகளை வீசிய ஒரே வீரர் என லியோன் உலக சாதனை படைத்திருக்கிறார். அதிர்ச்சி என்னவென்றால் லியோன் தனது டெஸ்ட் வாழ்வில் மொத்தமாக 218 இன்னிங்ஸ்கள் பந்து வீசி இருக்கிறார். இதிலே அவர் ஒரே ஒரு நோபோலைக் கூட வீசியதில்லை.



2011இல் இலங்கைக்கு எதிராக தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வை ஆரம்பித்த லியோன், இதுவரை 5,000க்கும் அதிகமான ஓவர்களை வீசி இருக்கிறார். இதிலே அவர் ஒரு தடவை கூட கோட்டுக்கு வெளியே காலை வைத்ததில்லை என்பது ஆச்சரியமான ஒன்று.

அதாவது ஒற்றை நோபோல் கூட வீசாமல் 100 டெஸ்ட் போட்டிகளில் ஆடிய பந்துவீச்சாளர் என லியோன் வரலாற்றில் இடம்பிடித்திருக்கிறார். இப்போது அதனையும் தாண்டி அவர் 30000 பந்துகளை நோபல் இன்றி வீசி புதிய மைல்கல்லை எட்டினார்.

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டி வரை லியோன் 116 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 30064 பந்துகளை வீசி இருப்பதோடு 14689 ஓட்டங்களை விட்டுக்கொடுத்திருக்கிறார். அவர் இதுவரை 461 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கும் நிலையில் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர்கள் வரிசையில் 8ஆவது இடத்தில் இருக்கிறார்.

என்றாலும் இப்படி ஒழுக்கமாக பந்துவீசிய வீரர்கள் வரிசையில் பல முன்னணி வீரர்களும் கடந்த காலத்தில் இருந்திருக்கிறார்கள். குறிப்பாக இங்கிலாந்து முன்னாள் சகலதுறை வீரர் இயன் பொத்தம் 102 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 383 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கிறார். ஆனால் ஒரு நோபோல் கூட வீசியதில்லை. லியோனுக்கு முன் 100 டெஸ்ட் போட்டிகளில் ஆடி இந்த மைல்கல்லை எட்டிய ஒரே வீரர் இவர்தான்.

அதேபோன்று இம்ரான் கான் (88), லான்ஸ் கிப்ஸ் (79), டென்னிஸ் லில்லி (70) ஆகியோரும் நோ போல்களை வீசியதில்லை.

# இலங்கையில் ஒரு குட்டி நியூசிலாந்து



தேயிலைத் தோட்டங்கள், மலைகளுக்கு நடுவே இருக்கும் ரதல்ல கிரிக்கெட் மைதானம் உலகில் அழகான மைதானங்களில் ஒன்று. விஸ்டன் சஞ்சிகை கூட இந்த மைதானத்தை விதந்து கூறி இருக்கிறது. இங்கே இப்போது இலங்கை கிரிக்கெட் அணி பயிற்சி முகாமை நடத்தி வருகிறது. நியூசிலாந்து சுற்றுப் பயணத்துக்கு அணியை தயார்படுத்த இது கச்சிதமான இடம் என்று இலங்கை கிரிக்கெட் சபையின் மருத்துவக் குழு தலைவர் பேராசிரியர் அர்ஜுன டி சில்வாவும் பரிந்துரைத்திருக்கிறார்.

“இந்த மைதானத்தை பயன்படுத்த நாம் பல ஆண்டுகளாக திட்டமிட்டு வந்தோம்” என்கிறார் பேராசிரியர் டி சில்வா.

நுவரெலியாவுக்கு அருகில் இருக்கும் ஒரு கிராமமான ரதல்லவிலேயே இந்த மைதானம் அமைந்திருக்கிறது. பெரிதாக அரங்குகள் இல்லாவிட்டாலும் காலநித்துவ காலத்து கட்டடம் அதற்கு மேலும் அழகு சேர்க்கிறது.

கடல் மட்டத்தில் இருந்து 4000 அடி உயரத்தில் இருக்கும் இந்த மைதானம் இலங்கையில் அதிக உயரத்தில் உள்ள கிரிக்கெட் மைதானமாக இருப்பது முக்கிய சிறப்பம்சம்.

மேகமூட்டம், குளிர் எல்லாம் சேர்ந்து கிரிக்கெட் ஆடுகளத்தின் சூழலையே மாற்றுகிறது. ஒரு மினி இங்கிலாந்து போல் இருக்கும் இந்த சூழல் கிரிக்கெட் ஆடுகளத்தின் போக்கையே மாற்றும். அதாவது இலங்கையில் இருக்கும் மற்ற மைதானங்களை விடவும் இங்கு வேகப்பந்து வீச்சுக்கு சாதகம் அதிகம். பந்து அதிகம் சுவிங் ஆகவும் செய்கிறது.

1984இல் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து அணி இந்த மைதானத்தில் பயிற்சிப் போட்டி ஒன்றில் ஆடியது. போட்டி மழையால் கைவிடப்பட்டபோதும் மைதானத்தைப் பார்த்து நியூசிலாந்தின் அப்போதைய வீரர் ரிச்சர்ட் ஹெட்லி அதிர்ச்சி அடைந்தார்.

இலங்கையில் அதிக உயரமான மேகம் சூழ்ந்த இடத்தில் பந்து அதிகம் சுவிங் ஆகிறது என்று சான்று அளித்துவிட்டு சென்றார். ஆனால் அது யாருடைய அவதானத்தையும் பெற்றதாகத் தெரியவில்லை.

தேசியமட்டப் போட்டிகளோ உள்ளூர் போட்டிகளோ இங்கு பெரிதாக நடப்பதில்லை. இத்தனைக்கும் இலங்கைக்கு தேவையாக இருக்கும் வேகப்பந்துக்கு பயிற்சிபெற பொறுத்தமான இடமாக இந்த ரதல்ல மைதானம் இருக்கிறது.

“நியூசிலாந்தை ஒத்ததாக இருக்கும் இந்த மைதானத்தின் சூழலை பயன்படுத்திக் கொள்வது முக்கியமானது. இந்த மைதானம் 1,200 மீற்றர் (4000 அடி) உயரத்தில் அமைந்திருப்பது ஒரு தனித்துவமான அம்சமாகும். கடல் மட்டத்தில் இருந்து 1,200 மீற்றருக்கு மேல் மிகக் குறைந்த அளவு மைதானங்களே உள்ளன. உலகின் மிக அழகான கிரிக்கெட் மைதானங்களில் இதனை எளிதாக ஒப்பிட முடியும்” என்கிறார் அர்ஜுன டி சில்வா.

ரதல்ல கிரிக்கெட் மைதானம் தம்புல தடகள மற்றும் கிரிக்கெட் கழகத்திற்கு சொந்தமானது. இந்த மைதானம் 1856 ஆம் ஆண்டே அமைக்கப்பட்டது. தேயிலைத் தோட்ட முதலாளிமார்கள் பொழுதுபோக்க கிரிக்கெட் ஆடிய இந்த மைதானத்தில் பதிவான முதல் போட்டி 1892 நவம்பர் மாதத்தில் இடம்பெற்றது. சுற்றுலா வந்த லோர்ட் ஹோக்ஸ் அணியும் மலைநாட்டு பதினொருவர் அணியும் இங்கு மோதி இருக்கின்றன.

பின்னர் 1983இல் இலங்கை மற்றும் சிம்பாப்வே இடையிலான ஏ நிலை போட்டி, 2000இல் இளையோர் உலகக் கிண்ண போட்டிகள் இங்கு நடந்த குறிப்பிடத்தக்க ஆட்டங்களாக இருந்தன. மற்றபடி நுவரெலியா மாவட்ட கிரிக்கெட் போட்டிகள் வழக்கமாக இங்கு நடக்கும். ரக்பி போட்டிகளும் அவ்வப்போது நடக்கும்.

என்றாலும் இலங்கை அணி வரும் மார்ச் மாதத்தில் முக்கிய சுற்றுப் பயணமாக நியூசிலாந்து செல்லவிருக்கும் நிலையிலேயே ரதல்ல கிரிக்கெட் மைதானம் பக்கம் இலங்கை கிரிக்கெட் சபையின் பார்வை திரும்பியது.

இலங்கை கிரிக்கெட் சபையின் அங்கத்துவத்தை பெற்ற தம்புல தடகள மற்றும் கிரிக்கெட் கழகத்தின் ஒப்புதலைப் பெற்ற இலங்கை கிரிக்கெட் சபை இந்த மைதானத்தை புனரமைக்கும் பணியை அண்மையில் மேற்கொண்டது. அதாவது தேசிய அணியின் பயிற்சிக்காக பயன்படுத்தும் வகையிலேயே இந்த மைதானம் புனரமைக்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் சபையின் சர்வதேச மைதானங்கள் மற்றும் வசதிகளுக்கான முகாமையாளர் கோட்பிரி டபரேரா தலைமையில் அதிக அனுபவம் பெற்ற 20 பேர் கொண்ட மைதான முகாமைத்துவ குழு ஒன்று ரதல்ல மைதானத்தை புனரமைக்கும் பணியில் ஈடுபட்டது.

தற்போது பணிகள் பூர்த்தியான நிலையில் ரதல்ல மைதானத்தின் நடுவில் நான்கு துடுப்பாட்ட ஆடுகளங்கள் அமைக்கப்பட்டிருப்பதோடு மேலும் ஐந்து பயிற்சி ஆடுகளங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேசிய அணி ஒன்று பயிற்சி பெறுவதற்கு தேவையான ஏனைய வசதிகளும் இங்கும் அமைக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்தே இலங்கை அணி கடந்த பெப்ரவரி 16 ஆம் திகதி இங்கு சென்று பயிற்சிகளை ஆரம்பித்திருக்கிறது. நியூசிலாந்து செல்லும் முன்னர் இலங்கை அணி தனது கடைசி பயிற்சியை இங்கு மேற்கொள்கிறது. வரும் பெப்ரவரி 23 ஆம் திகதி வரை இங்கு பயிற்சிகள் தொடரும்.

அதனைத் தொடர்ந்து நேராக நியூசிலாந்து பயணிக்க வேண்டி உள்ளது. இலங்கை அணி நியூசிலாந்தில் மூன்று டெஸ்ட், தலா மூன்று ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் ஆடுகிறது.

இலங்கை அணிக்கு இந்த சுற்றுப்பயணம் எல்லாவற்றையும் விட முக்கியமானது. அங்கு ஆடும் டெஸ்ட் போட்டிகள் இலங்கை உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் ஆடுவதை தீர்மானிப்பதாக இருக்கும்.

லண்டன் ஓவலில் வரும் ஜூன் 7 தொடக்கம் 11ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு இலங்கை அணி முன்னேறுவதற்கு அடிப்படையில், இலங்கை அணி இந்த டெஸ்ட் தொடரின் இரண்டு போட்டிகளிலும் நியூசிலாந்தை வீழ்த்துவது கட்டாயம்.

மற்றது நியூசிலாந்துடன் ஆடும் ஒருநாள் போட்டியும் இலங்கை அணி உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெறுவதற்கு அவசியம். வரும் ஒக்டோபர், நவம்பரில் இந்தியாவில் நடைபெறவிருக்கும் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடருக்கும் இலங்கை நேரடியாக முன்னேற நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை வெல்வது கட்டாயம்.

எனவே, நியூசிலாந்து சுற்றுப்பயணத்தை உலகக் கிண்ணத்தை விடவும் முக்கியமாகக் கருதி தயார்படுத்தலை செய்வது அவசியம். அந்த வகையில் ரதல்ல மைதானம் இலங்கைக்கு முக்கியமானதாக இருக்கும்.

எஸ்.பிர்தௌஸ்...



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




Senthooram
# செந்தூரம்

2023 பெப்ரவரி 19 ஞாயிற்றுக்கிழமை

**Best Actress**
## Niranjani Shanmugarajah

**Ceylon International Film Festival மற்றும் சினெஸ்டர் இணைந்து நடத்திய இலங்கை திரைப்பட விழாவில் சிறந்த நடிகையாகத் தெரிவு செய்யப்பட்ட சுனாமி திரைப்படத்தில் நடித்த நிரஞ்சனி சண்முகராஜா**

Pic. by: Sudath Malaweera

# பொபி யார் குழந்தை?



1912 ஒகஸ்ட் 23ஆம் திகதி நான்கு வயதான பொபி டன்பர் என்ற சிறுவன் காணாமல்போன சம்பவம் அமெரிக்கா எங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது. பெற்றோர்களுடன் ஸ்வேஸ் ஏரிக்கு அருகில் சுற்றுலா சென்றபோதே சிறுவன் காணாமல்போனான்.

பொலிஸார் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தார்கள். ஆனால் எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. எட்டு மாதங்கள் கழித்து பொபி டன்பர் தோற்றத்தில் சிறுவன் ஒருவன் பொலிஸிடம் சிக்கினான். அது பொபி டன்பர்தான் என்று முடிவுக்கு வந்தனர்.

சிறுவனை வைத்திருந்த வில்லியம் கெட்வெல் வோட்டர், மற்றும் அந்த சிறுவனின் தாய் எனக் கூறிய ஜூலியா அண்டர்சன் ஆகியோர் வழக்குக்கு முகம்கொடுத்தார்கள். அது தம்முடைய குழந்தை என்றும் அவனது பெயர் ப்ரூஸ் அன்டர்சன் என்றும் அந்தப் பெண் தொடர்ந்து கூறிவந்தார்.



ஆனால் இந்த வழக்கில் அந்தப் பிள்ளை பொபி டன்பர் என்றுதான் நீதிமன்றம் முடிவுக்கு வந்தது. குழந்தையை கடத்தியதற்கு வோட்டர் இரண்டு ஆண்டு சிறை அனுபவித்தார்.

வழக்கு முடிந்தது. பொபி டென்பர் என்ற பெயரில் அந்த சிறுவன் 58 வயது வரை வாழ்ந்தான். நான்கு குழந்தைகளையும் பெற்று அவரது வாழ்வு பிரச்சினை இன்றே கழிந்தது.

ஆனால் 2004ஆம் ஆண்டு செய்யப்பட்ட மரபணு சோதனையில் அந்த சிறுவன் பொபி டன்பரே இல்லை என்பது உறுதியாகிவிட்டது. அதாவது ஜூலியாவின் மகன் ப்ரூஸ் அன்டர்சன்தான் அந்த சிறுவன்.

அப்போதுதான் இந்த வழக்கில் எத்தனை மர்மங்கள் இருக்கிறது என்பதை உலகம் புரிந்துகொண்டது. ஜூலியாவின் பிள்ளை அநியாயமாக அவளிடம் இருந்து பறிக்கப்பட்டிக்கிறது. அந்த வழக்கில் கூட அவிழ்க்கப்படாத எத்தனையோ முடிச்சுகள் இருக்கின்றன.



எப்படி அந்தப் பிள்ளை பொபி டன்பர் என்று அடையாளம் கண்டிருக்க முடியும். அடிப்படையில் ஜூலியா திருமணம் முடிக்காமலேயே பிள்ளை பெற்றிருப்பது அவர் பக்கம் இருக்கும் மிகப்பெரிய ஓட்டை. முன்னரெல்லாம் அமெரிக்காவில் கூட திருமணம் முடிக்காமல் குழந்தை பெறும் வழக்கம் இல்லை என்பதே இதற்குக் காரணம்.

அத்தோடு ஜூலியாவுக்கு தனது குழந்தையை அடையாளம் காண இரண்டு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டபோது ஒரு சந்தர்ப்பத்தில் அவர் குழந்தையை அடையாளம் காணத் தவறியது பொலிஸாரின் சந்தேகத்தை அதிகரிக்க மற்றொரு காரணமானது.

பொபி டன்பரின் பெற்றோரும் அது தன்னுடைய குழந்தைதான் என்று உறுதியாக கூறியதாகத் தெரியவில்லை. அங்கு உணர்ச்சிக்கு இடம்விட்டிருக்கக் கூடும் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இதில் பொபி டன்பரின் தாய் லேஸ்ஸி டன்பர் பொலிஸ் நிலையத்திற்கு வந்தபோது அங்கு என்ன நடந்தது என்பதில் குழப்பம் உள்ளது. இது குறித்து வெளியான செய்திகளில் சில செய்திகள் லேஸ்ஸியை பார்த்ததும் அந்த சிறுவன் அம்மா எனக் கத்திக்கொண்டு லேஸ்ஸியிடம் ஓடிச் சென்று அவரை கட்டிப்பிடித்தாக குறிப்பிடுகிறது.

சில செய்திகள் லேஸ்ஸியை பார்த்ததும் அந்த சிறுவனின் முகத்தில் ஒரு விசித்திரமான குழப்பம் மட்டுமே நிலவியதாக கூறப்படுகிறது. அங்கு சரியாக என்ன நடந்தது என இதுவரை தெரியவில்லை.

எப்படியோ ஜூலியா தனது மகனை மீட்கும் போராட்டத்தில் தோல்வி அடைந்திருக்கிறார் என்பது உண்மை. வழக்குப் பேச தனக்கு வசதி இல்லை என்று அப்போது அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அதனை நீதிமன்றத்தில் உறுதி செய்ய தவறிவிட்டார்.

இவை எல்லாவற்றையும் விட மிகப்பெரிய மர்மம் உண்மையான பொபி டன்பருக்கு என்ன ஆனது?

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்






## உலகின் பெரும் பொய்யர் யார்?

உலகின் மிகப்பெரிய பொய்யரை தேர்ந்தெடுக்கும் போட்டி ஒவ்வொரு ஆண்டும் இங்கிலாந்தின் கும்ப்ரியாவில் நடைபெறுகிறது. உலகெங்கும் இருந்து நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் பங்கேற்பார்கள்.

அதாவது ஐந்து நிமிடத்திற்குள் மிகப் பெரியதும் நம்பக் கூடிய வகையிலும் யார் பொய் சொல்கிறாரோ அவர் பெரும் பொய்யர் பட்டத்தை வெல்வார். இதில் என்ன பெருமை இருக்கிறது என்று நினைக்க வேண்டாம். இதில், உலக சாதனை படைத்தவர்களும் இருக்கிறார்கள். அதாவது உலகின் மிகப்பெரிய பொய்யர் பட்டத்தை அதிக முறை வென்றவராக ஜோன் கிரஹாம் என்பவர் கின்னஸ் சாதனை கூட படைத்திருக்கிறார். அவர் அந்தப் பட்டத்தை ஏழு தடவை கைபற்றி இருக்கிறார்.

2003ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் அப்ரி க்ரூகர், தான் எவ்வாறு இங்கிலாந்தில் உள்ள வெஸ்டல்லா பள்ளத்தாக்கின் முடிக்குரிய இளவரசரானேன் என்பது பற்றி கதை அளந்தார். இதற்காக அவர் இங்கிலாந்துக்கு வெளியில் முதல் நபராக இந்தப் பட்டத்தை வென்று காட்டினார்.

ஆனால் ஒரே ஒரு வார்த்தையில் பெரும் பொய்யர் பட்டத்தை வென்றவர் கார்லிசின் அருட்தந்தை. அவர் “நான் எனது வாழ்நாளில் பொய்யே சொன்னதில்லை” என்று குறிப்பிட்டார்”

2006 ஆம் ஆண்டு முதல் பெண்ணாக பெரும் பொய்யரானார் நகைச்சுவையாளர் சூ பெர்கின்ஸ். ஓசோன் படலம் உடைந்தது, பனிக்கட்டிகள் உருகியது மற்றும் ஒட்டகங்களில் மக்களை வேலைக்கு அழைத்துச் செல்ல வேண்டி இருந்தது பற்றி அவர் பொய் பொய்யாகக் கூறினார்.

என்றாலும் உலகின் பெரும் பொய்யர் போட்டியில் அரசியல்வாதிகள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு பங்கேற்க தடை உள்ளது. அவர்கள் இந்த விடயத்தில் கைதேர்ந்தவர்கள் என்று ஏற்பாட்டுக் குழுவினர் அதற்குக் காரணமாகக் கூறுகிறார்கள்.




A. Shaveesha 12.02.2023


Fathima Arwa Ishak
Ambalanduwa, Panadura



Baby Laxshana Partheepan



# கலைஞர் கலைக்கமலின் 57வது கீத்ராத் Five In One





தினகரன், தினகரன் வார மஞ்சரி, சக்தி தொலைக் காட்சி ஊடக அனுசரணையில் நாடறிந்த ஜனரஞ்சக பாடகர் கலைஞர் கலைக் கமலின் 57வது "கீத்ராத்" இம்மாதம் 26 ஆம் திகதி ஞாயிறு மாலை 7 மணிக்கு கொழும்பு 07, ஜே. ஆர். ஜெயவர்தன மண்டபத்தில் கலைப்புரவலர் தேசமான்ய சிவாஜி மௌலானா முன்னிலையில் அக்கரைப்பற்று தேசமான்ய ஏ. பி. அப்துல் கையும் தலைமையில் நடைபெற உள்ளது.

சிறப்பு அதிதிகளாக பிரபல தொழிலதிபர்கள் ஹுசைன் ஹாஜி, எஸ் ரவீந்திரன், சண்முகம் திருச்செல்வம், எம் ரி எம் நௌசாத், எம் ஜே எம் பௌஸ் ( ஸ்டார் கோணர்) கௌரவ அதிதிகளாக நாடறிந்த பிரபல கவிஞர், பாடல் ஆசிரியர் தேசமான்ய கல் ஹின்னை ஹலீம்தீன், ஏ எஸ் சரத் சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

விசேட அதிதிகளாக பிரபல சமூக சேவகிகளான ஷாமிலா ஹுசைன், சம்சுன் மஸாஹிரா பாத்திமா ஸீனியா, ஷானாஸ் பாத்திமா, ஷாமிலா ஸெய்னுல் ஆப்தீன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இலங்கையின் முன்னணி தமிழிசைக் குழுவினரான செந்தூரன், அயாஸ் சவாஹிர், தாளக் கலைஞர் கண்ணா, ஜெகன் ஆகியோர் இசை வழங்க கலைக்கமலுடன் முன்னணி பாடகிகள் மொறின் ஜெனட், பவானி இணைந்து பாட உள்ளனர்.

# செல்ஃபி உலா


கிருஷாந்தி கிருஷா


Chandana Wijemanna
President Colombo Cultural Centre


சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் ஒரு செல்ஃபி வேதசகா


Tharumalingam Tinesh


RJ Prabu


Singer Amaradas JP


Tiktok Superstar Actress Gayathri shan and Actress Shanthi Banusha

# தெஹியோவிட்டயில் ஆடற்கலை போட்டி











அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் அண்மையில் தெஹியோவிட்ட காயத்ரி தமிழ் வித்தியாலயத்தில் நடத்திய ஆடற்கலைப்போட்டியில் அதிதிகளாக புரவலர் ஹாசிம் உமர், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் கலந்து கொண்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்: இன்பாஸ் சலாவுதீன்)





தினகரன் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணை

# பாடல் வெளியீடு








AJS entertainment (அஜித் சுவேந்திரா) தயாரிப்பில் T. வினோத்தின் இயக்கத்தில் VM film makers படக்குழுவின் உருவாக்கத்தில் ஜெறாட் நோயல் & மான்விழி நடிப்பில் லதீப் பாலசுப்பிரமணியத்தின் பாடல் வரிகளில் வெற்றி சிந்துஜனின் இசையில் வெற்றி சிந்துஜன், மதுஸ்ரீ ஆதித்தனின் குரலில் பாடல் ஒன்று வெளியீடு செய்யப்பட்டது. விதுசன் மற்றும் யானுசனின் ஒளிப்பதிவில் விதுசனின் படத்தொகுப்பு சுவிகரனின் இணை இயக்கத்திலும் ரகீதனின் உதவி இயக்கம் டேறியனின் ஒப்பனை மற்றும் கலை இயக்கத்திலும் ஹம்சாயினியின் உடை வடிவமைப்பு உதவியிலும் விதுர்சனின் பெயர் (title)வடிவமைப்பு மற்றும் மதுசனின் சுவரொட்டி (poster) வடிவமைப்பிலும் சிந்துஜனின் VFX உதவியில் உருவாகிய காணொளிப்பாடல் காதலர் தினத்தில் வெளியிடப்பட்டது.

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



சுரேஷ்: உங்க மனைவிக்கு நாய் கடிச்சதா கேள்விப்பட்டேன் நீங்க முதல்ல என்ன செஞ்சீங்க?
ரமேஷ்: உடனே அந்த நாய்க்கு பிரியாணி வாங்கி போட்டேன்.
சுரேஷ்: ???



ராமு : அவன் தான் அவங்க வீட்டுல கதவுமாதிரி?
சோமு : அது என்னடா கதவுமாதிரி?
ராமு : அவன வீட்ல யார்வேணாலும் போட்டு சாத்து சாத்துன்னு சாத்து வாங்க!



வாடிக்கையாளர்: சார், ஆறு வருஷத்துல நீங்க போட்ட பணம் இரட்டிப்பாகும்னு சொன்னீங்களே என்ன ஆச்சு?
வங்கி ஊழியர்: இரட்டிப்பாகும்னு தானே சொன்னோம் திருப்பித் தர்றதா சொல்லலையே!



சுரேஷ் : நேத்து ஆபீஸிலிருந்து வீட்டுக்குப் போகும்போது பக்கத்து வீட்டுக்குப் போயிட்டேன்.
ரமேஷ் : அப்புறம்?
சுரேஷ் : களைப்பா வந்திருப்பீங்க காபியோட வரேன்னு குரல் கேட்டது. சரி, இது நம்ம வீடு இல்லைன்னு புரிஞ்சுக்கிட்டு வெளிய வந்துட்டேன்.



நடிகர்: ஒரு வாட்ச் வேண்டும்.
வாட்ச் கடைக்காரர்: இந்தாங்க சார்.
நடிகர்: இந்த வாட்ச் நல்லா ஓடுமா.
வாட்ச் கடைக்காரர்: உங்க படத்தை விட நல்லாவே ஓடும்.



கணவன் : நீ தான் எனக்கு மனைவியா வருவன்னு எங்க ஸ்கூல் மிஸ் அப்பவே சொன்னங்க.
மனைவி : எப்படி சொன்னாங்க.
கணவன் : பண்ணி மேய்க்க தான் நீ லாயக்குன்னு சொன்னங்க.



கணவன் : கடைக்காரன் நல்லா ஏமாத்திட்டான் சங்கு சக்கரம் சுத்தமாட்டேங்குது!
மனைவி : முதல்ல கண்ணாடியை மாட்டித் தொலைங்க அது கொசுவத்திச் சுருள்!



சோமு: டேய்! ஒரு 10 ருபாய் இருந்தா கொடு!
ராமு: என்னிடம் சுத்தமா இல்ல.
சோமு: பரவாயில்லை கொடு, நான் சுத்தம் பண்ணிக்கிறேன்!





ஓட்டல்காரர் : 2005 ஆம் வருடத்திலேயே சுத்தமான ஓட்டல்னு பாராட்டுப் பெற்ற ஓட்டலாக்கும் இது.
வந்தவர் : அதுக்கப்புறம் சுத்தம் செய்யவே இல்லையோ.
ஓட்டல்காரர் : ???

பேரன் : ஏன் பாட்டி என் மேல இவ்வளவு பாசமா இருக்க?
பாட்டி: நீதாண்டா பேராண்டி நாளைக்கு எனக்கு கொள்ளி வைக்கணும்!
பேரன் : போ பாட்டி! எனக்கு நாளைக்கு ஸ்கூல் இருக்கு! இன்னைக்கே கொள்ளி வச்சுரேன்.



ஒருவர் : உங்கள் மகனை ஏன் மண்ணெண்ணெய் ஊற்றிக் குளிக்க வைக்கிறீர்கள்?
மற்றவர் : அவன் மிகவும் துரு துரு வென்று இருக்கான் அதான்?
ஒருவர் : ??

# தமிழ் கலைஞர்களை கௌரவிக்கும் மாபெரும் விருது வழங்கும் விழா பேசாலை சங்கவி திரையரங்கில்

தினகரன் தினகரன் வாரமஞ்சரி

ஊடக அனுசரணையில்





**2023.02.25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு**

**அதிதிகளாக புரவலர்**

**ஹாசிம் உமர்,**

**தினகரன் பிரதம ஆசிரியர்**

**தெ. செந்தில்வேலவர்**

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையில் மன்னார், பேசாலையில் இயங்கும் சங்கவி பிலிம்ஸ் நிறுவனமும் சங்கவி திரையரங்கும் எதிர்வரும் 2023.02.25ஆம் திகதி சனிக்கிழமை கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்ட 140 பேருக்கு விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி, பதக்கங்களையும் அணிவித்து கௌரவிக்கவுள்ளது. இந்த நிகழ்வு மன்னார், பேசாலையிலுள்ள சங்கவி திரையரங்கில் எதிர்வரும் 2023.02.25ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் புரவலர் ஹாசிம் உமர், கௌரவ அதிதியாகவும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில்வேலவர் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளார்கள். நாடு முழுவதிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்கள் இதில் கௌரவிக்கப்பட இருக்கிறார்கள்.

சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாக கலைஞர்களையும் சமூக சேவையாளர்களையும் கௌரவிக்கும் வகையில் இந்த கலாவிபூஷண விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வுகளை நடத்தி வருவதாக இந்நிறுவனத்தின் பணிப்பாளரும் சங்கவி திரையரங்கின் உரிமையாளருமான துரைராசா சுரேஸ் தெரிவித்தார்.

இந்த கலாவிபூஷண விருது வழங்கும் விழாவை இந்நிறுவனம் முதன்முதலில் யாழ்ப்பாணத்தில் நடத்தியது. முதலாவது கலாவிபூஷண விருது வழங்கும் விழாவை நடத்துவதற்குத் திட்டமிட்டு இந்த விருது பெறுவோரை தேர்ந்தெடுப்பதற்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் வாயிலாக விண்ணப்பம் கோரிய போது யாழ்ப்பாணத்தில் இருந்து தான் அதிகப்படியான விண்ணப்பங்கள் வந்து சேர்ந்தன. ஆரம்பத்தில் கொழும்பை தலைமையகமாகக் கொண்டு இயங்கினாலும் கொழும்பில் விழாக்கள் நடத்தி வெற்றி வாகை சூடிக் கொண்டு வந்தாலும் கொழும்பிலுள்ள அநேகமான கலைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்கவில்லை. நாடு முழுவதிலும் இருந்து இதற்கு விண்ணப்பங்கள் வந்த வண்ணம் இருந்ததால் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் இவ்விருது வழங்கும் விழாவை தனித்தனியாக நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது. அதற்கமைய அதிக எண்ணிக்கையான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்ததால் முதலாவது விருது வழங்கும் விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்தினோம் என அதன் பணிப்பாளர் துரைராசா சுரேஸ் தெரிவித்தார்.

இரண்டாவது விருது வழங்கும் விழாவை மட்டக்களப்பில் நடத்துவதற்கு திட்டமிட்டு அதனை நடத்துவதற்கான மண்டபங்களையெல்லாம் பார்த்து ஒழுங்கு செய்து வரும் போது கொரோனா நாட்டுக்குள் தலைதூக்கி ஆடியது. இதனால் திட்டமிட்டபடி தொடர்ந்து மாவட்ட ரீதியாக இந்த விழாவை நடத்துவதற்கு முடியாத நிலை தோன்றியது.

இவ்வாறு பணிப்பாளர் துரைராசா சுரேஸ் மேலும் கூறியதாவது, கொரோனாவின் தாக்கம் படிப்படியாக குறைந்து வரும்போது வேறு வேறு நிகழ்வுகளை நடத்தி வந்தோம். அகில இலங்கை எம். ஜீ. ஆர் மன்றம் அதன் தலைவர் இத்ரிஸின் தலைமையில் வருடாந்தம் டிசம்பர் மாதம் 24ஆம் திகதி எம்.ஜீ.ஆரின் நினைவுநாள் நிகழ்வையும் ஜனவரி 18ஆம் திகதி எம். ஜீ.ஆரின் பிறந்த நாள் நிகழ்வையும் நடத்துவது வழக்கமாகும். கொரோனா காலத்தில் மண்டபங்கள் எடுப்பதற்கு மிகவும் கடினமாக இருந்தது. எனவே இந்நிகழ்வுகளை நடத்துவதற்கு இடம் இல்லாது தவித்த போது இவற்றை நடத்த நான் கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள எனது வீட்டில் இடம் கொடுத்து இந்த விழாவை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கினேன்.

கலைஞர்களைப் பாராட்டி கௌரவமளித்து விருது வழங்கி வந்த எமது சங்கவி பிலிம் நிறுவனம், பல்வேறு திரைப்படங்களைத் தயாரித்தது.

(07 ஆம் பக்கம் பார்க்க)







நாம் தயாரித்தத் திரைப்படங்கள் அனைத்தும் நினைத்த அளவு வெற்றியை தரவில்லை. என்றாலும் மனம் தளரவில்லை. திரைப்படம் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை கைவிடவில்லை. இதற்கு அமைவாக வேலி என்ற திரைப்படத்தை தயாரிப்பதற்காக களனி சரசவி ஸ்டுடியோவில் ஆரம்ப பூஜை நடத்தினோம். இந்த ஆரம்ப பூஜையில் சிங்கள, தமிழ் கலைஞர்கள், இயக்குனர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். இலங்கையிலே திரைப்படத்துறையிலே மிகவும் பிரபல்யமான பேராதனை ஜுனைதீனின் கதை வசனத்தில் எழுதப்பட்ட வேலி என்ற நாவலையே திரைப்படமாக தயாரிப்பதற்கு திட்டமிட்டோம். இதன் படப்பிடிப்பை நடத்துவதற்கான லொகேஷனும் வட்டவளையில் பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பாராத விதமாக கொரோனாவின் தாக்கம் தீவிரமாகியதால் அந்தத் திரைப்பட வேலைகளும் இடையிலே நின்று விட்டன. நான் திரைப்படத் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அதே நேரத்திலே புலம்பெயர்ந்த நமது கலைஞர் குணா தயாரித்த ஒரு முழுநீளத் திரைப்படத்தை இறக்குமதி செய்து இலங்கையில் திரையிடுவதற்கான திரையரங்குகளை நாடினேன். அந்தத் திரைப்படத்தை திரையிடுவதற்கு எந்தத் திரையரங்கமும் அதற்கான வசதியை செய்து கொடுக்கவில்லை. எனவே மிகவும் ஏமாற்றத்தோடு இருந்தேன்.

இலங்கையில் திரைப்படங்கள் தயாரிப்பது அவ்வளவு கடினமாக இல்லாவிட்டாலும் கூட அவற்றை திரையிடுவது என்பது மிகவும் கடினமாகவே இருந்தது. இது எனக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. இது ஒரு நாள் ஒரு திரையரங்கொன்றை திறக்க வேண்டும் எண்ணத்தை துாண்டியது. அதற்கு அமைவாக மன்னார், பேசாலையில் திரையரங்கை திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து அதன் திறப்பு விழாவையும் சிறப்பாக நடத்தினேன். தை பிறந்தால் வழி பிறக்கும் என் பார்கள். இதற்கமைய தைப்பொங்கல் அன்று சங்கவி திரையரங்குக்கு முன் பொங்கல் வைத்து இவ்வாண்டுக்கான கலை நிகழ்வுகளை செய்வதற்கு காலடி எடுத்து வைத்தேன். இந்தியாவில் ஜுனியர் சுப்பர் சிங்கர் போட்டி நிகழ்ச்சி நடத்துவது போல் இலங்கையிலும் அவ்வாறான போட்டியொன்றை நடத்த திட்டமிட்டு அதற்கான பணிகளை தீவிரப்படுத்தி 2023.02.11ஆம் திகதி அதற்கான ஒத்திகையை மன்னார், பேசாலையிலுள்ள சங்கவி திரையரங்கில் நடத்தினேன். 2023.02.11ஆம் திகதி அதற்கான முதலாவது சுற்றுப் போட்டியை மன்னார், பேசாலையிலுள்ள சங்கவி திரையரங்கில் நடத்தினேன். இந்தப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெறுபவருக்கு 30 ஆயிரம் ரூபா பணப்பரிசும் இரண்டாவது இடத்தைப் பெறுபவருக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் மூன்றாவது இடத்தைப் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்க உள்ளேன். நான் மன்னார், பேசாலையில் சங்கவி திரையரங்கை ஆரம்பித்தாலும் இந்த திரையரங்கில் தமிழ், சிங்கள சகல கலைஞர்களுக்கும் தங்களது கலை நிகழ்வுகளை நடத்துவதற்கு வழங்கத் தயாராக உள்ளேன். அது போல் குறுந் திரைப்படங்களை தயாரிப்பவர்கள் அவற்றை திரையிடுவதற்கும் இந்தத் திரையரங்கை வழங்கத் தயாராக இருக்கிறேன். அதேபோல் வசதி குறைந்தவர்களுக்கு தங்களது திருமணங்களை நடத்திக் கொள்வதற்கும் பிறந்த நாள் விழாக்களை நடத்திக் கொள்வதற்கும் குறைந்த விலையில் வழங்கத் தயாராக இருக்கிறேன். புதிய திரைப்படங்கள் வருகின்றபோது அவற்றை திரையிடுவதுடன் கலைஞர்களுக்கு தங்கள் கலைநிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் வசதி செய்து கொடுக்கத் தயாராகவுள்ளேன். நாடகங்கள், நாட்டுக்கூத்து, கலைநிகழ்ச்சிகள் போன்ற எந்தவிதமான கலைநிகழ்ச்சிகளையும் இங்கு மேடையேற்றலாம்.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543


















Senthooram செந்தூரம்



# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**எம்.எஸ்.பாரூக், கல்முனை.**

**கேள்வி:** சிவகார்த்திகேயனை வைத்து மடோன் அஸ்மின் இயக்கி வந்த 'மாவீரன்' திரைப்படம், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையால் இடைநிறுத்தப்பட்ட தாமே..உண்மையா...?



**பதில்:** 'மண்டேலா திரைப்படத்தின் இயக்குநர் மடோன் அஸ்வின் இயக்கத்தில் உருவாகும் 'மாவீரன்' திரைப்படத்தில் சிவகார்த்திகேயன் தற்போது கதாநாயகனாக நடித்து வருகிறார். சிவகார்த்திகேயனுடன் இணைந்து அதிதி சங்கர் கதாநாயகியாக நடிக்கும் 'மாவீரன்' திரைப்படத்தில் சரிதா, இயக்குநர் மிஸ்கின், பிரபல தெலுங்கு தடிகர் சுனில், யோகி பாபு ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். சாந்தி டாக்கீஸ் நிறுவனம் தயாரிக்கும் மாவீரன் திரைப்படத்தின் படப்பிடிப்பு விறு விறுப்பாக நடை பெற்று வரும் நிலையில் , கடந்த சில தினங்களாகவே சமூக வலை தளங்களில் மாவீரன் திரைப்படத்தின் இயக்குநர். மடோன் அஸ்வின் மற்றும் சிவகார்த்திகேயன் இடையே கருத்து வேறு பாடுகள் ஏற்பட்டுள்ளன. படப் பிடிப்பு தொடர்ந்து நடை பெறுவதில்லை, மாவீரன் திரைப்படம் விரைவில் கைவிடப்படும் என்பது போன்று பல வதந்திகள் பரவி வந்தன. இதை அடுத்து மாவீரன் படம் கைவிடப்பட்டு விட்ட தாகவே கூறப் பட்டது.

இந்நிலையில் இவை அனைத்திற்கும் பதிலளிக்கும் விதமாக படத்தின் தயாரிப்பு நிறுவனமான சாந்தி டாக்கீஸ் தனது டுவிட்டர் பக்கத்தில் "எந்த அடிப்படையுமற்ற தவறான தகவல்கள் மற்றும் வதந்திகள் மாவீரன் திரைப்படம் குறித்து சமூக வலைத் தளங்களில் பரவி வருகின்றன. உங்கள் அனைவரையும் அவை அனைத்தையும் நம்ப வேண்டாம் என கேட்டுக் கொள்கிறோம்" மாவீரன் படத்தின் படப்பிடிப்பு மிக சரியாக நடை பெற்று வருகிறது. அனைவரது நினைவிலும் நிற்கும் ஒரு திரைப்படமாக கொடுக்க பணியாற்றி வருகிறோம்."என தெரிவித்துள்ளது.

**எம்.மாகிரட். எலபடகம.**

**கேள்வி:** அண்மையில் காலமான பிரபல பின்னணிப் பாடகி வாணி ஜெயராமின் மரணத்தில் மர்மம் இருப்பதாக ஒரு கதை பரவியதே...சில ஊடகங்களிலும் தகவல்கள் வெளி வந்ததே இந்த தகவல்களில் ஏதாவது உண்மை இருந்ததா...விசாரணைகள் ஏதும் நடந்ததா...அல்லது மூடிமறைக்கப்பட்டதா!

**பதில்:** பிரபல பின்னணிப்பாடகி வாணி ஜெயராம் அவர்களுக்கு 'பத்ம பூஸன்'விருது வழங்கப் பட்டுள்ளது என்ற அறிவிப்பு வந்துள்ள நிலையில்தான் அவரது மரணமும் திடீரென்று நடைபெற்றுள்ளது. அதே நேரம் வாணி ஜெயராமின் வேலைக்காரியும் அம்மாவின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்திருந்தார். ஆனாலும் மரணவிசாரணை அறிக்கையின் படி, அவர் திடீரென்று பாத்ரூமில் வழுக்கி விழுந்ததால் அவரது நெற்றிப் பொட்டில் ஏற்பட்ட காயத்தினால் தான் அவருக்கு மரணம் ஏற்பட்டிருக்கிறது" என்று தெரிவிக்கப் பட்டிருந்ததால் பெரிதாக எவரும் அலட்டிக் கொள்ள வில்லை. ஏற்கனவே, ஜெயலலிதா ஜெயராம், நடிகை ஶ்ரீதேவி ஆகியோரது மரணமும் கொலைதான் என்று பல ஊடகங்தளும் தகவல் வெளியிட்டிருந்தன. ஆனாலும் இறுதியில் இயற்கை மரணம்தான் என் தீர்ப்பு வந்ததால் எல்லாமே புஸ்வானமாகி விட்டது. இதனால் தான் ஊடகங்கள் எதுவும் வாணி ஜெயராமின் மரணத்தைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ள வில்லை என்று பேசப்பட்டது.



**கேள்வி:** லிங்கு சாமி இயக்கத்தில் கடந்த 2010ஆம் ஆண்டு வெளியாகி ஹிட்டான 'பையா'படத்தின் இரண்டாம் பாகம் விரைவில் தயாராக உள்ளது.

**பதில்:** கார்த்தி நாயகனாக நடித்திருந்த இப்படத்தில் அவருக்கு ஜோடியாக தமன்னா நடித்திருந்தார். பெங்களூரில் இருந்து மும்பை வரையிலான கார் பயணத்தின் போது ஏற் படும் காதலை அழகாகவும், யாதார்த்தமாகவும் காட்சிப்படுத்தி இருந்தார் லிங்குசாமி. கார்த்தி தமன்னா இடையேயான கெமிஸ்ரியும் படத்தின் வெற்றிக்கு கை கொடுத்தது. இப்படத்தின் வெற்றிக்கு மற்று மொரு.முக்கியமான காரணம் யுவன் ஷங்கர்ராஜா. அவரின் இசையில் இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள் அனைத்தும் இன்றளவும் ரசிகர்களால் கொண்டாடப் படுகிறது.இப்படத்தை லிங்கு சாமியின் திருப்பதி பிரதர்ஸ் நிறுவனம்தான் தாயாரித்து இருந்தது.



இந்நிலையில் தற்போது 13 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் 'பையா' படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்க லிங்கு சாமி தயாராகி வருகிறார். முதல் பாகம் பிரமாண்ட வெற்றி பெற்றதால், அப்படத்தின் இரண்டாம் பாகத்தை.பெரிய பட்ஜெட்டில் உருவாக்க அவரது தயாரிப்பு நிறுவனம் தயாராகி வருவதாக கூறப்படுகிறது. ஆர்யா 'பையா' இரண்டாம் பாகத்தில் நாயகனாக நடிக்க உள்ளதாகவும், அவருக்கு. ஜோடியாக மறைந்த நடிகை

சிறீதேவியின் மகள் ஜான்வி கபூர் நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. இப்படத்தின் சூட்டிங்கை முழுக்க முழுக்க துபாயில் நடத்த திட்டமிட்டு ள்ளாராம் லிங்குசாமி.

**எல்.எம்.பதன் புத்தளம்**

**கேள்வி:** ' தல'அஜித்தின் அடுத்த படம் என்ன? இயக்குநர் யார்?



**பதில்:** அஜித் நடித்த 'துணிவு 'திரைப்படம் கடந்த தீபாவளி அன்று வெளியாகி ரூ200கோடிக்கும் அதிகமாக வசூல் செய்த நிலையில் அஜித்தின் அடுத்த படமான 'ஏகே 67'படத்தின் பட்ஜெட்டும் ரூ 200கோடிக்கும் அதிகம் என்று கூறப் படுகிறது.

அஜித் நடிப்பில் உருவாகும்'ஏகே 62'படத்தை விக்னேஸ் சிவன் இயக்குவார் என்று கூறப் பட்ட நிலையில் தற்போது அதில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளது

'ஏகே'62'படத்தை விக்னேஷ் சிவனுக்கு பதில் வேறு ஒரு இயக்குநர் இயக்குவார் என்று கூறப்பட்ட நிலையில் தற்போது வந்துள்ள தகவலின் படி மகிழ் திருமேனி கூறியகதை அ ஜித்துக்கு பிடித்து விட்டதாகவும். இதை அடுத்து 'ஏகே62'படத்தை மகிழ் திருமேனி தான் இயக்குவார் என்று கூறப்படுகிறது .

இந்த நிலையில் இந்தப் படம் பிரமாண்டமான பட்ஜெட்டில் உருவாக இருப்பதாகவும்படத்தின் பட்ஜெட் 200 கோடிக்கு மேல் அதிகம் என்றும் பேசப்படுகிறது.

மேலும் குறுகிய கால தயாரிப்பாக 'ஏகே62'இருக்கும் என்றும் வரும் தீபாவளி தினத்தன்று படத்தை வெளியிட திட்டமிடப் பட்டுள்ளதாகவும் கூறப் படுகிறது.

அதேவேளை அஜித்தின் 63ஆவது படத்தை விக்னேஷ் சிவன் இயக்குவார் என்றும் கூறப்படுகிறது.

**ஆர் பிலிப். கலஹா.**

**கேள்வி:** ஒரு கால கட்டத்தில் நகைச்சுவை படங்களில் நடித்து. கலக்கிக் கொண்டிருந்த நடிகர் சிவாவை இப்போது படங்களில் பார்க்க முடியவில்லையே.. அவர் படங்களில் நடித்துக் கொண்டிருக் கிறாரா..?

**பதில்:** நீண்ட இடை வெளிக்குப் பிறகு ராம் இயக்கத்தில் சிவா கதாநாயகனாக நடிக்க உள்ளார். 'கற்றது தமிழ்' 'தங்கமீன்கள் ''தரமணி' 'பேரன்பு' படங்களை இயக்கியவர் ராம். அடுத்ததாக நிவின் பாலி, அஞ்சலி, சூரி நடிப்பில் 'ஏழு கடல் ஏழு மலை'படத்தை இயக்கியுள்ளார். இந்தப் படம் விரைவில் திரைக்கு வருமென அறிவிக் கப் பட்டுள்ளது. இதை அடுத்து 'சென்னை 28' ,'தமிழ் படம்','கலகலப்பு'உள்ளிட்ட பல படங்களில் நடித்த சிவா நடிக்கும் படத்தை இயக்குகிறார்.

இதுவரை கொமெடி கலந்த வேடங்களிலேயே நடித்து வந்த சிவா அதிலிருந்து மாறு பட்டு இந்த படத்தில் நடிக்கிறார். இது ஒரு உணர்வுப்பூர்வமான படமாக இருக்குமென்று படக் குழு தெரிவித்துள்ளது. யுவன் சங்கர் ராஜா இசை அமைக்கிறார்.

கடந்த 6ஆம் திகதி முதல் கோவையில் படப் பிடிப்பு நடை பெற்று வருகிறது.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# 'தக்ஸ்'




நடன இயக்குனர் பிருந்தா இயக்கத்தில் உருவாகி இருக்கும் இரண்டாவது திரைப் படம் 'தக்ஸ்'. இந்த படத்தை எச்.ஆர்.பிக்சர்ஸ் சார்பில் ரியா சிபு தயாரித்துள்ளார். இப்படத்தில் ஹிருது ஹரூன், சிம்ஹா, ஆர்.கே.சுரேஷ், முனிஸ்காந்த் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சாம்.சி.எஸ் இசையமைத்திருக்கும் இப்படத்தின் ஒளிப்பதிவை பிரியேஷ் குருசாமி மேற்கொண்டுள்ளார். தக்ஸ் போஸ்டர் இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்நிலையில், 'தக்ஸ்' படத்தின் ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் வருகிற பிப்ரவரி 24ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது. இந்த போஸ்டரை நடிகை குஷ்பு தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

# பாடகியாக ஆசை



## ராஷிகன்னா

பிறமொழி படங்களிலும் பாட ஆசையாக இருக்கிறது. வாய்ப்பு வரும்போது நிச்சயம் எனக்குள் இருக்கும் பாடகியை எல்லோருக்கும் தெரியப்படுத்துவேன் என்கிறார் ராஷிகன்னா. தமிழில் இமைக்கா நொடிகள், அடங்க மறு, அயோக்யா, துக்ளக் தர்பார், அரண்மனை 3, திருச்சிற்றம்பலம், சர்தார் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள ராஷி கன்னா தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கிறார். சினிமா அனுபவங்கள் குறித்து ராஷிகன்னா அளித்துள்ள பேட்டியில், "சினிமாவில் தொடர்ந்து நீடிக்க சவாலான கதாபாத்திரங்களில் நடிப்பது அவசியம். தற்போது எனது முழு கவனமும் நடிப்பின் மீதே இருக்கிறது. திரைப்படங்களில் பாடவேண்டும் என்ற ஆசையும் எனக்குள் இருக்கிறது. ஏற்கனவே தெலுங்கு படத்தில் ஒரு பாடல் பாடி இருக்கிறேன். பிறமொழி படங்களிலும் பாட ஆசையாக இருக்கிறது. வாய்ப்பு வரும்போது நிச்சயம் எனக்குள் இருக்கும் பாடகியை எல்லோருக்கும் தெரியப்படுத்துவேன். நடிப்பு என்பது விதவிதமான கதாபாத்திரங்களில் வாழ்வது போன்றது. நம்மை சரியாக புரிந்து கொண்டால் எந்த கதாபாத்திரம் ஆனாலும் ஒன்றிப்போய் நடித்து ரசிகர்கள் பாராட்டை பெற முடியும். எனது ஒன்பது ஆண்டு சினிமா வாழ்க்கையில் ஒவ்வொரு நடிகரிடம் இருந்தும் ஒரு விஷயத்தை கற்றுக்கொண்டேன். நிஜ வாழ்க்கையில் நான் வலிமையான பெண். ஆன்மிக விஷயங்கள் பற்றி அதிகம் பேசுவேன். வாரத்தில் ஐந்து நாட்கள் உடற் பயிற்சி செய்கிறேன். யோகா, தியானம் செய்வேன். இனிமேல் என்னிடம் உள்ள புதிய திறமையை அனைவரும் பார்ப் பார்கள்'' என்றார்.



# ஈழத்தமிழர் நலனுக்காக என் மகள் திவ்யா தொடர்ந்து உழைப்பார்

பசுமை சமுதாயம் திட்டத்தில் ஈழத்து செல்வா பேத்தியுடன் தனது மகள் இணைந்து செயல்படுகிறார் என்றும், ஈழத்தமிழர்களின் நலனுக்காக தன் மகள் தொடர்ந்து உழைப்பார் என்றும் நடிகர் சத்யராஜ் கூறியுள்ளார். நடிகர் சத்யராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: செல்வாவின் பேத்தியுடன்... இலங்கையில் உள்ள வடக்கு மாகாண பகுதியில் அமைந்திருக்கும் நெடுந்தீவில் பசுமைப்பள்ளி, பசுமை சமுதாயம் என்ற பெயரில், ஈழத்து காந்தி என்று அழைக்கப்படும் தந்தை செல்வாவின் பேத்தி பூங்கோதை சந்திரஹாசனும், என் மகள் திவ்யாவும் இணைந்து ஒரு அற்புதமான திட்டத்தை தொடங்கியுள்ளனர். இதில் நான் மிகவும் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். இந்தத்திட்டத்தில் பயனுள்ள விஷயங்கள் அடங்கியிருக்கிறது. முதலாவது, குழந்தைகளின் கல்வி, எதிர்காலம் மற்றும் விவசாயம் என்ற அற்புதமான தொழிலை கற்றுக்கொள்வது அதில் அந்த குழந்தைகளின் பெற்றோரையும் ஈடுபடச்செய்வது எனப்பல விஷயங்கள் அடங்கியிருக்கிறது.

அவர்களுக்கு ஒரு புதிய தொழிலை கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு அமைய இருக்கிறது. இந்தப்பணிகளில் பூங்கோதை சந்திரஹாசனும், என் மகள் திவ்யாவும் இணைந்து செயல்படுவதை நினைக்கும்போது சந்தோஷமாக இருக்கிறது. தொடர்ந்து உழைப்பார் இந்த நேரத்தில், எம்.ஜி.ஆரின், நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி, சின்னஞ்சிறு கைகளை நம்பி ஒரு சரித்திரம் இருக்குது தம்பி என்ற பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகிறது. ஈழத்தமிழர்களின் நலனுக்காக என் மகள் திவ்யா தொடர்ந்தும் உழைப்பார். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# லியோ படத்தின் முக்கியமான ஹிண்ட்



நடிகர் விஜய் தற்போது இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் லியோ படத்தில் நடித்து வருகிறார். விஜய்யுடன் இணைந்து அர்ஜுன், மன்சூர் அலிகான், ப்ரியா ஆனந்த், த்ரிஷா, கௌதம் வாசுதேவ் மேனன் என பல நட்சத்திர பட்டாளங்கள் நடித்து வருகின்றனர். அனிரூத் இசையில் உருவாகிக்கொண்டிருக்கும் இப்படத்தின் ப்ரோமோ வீடியோ அண்மையில் இணையத்தில் வெளியாகி மாபெரும் எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த ப்ரோமோ வீடியோவில் விஜய் பகலில், சாக்லேட் தயாரிக்கும் தொழிற்சாலையில் உள்ளது போன்றும், இரவில் கத்தி தீட்டி சண்டைக்கு ரெடியாவது போன்றும் விஜய்யின் தோற்றம் காண்பிக்கப் பட்டது. அது மட்டுமில்லாமல் விஜய்யுடன் மோத சொகுசு காரில் படையெடுத்து வரும் நபர்களையும், பாம்பு, தேள், கழுகு உள்ளிட்ட உயிரினங்களையும் காண்பித்து விக்ரம், கைதி படத்தின் தொடர் கதையாக உருவாகியிருந்தது.

லோகேஷ் கனகராஜ் இப்படத்தை எவ்வளவு சஸ்பென்சாக இயக்க நினைத்தாலும், எப்படியோ வெளியில் பல விஷயங்கள் கசிந்து விடுகிறது. ஆனால் இத்திரைப்பட கதாசிரியர் ரத்னகுமாரின் இந்த பேட்டி லியோ படத்தின் மொத்த சஸ்பென்ஸையும் உடைத்துள்ளது. பத்திரிக்கையாளர்கள் சூழ்ந்து கொண்ட இடத்தில் கதாசிரியர் ரத்னகுமார், லியோ படத்தில் தரமான சம்பவம் உள்ளது என்றும், கமலஹாசனும், விஜய்யும் இணைந்து வரும் காட்சிகள் வேற லெவல் என்றும் தெரிவித்துள்ளார்.

# பெண்களை கவரும் ஆரி வேர்க்



அழகை விரும்பாதவர்கள் இருக்க மாட்டார்கள். அதிலும் பெண்கள் கொஞ்சம் அதிகமாகவே அழகை விரும்புவார்கள், ரசிப்பார்கள். இது அவர்களின் இயல்பான குணம்.

அதனால் தான் ஆடை அலங்காரங்களை பொறுத்தவரை ஆண்களை விட பெண்களுக்கு பல மடங்கு அதிகமாக இருக்கும். விதவிதமான ஆடை வடிவமைப்புகளை டிசைனர்கள் உருவாக்கி கொண்டே வருவார்கள்.

புதிதாய் கலை நயத்துடன் என்ன வந்தாலும் அதை வாங்கி அணிந்து பயன்படுத்துவதில் பெண்கள் அதிகமான ஆர்வம் காட்டுவார்கள். இதை ஜவுளி கடைகளுக்கு செல்லும்போது எல்லோரும் பார்க்கவும் முடியும், உணரவும் முடியும்.

எத்தனை சேலைகளை புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டே இருப்பார்கள்.

கல்லிலே கலை வண்ணம் கண்டான்.... என்று தான் முன்பெல்லாம் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆனால் இப்போது பெண்களின் சேலை ஜாக்கெட்டுகளில் தங்கள் கற்பனைகளையும், கைவண்ணத்தையும் காட்டி கவருகிறார்கள்.

இப்போது பெண்களை கவருவதில் பிரபலமாக இருப்பது ஆரி வேர்க் என்ற கலைநயம் மிக்க தையல்தான்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு வரை வட மாநிலங்களில் பிரபலமாக இருந்த இந்த வேலைப்பாடு கொஞ்சம் கொஞ்சமாக தமிழர்கள் மத்தியிலும் பரவத் தொடங்கியது.



இப்போது தமிழ் பெண்களிடம் பிரபலமாக இருக்கிறது இந்த ஆரி வேர்க் தையல் தான். ஒரு பட்டு புடவை குறைந்த பட்சம் ரூ. 5000 க்கு எடுத்து விடுவார்கள். ஆனால் அதற்கான ஜாக்கெட்டை இந்த ஆரி வேர்க் வேலைப்பாடு மூலம் தயார் செய்வதற்கு குறைந்தபட்சம் ரூ. ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை இருக்கிறது. கேட்டால் அடேங்கப்பா என்று ஆச்சரியப்பட தோன்றும்.

ஆனால் இதுதான் இன்று பெண்களிடையே மிகப்பெரிய மோகத்தை உருவாக்கி இருக்கிறது. மணப்பெண்ணுக்கு பட்டு சேலையின் மதிப்பு சராசரியாக ரூ.25 ஆயிரம் என்றால் அவர்களுக்கு ஜாக்கெட் தைப்பதற்கான கூலி ரூ. 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை ஆகிறது. குடும்பச் சூழ்நிலையை கருதி ரூ.2000 முதல் 5000 அல்லது 10 ஆயிரத்திற்குள் முடித்து விடுபவர்களும் இருக்கிறார்கள்.

இந்த வேலைப்பாடு ஜாக்கெட்டில் தங்க நிறத்திலான முத்துக்களை தங்கம் மற்றும் வெள்ளை நிறத்திலான மிகச்சிறிய அளவிலான முத்துக்களை வடிவத்திற்கு ஏற்ப கோர்ப்பது தான். என்ன வடிவத்தை என்ன வேலை பாட்டை விரும்புகிறோமோ அதை அந்த ஜாக்கெட்டில் கொண்டு வர முடியும். விதவிதமான பறவைகள் பூக்கள் செடி கொடிகள் இலைகள் போன்று பல்வேறு விதமான வடிவமைப்புகளை இந்த ஜாக்கெட்டில் கொண்டு வந்து விடுகிறார்கள்.

இப்போது அதையும் தாண்டி ஜாக்கெட்டில் இதே வேலைப்பாட்டில் பெயர்களையும் பொறித்துக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் அதிலும் ஒரு படி மேலே போய் விட்டார்கள். காதலித்து திருமணம் செய்பவர்கள் காதலித்த காலத்தில் சில சுவாரஸ்யமான அனுபவங்களை சந்தித்து இருப்பார்கள். அதைக் கூட கற்பனையில் காட்சியாக்கி தங்கள் பட்டுக்களில் பார்டரில் இந்த ஆரி வேர்க் மூலம் செதுக்கி விடுகிறார்கள். பிழைக்க தெரிந்தவன் எப்படி வேண்டுமானாலும் சம்பாதிப்பான் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம். இது கலைஞர்களின் கற்பனை திறனை வெளிப்படுத்தி சம்பாதிக்கும் அற்புதமான கலை வேலைப்பாடு.

# சருமத்துக்கேற்ற பவுண்டேஷனை தெரிவு செய்வது எப்படி...!

மேக்கப் என்றாலே, அதற்கு அடித்தளமாக இருப்பது பவுண்டேஷன் (Foundation) தான். சருமத்தின் நிறத்துக்கு, தன்மைக்கு ஏற்ப பவுண்டேஷனை தேர்வு செய்யும்போதுதான், மேக்கப் சரியான முறையில் வெளிப்படும். பவுண்டேஷன் சரியாக இல்லையெனில், மொத்த மேக்கப்பும் சொதப்பிவிட வாய்ப்புள்ளது. இப்படி, மேக்கப்பில் மிக முக்கிய அம்சமான பவுண்டேஷனை சருமத்துக்கு ஏற்ப எப்படி தேர்ந்தெடுப்பது என்பது குறித்துப் பார்க்கலாம்.

பவுண்டேஷன் பயன்படுத்தும் முன் முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் சரும வகைதான். எண்ணெய்ப்பசை சருமம், வறண்ட சருமம், நார்மல் சருமம், காம்பினேஷன் சருமம் என இந்த அடிப்படை நான்கு சரும வகைகளில் என்ன மாதிரியான சருமத்தை கொண்டுள்ளோம் என்பதை கொண்டே பவுண்டேஷனை தேர்ந்தெடுக்க வேண்டும்.




எண்ணெய்ப்பசை சருமம் என்றால் பவுடர் பவுண்டேஷன் அல்லது எண்ணெய் இல்லாத திரவ வடிவிலான பவுண்டேஷனை (Liquid Foundation) பயன்படுத்தவும்.

வறண்ட சருமம் என்றால் ஈரப்பதம் கொடுக்கவல்ல லிக்விட் பவுண்டேஷன், க்ரீம் பவுண்டேஷன் பயன்படுத்தலாம்.

காம்பினேஷன் சருமம் என்றால் லிக்விட் அல்லது பவுடர் பவுண்டேஷன் பயன்படுத்தலாம்.

முகப்பரு உள்ள மற்றும் சென்சிட்டிவ் சருமம் என்றால், ஆல்கஹால் மற்றும் நறுமண பொருள்கள் கலந்த பவுண்டேஷனை தவிர்ப்பது நல்லது.

சரும நிறத்தை முகத்தில் இல்லாமல் தாடை பகுதி அல்லது கழுத்துப் பகுதி நிறத்தை கொண்டே கணக்கிட வேண்டும். அப்படி செய்வதன் மூலமே பவுண்டேஷனில் சரியான ஷேடை (shade) தேர்ந்தெடுக்க முடியும். மேலும் குளிர்காலம், கோடைக்காலம் என்று சருமத்தின் நிறம் மாறும் என்பதால் ஒவ்வொரு முறை பவுண்டேஷன் வாங்கும் போது நிறத்தை கவனிப்பது நல்லது.

சருமத்தின் அண்டர்டோன் (Undertone) பற்றிய அறிய வேண்டும். வார்ம் (Warm) அண்டர்டோன் உள்ளவர்களின் சருமம் பீச், மஞ்சள், அல்லது தங்க நிறத்தில் இருக்கும். இவர்கள் வார்ம் டோன்க்கு பொருந்தும் பவுண்டேஷன் ஷேடை (shade) தேர்ந்தெடுக்க வேண்டும். கூல் (Cool) அண்டர்டோன் உள்ளவர்களின் சருமம் பிங்க், ரெட் நிறத்தில் இருக்கும். இவர்கள் கூல் டோன்க்கான பவுண்டேஷன் ஷேடை தேர்ந்தெடுக்க வேண்டும். நியூட்ரல் (Neutral) அண்டர்டோன் உள்ளவர்கள், மேலே சொன்ன இரண்டின் சீரான கலவை சருமத்தை கொண்டிருப்பார்கள்.



பவுண்டேஷன் உங்கள் சருமத்தில் எந்த மாதிரியான இறுதிப் பொலிவை (Finish) ஏற்படுத்த விருபுகிறீர்களோ, அதற்கேற்ப dewy, matte, semimatte மற்றும் luminizing finish வகைகளில் ஒன்றை தேர்ந்தெடுக்கலாம்.

பவுண்டேஷனை வாங்கும் முன், பெரும்பாலும் அதனை கைகளில் பரிசோதித்து வாங்குவோம். ஆனால் கையின் நிறமும், முகத்தின் நிறமும் ஒன்றுபோல் இருக்காது என்பதால் தாடையின் ஓரத்தில் பரிசோதனை செய்து வாங்குவது நல்லது. தாடையின் நிறம்தான் முகத்திற்கேற்ப இருக்கும். தற்போது விர்ச்சுவல் ட்ரை வசதி இருப்பதால் அதையும் பயன்படுத்தலாம்.



# சூப்பரான இட்லி டிக்கா

**தேவையான பொருட்கள் :**

இட்லி 2
மூவர்ண குடைமிளகாய் தலா 1
இட்லி மிளகாய்ப்பொடி 2 தேக்கரண்டி
உப்பு, எண்ணெய் தே.அளவு
மிளகுத்தூள் 1 தேக்கரண்டி
டூத்பிக் தே.அளவு
சோள மாவு 1 மேசைக்கரண்டி

**செய்முறை:**

குடைமிளகாய், இட்லியை துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும். ஒரு பவுலில் இட்லி துண்டுகளை சேர்த்து அதன் மேல் சோள மாவை தூவி கிளறவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு சூடாக்கி, இட்லிகளை போட்டு பொன்னிறமாக பொரித்தெடுக்கவும். இதன் மேலே இட்லி மிளகாய்ப்பொடிகளை எல்லா பக்கமும் படுவது போல தூவவும்.

அடுப்பில் மற்றொரு வாணலியை வைத்து எண்ணெய் விட்டு சூடானதும் கியூப் வடிவத்தில் நறுக்கிய குடைமிளகாய் துண்டுகளை சேர்த்து வதக்கவும். இதில் உப்பு, மிளகுத்தூள் சேர்த்து லேசாக வதக்கவும். இனி டூத்பிக்கில் இட்லி, குடைமிளகாய் என ஒன்றன் பின் ஒன்றாக சொருகி பரிமாறவும்.







# கொழும்பில் களைகட்டிய "தேனும் பாலும்" கலந்த

தினகரன் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணை

# "வசந்த கானங்கள்"











*IDM nations campus international* பூரண அனுசரணையில் கொழும்பில் பல மண்டபங்களில் மேடையேறி, பழைய இடைக்கால பாடல்களால் மக்கள் அபிமானம் வென்ற கவிக்கமல், பாசில், இணைந்து வழங்கிய "வீனஸ்" "அக்ஷரா" இசைக்குழுவினர்களின் இனிய இசையில் "தேனும் பாலும்" கலந்த "வசந்த கானங்கள்" 60வது இசை நிகழ்ச்சி கொழும்பு 07 பொது நூலக கேட்போர் மண்டபத்தில் 12.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மிக கோலாகலமாக நடந்தேறியது.

மனது மறக்காத முத்தான பழைய இடைக்கால பாடல்களால் இனிமை சேர்த்த இந்நிகழ்வில் முன்னிலை அதிதியாக டாக்டர் எம்.ஏ.சி. மௌசூம் கலந்து சிறப்பிக்க, சர்வதேச இசைக்கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவர் அதி வணக்கத்திற்குரிய அருட்கலாநிதி எஸ் சந்ரு பெர்னாண்டோ நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். பிரதம அதிதியாக கலாபூஷணம் இலங்கை பொன்மனச் செம்மல் எம். எஸ். தாஜ்மஹான் நிகழ்ச்சியை சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் சிறப்பதிதியாக கலந்து சிறப்பிக்க,

கௌரவ அதிதிகளாக
தொழிலதிபர் டாக்டர் பஹார்தீன்,
தொழிலதிபர் டாக்டர் ரமிஸ் மொஹம்மட்,
தேசமான்ய இஸ்மாயில்,
தேசமான்ய மௌசும் ஜிப்ரி,
தொழிலதிபர் மொஹம்மட் சிராஜ்,
டாக்டர் கௌசலா தேவி கோவிந்தப் பிள்ளை,
நகரசபை உறுப்பினர் ஜோசப் பெர்ணான்டோ,
சமூக செயலாளர் ஜேக்கப்
சமூக சேவையாளர் உசைன் போல்ட்,
சமூக செயற்பாட்டாளர் ஏ.டீ முரளீஸ்வரன்,
சமூக சேவையாளர் எஸ். ஆனந்தக்குமார்,
சமூகசேவையாளர் சாஜஹான் *color house*
மனித நேயன் இர்சாத் ஏ காதர்,
சமூக சேவையாளர் அஸீஸ் லக்கானா,
கலைஞர் ஏ.ரவீந்திரன்,
கலைஞர் சண்மு,
ஓவியன் ஆர்ட்ஸ் உரிமையாளர கலைஞர் ஓவியநாதன்,
கிரிக்கட் பயிற்றுவிப்பாளர் ஜே.எம். எம். ரிஸ்வான்,
தெஹிவளை நகர சபை உறுப்பினர் முஸ்தபா ஷரீனா,
தொழிலதிபர் நஸ்ரா ஸ்டோர்ஸ் மொஹம்மட் நிதார்,
கலைஞர் பொன் பத்மநாதன்,
கவிஞர் தனபாலன்,
இசையமைப்பாளர் பஸால் ஜின்னா,
சிரேஷ்ட அறிவிப்பாளர் உவைஸ் செரிப் ,
நடிகை சாந்தி பானுஷா, நடிகை வசந்தகுமாரி

பிரபல வாத்திய கலைஞர் கருப்பையாபிள்ளை பிரபாகரன், கவிமணி நஜுமுல் உசைன், கவிதாயினி நூருல் அய்ன், கவிஞர் ரஷீட் எம் ஹபீல், பிரபல தொலைக்காட்சி சிரேஷ்ட அறிவிப்பாளர் சா ஆஷா, கலைஞர் செல்வராஜன். சமூக சேவையாளர் இப்லால், கலைநேசன் பாயிம், கவிஞர் பாடகர் நவ்சர், சமூகசேவையாளர் மொஹமட் ஹமீத் மற்றும் கவிஞர்கள், கலைஞர்கள் ஊடகவியலாளர்கள் பலரும் இந்த நிகழ்விற்கு வருகை தந்திருந்தனர்.

மறைந்த பிரபல பின்னணி பாடகி வாணி ஜெயராமின் நினைஞ்சலியுடன் நிகழ்ச்சி தொடங்க,

சிறப்பான ஆரம்பம் பிரபல பாடகி நிலுக்ஷி ஜெயவீரசிங்கத்தின் இனிய குரலால் தில்லானா மோகனம்மாள் படப்பாடல் மறைந்திருந்து பார்க்கும் மர்மமென்ன அட்டகாசமாய் இருந்தது. பாடல்களின் தெரிவுகள் மிகச்சிறப்பாக ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது.

குறிப்பாக யாரும் தெரிவுசெய்யாத நாணத்தாலே கன்னம் மின்ன மின்ன, பாலக்காட்டு பக்கத்திலே, ஒருநாள் உன்னோடு ஒருநாள், வேண்டும் வேண்டும் உங்கள் உறவு, தேன் சிந்துதே வானம், மாதமோஆவனி, குறிஞ்சி மலரில் வழிந்த ரசத்தை, போன்ற பாடல்களை குறிப்பிடலாம்.

சிரேஷ்ட கலைஞர்களின் கௌரவிப்பு மட்டுமல்லாது இந்திய நாட்டில் ஹைதராபாத்தில் இடம்பெற்ற பெருமைக்குரிய அப்துல் கலாம் கிரிக்கெட் 20/20 2023, பத்தொன்பது வயதிற்குட்பட்ட போட்டியில் வெற்றி பெற்று நம்நாட்டுக்கு பெருமை சேர்த்த வீரர்களுக்கு விருது வைபவமும் அருமையாக இருந்தது. இதனை கிரிக்கட் சபை பயிற்றுவிப்பாளர் ஜே எம் எம் ரிஸ்வான் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியின் இறுதியாய் அண்மையில் அரச கலாபூஷணம் விருது பெற்ற நிகழ்ச்சியின் பிரதம அதிதி இலங்கை பொன்மனச் செம்மல் கவிஞர் எம். எஸ் தாஜ்மஹானுக்கு, அவரின் கலைசேவையை பாராட்டி வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கியது சிறப்பம்சமாய் அமைந்தது.

ஆரம்பம் முதல் இறுதிவரை இசைப்பிரியர்களால் மண்டபம் நிறைந்த இந்நிகழ்ச்சிக்கு தமிழ் எப் எம் ஆர் அஜித்குமார் நிகழ்ச்சி தொகுத்து வழங்க, ஊடக அனுசரணை தினகரன் பத்திரிகை, தினகரன் வாரமஞ்சரி, தமிழ் எப். எம் மொஹபத் டீ வி மற்றும் அக்ஷரா மீடியா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பாடகர் கவிக்கமல்**












## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்




## இடைவெளி நிரப்புங்கள்




## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## தொடர்பு படுத்துங்கள்



நான் ரொம்ப பிஸி...





## இரு தசாப்தங்களை கடந்து நிமிர்ந்து நிற்கும்

# 'படிகள்' சிற்றிதழின் பயண வெற்றிக்கான ஆசிரியர் வசீம் அக்ரம்

ஈழத்து இலக்கியப் பரப்பின் எழுத்தாளுமைகளின் ஆரம்பத் தளமாக, களமாக இலக்கிய இன்ப பசிக்கு தீனிபோட்டது சிற்றிதழ்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. அந்தவகையில் பெரும்பான்மை தமிழ்பேசாத சூழலிலிருந்து ஒரு இலக்கிய சஞ்சிகை வெற்றிநடை போடுகின்றது என்பது தமிழுக்கு கிடைத்த வரம் என்று சொல்லலாம். அதுதான் 'படிகள்' சஞ்சிகை: அதனை வழி நடாத்தும் ஆசிரியர் வசீம் அக்ரமுடனான நேர்காணலை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

**கேள்வி: புராதன வரலாற்றின் ஒரு பகுதியைக் கொண்டிருக்கும் அநுராதபுரந்தான் உங்கள் பிறந்தகமா?**

அநுராதபுரமாவட்டத்தின் நாச்சியாதீவு எனும் கிராமத்தில் பிறந்து தற்போது கஹடகஸ்திகிலிய பிரதேசத்தில் வசித்து வருகிறேன்.

**கேள்வி: தமிழ் பேசும் மக்கள் அரிதாக வாழும் இச்சூழலில் எவ்வாறு எழுத்துத் துறையில் உள்வாங்கப்பட்டீர்கள்?**

எனது தந்தை ஒரு தமிழ் மொழி ஆசிரியர். அதனால் அவரிடம் மொழியியல், இலக்கியம், சிறுகதை, நாவல், கவிதை என்று நூற்றுக்கணக்ககான நூல்கள் இருந்தன. நான் கல்விப் பொதுத் தராதர சாதரண தர மாணவனாக இருந்த காலத்தில் அவற்றை வாசிக்க கிடைத்தது. மேலும் நான் அநுராதபுரம் ஸாஹிரா கல்லூரியில் உயர்தரம் கற்ற காலங்களில் அதன் அதிபராகவிருந்த கலாபூஷணம் அன்பு ஜவஹர்சா எனது இலக்கிய ஆர்வத்தை இனங்கண்டு ஊக்கப்படுத்தினார். அத்தோடு எப். சப்ரினா ஆசிரியை, றிசானா ஆசிரியை போன்றவர்களது வழிகாட்டுதல்களும் கிடைத்தன. மேலதிகமாக சகோதரர் எம்.சி. ரஸ்மின், நாச்சியாதீவு பர்வீன் போன்றவர்களும் என் எழுத்துத் துறைக்கு கால்கோலிட்டனர்.



**கேள்வி: அக்கால இலக்கியத் துறையில் உங்கள் வகிபாகம் எதைப் பற்றியது?**

கவிதையின் பால் எனக்கு ஈர்ப்பு அதிகம். இதுவரை இரண்டு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளேன். சமூகத்தில் விளிம்பு நிலைசார் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு சாதாரண படைப்பாளியாக சமூக மாற்றத்தை விரும்புகிறேன். கவிதை சமூக மாற்றத்தின் ஒரு கருவி என்பது எனது நம்பிக்கை. அதற்கு சான்றாக சொல்வதானால் பாரதி, இப்னு கையாம், தாகூர், தர்வீஸ் போன்ற உலகத் தரக் கவிஞர்களை பேச இயலும்.

இது தவிர அநுராதபுரம் நண்பர்கள் இலக்கிய குழு என்ற அமைப்பினை நிறுவி படிகள் என்ற இரு மாத இலக்கிய சஞ்சிகையை கடந்த 18 ஆண்டுகளாக வெளியிட்டு வருகிறேன். இதன் மூலம் பிரதேச இலக்கிய அடையாளத்தின் ஊடாக தேசிய இலக்கிய பரிவர்த்தனைக்கு வழி சமைத்தல் என்பதே எனது கனவு.

**கேள்வி. இரண்டு தசாப்தங்களை நோக்கிய படிகள் சஞ்சிகையை தக்க வைத்துள்ளதன் இரகசியம் என்ன?**

நாம் பாடசாலையில் உயர்தரம் கற்கின்ற மாணவராக இருந்தபோதே அதனை ஆரம்பித்தோம். அதனை நாம் ஆரம்பிக்கும் போது, இலக்கியம் சார்ந்த புரிதலுடன் ஆரம்பிக்கவில்லை. இரண்டு இதழ்களை வெளியிட்டவுடன் இலக்கியம், சிற்றிதழ் தொடர்பான வாசிப்பை வளர்த்துக்கொண்டு பயணித்தோம். அதனால் எமது இலக்கிய வளர்ச்சியை முன்னிறுத்தியதன் விளைவாக படிகள் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது என்பது அதன் முதல் பக்கம். இரண்டாவது என்னவெனில் எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் இலக்கிய பிரச்சாரங்கள், தனிப்பட்ட கௌரவங்கள் என்பனவற்றை புறந்தள்ளிவிட்டு இதனை ஒரு புறக்கிருத்திய சமூகப் பணியாக செயற்படுத்த விளைந்தோம். இதனை இலக்கிய உலகும் சமூக நலன்விரும்பிகளும் அடையாளங் கண்டு கொண்டனர். அதனால் படிகள் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு பயணிக்கிறது.



**கேள்வி: சிற்றிதழான படிகளின் வளர்ச்சியில் வாசகர்களின் பங்களிப்பு எந்தளவுக்கு காணப்படுகின்றது?**

சிற்றிதழ்களை வெளியிடும் போது, அதனை ஒரு இலாபகரமான முறையில் கட்டமைக்க முடியாது. அல்லது அதனை நமது சக்திக்கு மேலதிகமாக வெளியிடத் துணியவும் கூடாது. நம்மால் எதனை சுமக்க இயலுமோ அதனையே செய்ய வேண்டும். இந்த பின்னணியிலேயே படிகளை வாசகர்களிடத்தில் கொண்டு போகிறோம். தேவையான அளவு ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வந்து குவிகின்றன. தமிழ் நாட்டிலிருந்தும் பிரதிகள் கிடைக்கின்றன. சில நேரம் ஒரே தடவையில் இரண்டு இதழ்களுக்கான ஆக்கங்கள் ஒன்றே சேர்ந்து விடுகின்றன. எனினும் சந்தாதாரர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது.

**கேள்வி: படிகள் தவிர்ந்து வேறேதும் நூல்கள் உங்களால் வெளியீடு செய்யப்பட்டுள்ளதா?**

'மண்ணில் துழாவும் மனது" மற்றயது. 'ஆக்கிரமிப்பின் கால்த்தடம்". ஆனால் இலக்கியக் கட்டுரைகள், சிங்கள மொழிபெயர்ப்புகள், சினிமா விமர்சனங்கள என வேறு துறைகளிலும் என் தடம் உண்டு. 'வேலிகளைத் தாண்டும் வேர்கள்" என்ற அநுராதபுரம் தமிழ்க் கவிதைத் தொகுதியினது தொகுப்பாசிரியர்களில் ஒருவராகவும் இருக்கிறேன். படிகள் பதிப்பகத்தின் ஊடாக ஒரிரண்டு நூல்களை வெளியிட்டுள்ளேன்.

**கேள்வி. சமகால இலக்கியப் போக்குகள் பற்றி தங்களது நிலைப்பாடு?**

ஈழத்து இலக்கியத்தில் ஒரு வித தொய்வு நிலை தோன்றியுள்ளது. அதற்கு கடந்த மூன்றாண்டுகால சமூக அரசியல், பொருளாதார நிலவரம் காரணமாகின்றது. சிற்றிதழ்களே ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் முதுகெழும்பு. மேற்சொன்ன நெருக்கடிகள் காரணமாக சிற்றிதழ்களின் இருப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இலக்கிய வாசிப்பு, இலக்கிய விமர்சனங்கள், செயற்பாடுகள் என்பன கனதி குறைந்து காணப்படுகின்றன. அங்கும் இங்கும் உதிரியான முயற்சிகள் நடக்கின்றன. ஆனால் அவற்றில் ஆழமான ஈடுபாடு மக்களிடத்தில் குறைந்து காணப்படுவதாக கணிக்கிறேன்.

மேலும் முகநூல் பதிவுகள், இணைய இதழ்களின் வாயிலாக இன்னொரு பரிணாமம் முகிழ்ந்தாலும் புதிய எழுத்தாளர்களின் வருகை மிக அரிதாக இருப்பதை காணக்கூடியதாகவுள்ளது

**கேள்வி: இலக்கியத் துறையில் பெற்ற விருதுகள் கௌரவங்கள் பற்றி?**

உலகச்சிற்றிதழ் அமைப்பின் ஊடாக படிகள் சஞ்சிகைக்காக வளர்ந்துவரும் சிற்றிதழ் விருதும், உலக இஸ்லாமிய இலக்கிய இலங்கை மாநாட்டில் இலக்கிய பங்களிப்புக்கான விருதும் கிடைத்திருக்கின்றது.

விருதுகள் அளவுக்கு மிஞ்சி கிடைக்காமல் இருப்பதே நன்று என்பது எனது தனிப்பட்ட கருத்து.

**கேள்வி: உங்கள் தனிப்பட்ட வாழ்கையில் இந்த இலக்கியப் பயணம் தடையாகவுள்ளதா?**

இலக்கியத்தில் பயணிப்பதால்தான் நான் உயிர்ப்புடன் இருக்கிறேன். நான் வாழும் பிரதேசத்தில் கலை இலக்கிய, கல்வி மற்றும் சமூக சமய அமைப்புகளுடன் இணைந்து வீரியமாகச் செயற்பட முடிந்துள்ளது. இலக்கியம் வழி காட்டுகிறது. வாழ்வதற்கும் வாழ்வில் அபிவிருத்திக்கும் பின்னூட்டுகிறது.

நேர்காணல்:
**ஏ.எம். கஸ்புள்ளா**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# முயலாடு முன்றில் 09

முயலாடு முன்றிலில் குழந்தைகள் விலங்குகளாகவும், பறவைகளாக வும், கார்ட்டூன்களாகவும் குழுமி யிருக்கக் கதை வளரும் பொழுது அழகானது. குழந்தைகள் கற்பனை வளம் மிக்கவர்கள்; ஞாபகசக்தி கொண்டவர்கள். காணும் காட்சிகளிலும், கேட்கும் செவிப்பி ரதாபங்களிலும் கேள்வி வளர்ப்பவர்கள்.

குழந்தைகளுக்குப் பிடித்தமானது கதை. கதை கேட்கவும், சொல்லவும் துடிப்பார் கள்; கொண்டாடுவர்கள்.

வாழ்வு நெடுகிலும் சிறுவருக்கு கதை சொல்லுதல் நிகழ்ந்து வந்திருக்கிறது. கூட்டுக்குடும்ப காலத்தில் பாட்டியும், பாட்டானும் பாட்டும் கதையும் சொல்லி யாக இருந்துள்ளனர். சிறுவர் பட்டாள மொன்று அவர்களுக்கு முன் வட்டமாக அமர்ந்திருந்து வட்டநிலவின் ஒளியை முற்றத்தில் நிரப்புவார்கள்.

ஊருக்கு ஊர் சிறுவர்க்கு கதை சொல் வதும், சிறுவர் கதை சொல்வதும் ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சியாக இருந் துள்ளது.

குழந்தைகளுக்கு அறிவுணர்த் தும் வழியாக மட்டுமன்றி திறனூக் கியாகவும், மனப்பாங்கு மாற்றுக் கருவியாகவும், ஒழுக்கவிழுமிய ஆற்றுப்படுத்தல் சாதனமாகவும், மற்றவையை நேசிக்கும் உயர் பண்பின் ஊடகமாகவும் கதைக் கட்டுமானங்களுள்ளன.

கதை கேட்பதால் புலனியக்க விருத்தி மட்டுமன்றி மூளை விருத்தியும், மொழியாளுகை யும் குழந்தைகளுக்கு வந்தடை கிறது. அதனாற்த்தான் கதை சொல்லல் ஒரு கல்விசார் ஊடக மாகவும் மேலுயர்கிறது.

நெருப்புச்சட்டிக் கதைகள் என்றொரு பண்பாடு முன்னம் இருந்திருக்கிறது. இரவிலே நெருப்பு மூட்டிய வெளிச்சத்தில் சிறார்கள் குழுமியிருந்து மூத்தவர்கள் கதை சொல்லும் வழக்கம் இது.

காலமாற்றம் சிறுவர் கலையுலகில் வடிவத்தையும், வழியையும் மாற்றி விட்டது எனலாம். அல்லது தகவல் பரப்பு நூற்றாண்டு டிஜிட்டல் கதை யுலகை சிருஷ்டித்துள்ளதையும் காணுகிறோம்.

கதை கேட்டு அல்லது சொல்லி வளர்ந்த சிறுவர்களிடம் உன்னத மான பண்பாடு இருந்திருக்கிறது. இன்று கதை சொல்வதும் கேட் பதும் அருகி விட்டது. டிஜிட்டல் பாணி யிலான ரிமோட் கொண்றோல் அல்லது ரோபோ முகத்தில் கதைப்பாணி மாற் றங்கண்டுள்ளது. சிறுவர்களைச் சுற்றி அல்லது சிறுவர்களே பாத்திரமான கதை முறையொன்று வாசிப்பற்ற அல்லது கேள்ளிப்புலமற்ற காணொளி வகை வளர்ந்துள்ளது. கார்டூன் கதைகள் சிறுவ ருலகை ஆக்கிரமித்து நிற்கிறது. பாட்டி சொல்லிய கதைகள் காலமாகி விட்டன.

இன்றைய சிறுவர்கள் மாயாஜாலக் கதைக்குள் வாழ்கிறார்கள். அதி கற்ப னைக்குள் அலைகிறார்கள். இந்தப் பின்புல மாற்றங்கள் முயலாடு முன் றிலில் கூடிவிளையாடிக் கதை பரிமா றும் யதார்த்த வாழ்வு முறை மருவி விட்டது.

செயற்கையாய்ச் சமைத்ததொரு கணிணிக் கதை மரபு தோன்றி விட்டது. ஆதனாற்தான் தனித்த னியே சிறுவர்கள் சிறுதிரைக்குள் மூழ்கியிருக்கின்றனர். முயலாடு முன்றில் அழகற்றுவிட்டது.

இன்னொரு புறம் சிறுவர் கதையாக்கங்களால் முயலாடு முன்றிலை அழகூட்டலாம். சிறுவர் கதையாக்க மரபு, சிறு வருக்கான கற்பனைவளம், மொழித்தேர்ச்சி, சிந்தனைப் போக்கு, பண்பாட்டுக்கோ லம், சமூகப்பார்வை, அனு பவவெளிப்பாடு உள்ளிட்ட பண்புக்கோர்வைகளால் உயிர் பெறுவது.

இயல்பாகவே குழந்தை மனதிலூறும் கற்பனைக்கு வடிகாலிட்டு விட்டால் அல்லது ஆற்றுப்படுத்தி விட்டால் சிறுவர் கதையாக் கம் நிகழ்வுறும்.

படக்கதைகள், படங்களுக்கு கதையெழுதுதல், பழமொழிக்கு கதையெழுதுதல், விலங்குகளைச் சிறுவர் கதையுலகுக்கு கொண்டு வருதல், படிப்பினை மற்றும் நன் னெறிக் கதையெழுதல் என சிறுவர் கதையாக்க உலகு சிறப்புறும்.

இன்றைய தகவல் மைய உலகு டிஜிட்டல் கதையாக்க வல்லமை யைச் சிறார்களுக்கு ஊட்டி நிற்ப தும் புத்தாக்க உத்தியெனலாம்.

முயலாடு முன்றில் சிறுவர் கதை மாந்தரால் உயிர்ப்பு றட்டும்.






# தாராபுரம் ஊரின் அடையாளம்

## ஹாஜா அலாவுதீன்



மன்னார் தாராபுரத் தைப் பிறந்த இட மாகவும், புத்தளம் அல்காஸிம் சிற்றியை வாழ்விடமாகவும் கொண்ட அபுபக்கர் ஹாஜா அலாவு தீன், கல்வி, கலை, இலக்கிய, ஆய்வுத் துறையில் ஆழக்கா லூன்றி நின்றவர்.

ஆசிரியராகக் கல்விப்பணி தொடங்கி அதிபராகி மூன்று தசாப்தங்கள் செயற்பட்டவர். ஆயிரக்கணக்கான மாணவர்க ளுக்கு கல்வியும், கலை இலக் கியமும் நல்லொழுக்கமும் போதித்தவர்.

நாடக உருவாக்கத்திலும் நடிப்பு வெளிப்பாட்டிலும் உணர்வு பூர்வமாகப் பங்காற்றி யவர். தன் பாடசாலைக் காலத் திலேயே கலையார்வம் நிரப்பப் பெற்ற முன்மாதிரியான கலை வெளிப்பாட்டாளர்.

நாடகங்களின் நெறியாள ராகச் செயற்பட்டு நடித்த வர். இலங்கை வானொலிக் கலைஞரான ஹாஜா அலா வுதீன் முஸ்லிம் சேவையில் நாடகங்களையும், சஞ்சாரங்க ளையும் எழுதியவர். இதனூ டாக 'ஹாஜா அலாவுதீனின் வானொலி நாடகங்கள்'' படிக் கும் நாடகப் பனுவ லைத் தந்தவர்.

வடக்கு முஸ்லிம்க ளின் இடப்பெயர்வு வாழ்வை வானொலி முஸ்லிம் நாடகமா கப் பதிவு செய்த முன்னோடி இவர். வானொலி, தொலைக் காட்சி, மேடைகளைக் கள மாகக் கொண்டு தனது நாடக ஆளுமையை வெளிப்படுத்தி யவர்.

ஹாஜா தனது கவிதை களால் வடக்கு முஸ்லிம் எழுத்தின் அடையாள மாக இருந்தவர். தாராபு ரம் வரலாறும் வழக்கா றுகளும், எங்க ஊருப் பாட்டு ஆகிய பனு வல்களை எழுதியதன் ஊடாகத் தாராபுரத்தை இலக்கியமாக்கியவர். ஊரின் அடையாளமாகவும் முகவரியா கவும் இருந்தவர் கலைவாரிதி தாராபுரம் ஏ. ஹாஜா அலாவு தீன்.

பாடல் இயற்றுதல், பாடுதல், நாடகம், பட்டிமன்றம், பிறைப் பாட்டு பயிற்சியளித்தல் என பாடசாலைகளில் கலை மணம் பரவச்செய்த கலை நெஞ்சன் ஹாஜா. பாடசாலைக் கீதங்கள் பலவற்றை இயற்றிக் கொடுத் தார்.


'அற்புதம்' கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகரான இவர் சமூக சேவை ஈடுபாடும் பண்பாட்டுக் கவிச்சியுமுடைய பண்பாளர்.

புத் தில்லையடி முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் அதி பராகப் பணி செய்து அண் மையில் ஓய்வெய்திய ஹாஜா அலாவுதீன் கடந்த ஞாயிறன்று இறையடி எய்தினார். அல்ஹாஜ் ஹாஜா அலாவுதீன் எழுத்தில் ஒளிர்ந்தவர். சுவனத்து ஒளியில் பிரகாசிக்கப் பிரார்த் திப் போம்.

# இளவன் கவிதை

## கடல் பறவை

அலைகளின் சிறகுகளை
விரித்து விரித்து அவாவுகிறது
அதன் இறகுகளில் அணைகிறேன்
ஈரத்தின் ஒத்தடங்களில் சிலிர்ப்பு
கரைகளில் ஒட்டுகிற சுவடுகளில் அநித்தியம்
குறுங்கணம்
இறகுகளில் அழிகிறது காலடி
இத்தனை காலம் சேகரித்த வாழ்தலை
தொலைக்கிறது இருள் பசர்ந்த பொழுது
படகிலிருந்து
எத்துண்டு விழும் துளியில் கரைகிறது
செம்படவனின் வியர்வை
நீல வானத்திற்கும் எனக்குமிடையில்
பிரிகோடு நீ



# இந்திய திரையுலகை ஆண்ட நடிகை

ஸ்ரீதேவி தனது தந்தையும், தாயையும் அவருடைய இளம் பருவத்திலேயே இழந்ததால், சமுதாயத்தில் பல பிரச்சனைகளை சந்திக்க வேண்டிய தாயிற்று. 1980களில் மிதுன் சக்ரவர்த்தியுடன் ஜாக் உதா இன்சான் படத்தில் ஸ்ரீதேவி நடித்தார்.

அப்போது இருவருக்கும் காதல் மலர்ந்தது. இருவரும் ரகசிய திருமணம் செய்துகொண்டதாகவும் கூறப்பட்டது. இதை மிதுன் சக்ரவர்த்தி ஏற்றுக் கொண்ட போதும் ஸ்ரீதேவி ஏற்கவில்லை. இந்த சர்ச்சையடுத்து இருவரும் பிரிந்தனர். பின்னர், ஜூன் 2, 1996 ஆம் ஆண்டு ஸ்ரீதேவிக்கும், திரைப்பட தயாரிப்பாளரான போனி கபூருக்கும் திருமணம் நடைபெற்றது.

ஸ்ரீதேவிக்கு, ஜான்வி மற்றும் குஷி என்ற இரண்டு மகள்கள் உள்ளனர். அவருடைய திருமணத்திற்கு பிறகு, அவர் கணவனுடன் பிறந்த அனில்



கபூருடன் நிறைய படங்கள் நடித்துள்ளார்.

தமிழ் நாட்டில் பிறந்து இந்திய திரையுலகை ஆண்ட நடிகை ஸ்ரீதேவி. 1967ல் கந்தன் கருணை என்ற தமிழ் திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார். இவர் முதன் முதலில் கே.பாலச்சந்தர் இயக்கத்தில் 1976ல் வெளிவந்த ‘மூன்று முடிச்சு’ திரைப் படத்தில் கதாநாயகியாக நடித்தார். கமலஹாசன், ரஜினிகாந்த் போன்றவர்களுடன் பல திரைப்படங்களில் நடித்த இவர். பின்னர் தெலுங்கு மற்றும் மலையாளத் திரைப்படங்களிலும் தன்னுடைய நடிப்புத் திறமையை வெளிப்படுத்தினார்.

ஸ்ரீதேவி அவர்கள் 1978 ஆம் ஆண்டு இந்தி திரைப்படங்களில் அறிமுகமானார்.

இவர் நடித்த முதல் இந்தி திரைப் படம் எதிர் பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை. பின்னர், இவருடைய இரண்டாவது படமான “ஹிம் மத்வாலா” ஒரு பெரும் வெற்றியை தேடித்தந்ததோடு மட்டுமல்லாமல், இந்தி திரையுலகில் ஒரு அங்கீகாரத்தை பெற்றுத்தந்தது.

1980ஆம் ஆண்டு காலகட்டங்களில், இவர் ஒரு சிறந்த நடிகையென்று அனைவராலும் பாராட்டப்பெற்றார். கோலிவுட்டில் அதிக சம்பளம் பெரும் நடிகைகளில் இவரும் ஒருவரென்ற அந்தஸ்தையும் தந்தது. தமிழில் வெளியான மூன்றாம் பிறை இந்தியில் சத்மா பெயரில் ரீமேக் ஆனது. இது ஸ்ரீதேவியின் நடிப்பு பாலிவுட்டினரை மிகவும் கவர்ந்தது. அங்குள்ள பத்திரிகைகள் கண்டிப்பாக பார்க்க வேண்டிய படம் என பாராட்டியிருந்தது.

போனி கபூரை திருமணம் செய்து கொண்ட பிறகு சினிமாவைவிட்டு விலகியிருந்த ஸ்ரீதேவி, ஆறு ஆண்டுகள் கழித்து ஒன்றிரண்டு தொலைக்காட்சி தொடர்களில் நடித்து வந்தார். பின்னர் 14 ஆண்டுகளுக்கு பிறகு இங்கிலீஷ் விங்கிலிஷ் திரைப்படத்தின் மூலம் மீண்டும் திரைப்படத் துறையில் கால்பதித்தார்.

ரஜினியுடன் நடித்த காயத்ரி, ரஜினி கமலுடன் இணைந்து நடித்த 16 வயதினிலே, கமலுடன் நடித்த மூன்றாம் பிறை, சிவகுமாருடன் நடித்த கவிக்குயில் போன்ற படங்கள் அவரை புகழின் முன்னணி இடத்துக்கு உயர்த்தியது.

1981ம் ஆண்டு கமலுடன் நடித்த மீண்டும் கோகிலா படம் ஸ்ரீதேவிக்கு சிறந்த நடிகைக்கான பிலிம்பேர் விருது பெற்று தந்தது. 1982ம் ஆண்டு பாலுமகேந்திரா இயக்கத்தில் கமலுடன் இணைந்து மனநிலை பாதித்தவர்போல் நடித்த மூன்றாம் பிறை படத்துக்கு சிறந்த நடிகைக்கான தமிழக அரசின் விருது கிடைத்தது.

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் நாள் சனிக்கிழமை இரவு துபாயில் மாரடைப்பு காரணமாக காலமானார் என்று செய்திகள் வெளியானது. பின்னர் வெளியான பிணக்கூற்று அறிக்கை, அவர் நீரில் மூழ்கி இறந்ததாகவும், அவரது குருதியில் மது பானம் இருந்ததாகவும் கூறியது. உடற்கூறு ஆய்வு செய்யப்பட்ட அவரது உடலானது பெப்ரவரி 27, 2018 அன்று தனி விமானம் மூலம் துபாயிலிருந்து மும்பைக்கு கொண்டு வரப்பட்டது. பின்பு இவரது உடலை பெப்ரவரி 28, 2018 அன்று மும்பையில் உள்ள வில்லே பார்லே மின் மயானத்தில் முழு அரசு மரியாதையுடன் தகனம் செய்யப் பட்டது.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

---

அங்கம் 21

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா

அடையாறு புற்று நோய் மருத்துவ டாக்டர். கிருஷ்ண மூர்த்தியும் அமெரிக்க டாக்டர் மில்லரும் அண்ணாவின் உடலை பரிசோதித்தனர்.

அண்ணாவுக்கு அறுவை சிகிச்சை தேவையா? இல்லையா? என்று டக்டார் கிருஷ்ண மூர்த்திக்கும், டாக்டர் மில்லருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. டாக்டர் மில்லர் உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார். ஆனால் டாக்டர். கிருஷ்ண மூர்த்தியோ, “டாக்டர் மில்லர்! உங்களை பொறுத்தவரையில் அண்ணா ஒரு நோயாளி, அவ்வளவே! ஆனால் எங்களுக்கு அவர் ஓர் ஒப்பற்ற தலைவர். தமிழகத்தின் முதலமைச்சர். அதனால் ரிஸ்க் எடுக்க வேண்டாம்! இப்போதைக்கு அறுவைச் சிகிச்சை வேண்டாம்! என்று கூறினார்.



அமெரிக்க டாக்டர் மில்லருக்கும் டாக்டர் கிருஷ்ண மூர்த்திக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை அருகிலிருந்து கேட்ட இராஜாராம் அண்ணாவிடம் அதை தெரிவித்தார். உடனே அண்ணா இராஜாராமிடம், “நீ போய் டாக்டர் மில்லரிடம் இந்த அறுவை சிகிச்சையை நான் செய்து கொள்ளாவிட்டால் என்ன ஆகும் என்று கேட்டு வா, அவர் கூறுவதை என்னிடம் மறைக்காமல் சொல்!” என்று கூறி இராஜாராமை அனுப்பிவைத்தார்.

இராஜாராமும் டாக்டர் மில்லரிடம் சென்று கேட்டார். அதற்கு மில்லர், “ அண்ணாவின் தொண்டைக் குழாயில் புற்று நோயின் வளர்ச்சி மீண்டும் ஆரம்பித்துள்ளது. அதை வெட்டி எடுக்காவிட்டால் அது எல்லா நரம்புகளையும் பாதிக்கும். தாங்க முடியாத வலியும் உண்டாகும். அதனால் உடலில் மற்ற பாகங்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

அதை தவிர்க்க வேண்டுமென்றால் உடனடியாக அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும்.” என்று கூறினார். டாக்டர் மில்லர் கூறியவைகளை இராஜாராமும் மறைக்காமல் அண்ணாவிடம் கூறினார். அண்ணா அறுவை சிகிச்சை செய்து கொள்ள சம்மதித்தார்.

அண்ணாவின் சம்மதத்தை அறிந்த டாக்டர் மில்லர் அண்ணாவிடம் வந்து, “ ஐயா! தங்களின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டேன். தங்களை மக்கள் எவ்வளவு நேசிக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டேன். நாளைக்கே உங்களுக்கு அறுவை சிகிச்சை செய்யலாம் என்று நான் முடிவு செய்து விட்டேன்.” என்று கூறினார். உடனே அண்ணா டாக்டர் மில்லரிடம் டாக்டர் அறுவை சிகிச்சையை நாளை மறுநாள் வைத்துக் கொள்ளலாமா? என்று கேட்டார். அதற்கு டாக்டர் மில்லர் அண்ணாவிடம் “ஏன்? ஏதாவது நல்ல நாள் பார்க்கிறீர்களா?” என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

அதற்கு அண்ணா “டாக்டர் நான் ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறேன். அதை நாளைக்குள் படித்து முடித்து விடுவேன், அதற்கு பிறகு என்ன ஆனாலும் சரிதான்!” என்று கூறினார். அண்ணா கூறியதை கேட்ட டாக்டர் மில்லர் பெரும் வியப்படைந்தார். அவர் தன் அருகில் இருந்தவர்களிடம் “உறவினர்களை பார்க்க வேண்டும், உடைமைகளுக்கு பாதுகாப்பு செய்ய வேண்டும், உயில் எழுத வேண்டும் என்று சொல்லி, அறுவை சிகிச்சையை தள்ளிப் போடுபவர்களை பார்த்திருக்கிறேன் ஆனால் புத்தகத்தை படித்து முடித்து விட வேண்டும் என்று ஒரு நாள் அவகாசம் கேட்கிற முதல் மனிதரை இப்போதுதான் பார்க்கிறேன்.

இம்மாதிரி மனிதருக்கு சிகிச்சை செய்ய நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்” என்று கூறி மனம் மகிழ்ந்தார். அண்ணாவின் தனது இறுதிக்காலம் வரையிலும் புத்தகங்களை படிப்பதிலும் அறிவை வளர்ப்பதிலும் ஈடுபாடு காட்டினார் என்பதை இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும்.

அண்ணாவுக்கு மீண்டும் அறுவை சிகிச்சை நடைபெற்றது. அண்ணா சீக்கிரமே குணமடைய வேண்டும் என்று தமிழக மக்கள் அனைவருமே காத்துக் கிடந்தனர். இம்முறை அண்ணாவின் உடல்நிலை மோசமாகிவிட்டது. தந்தை பெரியார் அன்றாடம் மருத்துவமனைக்கு வந்து அண்ணாவை பார்த்து சென்றார். அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் அண்ணாவின் உடல்நிலை குறித்து தொலைபேசி மூலம் கேட்டறிந்தார்.

ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு அனைத்தும் பொய்த்து விட்டது. அறிவின் சுடராய் ஒளி வீசியவரும் தியாகத்தின் தீபமாய் விளங்கிய வருமான அறிஞர் அண்ணாவின் உயிர் 1969 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி பிரிந்தது. தமிழ்த்தாய் பெற்றெடுத்த இணையில்லா பெருமகன் மீளா உறக்கத்தில் ஆழ்ந்தார். பாரதமே பதறி கதறியது. அண்ணாவின் தொண்டர்கள் தங்கள் தலைவனின் உடலைக் காண ஓடோடி வந்தனர். அண்ணாவின் பொன்னுடல் சென்னை மெரீனா கடற்கரையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கலைஞர் மு.கருணாநிதி மறைந்த அறிஞர் அண்ணா பற்றி “இதயத்தை தந்திடண்ணா” .. “எம் அண்ணா இதய மன்னா படைக்கஞ்சா தம்பி உண்டென்று பகர்ந்தாயே!எம்மை விடுத்துப் பெரும் பயணம் ஏன் தொடர்ந்தாய் உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோம்! என் கண்ணெல்லாம் ஏன் குளமாய் மாற்றிவிட்டாய்? நிழல் நீதான் என்றிருந்தோம்!நீ கடல் நிலத்துக்குள் நிழல் தேடிப்போய் விட்டாய். நியாயந்தானா? கடலடியில் இருக்கிற முத்தெல்லாம் முத்தல்ல. நான்தானடா முத்து எனச் சொல்லி உறங்குதியோ?நாத இசை கொட்டுகின்ற நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்? விரல் அசைத்து எழுத்துலகில் விந்தைகளைச் செய்தாயே. அந்த விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்? கண் மூடிக் கொண்டு நீ சிந்திக்கும் பேரழகைப் பார்த்துள்ளேன். இன்று மண் மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல் தடுப்பதென்ன கொடுமை!கொடுமைக்கு முடிவு கண்டாய் எமைக் கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்? எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்றாய்.

இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்? கடற்கரையிற் காற்று வாங்கிய போது மன்னா எழுந்து வா எம் அண்ணா! வரமாட்டாய் வர மாட்டாய், இயற்கை சதி எமக்குத் தெரியும் அண்ணா நீ இருக்கும் இடம் தேடி யான் வரும் வரையில் இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா நான் வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா!”

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# இந்தியாவில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கௌரவம்









இந்திய நாட்டில் ஹைதராபாத்தில் அணிக்கு தலா 20 ஓவர்களைக் கொண்ட (20/20) இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பெருமைக்குரிய அப்துல் கலாம் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டி 2023 அண்மையில் இடம் பெற்றது. பத்தொன்பது வயதிற்குட்பட்ட இளம் வீரர்கள் பங்குபற்றிய இப் போட்டியில் வெற்றியீட்டி நம் நாட்டுக்கு பெருமை சேர்த்த வீரர்களுக்கு விருது வழங்கும் வைபவம் கொழும்பு 07 பொது நூலக கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றது. கவிக்கமல், பாசில், இணைந்து வழங்கிய “வீனஸ்” “அக்ஷரா” இசைக்குழுவினர்களின் “தேனும் பாலும்” கலந்த “வசந்த கானங்கள்” 60வது இசை நிகழ்ச்சியில் இந்த கௌரவிப்பு விழா நடைபெற்றது. இந்த இசை நிகழ்ச்சியும் கௌரவிப்பு விழாவும் சர்வதேச இசைக்கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவர் அதி வணக்கத்திற்குரிய அருட்கலாநிதி எஸ் சந்ரு பெர்னாண்டோ முன்னிலையில் கலாபூஷணம் இலங்கை பொன்மனச் செம்மல் எம். எஸ். தாஜ்மஹான் தலைமையில் நடைபெற்றது.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.